
# அமுதவல்லி



திரை.ராம பதிப்பகம்

பூவை.எஸ்.ஆறுமுகம்

# அமுதவல்லி

***

பூவை எஸ். ஆறுமுகம்

***

துரை. இராமு பதிப்பகம்
16J, 'C.A.R.' வளாகம்,
முத்துரங்கம் சாலை,
மேற்கு தாம்பரம்,
சென்னை-600 045.

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | அமுதவல்லி |
| Title | : | Amudhavalli |
| ஆசிரியர் | : | பூவை எஸ். ஆறுமுகம் |
| Author | : | Poovai. S. Arumugam |
| முதற்பதிப்பு | : | டிசம்பர் 1993 |
| First Edition | : | Dec. 1993 |
| தாள் | : | டபுள் கிரௌன் 10.7 |
| Paper used | : | D/crown 10.7 |
| பக்கங்கள் | : | 232 |
| Pages | : | 232 |
| விலை | : | ரூ. 30/- |
| **Price** | : | **30/-** |
| பதிப்பாளர் | : | துரை. இராமு பதிப்பகம் |
| | : | சென்னை-600 045. |
| **Publisher** | : | **Durai. Ramu Pathippagam** |
| | | Madras-600 045. |

அச்சிட்டோர் :

டி. எம். எஸ். பிரிண்டர்ஸ்,
6, இராமநாதன் தெரு-
தி. நகர், சென்னை-600 017.
தொலைபேசி : 440155.

# மலரும் நினைவுகள்

மாண்பு நிறைந்த மனிதப் பிறவியின் சோதனை மிகுந்த மனித வாழ்க்கையிலே, நித்த நித்தம் எத்தனை, எத்தனையோ கதைகள் நடக்கின்றன!— நடந்து காட்டுகின்றன அல்லவா?— எனவேதான், வாழ்க்கை ஒரு கதையாக ஆகிறது; ஆக்கப்படுகின்றது!—, அதுபோலவே, கதையும் ஒரு வாழ்க்கையாக ஆகிறது; ஆக்கப்படுகிறது! இந்நிலையிலே தான், வாழ்க்கை எனும் கதையும், கதை ஆகிய வாழ்க்கையும் படைப்பின் தத்துவமாக மட்டுமல்லாமல், படைப்பின் விதியாகவும் அமைந்துவிடுகிறது!

இப்படிப்பட்ட சித்திரவிசித்திரமான படைப்பின் தத்துவத்தையும் படைப்பின் விதியையும் உணர்ந்து, அறிந்து தெரிந்து கொள்கின்ற எழுத்துக்கலைஞர்கள் இரண்டாவது பிரம்மாக்களாகவே மதிக்கப் படுகின்றார்கள்!

எழுத்தாளர்கள் பாக்கியவான்கள்!

உண்மைதான்! - நான் பாக்கியவான்!— இரண்டாவது பிரம்மாவாக ஆவதென்பது சாமானியப்பட்ட காரியமா, என்ன?— ராஜயோகமான அடி நாட்களிலே, பொங்குவிரி காவிரியின் தாய்மடியிலே தவழ்ந்து கொண்டிருக்கின்ற திருச்சிராப்பள்ளியிலே, நான் பி. ஏ.,— இரண்டாம் ஆண்டில் படித்துக் கொண்டிருந்தபோதுதான், என்னுடைய முதல் கதை

வெளியானது; வெளிப்படுத்தப்பட்டது!— பாருக்குள்ளே நல்ல நாடான அருமைப் பாரதம் ஆனந்தச் சுதந்திரம் அடைந்த அப்புனித நன்னாளிலே, எழுத்தாளர் ஆன நான் உண்மையிலேயே பாக்கியவான்தான்!

இப்போது, நடப்பு உண்மை ஒன்றினையும் சொல்லிவிட வேண்டும்! நாடு விடுதலை பெற்ற நேரத்திலே, நான் அடிமை ஆனேன்!— நான் என்னுடைய எழுத்துக்கு அடிமையானேன்!

எண்ணிப் பார்க்கின்றேன்!— நான் ஏன் எழுத்தாளன் ஆனேன்?—எனக்குத் தெரிந்தவிடை 'விதியின் பிழை' என்பதுதான்!— ஓ சிருஷ்டியின் பரம ரகசியத்தைச் சூட்சுமமாகத் தெரிந்து கொண்ட நான் உண்மையாகவே பாக்கியவான்தானே?

அந்நாளிலே, நான் எழுதிய 'கரகம்' என்னும் முதற்கதையைச் 'சுதேசமித்திரன்' ஞாயிறு மலரில் வெளியிட்டவர் சிரஞ்சீவிப் புகழ் கொண்ட நாவலாசிரியர் அமரர் சாண்டில்யன்!—இங்கே ஓர் உண்மையையும் சொல்ல வேண்டும்!—நான் எழுதிய முதல் கதையே அச்சுவடிவம் பெற்றுவிட்டது!

என் தாய்வீடு: 'பொன்னி'!—அங்கேதான், என் முதல் நூலாகக் 'கடல் முத்து' வெளியானது; அந்தக் 'கடல் முத்து' அண்மையில், சரியாக நாற்பதாண்டுகள் கழித்து, மீண்டும் வெளிப்படுத்தப்பட்டது. கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தின் பொதுச் செயலாளர் அருள்திரு டாக்டர் தயானந்தன் ஃபிரான்சிஸ் அவர்களது அன்பு பெரிது.

'கடல்முத்து'வைத் தொடர்ந்தும், . தொடர் சேர்த்தும் இப்பொழுது. முத்து முத்தான சிறு கதைகள் அடங்கிய 'அமுதவல்லி' என்கிற என் னுடைய அடுத்த சிறுகதைத் தொகுப்பு நூல் துரை. இராமு பதிப்பக வெளியீடாக வருகிறது. இது, என் சிறுகதை நூல் வரிசையில், இருபத்தி ஐந்தாவது ஆகும்!

தமிழ்ப் படைப்பு இலக்கியத்தில் சிறுகதையின் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் அருந்தொண்டு—பெருந் தொண்டு ஆற்றின 'உமா'வை இலக்கிய ஆர்வலர்கள் மறக்க மாட்டார்கள்; 'உமா'வை எண்ணுபவர்கள் இந்தப் பூவையையும் எண்ணியதும், எண்ணுவதும் சகஜம்!

'சுதேசமித்திரன்', 'தினமணிகதிர்', 'ஆனந்த விகடன்', 'அலிபாபா', 'கல்கி', 'உமா', 'கலைமகள்', 'அமுதசுரபி', 'புதுமை', 'பொன்னி', 'காவேரி', 'நவயுவன்' போன்ற ஏடுகளில் வெளியான நல்ல கதைகள் சில தேர்ந்தெடுக்கப்பட்டு, இப்போது திரும்பவும் வெளிப்படுத்தப்படுகின்றன.

'தமிழ் இலக்கிய வரலாறு' பற்றி ஆய்ந்தெழுதிய நல்லறிஞர்கள் சிறுகதைகள் குறித்துப் பேசும்போது, 'பூவையை மறந்துவிடாமல் குறிப்பிட்டிருக்கின்ற னர்.


1966 ஆம் ஆண்டில் என்னுடைய 'பூவையின் கதைகள்' தமிழ்நாட்டு அரசாங்கத்தின் முதற் பரிசினை வென்றது பின்னர், 1982-ம் ஆண்டிலே, தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் தமிழக அரசின் சார்பிலே எனக்கு இரண்டு இலக்கிய

முதற் பரிசுகளை வழங்கினார். இரண்டு முதற் பரிசுகளை வென்ற நூல்களில் ஒன்றுதான், 'தெய்வம் எங்கே போய்க் கொண்டிருக்கிறது!' என்னும் சிறு கதைத் தொகுப்பு ஆகும்.

இதனை அடுத்து எனது 'நிதர்சனங்கள்' என்ற சிறு கதைத் தொகுப்பு ஒன்றையும் அதனைத் தொடர்ந்து, தற்போது தங்கள் கைகளில் தவழும் 'அமுதவல்லி' என்ற இந்தச் சிறுகதைத் தொகுப்பு நூலையும் வெளியிட்டு உதவிய 'துரை. இராமு பதிப்பக'த்தின் உடைமையாளர் திருமிகு துரை. இராமு அவர்கள் எனக்குக் கிடைத்த சடையப்ப வள்ளல் ஆவார். அன்னாருக்குத் தலைவணங்கி நன்றி கூறுகிறேன்.

அன்புடன்

பூவை எஸ். ஆறுமுகம்





துரை. இராமு பதிப்பகம்,
16J, 'C.A.R.' வளாகம்,
முத்துரங்கம் சாலை,
மேற்கு தாம்பரம்,
சென்னை-600 045.

# பதிப்புரை

எழுதுவது என்பது எளிதல்ல. சிறப்பாக எல்லோரும் படிக்கக் கூடிய கதைகள் எழுத தனி ஆற்றல் வேண்டும். சிலர் எழுதுவது அறிஞர்களுக்கு மட்டுமே விளங்கும். இன்னும் சிலர் பாமரர்களுக்கு மட்டுமே எழுதுவர். சிலர் இந்த இருசாராரையும் மகிழ்விக்க முடியாமல் தங்கள் எழுத்துக்களை வடிப்பார்கள். மிகச் சிலரே தாங்கள் வடிக்கும் எழுத்துக்களை எல்லோரும் மகிழ்வுடன் ஏற்கும்படிச் செய்வார்கள்.

இம் மிகச் சிலரில் ஒருவராக விளங்குபவர் திருமிகு. பூவை. எஸ். ஆறுமுகம் அவர்கள். எளிய வாழ்க்கைக்கு உதாரணமாகத் திகழும் அவருக்கு என்று ஒரு தனி நடை; மிகச் சிறந்த உண்மைகள் எல்லாம் மிக எளிமையாக உள்ளன என்ற கருத்தை எல்லோரும் ஏற்கும் வண்ணம் எழுதும் ஆற்றல்; வாசகர்கள் குழம்பிப் போகாமல் தெளிவாகத் தன் கருத்துக்களைக் கூறும் பாங்கு; ஒவ்வொருவருக்கும் இன்பமாக வாழ அத்தியாவசியமான அறநெறிகளுக்கு அவர் அளித்திடும் உயரிய மதிப்பு; இவை அனைத்தும் அவருக்குக் கைவந்த கலை.

அன்னாருடைய 'அமுதவல்லி' எனும் இச்சிறுகதைத் தொகுப்பு நூலை வெளியிடுவதில் பெருமைப் படுகிறோம்.

அன்புள்ள,

துரை. இராமு

# உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | அமுதவல்லி | ... 9 |
| 2. | பிறந்த பொன்னாடு | ... 38 |
| 3. | ஒரு மோகினியின் கதை | ... 61 |
| 4. | ஆத்தா | ... 98 |
| 5. | இனி......! | ... 118 |
| 6. | எல்லைச் சக்தி | ... 129 |
| 7. | இட்டார்க்கு இட்ட பலன் | ... 136 |
| 8. | தவம் | ... 150 |
| 9. | காதல் பொல்லாதது! | ... 176 |
| 10. | சாலையிலே ரெண்டுமரம் | ... 198 |

# அமுதவல்லி

## 1. அமுதவல்லி

பிறந்த மண்ணைவிட்டு வள்ளிசாக ஐம்பத்தி ரண்டு நாட்கள் கழிந்தபின் பட்டணத்துக்குப் புறப் பட்டேன். எனக்கெனக் காத்திருந்த 'போட் மெயில்' என்னை அழைத்துச் சென்றது; ஆனால் இராஜ இராஜ சோழனையும், பெரிய கோயிலையும் மறந்து போயிற்று. அந்த மறதி வாழட்டும். சரித் திரத்தைப் புரட்டுபவர்களுக்கு ஏமாற்றமே கிடைக் கக்கூடாது பாருங்கள். அதனால்தான் ரெயில் அப் படிச் செய்திருக்க வேண்டும்.

இயற்கையை மிஞ்ச முனைகிறது செயற்கை. இந்நிலையைப்பற்றிப் பெட்டியில் அமர்ந்திருந்தவர் கள் 'கண்டபடி' பேசிக் கொண்டிருந்தார்கள். வான் வெளிக்கப்பலைப் புகழ்ந்தார் ஒருவர். அழகிகளின் அந்தப்புரத்தை அப்படியே அம்பலப் படுத்தும் புண்ணியத்தை சம்பாதித்துக் கொண்டவருடைய 'மூளை'யைச் சிலாகித்தார் சாயுபு ஒருவர். இன் னொருவர், திரை நட்சத்திரம் ஸ்ரீதேவி சினிமா உலகிலிருந்து 'விடை'பெறப் போவதைக் குறித்து வருத்தம் தெரிவித்தார். கலக்கம் அவரது கண் களிலே காணப்படாமற் போனாலும், பேச்சில் இருந்தது.

எனக்குத் தூக்கமயக்கம். மயக்கம் கலைந்த தருணத்தில், மாயவரம் நெருங்கிக் கொண்டிருந்ததை உணர்ந்தேன். என் உணர்வு ஆட்சி செலுத்திய போது, என் விழிகள் அந்தப் பெட்டியைச் சுற்றி அலைந்தன. ஒரே ஒரு தந்தப் பேழையைத் தவிர, வேறு எதையும், யாரையும் நான் காணவில்லை!

கதை எழுதும் பைத்தியக்காரன் நான் என்று யாரோ ஒருவருக்குத் தெரிந்திருக்க வேண்டும்!

பெட்டியைத் திறந்தேன்.

நெடுங்கதை ஒன்று கிடைக்கப் பெற்றேன்!

இன்பமும் துன்பமும் கலந்த நினைவில், பதட்டமும் கலக்கமும் இணைந்த நிலையில், கனவும் லட்சியமும் பின்னிய பக்குவப் போக்கில் நான் என்னையே மறந்தேன்.

கசங்கிய மலரென்றால், அதற்கு மணம் கிடையாதா? மணம் இருக்கக் கூடாதா?

பூவின் நிறைவு அதன் சிரிப்பில், கண்ணீரில் குறிக்கோளில் இருப்பதாக யாரோ பாடியிருப்பது நினைவில் எழுந்தது.

என் கண்கள் கக்கிய துளிகள் ஒவ்வொன்றின்றும் ஒவ்வோர் அத்தியாயம் புறப்படத் தலைப்பட்டது.

## மாப்பிள்ளை வேட்டை!

இயற்கையின் நிலா விருந்தை உலகம் சுவைத்து அனுபவித்துக் கொண்டிருந்த வேளை அது!

சோமலிங்கம் கண்ணடியைத் துடைத்துப் போட்டுக்கொண்டு சுற்றிச் சூழ நோக்கினான். நூல் பிடித்த மாதிரியாகப் போடப்பட்டிருந்த மேஜை நாற்காலிகளும், மேஜைக்கு அணிகலன்களெனத் திகழ்ந்த ரோஜாப்பூக் குழல்களும் கண்ணுக்குப் பெரு விருந்தெனவே தோன்றின. அவன் நீள் மூச்சை விலக்கினான். 'எஜமானி அம்மாவுக்குத் திருப்தி ஏற்பட்டுவிடும்!' என்ற ஆறுதல் அவனுடைய கடமையுணர்வுக்கு நற்சாட்சிப் பத்திரம் வழங்கிற்று. இள நீல நிறப் பாதரஸ விளக்குகளின் விசைகளை ஒரு முறை அழுத்தினான். நிலவும் ஒளியும் சதிராடின; அதுசமயம் புத்தம் புதியதொரு சுற்றுச் சார்பு உருவானதைப்போல அவன் உணரலானான். மிதியடியின் ஓசைக்குச் சட்டம் அமைத்துக் கட்டுப்பாடு விதித்தவாறு அவன் நடந்தான்; திரும்பினான்.

"ஏ, வேலப்பா!"

"ஐயா!"

"மாடிப்படியிலே பூச்செடியோட இலைகளெல்லாம் சிந்திக்கிடக்குதே, அதையெல்லாம் ஒண்ணு விடாம எடுத்துக் கீழே கொண்டு போய்ப் போடுறதை விட்டுவிட்டு, என்னமோ யோசனையிலே மலைச்சுப்போய் நிற்கிறீயே? ம்... போ!"

"ஆகட்டுமுங்க, ஐயா!" என்று பணிவுடன் இணக்கம் காட்டிய வேலப்பன் தாடி மீசையைத் தடவி விட்டுக்கொண்டே இறங்கியபோது, அவனுடைய கை விரல்களில் ஈரம் தட்டியது. இட்ட பணியை இதமுற இயற்றும் பாங்குடன் இருந்த வேலப்பன் குனிந்த தலையை நிமிர்த்தினான், சோமலிங்கம் நின்றான்.

"நீ இனிமே கண்கலங்காதேப்பா! நான் அம்மா கிட்டே உன்னைப்பத்தி ரொம்பத்தூரம் சொல்லியிருக்கேன். இலையும் பழுப்பும் எல்லாருக்கும் சகஜந்தானே?...பெண்சாதி, பிள்ளை எல்லாரும் போயிட்ட நடப்பை சதா நினைச்சு மனசை அலட்டிக்காதே, வேலப்பா!" என்று தேற்றினான் அவன்.

கூப்பி வணங்கினான் வேலப்பன்.

அப்பொழுது எடுபிடிப் பையன் தலைதெறிக்க ஓடிவந்தான். தலை தெறித்து விடாமல் தப்பியது. ஆகவேதான் அவனால் தலையைச் சுற்ற முடிந்தது. பிறகு சொன்னான்: "அம்மா ஸ்டுடியோவிலேருந்து ஒங்களைக் கூப்பிடுறாங்க, மானேஜர் ஐயா!"

மொட்டை மாடியிலிருந்து கீழ்த் தளத்துக்கு வந்தான் சோமலிங்கம். குறுக்கிட்ட கிழவி "சீக்கிரமா வாங்க தம்பி! எம் மவ என்னா பேசுது, கேளுங்க!" என்றாள்.

சோமலிங்கம் சிரித்தவண்ணம் தொலைபேசி இணைப்பைக் கையிலெடுத்துக் காதில் பொருத்தினான். "ம்...ம்" என்று 'உம்' கொட்டிக் கொண்டிருந்தான் அவன். 'செய்தி வாங்கி'யைச் சரியாக வைத்துவிட்டுத் திரும்பினான். "அம்மா இன்னும் கால் மணிக்குள்ளே புறப்பட்டுடுவாங்களாம். விருந்துக்கு ரெடி பண்ணச் சொன்னாங்க. வந்தவங்களை ஹாலிலே உட்கார வைக்க வேணுமாம்!" என்று விவரித்துவிட்டு, வேலப்பன், வேதாசலம், கங்கு என்று பெயர்ப்பட்டியலை உரக்கப் படித்தான், சோமலிங்கம்.

அமுதவல்லி பூங்கரங் குவித்துத் தொழுதாள். மோதிர விரல்களில் இழைந்த வைர மோதிரங்கள் கண் சிமிட்டின.

இயற்கையும் செயற்கையும் கை பிணைத்து அமைத்துக் கொடுத்திருந்த அமுதச் சூழ்நிலையில் தங்களை மறந்து வீற்றிருந்த பெரிய மனிதர்கள் பதில் வணக்கம் சொன்னார்கள். வைரத்தின் ஒளிச் சிதறல்கள் ஒருபுறம் கண்ணைப் பறித்தன; வாசனைத் திரவியங்களின் சுகந்த வாடை மறுபுறம் கருத்தைக் குலுக்கின. 'ரேடியோக்ராம்' தந்த இனிய பின்னணியில் நிலா விருந்து நடந்தது; முடிந்தது.

நரை திரண்டிருந்த முடியைக் கோதிவிட்டவாறு சோமலிங்கம் அனைவருக்கும் 'பீடா'க்களை வழங்கினான். பீடாத்தட்டை ஏந்தியிருந்த வேலப்பன் கிழிந்து தொங்கிய கந்தை வேஷ்டியைச் சரிப்படுத்தியவனாக, மானேஜரைத் தொடர்ந்தான்.

குழுமியிருந்தவர்கள் ஒருவரோடு ஒருவர் காதுடன் காது சேர்த்து ஏதோ பேசினார்கள். இரண்டு நிமிஷங்களின் இடைவேளைக்குப் பிற்பாடு படத்தயாரிப்பாளர் பலவேசம் அவர்கள் ஆசனத்தை விட்டு எழுந்தார். "புகழ் ஏணியில் ஏறிவரும் குமாரி அமுதவல்லி அவர்களின் பிறந்தநாள் விழாவிலே எங்களுக்கெல்லாம் விருந்து வைத்து உபசாரம் செய்ததற்கு எல்லோருடைய சார்பிலும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது, என்னுடைய படத்துறை நண்பர்கள் நட்சத்திரம் அமுதவல்லிக்கு பிறந்தநாள் விழாப் பரிசுகள் கொடுக்கக் காத்திருக்கிறார்கள். அவைகளையும் ஏற்றுக் கொண்டு எங்கள் எல்லோரையும் கௌரவிக்க

வேணுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்!'' என்றார். பேச்சின் ஓசை அடங்குவதற்குள், மேஜைமீது பிறந்த நாள் பரிசுகள் வைக்கப்படும் அரவம் புறப்படத் தொடங்கியது

புகழ் நடிகை குமாரி அமுதவல்லி மெல்ல எழுந்தாள். மிக எளிய உடையில் திகழ்ந்தாள் அவள். சுற்றுமுற்றும் விழிகளைத் திசை திருப்பினாள். அதோ, ரமேஷ்! ''என்னை அறிமுகப்படுத்தின டைரக்டர் ஸார்!''...அவளுடைய கனி இதழ்கள் முணுமுணுத்தன. ''இவர்தான் இந்திரஜித். நான் நடித்த 'சொல்லித் தெரிவதில்லை' படத்திலும், 'அம்பிகா ஏற்றி வைத்த திருவிளக்கு' என்ற சித்திரத்திலும் என்னோடு ஹீரோவாக நடித்தவர். நல்ல அழகர்!''...''அதோ, அவர்தான் வில்லன் வீரநாயகம்!...இலங்கைச் சீமைக்காரர். வில்லனாக படத்தில் நடித்தாலும் நல்லவர்!''—அவள் பார்வையைச் சுற்றி விட்டாள். புதுப்படத் தயாரிப்பாளர் புதுமை வேந்தன் பட்டுச் சொக்காயும் பகட்டு மேனியும் துணை நிற்க, இளமுறுவல் பூவை மலரச் செய்தார்!...''ம்!''

அமுதவல்லி ஒரு கணம் தலையைத் தாழ்த்தி நிமிர்ந்தாள். ''உங்கள் அனைவருக்கும் என்னுடைய பணிவன்பு மிக்க வணக்கமும் நன்றியும் உரியதாகும். என்னுடைய அன்பு அழைப்பிற்கு மதிப்பு வைத்து விருந்தில் கலந்து கொண்ட உங்கள் அனைவருக்கும் என்னுடைய இதயபூர்வமான நன்றியை மறுபடியும் தெரிவித்துக் கொள்வதுடன், உங்களுடைய பரிசுகள் எதையும் இப்போதைக்கு நான் ஏற்றுக் கொள்ள இயலாத நிலையிலிருக்கிறேன் என்பதையும் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னை தயவு செய்து மன்னித்தருள வேண்டு

கிறேன்!" என்று பேசி நிறுத்தினாள். அவ்வளவு தான்!-நாற்புறமும் 'கசமுச' வென்னும் ஒலி எழத் தொடங்கியது. டைரக்டர் ரமேஷ், கதாநாயகன் இந்திரஜித், படத் தயாரிப்பாளர் புதுமை வேந்தன், திரைப்படத் தீயோன் வீரநாயகம் ஆகிய எல்லோரும் அமுதவல்லியை மொய்த்தனர். கைகளைப் பிசைந்து கொண்டு வேண்டுதல் விடுத்தனர்.

"ஒரு திருத்தம்! விரைவில் நடக்கயிருக்கின்ற என்னுடைய திருமணத்துக்குத் தாங்கள் வரும்போது, அவசியம் இந்தப் பரிசுகளை நான் பெருமையோடு வாங்கிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மூன்றாம் முறையாக என் நன்றியையும் வணக்கத்தையும் தெரியப்படுத்திக் கொள்ளுகிறேன்!" என்றாள் அமுதவல்லி.

கூடியிருந்தோரின் கண்கள் கண்ணீர் விடலாயின! அது ஆனந்தக் கண்ணீர்!

அவள் மாடிப்படிகளைக் கடந்தபோது, தலைவாயிலில் புகைப்படமொன்று இருந்தது. முதலிரவுக் காட்சி அது.

அவள் சிரித்தாளா? சினந்தாளா? சிந்தித்தாளா!

"அம்மா...அம்மா!"

புதுக்கருக்குக் கெடாத பட்டு மெத்தை அலங்கரித்த அந்தக்கட்டில் அப்படியே கிடக்க, அந்தக் கிழவி கைகளைத் தலைக்கு அணைவாக வைத்துக் கொண்டு ஏனோ தரையில் படுத்துக் கிடந்தாள்.

'அம்மா!' என்ற அழைப்பு மீளவும் பலத்த குரலில் எழவே, கிழவி வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து உட்கார்ந்து கொண்டாள். கண்களைக் கைகளால் கசக்கி விட்டுக் கொண்டு திரும்பத் திரும்பப் பார்த்தாள். "ஆமா' நீங்க யாரு?.. எம் பொண்ணு பயாஸ் கோப் கம்பெனிக்குப் பறிஞ்சிருச்சே?..." என்று கிழவி தடுமாறினாள்.

"அம்மா!... என்னைப் புரியலையா அம்மா?"

"ஆத்தாடியோ!... எம் மவ காத்தாயி!..."

"அம்மா! ஊஷ்!... பார்த்தீங்களா, அதுக்குள்ளே என் பாடத்தை மறந்திட்டீங்களே?...

"கோவிச்சுக்கிடாதேம்மா! எம் பொண்ணு அமுதவல்லி!..."

"ஊஸ்!... அமுதவல்லி!..."

"சரி!... சரி!"

வான் வழி நடந்து வையகம் தொட்ட தேவ கன்னிகையென மின்னினாள் அமுதவல்லி. உதட்டிலே சாயம்; முத்திரையிலே அரிதாரச் சுமை; நெற்றித் திலகம்; வரிக்கோடுகள்; இடையில் ஒளிர்ந்த சுட்டி; துடி இடை; மார்புக் கச்சை; கனவுகளுக்கு 'மகசூல்' நடத்தும் கண் இணை, படப்பிடிப்பு நிலையத்திலிருந்து, மதிய உணவுக்கு வந்திருந்தாள் அமுதவல்லி, போடப்பட்ட வேடத்தைக் கலைக்காமல்!

"அம்மா, பட்டு மெத்தையிலே படுக்காம ஏம்மா இப்பிடித் தரையிலே படுக்கிறீங்க?"

''எனக்கு இதெல்லாம் வேண்டாம்மா! எனக்கு என்னமோ இந்தப் பகட்டெல்லாம் சுத்தமாப் புடிக்கலேம்மா! இம்புட்டுச் சுகத்தையும் நான் முன்னே பின்னே அனுபவிச்சிருந்தாத்தானேம்மா எனக்கு இதெல்லாம் வளக்கமாயிருக்கும்?.. எட்டடிக் குச்சிக்குள்ளே கூழும் கஞ்சியும் குடிச்சுக்கிட்டிருந்த வளுக்கு பாலும் பழத் தண்ணியும், விருந்துச் சோறும் எப்பிடிம்மா செல்லும்? .. இந்தாபபாரு அமுதவல்லி! நான் ஒண்ணு சொல்லுறேன், . கேட்டுக்க, நீ சட்டுப் புட்டுண்ணு ஒரு கண்ணாலம் கட்டிக்கிடு அம்மா!... சொத்துக்குக் கயிட்டப்பட்டோம். அந்த நாளை யிலே நன்மை யாரும் ஏறெடுத்தும் பார்க்கல்லே. ஆனா, ஆத்தா மாரி நம்மளைக் கண் தொடுத்துப் பார்த்தா, பணமும் காசும், களத்து மேட்டிலே தூத் திப் பொடைச்ச கைவிரச் சம்பாகணக்கிலே குமிஞ் சிருக்கு. இம்மாம் பணம் நமக்குப் போதும்! எனக்கோ வயசாயிடுச்சு. ஒன்னை தாலியும் மாலை யுமாப் பார்க்க வேணும்னு ஆசையிலே துடிக் கிறேம்மா!'' என்றாள் கிழவி, கண்ணீர் மாலை நீண்டது.

அன்னையின் விழிநீரைக் கண்ட அமுதவல்லிக்குப் பொறுக்கவில்லை. ''அம்மா, உங்க இஷ்டப் பிரகாரம் செய்கிறேம்மா; என் கல்யாணத்தைப் பத்தித்தான் அம்மா யோசிச்சுக்கிட்டிருக்கேன்!'' என்று பதில் பொழிந்தாள்.

''மாப்பிள்ளை யாரு அம்மா...?''

''அதைத்தான் யோசிக்கிறதுக்கு என்னம்மா இருக்குது? நம்ம ஊரிலே இருக்கிற உன்னோட அம்மான் மவன் மாரியப்பனுக்குக் கடுதாசி போட்டு

வரவலையம்மா! நீ இன்னா அதுக்குக் கொள்ளை உசிராச்சே?...'' என்றாள் கிழவி.

அமுதவல்லி சிரித்தாள். ''அம்மா, உனக்கு உலகம் தெரியவே இல்லை அம்மா! தெருக் கூத்திலே ராஜபார்ட் போட்டுக்கிட்டுச் சுத்திக் கிட்டிருக்கிற அந்த ஆள் எனக்குப் புருஷனாவதா? ஐயோ பாவம்! தன்னை அடையப் போட்டியிட்டுக் கொண்டிருக்கும் டைரக்டர் ரமேஷ், ஹீரோ' இந்திரஜித், வில்லன் வீர நாயகம், படத் தயாரிப்பாளர் புதுமை வேந்தன் ஆகியவர்களின் நினைவு முகங்களை அவள் எண்ண மிட்டாள். தலைவலித்தது. ஆகவே, அவள் தன்னுடைய தனி அறைக்கு ஓடினாள். பீரோவைத் திறந்தாள். ஏழைமையின் உருவம் ஒன்று படம் விரிந்தது. 'கடனுக்காக, குடியிருந்த வீட்டையும் கொல்லை குடிக்காட்டையும் இழந்து, அப்பாவையும் பறி கொடுத்து, நான் பட்டணத்திலே காலடி எடுத்து வச்சேன். ஒரு புண்ணியவான் எம்மேலே இரக்கம் காட்டி. என்னைத் தன் மகளைப் போலக் காப் பாற்றினார். இந்த வாழ்வும் மலர்ந்திச்சு. அம்மாவை அழைச்சாந்தேன். ஆனா, அவங்க போலக் காப்பாற்றினார். இந்த வாழ்வும் மலர்ந் திச்சு. அம்மாவை அழைச்சாந்தேன். ஆனா, அவங்க போடுற விடுகதைக்கு விடை கிடைக்க மாட்டேங்குதே? என் மாமன் மகன் மாரியப்பனுக்கா நான் மாலையிட வேணும்?... ஊஹூம்... ஈசனே!... தாயே மாரியம்மா!...'

அமுத விலாஸம்' பங்களா அல்லோல கல்லோலப்பட்டது. முகம் பார்க்கும் கண்ணாடி சிதறியது. முகம் சேர்க்கும் மை சிந்தியது.

பூப்போட்ட தலையணைகளில் சாய்ந்திருந்த நட்சத்திரம் அமுதவல்லி தன்னை மறந்து சிரித்துக் கொண்டேயிருந்தாள். பிறகு, தலைமாட்டில் இருந்த தலையணைகளை ஒவ்வொன்றாக எடுத்துத் தூக்கி வீசினாள். ஸ்டூலைத் தட்டிவிட்டாள்; தொலைபேசி ஒலித்தது; அதைக் கைகொண்டு பொத்தினாள். "ஹலோ!... ஹலோ மை டியர் பேபி!..." என்று உளறினாள். பிறகு, "மதிச்சியத் திலே குடியிருக்கிறது..." என்று பெருங்குரலெடுத்துப் பாடத் தலைப்பட்டாள். நெற்றிமேட்டில் போடப் பட்டிருந்த துணிக்கட்டைப் பிய்க்க முனைந்து தோற்றாள்.

படத் தயாரிப்பாளர் பலவேசம் முதியவர், அவருடைய கண்கள் கலங்கின.

'கால்ஷீட்'டுக்குத் தேதி குறித்துப் போக வந்த பலவேசம் அவர்கள் தலையில் வேதனையைச் சுமந்த வராக வெளியேறப் போன தருணத்தில், திரை அழகி 'நல்லதனமாக' எழுந்தாள். அவரை அவள் கூர்த்த மதி பதித்து நோக்கினாள்.

பலவேசம் ஆனந்தக் கூத்துச் செய்தார். "அமுதா உனக்கு ஒண்ணுமில்லையே?" என்று ஆசையாகக் கேட்டார்.

"எந்தப் புற்றில் எந்தப் பாம்பு?" என்கிற படத் திலே இப்படி ஒரு கட்டத்தைக் கொடுத்திருக்கி றாங்க. இதுபோலவே ஆயிரம் வாட்டி வந்தாச்சு, என்ன செய்யறது, கேட்கமாட்டேங்கிறாங்க. சம்ம திச்சேன். அங்கே செய்யவேண்டிய ரிஹர்சலை இங் கேயே செய்திட்டேன். அவ்வளவுதான்!" என்றாள் அவள்.

சோமலிங்கம் அந்தப் பங்களாவின் முகப்பில் வந்து நின்றான். அவனுக்கு எல்லாமே 'பூடகமாக'த் தோன்றியது. 'அமுதவல்லி அம்மாவைக் காணலையா? இதை நினைச்சுப் பார்க்கிறதுக்கே பயமாயிருக்கே?' என்று ஆயிரம் தரம் தனக்குள் குழப்பிக் கொண்டான். ஒரு சிட்டிகை பொடித் துகளை அள்ளி மூக்கில் திணித்துக்கொண்டு, சிந்தனை ரதத்தை முடுக்கிவிட்டான். அமுதவல்லியின் மறைவு அவனுக்கு மர்மமாகவே தோன்றியது. கண்ணாடியைக் கழற்றி, கண்ணீரைத் துடைத்துக் கொண்டான். நிலவை ரசிக்கத் தோன்றவில்லை. ஆனால், நேரத்தை அளந்தான். வரவேற்பு அறையில் நேர்வசமாகப் பொருத்தப்பட்டிருந்த கெடியாரத்தைப் பார்த்தான். கார்ச் சத்தம் ஏதாவது கேட்கிறதாவென்று காதுகளைத் தீட்டிக்கொண்டு நின்றான். டெலிபோன் மணியின் சத்தம்தான் கேட்டது. பின்னிய வேஷ்டியை மடக்கிக் கட்டிக்கொண்டு, விரைவுடன் ஓடினான்.

தொலைபேசி வழியே வழிந்த சந்தேகம் அவனுடைய சுய உணர்வை மறக்கடித்திருக்க வேண்டும். பொறி தட்டும் பொழுதளவு, பொறி தட்டினாற் போல நின்றபிறகுதான், அவனால் வாயைத் திறக்க முடிந்தது. "ஆமாங்க, டைரக்டர் ஸார்! நேத்து இல்லீங்க, இன்னிக்கு...அதானுங்க ஒரு மணிக்கு முந்திதானுங்க எல்லாம் சரமாரியாக நடந்திருக்குது. ஆமாங்க, நான் அம்மாவோட போகலீங்க. வீட்டிலே உடம்புக்கு சரிப்படலை. அதாலேதான் போகலைங்க. சரி...வாங்க, வாங்க...! வச்சுப்பிடவா?...ஓ!..." என்று வார்த்தைகளை உடைத்து உடைத்துப் பேசி முடித்தான் அவன். வழிந்த வேர்வையை வழித்து விடாமலே, அவன் மறுபடி அங்கும்

இங்குமாக நடந்தான். பலத்த யோசனை பொடி தூவினால், சிந்தனை வேலை செய்யும் என்பது அல்ல! நடையபின்றாலும் சரி, மண்டை உச்சி வழுக்கையைத் தடவி கொடுத்தாலும் சரி, அவன் சுறுசுறுப்புப் பெறுவான். இதுவே மாமூல் வழக்கம். 'நேத்து விபத்து நடந்ததாக நான் பதட்டத்தில் உளறி விட்டிருக்கிறேனே?... ஒருவேளை, இதேமாதிரி தான் மற்றவங்களுக்கும் சொல்லித் தொலைச்சிருப்பேனோ?... நேத்து நடந்ததுக்கு சாவதானமாக இன்னைக்கு போன் செஞ்சிருக்கிறாங்களே, இது 'டுப்' சேதியோ...அப்படின்னு சந்தேகப்பட்டாலும் பட்டிருப்பாங்க!' என்று மனத்திற்குள்ளாகவே ஒரு 'கோர்ட்' நியமித்து, வாதப்பிரதிவாதங்களை சண்டமாருதமாக விளாசிக் கட்டினான். அதற்குப் பிறகு ஒவ்வொரு வீட்டுக்கும் எண்களைத் திருப்பி, செய்தியை நாசூக்காக நினைவூட்டுவதே சரி என்றும் உணர்ந்தான்.

ஒளி வெள்ளம் மெருகு ஏந்திப் பொலிவு காட்டியது. மண்ணின் தவம் விண்ணில் பலித்திருப்பதைப் போன்று, அழகின் சோபிதம் அற்புதக் கனவுலகமாகத் தொங்கிக் கொண்டிருந்தது ஒவ்வொரு உடுவும் ஒவ்வொரு கனவேதான்.

செய்தி வரப்பெற்றிருந்தவர்கள் கும்பல் கூடினர். தட்டில் கொணர்ந்த குளிர் பானங்களைக் குடித்தனர். பிறகு, சொல்லிக் கொடுத்த மாதிரி அவரவர்கள் பதட்டம் காட்டினர்; பதறிப் பதறிப் பேசினார்கள். படமும் பணமும் மட்டுமின்றி, தத்தம் எதிர்காலமும் சேர்ந்து அந்தரத்தில் ஊசலாடும் உள்நோக்கம் அவர்களுக்குத்தானே தெரியமுடியும்?

சோமலிங்கம் சுற்றிச் சுற்றி வந்தான். கதா நாயகன் இந்திரஜித்தை மட்டும் காணோம்! உள்ளே ஓடிப்போய், ஒரு சாவியை எடுத்தான். 'காத்ரெஜ்' வழி திறந்தது. டைரி ஒன்று உரு காட்டிற்று. அது நட்சத்திரம் அமுதவல்லிக்குச் சொந்தம். மேலட்டையுடன் பொன் எழுத்துக்கள் சொந்தம் கொண்டாடிய வருஷத்தைப் பார்த்தான். கதாநாயகன் இந்திர ஜித்துடன் அமுதவல்லி கதாநாயகி வேடம் ஏற்று நடிக்க ஒப்பந்தமான வருஷத்தை நினைவு செய்து ஒப்பிட்டுப் பார்த்தான்.

ஒரு குறிப்பு :

'...இன்றைக்குத்தான் முதன் முதலிலே இந்திர ஜித் அவர்களோடு நடித்தேன். பண்பாகப் பேசுகிறார்; பவ்யமாக நடந்து கொள்கிறார், என்னை மாதிரியே அவரும் கீழ்ப்படிப்பிலிருந்து முன்னுக்கு வந்திருப்பவர்தான். ஷூட்டிங் முடிந்த கையோடு என்னுடன் வந்த அவர் என் வீட்டிலேயே இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு உடனே புறப் பட்டுப் போனார். அம்மாவுக்கும் இவர் குணம் பிடித்தமே!''

'...நாட்கள் எப்படியெல்லாம் ஓடிவிடுகின்றன. 'மஞ்சளும் மருக்கொழுந்தும்' படப்பிடிப்பு ஆரம்ப மான சுவடே தெரியவில்லை. அதற்குள் படம் முடியும் கட்டத்தில் இருக்கிறது. ஆமாம் எங்களுடைய காதல் ஒப்பந்தமும் இதே சீராகத்தான் பக்குவம் கண்டுள்ளது. மணந்தால் இந்திரஜித்தைத் தான் மணப்பேன் என்ற என்னுடைய மன வைராக்கியத்தை அவர் ரொம்ப தூரம் பாராட்டினார்!''

'...படத்தின் வெளியீட்டு விழாவன்று, எனது துடிப்பை நான் புகழ்ந்தேன். பரஸ்பரம் முகநைப்புக் காகப் பரிமாறப்படக் கூடியவையல்ல இவைகள்! ஏனென்றால், அவரைப் பற்றி நானும், என் விஷயத்தில் அவரும் இனிமேல் கவலைகொள்ள வேண்டியவர்களாக ஆகப் போகிறோம். திருப்பதிக்கு ஒருவாட்டி போய் வேங்கடாசலப் பெருமாளைத் தொழுது திரும்புவதாகவும் திட்டம் தீட்டித் தந்திருக்கிறார். என் கழுத்திலே மாங்கல்யம் ஏறப்போகும் நடப்பானது ஊர்ஜிதம் ஆனகையோடுதான், இதை மற்றவர்களுக்குச் சொல்ல வேணும்!...

அப்போது, காலடிச்சத்தம் பிடறியைப் பிடித்து உலுக்கவே, வேறு வகையின்றி, டைரியை வைத்துப் பூட்டிவிட்டுத் திரும்பினான் சோமலிங்கம். 'மேனேசரு ஐயாரு!...' என்ற தடிமனான அழுத்தக் குரல், நல்ல வேளையாக அவனை அழுத்தி விடவில்லை. அந்தமாகக் கூப்பிட்டவள் அமுதவல்லியின் தாயார் கண் பழுது. "என்னாச்சிங்க? எம்மவளைப்பத்தி யாதானும் தாக்கல் காதுக்கு எட்டுச்சிங்களா?" என்று கேட்டதுதான் தாமதம், அவளால் துக்கத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. செருமிச் செருமி அழுதாள் கிழவி, பாசத்தின் சரித்திரம் விரிவு பெற்றதாயிற்றே?

வந்தவர்கள் 'விடை' பெற்றுப் போக வந்தார்கள். கிழவியைப் பார்த்து அவர்களின் முகங்கள் சுருங்கின. வயதும் ஆகிவிட்டதல்லவா?

வாசலில் நாய் காவல் இருந்தது.

முகப்பில் கூர்க்கா நின்றான்.

தொலைபேசிக் கருவியின் பாதத்தடியில் இருப்புக்கொண்டான் சோமலிங்கம். அன்றைக்கு பங்களாவில்தான் சாப்பாடு. சாப்பிட்டு முடிந்தவுடன், சட்டைப் பையைத் துழாவிய நேரத்தில், தோட்டக்காரன் ஓடிவந்து ஒரு பொருளைக் கொடுத்தான். அது மீசை-மீசையிலும் பாதிமீசை! ''எவனாச்சும் வேஷம் கட்டுகிறவனுக்குக் கொண்டு போய்க் கொடுக்கிறதை விட்டுப்புட்டு, ஏண்டா எங்கையிலே இந்த ஒட்டு மீசையை வேறே வச்சுப் பயமுறுத்துறே? ..உள்ள மீசைக்கே தேவைப்படுற தைரியத்தைக் காணோமாம்! போடா, போ!'' என்று 'டயலாக்' பேசி முடித்ததும், நிற்காமல் நிதானிக்காமல் அவன் உறங்க முனைந்தான்.

பாதிச் சாமம் இருக்கும்...!

'தடதட'வென்று யாரோ கதவை இடித்தார்கள்.

சோமலிங்கத்தை எழுப்பிய பெருமையை அந்த 'இராஜபாளைய'த்துக்குத்தான் கொடுக்கவேண்டும். அலறிப் புடைத்தவனாக எழுந்துபோய்க் கதவு திறக்கும் கட்டங்கள் மூன்றைக் கடந்தபோது, வாசலில் கார் மட்டும் காணப்படவில்லை; ஓர் அதிசயமும் சேர்ந்து தரிசனம் தந்தது.

திரை நடிகர் இந்திரஜித் ரத்தக் கோடுகள் நிறக்கக் காட்சியளித்தார். கிலி அடித்துப் போட்டிருக்க நியாயமில்லை. புலி அடித்துப் போட்டிருக்குமோ?...

அடுத்த வினாடி, ''மானேஜர் ஐயா!'' என்று ஒரு குரல் கேட்டது. அமுதவல்லி தோன்றினாள். நெற்றி மேட்டில் கட்டுப் போடப்பட்டிருந்தது.

'சோமலிங்கம், பொழுது விடிந்ததும், முதல் வேலையாக இதைச் செய்ய வேண்டும். நம்மிடம் வேலைக்கு இருந்தானே வேலப்பன், அவன் அதோ நிற்கிறான். அவனிடம் நூறு ருபாய் எண்ணிக் கொடுக்க வேண்டும். அவன் இல்லாவிட்டால் என் மானம் மட்டுமல்ல, உயிரே போயிருக்கும்!'' என்று மூச்சுத் தடுமாறக் கூறினாள் அழகி அமுதவல்லி. முகம் விகாரமாகக் காணப்பட்டது.

ஒப்பனைக்காரனைப் பற்றிய ஞாபகத்துடன் சோமலிங்கம் மனம் மறுகினான்; திசை மறுகினான். ''வேலப்பா!'' என்று அவன் கூப்பாடு போட்ட மறு கணம், ''ஆ!...'' என்று உரக்கக் கத்த வேண்டியவன் ஆனான். அதே தருணத்தில் அமுதவல்லியும் ''ஆ!'' என்று ஓலத்தின் ஒலி கூட்டினாள்!

## அன்னை வாக்கு அமிர்தம்!

அழகுப் பதுமை அமுதவல்லி 'ஆ!' என்று ஒலி கூட்டிய அந்தக் குரல், அவளுடைய உந்திக் கமலத்தைத் தொட்டுப் புறப்பட்டது. நெஞ்சத்தின் விந்தைக் குறிப்பு நேத்திரங்களில் நிழலாடியது. அவள் தன் நினைவைச் சமன் செய்து கொண்டு, பார்வைப் போக்கையும் செம்மைப்படுத்தியவளாக எதிர்ப்புறம் பார்த்தாள். ஒருமுறை, தனக்கும் தன் அன்னைக்கும் நடந்த பேச்சு வார்த்தைகள் கரும் பலகையில் எழுதப்பட்ட வெள்ளை எழுத்துக்களாகத் தெரிந்தன. 'நம்ம ஊரிலே இருக்கிற உன்னோட அம்மான் மவன் மாரியப்பனுக்குக் கடுதாசி போட்டு

வரவளையம்மா! நீ இன்னா, அதுக்குக் கொள்ளை உசிராச்சே?' என்று அன்னை உரைத்த சொற்கள், வார்த்தை வார்த்தையாகப் பிரிந்து, பின்னி ஒலித்துத் தேய்ந்து விலகின.

மாரியப்பனை அவள் நினைவு கூட்டினாள். மாரியப்பனின் நினைவு முகத்தைச் சிந்தையில் கூட்டினாள். பாசமும் நேசமும் உரை கல்லாக அமைந்து, காதலும் கனவும் 'மாற்று' உரைத்துச் செப்பிய வாய்மொழிகளை—அந்த வாய்மொழிகளின் நடைபாதையில் ஊர்ந்து வழி காட்டிய நடப்புக்களை—அந்த நடப்புக்களின் உள்ளடக்கமாக வாய்த்த உள்ளப் பாங்கின் முத்துச் சிதறல் ஒளிக்கற்றைகளை அவள் மறந்துவிட்டாளா?

பூர்வாசிரமத்தில், அமுதவல்லிக்குக் 'காத்தாயி' என்று நாமகரணம் சூட்டியிருந்தாள். அவளைச் சுமந்தவள். காத்தாயியின் வரவு—செலவுப் பேரேட்டுப் புத்தகத்தில், தந்தையின் உயிர் செலவினத்தில் பதியப்பட்டவுடன், வரவு கலத்தில் நிதானமாக நிற்கப் பழகியிருந்த தாய்க்காரியின் பொறுப்பும் பெறுமதியும், மூசா தங்கத்தின் ஏறுமுக விலைப் பருவத்தைப் போல விளங்கலாயின. குஞ்சை அலகால் கோதி, அரவணைக்கின்ற தாய்ப்பறவையாகக் கிழவி மாறினாள். சுங்கடிச் சேலையின் முந்தானை கொண்டு, காத்தாயியின் அழகைத் திருஷ்டி படாமல் காத்து வந்த பக்குவம் அவளுக்கே சொந்தம். பக்குவம் அடைந்தது காட்டுப் பூ. பூ என்றால், என்னவென்று பெயரிடுவது? மல்லிகையா? முல்லையா? செவ்வந்தியா?-இந்தப் பெயர்களா பொருத்தப்படும்? ரோஜா என்றால் தான், உவமைக்குக் கோபம் வராது. தெய்வத்தச்சன் செதுக்கிய சுவர்ண

விக்கிரகம் ஆனாள் காத்தாயி. விக்கிரகம் என்ற நிலைக்கு மனித உடல் உருமாறும் வேளையில், கை தொழ நிற்பது இயல்புதானே? அவ்வாறுதான், அழகு எனும் தத்துவம் ஆராதனைப் பொருளானது.

அழகு மலர்ந்தால். ரசனை பெருகும், ரசனை பெருகும் போது, போட்டி விளையும். போட்டி விளைகையில், பூசல் உதயமாகும். இது இயற்கை. இந்த இயற்கையேதான் உலகமாம்!-சொல்கிறார்கள்; நம்புகிறோம் தவறில்லையே?

காத்தாயியின் கண் வீச்சு அந்தப் பட்டிக்காட்டுக் காளைகளின் கண் மயக்கத்துக்குத் தூபம் போட்டது. பெண்ணின் விழி மடல் விழிந்தால் போதும், ஆண்களின் கண்கள் சொக்கிச் சுழன்று மூடிவிடும். அம்மயக்கத்தின் விலைக்கு மதிப்புப் போடப்பட வேண்டுமென்று இளவட்டக்குழு சிதம்பர ரகசியம் பேசிற்று. ஆனால், காத்தாயி எதையும் பொருட்படுத்தவில்லை: யாரையும் பொருட்படுத்தவில்லை.

கோட்டை கொத்தளம் எதுவும் அந்தச் சிற்றூருக்கு அரண் அமைக்காமற் போனாலும், பெயரில் கோட்டையிருந்தது. அதனால்தான், மனித மனங்கள் அனைத்தும் கோட்டை கட்டின வோ? ஆண்டியப்பன் அவ்வூர் பெரிய தனக்காரர் மகன். பெற்றதாய் தன் ஆசை மைந்தனுக்கு காத்தாயிப் பெண்ணைக் கட்டி முடித்துவிட வேண்டுமென்று கோட்டை அமைத்தாள். ஆண்டிப்பன் பெயரளவில் அப்படி என்றாலும், பெரும்புள்ளி அல்லவா? ஆள் எடுப்புத்தான். அழகு எடுபடவில்லையே? 'ஆம்புள்ளைச் சிங்கத்துக்கு அளகாவது சொளகாவது? மேலுவலுவாயிருந்தாக்க பத்தாதாங்காட்டி?' என்று

'வீறு' பேசியவனை மண்ணைக் கவ்வச் செய்த பாக்கியம் காத்தாயிக்குக் கிடைத்ததே? அதற்குப் பதிலாக அவளுக்குக் கிட்டியது பரிசு ஒன்று. அது என்ன தெரியுமா? அது: வழக்கமாகக் கதைகளிலே வரக்கூடிய சேதிதான். தூங்கியகடனுக்கு விழிப்புக் கொடுத்தான் பிள்ளையாண்டான். விழித்திருந்தவளின் மானம் தூங்கும்படியாக ஆயிற்று. குந்தியிருந்த எட்டு அடிக் குச்சு ஏலம் போடப்பட்டது. வீட்டையா ஏலம் போட்டான் அவன்? அவளது மானத்தை அல்லவா விலை கூறிவிட்டான்!... பாவி!

"பாவி!" என்று சபித்துக் கொண்டே, இரவுடன் இரவாக அசலூர்ப் பயணத்தைத் தொடர்ந்தாள் காத்தாயி. உடன் நடந்தாள் தாய். வழியில் ஒரு சந்திப்பு. மாரியப்பன் சந்தித்தான் கண்ணீரை "நீயா தொண்ணுக்கும் கிலேசப்படாதே புள்ளே;... இந்த மாரியப்பனோட நெஞ்சிலே மானம் மருவாதை, உளைப்பு நெசம் ஆகிய இத்தனை சொத்துக்களும் இருக்கிற பரியந்தம் நீ ஏதுக்காம் கண்ணைக் கசக்கிறே? ஒட்டு வூட்டுக்காரன் போறான், வக்கத்த பயமவன்!...ஒன்னை நான் நெஞ்சிலே தூக்கி வச்சுக் கும்புடுறேனாக்கும். நான் விருத்தனா வேசம் கட்டுறப்பவெம்லாம், வள்ளிப் பொண்ணு வந்தாக்க, அப்ப ஒன்னோட மூஞ்சிதான் என் மனசான மனசிலே நாடகம் போடும். ஒரு நாளைக்கு இப்பிடி கிழவனாட்டம் வந்து ஒன்னை மயக்கி அழுவ வச்சு, அப்பாலே சிரிக்கச் செய்யோணுமின்னு நான் ரோசனை பண்ணினது கூட உண்டாக்கும்! நீயும் நானும் ஒண்ணடி மண்ணடியாக் குந்திப்படுத்துக் கும்பிட்டு காலத்தை ஓட்டி, வேளையை வேண்டிக் கிட்டே இருக்கலாம், காத்தாயி! நீ வாயை தொறந்து ஒரு பேச்சுச் சொல்லுவியா? இல்லாப்

போனாக்க, எம்மூச்சான மூச்சு நின்னுப்பூடுமே?...'' என்று உள்ளத்தை உதட்டில் கொணர்ந்து நின்றான் அவன்.

''மச்சான், இப்ப நீங்க சும்மா இருங்க. எம் புட்டுக்கை இப்ப மெலிஞ்சு கிடக்குதுங்க. இந்தத் தேரோட்டம் பேயிறட்டும்; அடுத்த காப்புக்கட்டுக் குள்ளாற, நீங்க எனக்கு மஞ்சக் கவுத்தைக் கட்டிப் புடலாமுங்க!'' என்று உறுதியை முத்தாரமாக்கி, உண்மையை உத்தாரமாக்கினாளே, பாவை? அவள் ...பாவையா, பேதையா?

'பேதை அவள்!' என்று இந்திரஜித் எண்ணப்பூ தொடுத்திருக்க வேண்டும். இல்லையென்றால், குரு திக்கோடுகள் குடை ஏந்திய அவனது முகத்தில் அவ்வளவு அகம்பாவம் விதை தூவியிருக்குமா, என்ன? மனம் அகந்தையின் ஆடுகளமாக மாறும் போது, விதி அந்த ஆடுகளத்தையே கண்மண் தெரியா ஆட்டிப்படைத்துவிடும் வல்லமை பெற்ற தென்பதை அவன் எப்படி அறிவான்? அவன் நடிகன். உள்ளத்தில் உள்ளத்தைக் கூடுவிட்டுக் கூடு பாயச் செய்து காட்டும் ரசவாத வித்தை பயின்றவன்! அவ்வளவு தான்!

அவன் திடுக்கிட்டுத் தலையைத் திருப்பினான். தன்னையே ஒரு ஜோடிவிழிகள் விழுங்கத் தருணம் கணித்துக் கொண்டிருந்த தாத்பரியத்தைக் கணித் தான் அவன். சிந்தனை வசப்பட்ட நிலையுடன், முடியைக் கோதிக் கொண்டான். கை விரல்களில் ரத்தத்துளிகள் பாததூளி அமைத்திருந்தன.

''உங்களை என் உயிராக நினைத்திருந்தேனே, இந்திரஜித்?''

குரல், அவனுடைய குரல்வளையைப் பற்றி யதோ?

தன்பேரில் தவறில்லை என்பதை உணரும் குழந்தை, தன்னை தவற்றுக்கு இலக்காகத் துணிந்த உள்ளத்தையே அண்டி ஆதரவு காட்டிப் பேசும் போக்கில் அவள் கேட்டாள். அவளுடைய இந்தக் கேள்வியில், அவளது காதலின் கதைக்குரிய உள்ள டக்கம் இடம் பிடித்து வைத்திருந்தது. காணாதவர் கள் கண்ட கதை வரலாறு. கண்டவர்கள் காதலித்த கதை நடப்புச் சித்திரம். அப்படியிருக்கையில், வேண்டுமென்றே அளவிட்டு, ஏதோ மற்றமுகச் சூது விளைந்து விட்டிருக்கிறதே? இதைப் பற்றிய நினைப் பில் உழன்றாள் அவள். நெஞ்சு வெடித்ததோ, என்னவோ? சிரிப்பு வெடிக்கத் தலைப்பட்டது!..

அமுதவல்லி பயங்கரமாகச் சிரிப்பை உமிழ்ந் தாள்.

அப்போது:

''காத்தாயி!'' என்ற கூப்பாடு மேய்ந்து வந்தது.

அமுதவல்லி விம்மி வெடித்த கண்களைத் திசை மாற்றினாள்.

அங்கே மாரியப்பன் நின்றுகொண்டிருந்தான். பந்த-பாசம் துறக்கப் பழகிவரும் துறவியையொப்ப அவனுடைய முகத்தோற்றம் விளங்கியது.

'அம்மான் மகனே! நீங்கள் இல்லாமற் போயிருந் தால் நான் திசை மாறித் திக்கிழந்து போயிருப் பேனே? இந்த மூன்று வருஷங்களாக, எத்தனையோ தொல்லைகளுக்கு மத்தியில் நான் கட்டிக் காப்

பாற்றி வந்திருக்கும் என் மானமும் பறிபோயிருக்குமே? தாய் சொன்னாளே, அந்த அமுத வாக்கை அன்றைக்கே நான் படித்து உணராமல் போனேனே? பேதை நான்!...பாவி நான்...!'

பொய்த் தாடியும் மீசையும் 'டோபா' முடியுடன் தரையில் சிதறிக் கிடந்தன!

## தழுவாத துருவங்கள்!

அகத்தின் அழகு, அல்லது கொடுமை முகத்தில் தெரியும் என்கிறார்கள் பெரியவர்கள். சிலருக்கு இம் மூதுரை பொருந்தும். ஆனால் அவர்களுடைய அமுத வாக்கிலும் நஞ்சைத் தோய்த்து மூடி, அந்த நஞ்சை அமிர்தமாக்கி அமைத்துப் பேசி நடிக்கும் மனிதர்கள் உலகத்தில் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்களல்லவா? நல்லவர்களுக்கும், நல்லவர்களாக நடிக்கும் கெட்டவர்களுக்கும் ஊடாகத்தான் உலகம் சுற்றுகிறது; சுழலுகிறது. இப்படிப்பட்ட நியதிக் கோட்பாட்டில்தான், புனைவடிவம் என்னும் பொய்க் கூத்தும் மேடையேறிக் கொள்ள வேண்டியிருக்கிறது

ஆம்; இதுதான் வாழ்வெனும் நாடகம்-வாழ்வின் நாடகம்!

அமுதவல்லிக்குத் தன் கண்களை நம்பத் தெம்பு வந்தது. தரைப் புழுதியில் சிந்திச் சிதறிக் கிடந்த மாற்றுருவச் சாதனப் பொருள்களையே இமை மூடாமல் பார்த்தாள். பார்த்த கண்கள் பூத்தன. ஆபத்துக்கு உதவ தெய்வமாய் வந்துதித்த மனிதருக்கு நூறுரூபாய் கொடுக்கும்படி சொன்ன விஷயத்தை நினைவூட்டிக் கொண்டு, அந்த நினைவின் உருவத்

தின் மீது அவள் திரும்பத் திரும்பப் பார்வை செலுத்தினாள். தன்னை மறந்த துடிப்பில்-துடிப்பில் லயித்த சலனத் தவிப்பில்-தவிப்பில் நிலை புரண்ட மனப் போராட்டத்தில் சிக்கிக் கிடந்த அவள், தீர்வு கண்டு தெளிவு பெற்றவள் போல விழி கூட்டி வழி பார்த்து வழி நடந்தாள். கீழ்ப் படிக்கட்டுக்கு வந்ததும், "மச்சான்!" என்று அழைத்தாள். இதயம் என்னும் தத்துவத்தின் உட்பொருளை உணர்ந்து கொண்ட பரிபக்குவ நிலையில் நின்று அவள் கூப்பிட்டாள். வண்டு விழிகள் அழகாகத் துடித்தன, அழகாக நீர் சொரிந்தன.

மாரியப்பன் உணர்ச்சி வசப்பட்டவனாக நின்று கொண்டிருந்தான். அவனுடைய கைகள் புழுதி படிந்து, ரத்தக்கறை தோய்ந்திருந்தன. அவற்றை உரிமை கொண்டு பற்றினாள் அவள். "உங்களை நான் மறந்திருந்தேன். ஆனால், என்னை நீங்கள் மறக்காமல், ஆபத்துக்கு உதவினீர்கள். நான் பிழைத்தேன்: என் மானமும் பிழைத்தது!" என்றாள்.

துயரம் கவிழ்ந்த முகத்தில் சிரிப்பின் சன்ன இழைகள் அந்தம் கெடாமல் பின்னிக் கிடந்தன.

அமுதவல்லியின் அன்னை அப்போது அங்கே வந்தாள். வந்த அவள் மாரியப்பனைக் கண்டவுடன், "யாரு, எங்க மாப்புள்ளைத் தம்பியா?" என்று வியப்புக்குரலில் கேட்டாள்.

"ஆமாம்மா, நீ உள்ளே போய் இரு. நானும் மச்சானும் இதோ வருகிறோம்!"

கிழவி தத்தித்தத்தி நடந்து உள்ளே மறைந்தாள்.

அமுதவல்லி சொன்னாள்: "மிஸ்டர் இந்திரஜித், நீங்கள் இனிமேல் புறப்படலாமல்லவா? என்னுடைய வெள்ளை உள்ளத்தை ஏமாற்றத் திட்டம் போட்டீர்கள். நான் அறியாமற் போயிருந்தாலும், தெய்வம் அறியாமலிருக்குமா? என் அத்தானின் உருவைக் கொண்டு ஆண்டவன் தோன்றி என்னைக்காத்தான். சிறைக் கம்பிகளுக்கு உள்ளே வெந்து மடிந்திட வேண்டிய உங்களையும் காத்தான். வாழ்வின் தர்மம் பெரிது. இதை மறந்து விடாமல், சென்று வாருங்கள். ஒரு அமுதவல்லி உங்களுக்குச் சோதனைப் பொருளாக மாறியது போதுமல்லவா? இந்தத் திரைஉலகம் மாயாலோகம் என்று பாமரர்கள் சொல்வது வழக்கம். அதை நீங்கள் மெய்ப்பித்து விட்டீர்களே? உங்களை நான் ஆயுள் உள்ளமட்டும் எப்படி மறப்பேன்?"

ஆத்திரமும் அழுகையும் கட்சி கட்டிக் கொண்டு களத்தில் இறங்கின.

பேயறை பெற்று விட்டானோ திரையுலகக் கதாநாயகன் இந்திரஜித்?

ஜமீன்தார் மாதிரி விளங்கினான் மாரியப்பன். வயிறு புடைக்கத் தின்று விட வேண்டுமென்றுதான் கருதியிருந்தான். ஆனால், மனத்தில் இட்டு நிரப்பப் பெற்ற அமைதியும் சந்தோஷமும் பசிக்களைப்பையும், மன அயர்வையும் காற்றிலடித்து விட்டன: அவ்வுணர்வே, வயிற்றை நிரப்பியது போலவும் அவனுக்குத் தோன்றியிருக்க வேண்டும்!

"ஆமாம், அமுதா! நான் சொன்னது அத்தனையும் அப்பட்டமான உண்மையேதான். பிழைப்புக்கு வேஷம் போடப் பார்த்தார்கள். எப்படியோ ஒரு கண்டம் தப்பித்தது!"

அமுதவல்லி ஆனந்தமாகச் சிரித்தாள். அச்சிரிப்பில், நடந்த ரகசிய நடப்புக்கள் நடந்தன.

இந்திரஜித்தும் அமுதவல்லியுடன் திருப்பதிக்குச் செல்வதாக ஏற்பட்டாகியிருந்தது. திட்டமிட்ட பிரகாரம் அவளது கார் இந்திரஜித்தையும் ஏற்றிக் கொண்டது, சுவாமி தரிசனம் முடிந்தது. திரும்பினார்கள். இருட்டியது. வழியில் ஒரு காடு. அந்த முக்கத்தில் விரைவாகக் காரை திருப்பிய போது, நாலைந்து முரடர்கள் காரைத் நிறுத்தி அமுதவல்லியைத் தாக்க முனைந்தார்கள். அப்போது, இந்திரஜித் காரிலிருந்து இறங்கி அவளைத் தழுவ முனைந்தான். தெய்வாதீனமாக, அது தருணம்தான் அந்த அதிசயம் நிகழ்ந்தது. அங்கே தாடி மீசை திகழ வேலப்பன் தோன்றினான். அவனுடன் வேறு சில முரடர்களும் துணை வந்தனர். கை கலப்பு ஏற்பட்டது. இந்திரஜித்தை நையப் புடைத்தான் வேலப்பன். அவனுக்கும் நல்ல அடி. சற்று நேரத்தில் அமுதவல்லியைக் காணவில்லை. டிரைவர் திண்டாடிப் போனான். நல்ல அதிர்ஷ்டம்போன்று ஒரு பர்லாங் தொலைவில் ஹோட்டல் ஒன்று இருந்தது. அங்கு போய் அமுதா விலாசத்துக்கு 'ட்ரங்க்கால்' பேசி, நடந்த கூத்தைச் சொன்னான். பெரிய பட்டாளமே வந்தது. பேச்சு மூச்சற்றுப் போன அமுதவல்லியை வேலப்பன் கைத் தாங்கலாகப் பற்றியவாறு ஒரு மறைவிடத்தில் படுக்க வைத்து அவளுக்குச் சுயப் பிரக்ஞை வரச் செய்த ரகசியம் அப்புறம் அம்பலமானது!

''வேலப்பன் வேஷத்தை நான் நிதமும் நினைச்சுப் பார்க்கத்தான் வேண்டி வரும், மச்சான்!''

'மெய்தான். நான் வேலப்பனாய் மாறாமப் போயிருந்தா, இந்திரஜித்தின் கபட நாடகத்தை

அறிஞ்சுக்கிட்டிரிக்க வாய்ச்சிருக்குமா...? அவனுக்கு இருந்த பல கெட்ட தொடர்புகளுடன் திருப்திப் படாமல், உன்னையும் கெடுத்துப்பிட்டு, அப்பாலே நடுவழியிலே கை நழுவ விட்டுப்பிட வேணும்னு கொண்டிருந்த அந்தரங்கத்துக்கான துப்புத்தான் துலங்கியிருக்குமா?'' என்று முன் மொழிந்து, அதற்கு வக்கணையாக ஓர் உறையை நீட்டினான் அவன்.

''பிரியமுள்ள தர்மு!

நீ கோபப்பட்டாயாம்: தாபப்பட்டாயாம். நீ வைத்தியக்காரி. நான் நடிகன். இதை மறந்து விடுகிறாயே நீ? ஆனால் உன்னிடம் மட்டும் நான் நடிக்க முடியுமா? எனக்கு வாய்த்த முதற் காதலியாயிற்றே நீ? அமுதவல்லி அழகின் சிகரம். அவள் என் கனவுகளிலே அங்கம் குலுங்கிட நாட்டியமாடுகிறாள். என் ஆசைக்கு ஏற்ப, அவளே என்னைப் பிடிக்க வலைவீசி வருகிறாள். அவளிடம் உள்ள பணம் எனக்கு ஒரு பொருட்டல்ல. அவள் அழகுதான் எனக்குக் குறிப்புப்புள்ளி, என் சபலம் தீர்ந்துவிட்டால் போதும். அதற்காகவே என் நாடகம். இதைப்பற்றி நீ கிஞ்சித்தும் சங்கடப்படாதே.

இப்படிக்கு,
உன் காதலன்
இந்திரஜித்.''

அந்த மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமை, அமிர்தயோகம் கூடிய சுபயோக சுபதினமாக இருப்பதாகச் சோதிடர் தெரிவித்த தகவலை சோமலிங்கம் கிழவியிடம் சொன்னான். பொக்கை வாயை அகலத் திறந்து அதில் சிரிப்பை ஏந்திப் பிடித்த வண்ணம்

மகளிடம் சென்றாள் அவள். விவரத்தை விளக்கினாள். ''முகூர்த்தத்தை எப்ப கண்ணு வச்சுக்கிடலாம்?'' என்ற கேள்விக் கொக்கியை அவள் மண்டையில் மாட்டினாள்.

''யாருக்கு ஆத்தா முகூர்த்தம்?'' என்று ஆச்சரியக் குறியை அதரங்களுக்கு மத்தியில் எழுதிக் காட்டினாள் திரையுலக நட்சத்திரம் அமுதவல்லி.

''ஒனக்கேதான்!''

''நல்லாச் சொன்னீங்களே? ஆத்தா! இந்திரஜித் என் உடலுக்கு ஆசைப்பட்டார். புரிஞ்சிக்கிட்டேன். ஆனா, நம்ம மச்சான் என்னோட உடமைக்குத்தான் ஆசைப்பட்டிருக்க வேணும். இல்லாட்டி, இப்படிப் பட்ட வகையிலே வேஷம் போட்டிருப்பாங்களா? என்னோட மனசை விரும்பியிருந்தா, அதை நிரூபிச்சுக்காட்டியிருக்கலாமே? ஆத்தா, நான் சொல்லுறதைப் பொறுமையாய்க் கேட்டுக்க. பணத்தைக் கொடுத்து மச்சானை அனுப்பிப்பிடுறேன். எனக்கு இந்தப் பகல் வேஷப் பிழைப்பே வெறுத்துப் போச்சு. பேசாம, பழைய காத்தாயியாவே மாறிடலாம் போல இருக்குது!'' என்று குறைபட்டுப் பேசினாள் அமுதவல்லி. அவளது விழிநீரும் பேசியது.

அப்போது, பையன் ஒருவன் ஓடிவந்து ஜரிகை வேஷ்டி, சட்டை அடங்கிய மூட்டை ஒன்றை அவள் கையில் ஒப்படைத்தான். அதில் துண்டுக் கடிதம் இருந்தது.

"அன்பான அமுதா!

உன் படத்தை மட்டுமே நான் திருடிச் செல்கிறேன். என் தப்புக்காக என்னை மன்னித்துவிட உனக்கு உரிமையுண்டு.

இப்படிக்கு,
ராஜபார்ட் மாரியப்பன்."

"ஆத்தா! எனக்குப் புருஷனைத் தேடிக்கிட்டேன்! நாளைக்கே உன் இஷ்டம் போலவே என்னை மாலையும் கழுத்துமாப் பார்க்கலாம் ஆத்தா!" என்று சிரிக்கச் சிரிக்கப் பேசினாள் அமுதவல்லி.

மார்புறத் தழுவிய அமுதவல்லியுடன் மாரியப்பன் நஞ்சுண்டு வீட்டு முகப்பில் சுருண்டு கிடந்த உண்மை நிலையை அவள் எப்படி அறிவாள்?

✻ ✻ ✻

# 2. பிறந்த பொன்னாடு!

அடுப்பில் பூனை தூங்கிக் கொண்டிருக்கிறது!— சல்லாபமான தூக்கம். அடங்கிக் கிடந்த சாம்பல் பள்ளம் அந்தப் பூனைக்கு வெகு உணக்கையாக இருந்திருக்க வேண்டும். வாடையுந்தான் அற்பசொற்பமாகவா அடித்துத் தொலைக்கிறது?—பின் பூனையைக் குறை சொல்லத் தகுமா, என்ன? வீட்டுப் பூனை அது. முண்டன் மகன் தேடி வந்து கொடுத்தான், புரட்டாசிக் கெடுவில். தும்பைப் பூ நிறம் துளி ஒச்சம் இருக்க வேண்டுமே? திருஷ்டி பரிகாரத்துக்கென்றாவது அசந்து மறந்து ஒரு கரும்புள்ளியைச் சூடிக்கொண்டிருக்காதா? ஆஹா! அந்த மீசை நீட்டி விட்டவெள்ளிக் கம்பிபோல எவ்வளவு எடுப்பாக இருக்கிறது! [ஆமாம், சூடேறியும் சூடேற்றியும் வருகிற இந்த நவநாகரிக யுகத்திலே 'பூனை மீசை ஃபாஷன்' மட்டிலும் ஏன்தான் இன்னமும் அரும்பு விடவில்லையாம்?...]

'வெள்ளை' படுசமர்த்து. இல்லாவிட்டால், அது கண் வளர்வதற்கு இந்த அடுப்பை சயனக்கிரமாகப் பொறுக்கியிருக்குமா? மீனாட்சி அடுப்பு மூட்டவில்லை என்கிற துப்பைக் கண்டு கொண்டுதான் இப்படி அடித்துப் போட்டமாதிரி உறங்குகிறது போலும்! எத்தனை எலிகளை எங்கெங்கே அடித்துப் போட்டதோ, பாவம்!

வீட்டுப் பூனைக்குச் சகுனம் இல்லையாம், எதிர் வீட்டுச் செல்லிப் பாட்டி சொல்வாள். அதில் ஒரு நிம்மதி சுப்பையாவுக்கு. இல்லையேல், பாயும் படுக்கையுமாக ஆகிவிட்ட இந்த அவல நிலைமையிலே—நெருக்கடி மிக்க இந்தச் சோதனைச் சமயத்திலே, உள்ள கஷ்டம் போதாதென்று, பூனையை மடியில் கட்டிக்கொண்டு சகுனம் பார்க்கும் சோதனையையும் மேற்கொண்டிருக்கமாட்டான் தான்!

நுரையீரல் குலையினின்றும் பயங்கர இருமல் புறப்பட்டது; இருமல் சத்தம் இவ்வளவு கர்ண கொடூரமாகவா இருக்கும்! எதிரியை விரட்டியடிக்க நம் பீரங்கிகள் இப்படித்தான் சத்தமிட்டிருக்குமோ? இப்போதுதான் சுப்பையாவுக்கு மூச்சு வந்தது. கண்கள் இரண்டும் என்னமாய் நிரம்பி வழிகிறது! தொண்டைக் குழியில் அரித்த எரிச்சல் அடங்கிவிட்டதென்று சொல்ல வேண்டும். குழி விழுந்து கிடந்த விழிகளை, வேட்டியை இழுத்துத் துடைத்துக்கொண்டே, நின்றது. நின்றபடி மறுபடியும் அந்த அடுப்படியையும் வெள்ளைப் பூனையையும் மாறி மாறி, மாற்றி மாற்றிப் பார்வையிட்டான். ஒரு மடக்கு நீராகாரம் குடித்தால் தேவலாம் போலிருந்தது. மெள்ளக் குந்திக்கொண்டு கஞ்சிப் பானையை இழுத்து நகர்த்தினான். கவிழ்த்திருந்த ஈயச்சட்டியை வாகுகணித்து எடுப்பதற்குள் அவனுக்கு மூச்சு வாங்கியது. மீனாட்சியின் சமர்த்து யாருக்கு வரும்? நேரம் காலம் கூடிவரவில்லை இன்னமும். மாங்குடியில் பிறந்த மனையில் பட்டது போதாதென்று இங்கு புகுந்த இடத்திலும் விதி நீட்டிய தளைக்குள் புகுந்து அல்லற் படுகிறாள், பாவம்!...

கஞ்சிப்பானை முகம் காட்டி, அகம் காட்டியது,

சுப்பையாவுக்குக் குழந்தைகளின் ஞாபகம் பீறிட் இருக்க வேண்டும். உள்மனம் விம்மிப் புடைத்தது. உள்வட்டமாக. ஏக்கமும் வேதனையும் சுற்றிச்சூழ, அவன் பார்வை பானையில் பதிய, நடுங்கும் கைக ளைப் பானைக்குள் நுழைத்தான். ஒரு பிடி கஞ்சிப் பருக்கைக்கூட தட்டுப்படக் காணோம்! நீராகாரத் திற்கு மாத்திரம் 'துட்டு' இல்லை. பெருமூச்சு நெளிந்தது.

சற்று முன்னே மிச்சம் சொச்சம் இருந்த கஞ்சியை வார்த்துக் கொண்டு சாப்பிட்டுவிட்டு விளையாடப் போய்விட்டாள் சின்னக் குட்டி. அமுதாவுக்கு ஒரு நாளைக்குப் பத்துவாட்டி கஞ்சி அல்லது சோறு வேண்டும். இல்லாவிட்டால் லூட்டிதான்; ரோதனை தான். பழசுபட்டதைத் தொட்டுக் கொண்டு உண்டு முடித்து ஒழுங்கைக்கு ஓடிவிடுவாள் விளையாட. விளையாட்டுத்தான் சதம் அவளுக்கு.

மூத்தவன் காமராஜ் ஸ்கூலுக்குப் போய்விட் டான். மூன்றாம் வகுப்பு. கொஞ்ச நேரத்துக்கு முந்தி அவன் ஓட்டமாக ஓடி வந்து என்ன பாடு படுத்திவிட்டான்!— "நம்ப நாட்டைப் பாதுகாக்கிற துக்காக வாத்தியார் ஐம்பது காசு வாங்கிட்டுவரச் சொன்னார், அப்பா!" என்றான்.

அவன்—சுப்பையா எங்கே போவான் ஐம்பது காசுக்கு? கொஞ்ச நஞ்சம் ஒட்டியிருந்த ரத்தம் பாவ புண்ணியத்திற்கென்று ஒட்டியிருந்த அந்த ரத் தம் கூட இப்போது உறைந்து விடும் போல பூச் சாண்டி காட்டியது. பிறந்த பொன்னாட்டைக் காத் திட கையில் மடியில் இருப்பதைத் தாராளமாகக் கொடுக்க வேண்டியதுதான்!— அது நம் கடமை

தான்! அறமே வெல்லும் என்கிற நித்தியச் சத்தியத்திற்குச் சான்று பகருவது மாதிரி, வீர பாரதத்திடம் பாகிஸ்தான் சரணடைந்த கதை அவன் இதயத் திரையில் சலனச் சித்திரமாகப் படம் காட்டத் தொடங்கியது. அவன் சுயப்பிரக்ஞையை மீட்டுக் கொண்டு தலையை நிமிர்த்திய நேரத்தில், தன் பல்லவியைப் பாடத்தொடங்கி விட்டான் வாண்டுப்பயல்.

“அப்பா, காசு கொடுங்க!”

“சுப்பையா தன் அருமைப் பிள்ளையை ஏறெடுத்து நோக்கினான். என்ன வகை செய்வான்? என்ன பதில் சொல்லுவான்? அவன் பார்வை அவனது இன்னுயிர்த் துணையின்பால் பரிந்தோடியது.

அம்மா பக்கம் திரும்பி, “நீ யாச்சும் காசு கொடம்மா. நம்ப நாட்டைப் பாதுகாக்கிற கடமையிலே நம்ப பங்கையும் நாம் செலுத்திப்புட வேணாமாம்மா?” என்றான்.

அவள் சிந்தனை வசப்பட்ட நிலையில், ‘ஆமாம். என்ற பாவனையில் தலையை வசமாக உலுக்கினாள். பிறகு பரிதாபமாக மகனை நோக்கலானாள். “காசு இப்போ கைவசம் இல்லையேடா, கண்ணே! இருந்திருந்தால் இந்நேரம் அடுப்பு புகையாமல் இருந்திருக்குமாடா?” என்றாள். தங்கைக்கென்று கொஞ்சத்தை வைத்துவிட்டு, நாலு கொத்துக் கஞ்சியைத் தட்டில் போட்டுக் கொடுத்துச் சாப்பிடச் செய்து அவனைக் காலையிலே பள்ளிக்கு அனுப்பவில்லையா அவள்?

"நாட்டைப் பாதுகாக்கவேண்டியது நம்ப பொறுப்பு இல்லையா அம்மா?"

"யாரடா கண்ணே இல்லேன்னு சொன்னது? அது நம் கடமையாச்சே!"

"பின்னே, காசு கொடேன்!"

விழி பிதுங்க, கொண்டவனை ஊடுருவினாள் மீனாட்சி.

"நாளைக்குக் கொடுத்திடலாமப்பா. இப்போ காசு இல்லையே என்ன செய்வது? திடுதிப்னு எங்கே போய் கடனோ கைமாற்றோ வாங்க முடியும்? நமக்குத் தான் அந்த மாதிரிப் பழக்கமும் கிடையாதே?... அப்பாவுக்கு உடம்புக்கு வந்தது தொட்டு இந்த நாலைஞ்சு மாசமாக எவ்வளவு பாடுபட்டுக் குடும்பத்தை நடத்த வேண்டியிருக்குது? நம்ப கஷ்ட நஷ்டம் நம்ப வீட்டுச் சுவர்களைத் தாண்டி வெளியே தடம் காட்டிடப்படாதேன்னு தானே நாம இம்புட்டு மானமாய் காலங்கடத்திட்டு வரோம்!— இந்தத் துப்பு உனக்கு இன்னமுமா விளங்கலே?... நம்ப தாய் மண்ணைக் காக்கிறதுக்காக பாதுகாப்பு நிதிக்கு அள்ளி அள்ளிக் கொடுக்கத்தான் துடிக்குது என் மனசும்... அம்மா மனசும்!... ஆனா, மாரியாத்தா இந்தச் சமயத்திலே இப்படிச் சோதனை செய்கிறாளேப்பா அதுக்கு என்ன செய்யட்டும் நாங்க!"—சுப்பையாவின் தொண்டை அடைபட்டது. இருமல் அடைபடவில்லை.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. இப்போ எனக்கு அம்பது காசு வேணுமாக்கும்!" இல்லாட்டி..." என்று 'தொக்கு' வைத்து அழத் 'தொடங்கினான். அவனுடைய மாமூலான கடைசி அஸ்திரம்! ரோசம் எப்படி வருகிறது!

மீனாட்சி அவசரம் அவசரமாக ஐந்தறைப் பெட்டியை எடுத்து வெளிச்சத்தில் வைத்துத் திறந்தாள். ஏதாவது காசுபணம் ஒளிந்திருக்க வேண்டுமே என்று மாரியம்மனை 'நேந்து' கொண்டது அவளது பெற்ற நெஞ்சம் கடுகுக்கடியில் இரண்டு ஐந்து காசுகளும் வெந்தய அறையில் ஒரு பத்துக் காசும் கிடைத்தன. எடுத்துப் போட்டாள்.

சுப்பையா தன்னுடைய கிழிசல் பர்ஸைத் துழாவிய போது, சில்லறைக் காசுகள் பதினைந்து காசுக்குத் தேறின.

எல்லாவற்றையும் வாய்விட்டு எண்ணத் தொடங்கினான் காமராஜ். கூட்டல் கணக்கில் அவன் சூரப்புலியாக்கும்! "பலே! இன்னமும் பதினைஞ்சு காசுதான் வேணும்!" என்று முத்துப்பல் வரிசையை அம்பலப் படுத்திய வண்ணம் நடைக்கு ஓடினான்; பழைய அட்டைப் பெட்டியை எடுத்துப் பிரித்துக் கொட்டினான். சிதறிய கோலிக் குண்டுகளுக்கும் சினிமா நோட்டீஸ்களுக்கும் ஊடாக மூன்று காசுகளும் விழுந்தன. எப்போதாவது 'வாய் இளைத்து' வரும் வேளைகளிலே அம்மாவிடமோ அல்லது அப்பாவிடமோ காசு வாங்கி ஏதாகிலும் வாங்கித் தின்பான் அவன். சில சமயங்களிலே, பொறுப்புக் கொண்டவனாக அந்தக் காசுகளைப் பத்திரமாகச் சேமித்து வைப்பதும் உண்டு. அவ்வகையில் மிஞ்சியவைதாம் இக்காசுகள்! எண்ணினான் பதினாறு காசுகள் சேர்ந்திருந்தன. 'சபாஷ்' என்று கூவிய வாறு, ஒரு காசை மீண்டும் அந்தப் பழைய அட்டைப் பெட்டியில் போட்டுவிட்டு, பதினைந்து காசுகளை எடுத்துக் கொண்டான்; காத்திருந்த முப்பத்தைந்து காசுகளுடன் இணைத்தான். எல்லாவற்றையும் இனம் பிரித்து, திரும்பவும் எண்ணினான். "வள்ளிசாக அம்

பது காசு இருக்கு. நான் போயிட்டுவாரேன், அம்மா. நான் போய் வாரேனுங்க அப்பா!'' என்று துள்ளிக் குதித்தபடி ஓடலானான். அவனா விளையாட்டுப் பிள்ளை?

இந்தச் சின்னப் பிள்ளைக்குத் தான் நாட்டின் பேரிலே எம்மாம் அக்கறை!'' என்று பான்மை பூண்டு புன்னகை செய்தாள் மீனாட்சி.

''வாஸ்தவம்தான்!'' என்று பெருமையோடு ஆமோதித்தான் சுப்பையா. பெருமையில் பெருமிதம் சுடர் தெறித்தது.

''எழுதிக்கிடந்தால், நம்ப பயல் மணி தான்!' என்றாள் அவள்.

''காமராஜ் பிழைச்சுக் கிடந்தால், உனக்குப் பயமே கிடையாது, மீனாட்சி! அவனுடைய வெளுத்த உதடுகள் துடித்தன.

அன்புக் கணவனை ஏக்கத்தோடு ஊடுருவினாள் மனைவி. மங்களம் பொலிந்த மஞ்சள் முகத்தில் கலவரம் சோக மேகமெனச் சூழ்ந்தது. ''அவன் பிழைச்சுக் கிடக்கட்டுமுங்க, அத்தான். அவன் பிழைச்சுங் கிடப்பான்! சீரான வாழ்வுக்கு இந்த ரெண்டு செல்வங்களே போதுமின்றி திட்டமிட்டு முடிவு கட்டி மதிச்சு வாழ்கிற நம்பளோட பிரார்த்தனையைக் கட்டாயம் ஆத்தா மகமாயி ஈடேறச் செஞ்சிடுவாள். அந்த நம்பிக்கை உங்களுக்கு மட்டுமில்லை, எனக்கும் ரொம்பவும் உண்டுங்க. ஆனால் ஆனால்...? அவள் என்னவோ வாயெடுக்கத் துடித்தாள். ஆனால் சொற்கள் கூடினால்தானே?

சுப்பையா தன்னுடைய அழகான சுருட்டை முடிகளைக் கோதிவிட்டபடி மீனாட்சியை ஆழ்ந்து

நோக்கினான். அவளுடைய அன்பு மிக்க மார்பகத்தில் இழைந்திருந்த அந்த மஞ்சள் தாலியை ஆதரவுடன் பற்றிக் கண்களிலே ஒற்றிக் கொண்டாள். ஈரம் சுற்றியது. "மீனாட்சி நம்ப மகன் பிழைச்சுக் கிடந்தால் உனக்குப் பயமே இல்லைன்னு நான் சொன்னதை மனசிலே வச்சு மறுகுறீயா?— அவன் கெட்டிக்காரன். பிழைச்சுப் பெரியவன் ஆயிட்டா, உன்னை அன்போடு காப்பாற்றுவான், இல்லையா? அதை நினைச்சுத் தான் நான் இயல்பாய்ச் சொன்னேன். ஆனா நீயோ வேறே எதையோ நினைச்சுக் குமைகிறே! நான் தஞ்சாவூரிலேயும் சரி, இந்தப் பூவைமா நகரிலேயும் சரி, அடிக்கடி உன்கிட்டே சொல்லுற தில்லையா. நாம் நல்லதையே நினைக்கப் பழகிக் கிடணும்னு?... அது மாதிரி, நாம் நல்லதே நடக்கும் என்கிற ஒரு பரிசுத்தமான வைராக்கியப் பண்போடே காலத்தை தன்னம்பிக்கையோடு ஓட்டுவோம்! நீ பயப்படுறாப்பிலே என் உயிருக்கு ஒரு பயமும் இனி மேல் இல்லவே இல்லை, மீனாட்சி! ஆண்டவன் நம்மோட நியாயமான பிரார்த்தனைகளையும் நேர்மையான கனவுகளையும் கருணையோட செவிசாய்க்காமல் இருக்கவே மாட்டான் என்னை நம்பு, மீனாட்சி!"

உணர்ச்சிப் பெருக்குடன், பேசினான் சுப்பையா.

"உங்களை நம்பாமல் இந்த மண்ணிலே நான் வேறே யாரைத் தானுங்க நம்புவேன், அத்தான்?" என்று விம்மினாள், சுப்பையாவுக்கு உடைய மீனாட்சி.

நெஞ்சைத் தடவிவிட்டுக் கொண்டான் அவன்!

என்னவோ சத்தம் கேட்டது. எலிப்பண்ணை மீண்டும் படையெடுத்து விட்டதோ? கையிலும் காலி

னுமாக இடமாய்த்துக் கொண்டிருந்த எலிப்படை கள் 'வெள்ளை' வந்த நாளாக எங்கேதான் அஞ்ஞாத வாசம் செய்கின்றனவோ?—சனியன்கள்!

சுப்பையா பானையடியினின்றும் மெதுவாக எழுந்தான். நீராகாரம் வேண்டவில்லை. மனம் நிம்மதியைப் பறிகொடுக்கும்போது, எதுதான் சுவா தினமாகப் படுகிறது? வேதனைப் பெருமூச்சோடு திண்ணைக்கு நடந்தான். காலையில் அடுப்பைப் பற்றவைக்காமல் பிரமை பிடித்து அமர்ந்துவிட்ட துணைவியிடம், "மீனாட்சி, இரண்டொரு நாளிலே நான் பிழைக்கப் போயிடறதாக முடிவு செஞ்சிட் டேன். இனியும் உன்னையும் நம்பளோட ரெண்டு தங்கங்களையும் சோதிக்கிறதுக்கு என் மனச்சாட்சி ஒப்பவே ஒப்பாது! விதிக்குப் பசி எடுக்குமோ, எடுக் காதோ? ஆனா, பசிக்கு விதி ஏது?" என்று ஒரு தீர் மானச் செறிவுடன் அவன் உரைத்த முடிவும் அக் கணம் அவன் நினைவுகளிலே வைராக்கிய முத்திரை பதித்ததை அவனால் மறந்துவிட முடியாதல்லவா?

பூனை விழித்துக் கொண்டது.

அடுப்பு எப்போது விழித்துக் கொள்ளுமோ?

பழைய ஞாபகத்தில் இடதுகை மணிக்கட்டைத் திருப்பினான் அவன். பிறகு, வேதனை மல்க வெய் யிலைக் கவனித்தான். முற்றத்துக் கீழ்ப்புற வாசலை நெருங்கிக் கொண்டிருந்த வெய்யில் அவனுக்குக் காலத்தைக் கணக்கிட்டுக்காட்டியது போலும்! மகன் இனி மத்தியானச் சாப்பாட்டுக்கு வந்து நிற் பானே?...

'ஆத்தா!'

எங்கே போய் விட்டாள் மீனாட்சி?

தட்டினால், திறக்கவேண்டும்!- இது விதி.

கையிலிருந்த செய்தித் தாளை வீசிவிட்டு நடந்து சென்று கதவைத் திறந்தான் சுப்பையா. காலையில செல்லையா கடையில் சாயா குடித்த போது குதிகாலுக்கு எத்துணை வல்லமை இருந்தது! தஞ்சாவூர் லெட்டர் இன்றைக்கேனும் வருமா?

வாசலில் தபால்காரன் நிற்கவில்லை.

அமுதா நின்றாள். கையில் பை, பையில் கொட்டாங்கச்சிகள், ஒழுங்கை மணல், ஓட்டை ரெயில் "அப்பா, பிஸ்கட் தா!" என்று செல்லமாகச் சிணுங்கினாள்.

அவன் நோக்கு தெருவுக்கு ஓடிய தருணத்தில், ராட்டை நூற்றுக் கொண்டிருந்த பெண்டுகள் காட்சியளித்தார்கள். மீனாட்சியும் நூற்பாள். வாரம் எட்டு ரூபாய் கிட்டும். அந்த வருவாயும்தான் இந்த நாலைந்து மாதங்களாகப் போய் விட்டதே? மகளைப் பார்த்தார். கையை ஆவல் துள்ள நீட்டிய குழந்தையை ஆதரவுடன் தூக்கிக்கொண்டு, "வாம்மா, பிஸ்கட் தாரேன்!" என்று சொல்லிக் கொண்டே சற்று வாசல் வெளியில் நின்றுவிட்டு, பிறகு, என்னவெல்லாமோ சிந்தித்தவனாக உள்ளே அடியெடுத்து வைத்தான்.

அமுதா படு சுட்டி. இறங்கிக் கொண்டாள். பிஸ்கட் பாட்டுப் பாடலானாள்:

சுப்பையாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. 'இருப்பு' கொள்ளாமல் வழிந்த காலமும் ஒன்று இருக்கத்தான் இருந்தது. காலம் மலையேறி விடலாம்; ஆனால் அந்தக் காலத்தின் சரிதத்திலே முத்திரை பதிந்த நிகழ்வுகள் மலை மேலிட்ட தீபங்களாகப்

பிரகாசிக்காமல் இருக்க இயலுமா? தஞ்சாவூரிலே கீழவாசலில் இருந்த 'டயர் ரீட்ரேடிங்' கம்பெனி ஒன்றில் அவனது படிப்பும் புத்தி சத்தியும் வாங்கிக் கொடுத்த மானேஜர் பதவி அவன் குடும்பத்தை அங்கே ராஜபோகமாகத் தான் வைத்துப் பேணியது. மானம் பேணி, கௌரவம் காத்து வந்தான் அவன். அவனைப் பொறுத்த மட்டில் மிக மிக எளிமை வாழ்வுமேற்கொண்டான். அவனுக்குத் தக்க பிணை-இணைதான் மீனாட்சி. கட்டுச் செட்டாகத்தான் குடும்பம் ஓடியது காலமும் ஓடியது. காமராஜ் பிறந்தான். அப்பால் இந்த அமுதா ஜனனம். அஞ்சல் நிலையச் சேமிப்பு கரைந்தது. கடன், கைமாற்று என்கிற வியவகாரம் அவர்கள் வரை அனுபவிக்காத சோதிப்புகள்தான். ஆனால் குழந்தைகளைப் பொறுத்த அளவில் அளவிலா ஆனந்தம் அனுபவித்தார்கள் அவர்களின் நடைமுறை வாழ்வு கற்பித்த அனுபவங்கள், அந்த இரண்டு குழந்தைச் செல்வங்களோடு அமைதி காணப் போதித்தன சோதனை இல்லையேல் வாழ்க்கை ருசிக்காதோ?

ஒருநாள் டயர் கம்பெனி முதலாளி சுப்பையாவை அழைத்தார். அப்போது அவன் மாத்திரம் தான் கணக்கு எழுதிக் கொண்டிருந்தான். சென்றான் மதுவிலக்கு நிறுத்தி வைக்கப்பட்ட நாள் தொட்டு அம்மாதிரியான இராக்காலங்களிலே சுப்பையா மிகவும் எச்சரிக்கையோடு இருப்பான். ஏனென்றால், முதலாளியைப் பற்றி அவனுக்கு நன்கு தெரியும். விதி தளர்த்தப்படும் போது, அந்த விதியையே சோதித்துப் பார்க்க முனைவதும் மனித இயல்பு தானோ? எஜமானர் காதோடு காதாக,

''சுப்பையா. பஸ் ஸ்டாண்ட் வரை போயிட்டு வந்திடுங்க, இருபது ரூபாய் எடுத்திட்டுப் போங்க''

என்று பூடகமாகப் பேச்சைத் தொடங்கி, பின், அவர் வழக்கமாகப் பருகும் ,பிளாக் நைட்'' மதுவின் பெயரையும் தெரிவித்தார்.

சுப்பையாவுக்கோ ஆத்திரம் சூடு பிறந்தது ''உங்க கம்பெனியிலே இருநூற்றைம்பது ரூபாய் கொடுத்து என்னை மானேஜராக நியமிச்சது உங்க கம்பெனியோட நிர்வாகத்தைக் கவனிக்கிறதுக்குத் தானே? இம்மாதிரியான ஈனச் செயல்களுக்கு பத்து இருபது கொடுத்து யாராவது ஈனப்புத்திக்காரனை எடுபிடியாக வச்சுக்கிடுங்க. ஆற்றிலே போட்டாலும் அளந்து போடணும்னு உங்க இனத்திலே சொல்லப் படுகிற வழக்கை நானும் அறிஞ்சவன் என்கிறதாலே தான் சொல்கிறேன். இதுநாள் பரியந்தம் என்னைச் சோதிக்காமல் இருந்த உங்க நல்ல புத்திக்குக் கும்பிடு போடணும்!'' என்று சோளம் பொரியச் சொல்லி விட்டு, அத்துடன் நிற்காமல், தனக்குச் சேர வேண்டிய சம்பளப் பாக்கியையும் வாங்கிக்கொண்டு அதற்கப்புறம் ஒருகணமும் அங்கே நிற்காமல், மாநம் புச்சாவடி வீட்டுக்கு வந்து விட்டான்.

புயலின் காதை புரிந்தது மீனாட்சிக்கு. ''பணம் ஒசத்தியில்லேங்க. நீங்க செஞ்சதுதான் சரி. நமக்கு —நம்ப மாதிரி ஏழை பாழைங்களுக்கு இருக்கக்கூடிய விலை மதிக்க முடியாத செல்வம் நம்ப மானமும் கௌரவமும் தானுங்களே, அத்தான்!'' என்று தேற்றினாள்.

அங்கேயே வேறிடத்தில் வேலை தேடிக்கொள்ள முயற்சி செய்தான் சுப்பையா. அப்போதுதான் அவனுக்கு விஷ ஜுரம் மூண்டு, பாயும் படுக்கையு மாகி, மீனாட்சியின் நகை நட்டுகளும் மிச்சம் மீத

மிருந்த காசு பணமும் விதிச்சுழலுக்குச் சமர்ப்பண மாகிவிட நேர்ந்தது. பிறந்த மண்ணில் ஓய்வுகொள்ள வேண்டுமென்பது டாக்டரின் கட்டளை!

எதை மறப்பான்? எதை மறக்காமல் இருப்பான்?

இந்த லட்சணத்தில் வாழ்க்கை எப்படி விளை யாட்டு ஆக முடியுமாம்? பொய்! வாழ்க்கை ஒரு தண்டனை!...ம்...!

''அப்பா, ரொட்டி!'' என்று நாதம் கூட்டினாள் சுட்டிப் பெண். இடது தோள்பட்டையில் இருந்த கிழிசலை நாசூக்காக மறைத்துக் கொண்டாள்.

சுப்பையா இடுக்கியில் சிக்குண்ட கூண்டுப் புழு வெனத் துவண்டான். ''இந்தா தாரேன் அம்மா!'' என்று உருக்கமாகச் சொல்லிக் கொண்டே உள்ளே வந்து, ஆஸ்டர் மில்க் டப்பாக்களைத் திறந்து திறந்து மூடினான். ஒன்றிலேனும் சாஸ்திரத்திற்காவது ஒரு ரொட்டி, ஒரேயொரு ரொட்டி தரிசனம் கொடுக் காதா, தெய்வமே!

இத்தனை நாட்களிலே இப்படிப்பட்ட பயங்கரச் சோதனை ஒரு நாளில்கூட சம்பவித்ததில்லையே? வீட்டில் எஞ்சிக்கிடந்த வெள்ளிச் சாமான், வளை கள், ட்ரான்ஸிஸ்டர், கடிகாரம் என்று எல்லாவற் றையும் புதுக்கோட்டையில் ரகசியமாக விற்றுப் பணம் பண்ணி, குடும்பத்தை ஓட்டிய கதையை அவர் களது வீட்டின் நான்கு சுவர்கள்கூட அறிந்திருக்க முடியாதே?

பழைய பல்லவியையே பாடி வீரிட்டது குழந்தை.

காலையில் தேநீர் அருந்திவிட்டு அருகிருந்த பெட்டிக் கடையில் பிஸ்கட் வாங்க காசைத் தேடி னான் அவன். பை காலியாக இருந்தது. முன்பே

தெரிந்திருந்தால், சாயா குடிக்காமல் இருந்திருப்பான் அவன். தின்பதற்கு ஏதாவது வாங்கியிருப்பான். அப்படி எத்தனையோ முறை செய்தும் இருக்கிறான் அவன். பசி வயிற்றைக் கிள்ளியது! இருமல் உயிரை வாங்கியது!...

என்னவோ ஒரு நினைப்புடன் மேலத் திண்ணைக் கொடியில் கிடந்த ஒரு பழஞ்சட்டையை எடுத்து உதறினான், சுப்பையா. ஒரேயொரு 'க்ளாக்ஸோ பிஸ்கட்' விழுந்தது. என்றோ ஒரு தினம் 'வேண்டாம்' என்று அமுதாவினால் நிராகரிக்கப்பட்ட அந்த ரொட்டி இப்போது ஆபத்துக்குக் கை கொடுத்தது; சுவை கொடுத்தது!

"அத்தான்! பிள்ளை குட்டிங்கன்னு ஆனப்புறம், நாம் நிதமும் குறைந்தபட்சம் பத்துப் பத்துக் காசாக வேச்சும் நம்மோட எதிர்காலக் குடும்பப் பாதுகாப்புக்கென்று சேமிச்சுச் சேர்த்து வைக்கப் பழகிக்கிட்டு வந்தால், ஆபத்துச் சமயங்களிலே எவ்வளவோ உபயோகப்படுமுங்க!" என்பாளே மீனாட்சி அடிக்கடி!

மீனாட்சிக்குத்தான் எத்துணை தீர்க்க தரிசனம்! அவள் சமர்த்து யாருக்கு வரும்?

அவள் புத்திப்படி அவன் சேர்த்து வைத்திருந்ததெல்லாம்தான் அவனுடைய பாழாப்போன நோய்க்கு அர்ப்பணமாகி விட்டதே!—இல்லையேல் அவன் மறுபிறவி கொண்டிருக்க முடிந்திருக்காது. சுப்பையா மட்டும் பைத்தியக்காரனா, என்ன...?

"அமுதா, நாளைக்கு நான் வேலை தேடப்புறப்படப்போறேன். திரும்பினதும் முன் மாதிரி உனக்கு தின்கிறதுக்கு ஏராளமான முந்திரி பருப்பு, பிஸ்கட், ஆப்பிள் எல்லாம் வாங்கிட்டு வாரேம்மா!"

''இன்னிக்கு?'' என்று அடம் பிடித்தாள் குழந்தை வெறுங்கையை விரித்தாள். தின்ற ரொட்டியின் சுவடே தெரியவில்லை.

''அம்மா திரும்பட்டும். இப்பவே நான் ரோட்டுக்குப்போய் வாங்கியாரேன்!''

''பக்கத்து வீட்டு பாமா மட்டும் சதா ரொட்டி தின்றாளே?''

''அவங்க புதுப் பணக்காரங்க''

''நாம்ப மட்டும் பழைய பணக்காரங்க இல்லியோ?''

அவனால் சிரிக்காமல் இருக்கக் கூட வில்லை. ''ஊம்! நாம் பழைய பணக்காரங்கதானம்மா!''

உண்மைதான்!

சுப்பையா பெருங்காயம் வைத்த பாண்டம்தான் அதற்குச் சாட்சியம் சொல்லும் இந்த வீடு நிலைத்திருக்க வேண்டும்.

'ஆத்தா!...'

மறு பஸ்ஸில்தான் 'மெயில்' வந்திருக்கிறது.

சுப்பையா ஆவலோடு எதிர் நோக்கித் தவமிருந்த தஞ்சாவூர்த் தபால் வந்து விட்டது. அவன் எதிர்பார்த்த பிரகாரமே விஷயமும் பழம்தான் மீனாட்சி சென்ற வாரம் சொன்ன சோதிடம் நிஜமாகத்தான் இருக்கும் போலிருக்கிறது. குரு பெயர்ந்து விட்டானாம்.

சந்தோஷம் பிடிபடவில்லை. துன்பம் மட்டும் பிடிபட்டதா? ஊஹூம்! மனத்துக்கு உகந்தவளிடம். மகிழ்வுச் சேதியைச் சொல்ல நெகிழ்ச்சி பின்னிக்

பின்னிக் காத்து நின்றான் அவன். நடைக்கும் வெளி வாசலுக்குமாக நடை பயின்றான். இடுப்பு வேட்டி 'பட்'டென்றது. எட்டு முழ வேஷ்டியைக் கண்டு இவ்வளவு நாள் தாக்குப் பிடித்தது. 'காந்திஜி என்ன, ஔரங்கசீப் என்ன இவங்கவெல்லாரும் தங்கள் கிழிசல்களை தாங்களேதானாக்கும் தைத்துக் கொண்டார்களாம்!' என்ற பீடிகையுடன் அவள் அவனுடைய வேட்டியைத் தைத்துக் கொடுக்க, அதற்கு அவன் சமத்காரமாக, ''மீனாட்சி நான் தைத்தால் என்ன, நீ தைத்தால் என்ன? எல்லாம் ஒன்றுதானே?'' என்று ஒரு போடு போடவில்லையா?

தஞ்சாவூரில் பழ. மு. லேவாதேவிக் கடையில் வேலைக்குச் சேர்ந்ததும், முதலில் பிள்ளைகளுக்கு வேண்டிய தின்பண்டங்கள், துணிமணிகள் வாங்கியாக வேண்டும். பிறகு ஒரு வேட்டி, சட்டை வாங்க வேண்டும். ஊஹூம், முதலில் மீனாட்சிக்கு வாயில் சேலை வாங்க வேண்டும். மறுபடியும் தஞ்சையில் குடித்தனம் வைக்க வேண்டும். அங்கே 'வெள்ளை'க்கு முன்போல வேளா வேளைக்குப் பால் வார்க்க வேண்டும்!...

''அத்தான்!''

அதோ, மீனாட்சி வந்துவிட்டாள். அவலம் மிகுந்த துயரங்களை மாண்புமிக்க சகிப்புத்தன்மையோடு தன்னுடைய பற்களுக்கிடையே அடக்கிய வண்ணம், புன்னகை மென்மலரச் செவ்வதரங்களிலே தாவியவளாக வந்து நின்றாள்; மீனாட்சி. நெற்றிப் பொட்டு எவ்வளவு பொலிவுடன் விளங்குகிறது!

''வா, மீனாட்சி'' என்று இன்முகம் காட்டி முகமன் மொழிந்தான் சுப்பையா. உயிரின் மறு பாதியை உறுத்துப் பார்த்த அவனுக்கு நெஞ்சை அடைப்பது போலிருந்தது. வீசின கையும் வெறுங்

கையுமாக நிற்கிறாள்! பாவம், அடுப்பு எப்போது புகையும்? — எப்படிப் புகையும்? காமராஜ் வந்து நிற்கப் போகிறானே? அவன் இருந்தால் சாப்பிடுவான்; இருப்பதைச் சாப்பிடுவான். ஆனால் அமுதாக் குட்டி விதரணை தெரியாத சுட்டி ஆயிற்றே! பசி பொறுக்கமாட்டாளே என் ராஜாத்தி?

"அத்தாச்சி வீட்டிலேயேயும் அரிசி தட்டுப்பாடாம்" என்றாள் மீனாட்சி. "அத்தான், உங்களுக்குப் பசிக்குமே?" என்றாள் முந்தானை கன்னங்களுக்கு ஓடியது.

"உனக்கு மட்டும் பசிக்காதா? ராத்திரிகூட நீ நீ சாப்பிடலையே? எனக்குத் தெரியும், மீனாட்சி. காலம்பற பிள்ளைங்களுக்கு வேணும்னு நீ ராத்திரி சாப்பிடாம இருந்திருக்கே. கஞ்சிப் பானை சொல்லிட்டுது!" நா தழு தழுத்தது.

"மனசு சரியில்லைன்னா, எதுவுமே மட்டுப்பட மாட்டேங்கிறது. எங்கேயோ கொஞ்சம் அரிசிக் குறுணை வச்சதாக ஞாபகம்!" என்று தாய்வீட்டுக்கு விரைந்தாள் வாழ்வின் துணை!

அப்போது, யாரோ மீனாட்சியைப் பெயரிட்டுக் கூப்பிட்டார்கள்.

எட்டிப் பார்வையிட்டான். சுப்பையா.

கீழத் தெருக் காமாட்சிப் பாட்டி வந்திருக்கிறாள். உப்பு புளி கடன் வேண்டியதாக இருக்கலாம்.

குரல் கேட்டு மீனாட்சி திரும்பினாள்.

"ஒரு ரூபாய்க்கு அவசரமாய் புளி வேணும். இந்தா ரூபா" என்று சொல்லி ஒரு ரூபாய்த் தாளை

நீட்டினாள் கிழவி. "உங்க மரத்துப்புளி நல்ல காட்ட மாய் இருக்குமாக்கும்" என்றாள்.

"தெய்வம் தெய்வமாவே இருக்குது' என்று அமைதி கொண்டாள் மீனாட்சி. உணவுப் பிரச்னை தீர்ந்து விடும் இப்போதைக்கு என்ற உணர்வின் அமைதியே அவள் பசியைக்கூட மறக்க— மரக்கச் செய்தது. கிழவியை அனுப்பி விட்டு, கணவனை நெருங்கினாள். "இந்தாங்க, ஒரு ரூபாய் இருக்கு. நீங்க கோயில் கடையிலே ஒரு லிட்டர் அரிசி வாங்கி யாறீங்களா? நான் அரிசி குறுணையைத் தேடி எடுத்துக் கஞ்சி காய்ச்சுறேன், அவசரத்துக்கு ஆளுக்கு ஒரு லோட்டா குடிச்சுக்கலாம்" என்றாள் அவள் மார்பகம் எம்பி அடங்கிற்று.

"ஊம்" என்று பெருமூச்சுடன் சிரித்தான் சுப் பையா. வேட்டியை ஞாபகமாக புறம் மாற்றிக் கட்டிக் கொண்டான். டவலை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு புறப்படப் போனவன், மீனாட்சியிடம் அந்த நல்ல சேதியைத் தெரிவிக்கப் பின் வாங்கினான். அப்போது, அடுத்த வீட்டில் வானொலி கேட்டது.

"மீனாட்சி, மீனாட்சி" என்று ஆனந்தம் பொங்க விளித்தான்.

"என்னாங்க!"

"ஒரு நல்ல சேதி தெரியுமா?"

"சொன்னாத்தானுங்களே தெரியும்?"

"நம் வங்க பந்து ஷேக் முஜ்பீர் ரெஹ்மான் ரிலீ ஸாகி விட்டாராம். அவர் இப்போ லண்டனில் இருக்காராம்!"

''நல்ல காலம்!''

''யாருக்கு?''

''பாகிஸ்தானுக்கு!''

அந்தத் தலைவர் லண்டனுக்குப் போய்ச் சேர்ந்த விவரம் பற்றிப் பேச எண்ணமிட்ட சுப்பையா தனக்கு வந்த தஞ்சாவூர்க் கடிதம் பற்றிய நினைவு பெற்று உடனே அந்த நல்ல சேதியை உரியவளிடம் முதலில் உரைத்தான்.

மீனாட்சி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள், சுற்றி வந்த வெள்ளைப் பூனை ஒன்றும் புரியாமல் விழித்ததை அவள் உணர்ந்தாள். பாவம், எங்களோடு சேர்ந்து இந்த வாயில்லா ஜீவனும் கஷ்டப்படுது.

''காலம்பற எப்படியாவது தோது பண்ணிக் கிட்டு தஞ்சாவூர் புறப்பட்டாகணும், மீனாட்சி!'' என்றான் சுப்பையா.

அவள் இதழ்கள் துடிக்க, தலையை இணக்கமாக ஆட்டினாள். ''நீங்க இப்படிச் சொல்றப்போ நான் என்ன சொல்வேனுங்க? அத்தான், சுவரை வச்சிட்டுத் தான் சித்திரம் வரையனும் நீங்கதான் எங்களுக்கெல்லாம் அச்சாணி. ஆகச்சே தஞ்சாவூர் போனடியும் பழைய டாக்டர் கோபால் கிட்டே 'சோதனை' பண்ணிக்கிட்டு மருந்து சாப்பிடுங்க, இனியாச்சும் ஹார்லிக்ஸ் வாங்கிக் கலக்கி, சாப்பிடுங்க!... என்றாள். அவளால் தொடர்ந்து பேச இயலவில்லை.

''ஓ!''...

அவன் புறப்பட ஆயத்தப்பட்டான், பையும் கையுமாக! உள்ளங்கையிலே இருந்த அந்த ஒரு

ரூபாய் விதிபோல் நமட்டுச் சிரிப்புச் சிரித்ததோ, என்னவோ?...

அப்போது!

''சுப்பையா இருக்குதா?''

''யாரது?...ஓ, பிரசிடெண்ட் அண்ணனா? வாங்க, உட்காருங்க!''

''இவங்க நம்ப ஹைஸ்கூல் வாத்தியார். அவர் கிராம சேவக்!''

''ஓ...வணக்கம்! வணக்கம்!''

''தம்பி உடம்பு ரொம்ப இளைச்சிட்டுதே?''

''நாலைஞ்சு மாசமாய் படுத்த படுக்கை ஆகிட்டேனே!''

''உடம்பைப் பார்த்துக்கிடுங்க, தம்பி!''

''ம்!''

''சாப்பாடு ஆயிடுத்தோ?''

''ஓ!''

காமராஜ் பசுங்கன்றாக வந்து நின்றான். புத்தக மூட்டையைப் போட்டுவிட்டு அடுப்படிக்கு ஓடினான். அன்னையின் கைச்சாடை கண்டு 'கம்'மென்று நின்றான்.

''என்ன விசேஷமுங்க, அண்ணன்?'' என்று விவரம் கோரினான் சுப்பையா. அவன் மனம் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணத் தலைப்பட்டது.

''தம்பி, தேசியப் பாதுகாப்பு நிதிக்கு வசூல் பண்ணிக்கிட்டிருக்கோம். அதுக்கு உங்க பங்குக் காணிக்கையையும் சேகரம் பண்ண வந்திருக்கோம். வார திங்கட்கிழமை கலெக்டர் கிட்டே கொண்டு போய்ச் சேர்க்கணும்...

"ஓ, அப்படிங்களா?" சுப்பையா அப்படியே சிலையாகி நின்றான். உள்ளங்கையில் ஒளிந்திருந்த அந்த ஒரு ரூபாய் நோட்டு அவன் மனக்கண்ணில் நிழலாடியது. அந்த நிழலின் பின்னணியிலே... பசி விசுவரூபம் கொண்டு நிழல் காட்டியது.. மறுகணம் அவன் தன் விழிகளை மூடினான்,

வீரபாரதம் தலைநிமிர்ந்து நின்றது.

பிறந்த பொன்னாட்டின் தாய்மண்ணைக் காத்திட, தருமத்தை நிலைநாட்ட, தங்கள் இன்னுயிர்களைத் தியாகம் செய்த வீரச்செம்மல்களின் அமர நினைவு சத்தியத்தின் ஒருருக்கொண்டு தலை நிமிர்ந்து நின்றது.

மெய்ம் மறந்து நின்றான் அவன்.

அஞ்சலி முத்திரை வடிவம் கண்டது.

அவன் தன்னுணர்வு கொண்டு கண் திறந்தான்; கண்கள் பொடித்தன.

பிறந்த பொன்னாட்டை நினைச்சு நன்றிக் கண்ணீரோடு பேசுற பேச்சு இது. தாய்த்திரு நாட்டுக்காக நான் மட்டுமல்ல, எங்க குடும்பமே எப்பவும் கடமைப்பட்டது என்கிற நடப்பையும் நான் உணர்ந்திருப்பவன். தேசப் பாதுகாப்பு நிதிக்கு உங்களைகயிலே அள்ளி அள்ளிக் கொடுக்கணுமென்கிற மனசு இருக்குங்க, அண்ணன் ஆனா... ஆனா, இப்போதை என்னாலே இந்தச் சின்னஞ்சிறு தொகையைத்தான் கொடுக்க முடிஞ்சுது!" என்று உணர்ச்சி வயப்பட்டுச் சொல்லிக்கொண்டே மூடியிருந்த உள்ளங்கையைத் திறந்து, அதில் அம்பலக் கூத்துப் போல ஒளிர்ந்த அந்த ஒரு ரூபாய் நோட்டை ஊராட்சித் தலைவர் குலுக்கிய உண்டிப் பெட்டியிலே சமர்ப்பித்தான் சுப்பையா; கையெடுத்துக் கும்பிட்டான்.

விடை பெற்றார்கள், வந்தவர்கள்!

இப்போது சுப்பையா நழுவிக் கிடந்த பையை நோக்கினான். அமைதி கனிந்த திருஷ்டி!

மீனாட்சி மனம் விட்டுச் சிரித்தாள். "நாட்டுப் பாதுகாப்புக்கு நம்மாலான பங்கையும் நாம் செலுத் திட்ட வரைக்கும் நமக்கும் நிம்மதிதானுங்க, அத்தான்!... இந்தச் சமயத்திலே நம்ப வீட்டு டிரான்ஸிஸ்டர் நம்மகிட்டே தங்கியிருந்தாலாவது, கொஞ்ச நாழி பாட்டுக் கேட்டுக்கிட்டு பசியை மறந் திருப்பாங்க பிள்ளைங்க!... குழந்தைகளை வச்சுக் கிட்டு நீங்க கதை ஏதாச்சும் சொல்லிக்கிட்டு இருங்க, அத்தான்! நான் உள்ளே போய் அரிசிக்குறுணை இருக்குதான்னு சோதனை போட்டுட்டு ஓடி யாரேன்!" என்று கூறி விட்டு உள்ளே விரைந்தாள் குடும்பத்தலைவி.

அந்தச் சமயத்திலே...!

தடாலென்று என்னவோ தரையில் விழுந்து நொறுங்கின அரவம் பயங்கரமாக ஒலி பரப்பியது.

அரவம் கண்ட பாங்கில் கதி கலங்கி உள்ளே ஓடினான் சுப்பையா.

சாதுவாக நின்ற வெள்ளைப் பூனையைச் சுற்றி மண்சில்லுகள் ஒட்டுச் சிதறல்கள் காட்சியளித்தன. அவற்றைச் சூழ்ந்து கிடந்தன பலவகையான நாணயங்கள்!

ஆஹா!...

"அத்தான், ஆபத்து சம்பத்துக்கு உதவுமே யென்று செலவுகளைச் சிக்கனம் பண்ணி மிச்சம் பிடிச்ச காசுகளை உண்டிக் கலயத்திலே அப்போ

தைக்கப்போது போட்டுச் சேமிச்சு வைத்திருந்தது தான் இம்புட்டுப் பணமும்! நல்ல சமயத்திலே தெய்வம் கணக்கிலே வந்து அந்த உண்டியல் கலயத்தைக் காட்டிக் கொடுத்திட்டுதுங்க நம்பளோட அருமை வெள்ளை!...'' மனம் கொள்ளாமல் பேசினாள் மீனாட்சி.

''ஓஹோ; அப்படியா சமாச்சாரம்?...ம்... ஆத்தா!'' வாய் கொள்ளாமல் சிரித்தான் சுப்பையா.

''அத்தான், கொஞ்ச முந்தி இந்த அதிசயக் கூத்து நடந்திருந்தால், நீங்க செப்பின மாதிரியே, தேசப் பாதுகாப்பு நிதிக்குக் கை நிரம்ப அள்ளிக் கொடுத்திருக்கலாமுங்களே?''

''வாஸ்தவம்தான், மீனாட்சி!''

குழந்தைகளுக்கு இனிமேல் தேவையானது கதையல்ல!...

❋ ❋ ❋

# 3. ஒரு மோகினியின் கதை

"அவள் தாசி. தாசிக்குப் பெயர் இல்லாமல் இருக்குமா? பெயர்: மோஹினி. ஆம்! மோஹினியே தான்! மோகம் நிறைந்து, கிளைத்து, முகிழ்த்துக் கிடந்த அவளுடைய கண்களில்-கன்னக்கதுப்புகளில்-நெஞ்சு வெளியில் நான் போதை கொண்டு, 'அவளே சதம்' என்று அதனால்தான் விழுந்துகிடந்தேனோ? நான் ஏன் அப்படி ஆனேன்? முன்னைப் பழவினையின் முட்டம் விலகி, இப்படியொரு சம்பவம் நிகழ்ந்து விட்டிருக்கிறதே? ஆமாம்; அப்படித்தான் விதித்திருக்க வேண்டும்! இல்லையென்றால், அவள் மோஹினி என்ற பெயருடன் என் உடல், பொருள், ஆவி ஆகிய சகலத்தையுமே சுவீகரித்துக் கொண்டு விட்டிருப்பாளா?... மெய்தான்: அவள் மோஹினியே தான்! மோஹினி என்றால், சாதாரண மோஹினியா, என்ன? பத்மாசூரனை அழிக்க திருமால் எடுத்த அவதாரத்துக்குப் பெயர்கூட மோஹினி அவதாரம்தானே?

அவள் தெய்வமா?

அவ்வாறென்றால், நான் அரக்கனா?

ஊஹூம்!

அவள்தான் அரக்கி!... அவள்தான் பிசாசு!... மோஹினியா அவள்?...பேய்! பெண் பேய்!..."

என்னைப் பற்றி உங்களுக்குத் தெரியும். அல்லவா? அதே போலத்தான், அந்த மனிதரும்

எனக்குப் பழக்கமானார். அதாவது, என்னைப் பழக்கப்படுத்திக் கொண்டார். தொடக்கத்தில் பிரலாபக் குரல் எடுத்து, பித்துப்பிடித்த பாங்கினிலே அதோ கதறிக் கொண்டிருக்கிறாரே, அவரைப் பற்றித்தான் இத்துணை நேரமாகக் குறிப்பிட்டுக் கொண்டிருக்கிறேன். என் மாதிரி நூற்றுக்கணக்கான எழுத்தாளர்கள் இந்தத் தமிழ் மண்ணில் முளைத்து விட்டிருக்கையில், என்னை மட்டிலும் அவர் ஏன் சந்திக்க வேண்டும்? போகட்டும். எப்படியோ சந்தித்தார். சந்தித்தவர், என்னைக் கண்டு பேசிப் பெருமைப்பட்ட பெருமையுடன் விடை பெற்றிருக்கக் கூடாதா? அவர் தம் கதை முழுவதையும் அடி தொட்டு முடிவரைக்கும் எதற்காகச் சொன்னார்? அந்தத் துன்பமிகு கதையை நான் எதற்காகக் காது பொருத்திக் கேட்டேன்?

அவரை உங்களுக்குத் தெரியாது!

அவர் பெயர் : மணிகண்டன். லகாரத்தில் எண்களை உருட்டி, இருப்புப் பெட்டகத்திலே விளையாடித் திளைத்த நபர் அவர். பட்டுச்சட்டை; பட்டும் படாமலும் நின்ற வெகுளித்தனம். வங்கிக் கணக்கு வைத்திருக்கும் சீமான் வீட்டுப் பெண்கள் 'நான்...நீ' என்று போட்டி போட்டார்களாம். ஏன் என்று புரியவில்லையா?-அவரை மணவாளனாக அடையத்தான்! எல்லாம் இருந்தும், 'சிருஷ்டி முடிச்சு' என்று ஒன்று இருக்கிறது பாருங்கள், அந்தத் தொல்வினைப் பயன் அவரது மண்டையைத் திருகிக் குடைந்தது. அப்படிப்பட்ட நேரத்தில்தான், அவர் ஆடுதுறையிலிருந்து திருக்கோகரணத்திற்குப் பயணப்பட்டார்.

அப்போது, புதுக்கோட்டை சமஸ்தானமாக விளங்கிய நேரம்.

திருக்கோகரணத்தில் தான் 'தசரா விழா 'விற்கு முத்தாய்ப்புக் கிடைக்கும். மன்னர்பிரான் அம் பெய்து முடிந்து, அன்னை பிரஹதாம்பாளின் தரி சனத்தை முடித்துக் கொண்டு திரும்பியதும், சதங் கைகளின் காதற்பண்ணுக்கு தம்முடைய இளமை மனம் தஞ்சமடைந்த விந்தையினை அவரது உள்ளத் தின் உணர்வு எடுத்துச் சொல்லக் கேட்டார். அவரையும் அறியாமல், அவரது கால்கள் வழிநடந்து முன்னேறின. கோயில் நடன மண்டபத்தில் ஆட லழகியைக் கண்டார். மோஹினி என்பது அவள் பெயரென்பதையும் கேட்டுக் கொண்டார். திரும்பி விட்டார் எப்படித் திரும்பினார்? அவளது நல்லெண் ணத்தைச் சுமந்த பெருமிதத்தைத் துணைக்கு அழைத்துக் கொண்டுதான் திரும்பினார் மணி கண்டன்.

அவரைப் பற்றிய காதற் விளையாட்டுகளுக்கு முன்னுரை வேண்டுமானால், அவரிடமிருந்து நான் பெற்றுக்கொண்ட அந்தக் காதற் கடிதத்தை நீங் களும் பார்த்துவிடுவதுதான் உசிதமாகும்"

''உயிருக்கு உயிராகிவிட்ட மோஹினிக்கு மணி கண்டன் எழுதுவதாவது:

உபயக்ஷேமம்.

இப்பவும், உன்னைப் பார்த்தது முதலாக, எனக்கு என் மனசானது வசம் இழந்து தவிக்கிறது; தவியாய்த் தவிக்கின்றது.

ஆடுதுறைப்பண்ணை என்றால், நண்டு சுண்டு கூட அறியவேண்டும். அப்படி ஒரு மகத்துவம் எங்கள் குடும்பத்துக்கு. இது பாரம்பரிய ரீதியான ஒரு செல் வாக்கு. இந்தச் செல்வாக்குக்கு உள்ள சகலவித

மான சம்பத்துக்களுக்கும் நானே தான் ராஜா; உடைமையாளன். இவைகளை நான் துச்சமென்று மதிப்பவன். ஆனால் நீ எனக்கு உயிர். உனது உயிர் எனச்கு உலகம். உன்னுடைய சந்தோஷமே எனக்கு கடமை. நான் படித்தவன். ஆகவே, பண்பும் இருக்கிறது. என்னை நீ நம்பவேண்டும். இந்த ஒரு லெட்டரை-அடியில் கையொப்பம் இட்டிருக்கக்கூடிய என்னுடைய இந்தக் கடுதாசியைக் கொண்டே நீ என்னை பின்னால் மடக்கவும் மடக்கலாம். பார்த்தாயா? நானே உனக்கு வழியையும் காட்டுகிறேன். ஆக, என் மனசை நீ புரிந்து கொண்டதாக நான் உன்னிடமிருந்து தகவல் கிடைக்கப்பெற்றால், உண்மையாகவே நான் ரொம்பவும் மகிழ்ச்சி கொள்வேன்.

மாதவியைக் கண்டவுடன் கோவலன் எப்படி நினைத்திருப்பானோ, எனக்குத் தெரியாது. ஆனால் உன்னைப் பார்த்தவுடன், பிறவிப்பயன் எடுத்ததன் தாத்பரியம் எனக்குத் தெளிவாகப் புரிந்துவிட்டது.

மற்ற விவரங்களை நேருக்கு நேராகப் பேசுவது தான் சிலாக்கியம்.

இப்படிக்கு,

மணிகண்டன்."

மணிகண்டன் அத்துமீறிய குதூகலத்தோடு மோஹினியைச் சந்தித்தான். அவளை அவன் பார்த்தபோது, மஞ்சள் வெயில் மயங்கி வந்தது. அவளுடைய போதம் பூத்த போதை விழிகளின் இறக்கத்தினால், அவனும் மயங்கித்தான் போனான். பிள்ளையாய்ப் பிறந்த எவனும் அவளுடைய அழகுக்கு அடிமையாகாமல் இருப்பானா?

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. ஒருமுறை, அவளை நானும் தான் சந்தித்திருக்கிறேன். அது ஒரு தனிக்கதை. அது போய்த் தொலையட்டும். எதற்கு இந்தப் பேச்சு வந்தது?... ஓஹோ!... சரி. அவளுடைய எழிலை மெய்ப்பிக்கச் சொன்ன பேச்சாகி விட்டது!

ஆம்: அவள் அப்படித்தான் ஈடு எடுப்பற்ற அழகுடன் விளங்கினாள். இத்துணை லாவண்யம் பெற்றிருப்பதையே ஒரு பாக்கியமாகவும், அந்தப் பாக்கியத்தையே ஒரு வரப்பிரசாதமாகவும் அவள் கருதியிருந்தாள். இதில் தவறு இருக்க முடியுமா? அந்த அழகுக்கும் மகத்துவம் பிறந்தது. மணிகண்டன் அவளுக்கு உண்டான ரூப அழகை உபாஸிக்கத் தயாரானான். அதற்காகத்தானே இவ்வளவு தூரம் அவன் ஓடிவந்தான்!

அந்தி முல்லையென வந்து நின்றாள் மோஹினி.

அவளை உள்ளத்திலிருந்து வெளியே எடுத்துப் பதுமையாக்கி அழகு பார்த்து ரசித்துக் கொண்டிருந்த மணிகண்டன் அவளை நேரில் கண்டதும், ஒரு சில வினாடிகள் தடுமாறினான். புது இடம், புது உணர்வுகள் ஆட்கொண்டிருந்த வேளையுங்கூட, இருக்கத்தானே இருக்கும்?

"மோகினி!... இல்லை! மோஹினி!" என்று உச்சரித்தான் அவன்.

அவள் நகையொலியில் நாணம் பூத்தது. 'மூக்குபில்லாக்கு' ஆடி அசைந்தது. செக்கச் சிவந்த உதடுகளின் கங்குச் சிவப்பு பிரமாதமாக இருந்தது.

பூசனைக் கூடத்திற்கு அவனை அவள் அழைத்துச் சென்றாள். நாட்டிய உடுப்புக்கள் திகழ

நின்றாள் அவள். அவளுடைய சரமாரியான பேச்சு வார்த்தைகள் தேனில் வீழ்ந்த ஈயின் நிலைக்கு நேராக இன்பத் தவிப்பில் இருந்தன.

"எங்கள் குலத்தில் இந்தப் பழக்கம் கிடையாது. ஆனால் நான் இம்முறையை கைக் கொள்ளுகிறேன். நான் புதுப்பூ. என் தூய்மையைப் பற்றி தாங்கள் அறியவேண்டும். இன்று உங்கள் வாக்குப் பிரகாரம் வரவில்லையென்றால், என் புனிதம் அழிந்துபட்டிருக்கும். என்னுடைய பதினான்கு நாள் கன்னி நோன்பு இன்றிரவோடு கழிகிறது. நோன்பு முடிந்ததும், அம்பலவாணனின் சந்நிதியை மனசில் இருத்திக் கொண்டு ஆடுவேன். நீங்களும் இருக்க வேண்டும். நீங்கள் மன நிம்மதியுடன் இருக்கலாம். என்னை வளர்த்த மாமாவிடம் எல்லாச் சமாசாரத்தையும் சொன்னேன். உங்கள் தபாலையும் காண்பித்தேன். எங்கள் வழக்கப்படி, நான் 'பொட்டு' கட்டிக் கொள்ள விரும்பாத நிலையை பல நாள் முன்னிருந்தே கவனித்து வருபவர் என் மாமா. ஆகவே, இப்போது என் மனசுக்கு ஏற்றபடி சம்பவித்திருப்பதிலிருந்து, இது ஏதோ தெய்வானுகூலமாகவே இருக்க வேண்டுமென்று கருதுகிறார். இன்றிரவு நீங்கள் இங்கேயேதான் தங்கவேண்டும்!"

இவ்வாறு அவள் மொழி பறித்து, விழி பதித்துச் சொல்லிய சடுதியுடன், 'ஓவல்' கொண்டு வந்தாள். அவன் கோப்பையைக் கை தூக்கி வாங்கிக் கொண்டான். அப்போது அந்த ஈ ஓவல் கோப்பையைச் சதமடையுமென்று அவன் எப்படி அனுமானம் செய்திருப்பான், பாவம்?

"ஆஹா! மோகினி என்ற பெயர் எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது! ஆசையோடு அவள் தந்த

பானத்தை ஆர்வத்தோடு குடிக்க விழைந்து ஆனந்தத்தோடு கை நீட்டிய நேரம் பார்த்துத் தனா, அந்த ஈ அதில் விழுந்து தொலைக்க வேண்டும்? ஐயையோ!.... என் வாழ்வே சிதைந்து விட்டதே?.... என் மனமே சித்தம் குலைந்து விட்டதே? நாடகக் கலைஞன் போன்றிருந்த அந்த ஆணழகன் யார்? அவன் துள்ளி வந்து அவளது பூங்கரம் பற்ற வேண்டுமென்றால், அதற்கும் கதை — காரணம் என்று ஒன்று இருக்கத்தானே வேண்டும்?...மோஹினி 'இருமனப் பெண்டிர்' இனத்தைச் சார்ந்த விலை மகள் என்பதை மெய்ப்பித்து விட்டாளோ?...

தேதிப்படத் தாள்கள் கபளீகரம் செய்துவிட்ட காலத்தின் பத்தாண்டுச் சரித்திரத்தைப் பற்றித் தெரிந்து வைத்திருப்பவர்கள் என்னைப் பற்றியும் கட்டாயம் அறிந்து வைத்திருப்பார்கள்.

'இவ்வளவு தூரம் என்னைப் பற்றிப் பிரமாதப் படுத்திக் கொள்ளுகிற நான், இந்த நண்பர் மணி கண்டனைப் பற்றி அப்படிப் பெரிதாக எவ்வளவு தொலைவு புரிந்துகொண்டிருக்கிறேன்?'- இந்த ஒரு கேள்வி எழுந்து, எழுந்த அவசரத்திலேயே என்னைத் திக்குமுக்காடவும் செய்து விட்டது. காரணம் இல்லாமல் இல்லை!- மோஹினி நல்லவள். பெண் மனத்தின் மெல்லிய உணர்விழைகளால் வண்ணமும் இதயப் பரிசுத்தத்தால் சுகந்தமும் இரண்டறக் கலந்து விளங்கியவள். அவளைப் பற்றிய என்னுடைய கணிப்பு இது. இப்படியிருக்க, அவளைத்தாறுமாறாக அவன் ஏசலாமா? பேசலாமா? தூற்றலாமா? காற்றில் தூற்றப் பெற்ற உமியென நினைவு பாடிப் பறக்கத் தலைப்பட்டது. என் தலை கனத்தது. தலைவலி. அவ்வளவே!

சந்தேகம் என்ற சூதுக்குணம் இருக்கிறது பாருங்கள், இதுதான் வாழ்க்கை நாடகத்திற்கே ஒரு வில்லன், சந்தேகத் தூசி படிந்து, கண் மறைந்து, கண் மறைத்து போன கதைகள்-வாழ்வியல் சித்திரங்கள் எத்தனை எத்தனை என்றுதான் உங்கள் எல்லோருக்கும் மனப்பாடமாயிற்றே?

'சந்தேகம்'—இதுவேதான் ஒருவேளை, சிருஷ்டிக்குச் சூத்திரமாக இருக்குமோ?

எனக்கென்னவோ, இந்த விஷயத்திலே துளியத்தனைகூட விசுவாசம் இருப்பது கிடையாது!

நாடகக் கலைஞன் போன்றிருந்த ஓர் ஆணழகன் மோஹினியின் பூங்கரந் தொட்டுவிட்டானாம்! மணிகண்டன் பிரலாபிக்கின்றான். கை தொட்டதால், உரிமை பறிபோய்விடுமா?... உறவு துண்டிக்கப்பட்டு விடுமா?

பாவம், அவள் கொடுத்த பானத்தில் ஈ ஏன் விழுந்து தொலைத்தது?...

"கனவுகளின் கருத்தாழம் இன்னதென்று விளங்கிக் கொள்ள மாட்டாத அந்த ஓர் ஈ என்னுள் வளர்ந்து, வளப்பமுற்றுத் தழைத்துச் செழித்த காதலெனும் கனவுகளைப் பொய்யாக்கி விட்டதே?... வாழ்வாகி நிற்பாள் மோஹினி என்று இருந்தேன். ஆனால், அவளது உதாசீனம் என்னைத் தாழ் நிலைக்குத் தள்ளி விட்டதே?...'முதன் முதலில் நான் உங்களுக்குப் பானம் அருளினேன். அதில் ஈ வந்து இப்படி விழுந்து விட்டது. இதை ஓர் அபசகுனமாகவே நான் கருதுகிறேன். தெய்வத்தை எண்ணிப் பிரார்த்தனைப் பாடலுடன் உங்கள் முன் நடனமிடத் திட்டம் புனைந்திருந்தேன் நான். கடைசியில்

அனைத்தும் பாழாகிவிட்டன. என்னை மன்னி யுங்கள்' என்று கூறிவிட்டாளே அவள்!

அந்த ஆணழகன் நாடகக்காரன் அல்லனாம் யாரோ ஓர் ஓவியனாம். இயற்கைக்கும் செயற் கைக்கும் பாலம் சமைக்க கடவுள் அனுப்பிய தூது வனாம் அவன். பெயர்: சுந்தரன். சுந்தரமாகவே இருந்தான். என்னுள்ளே புனையா ஓவியமாகி எழில் காட்டும் அந்தப் பாவையை அவன் சித்திரமாக்கப் போகிறானா?...என் ஒருவனுக்கே உடைமையாக வேண்டுமென்ற லட்சிய நிழலில் ஒதுங்கி இருந்த என்னை ஒதுக்கிவிடவே தான் அவன் இப்படித் தோன்றி விட்டிருப்பானோ? இருக்கும், யார் கண் டார்கள்?

ஆ! என்ன சத்தம், கும்மாளம்? அடைபட்டுக் கிடக்கின்ற கதவுகளைத் திறந்து கொண்டு, அடை படாமல் வெடித்துச் சிதறி ஓடிவருகின்ற அவர்கள் இருவரின் சிரிப்புக் கலவைக்குப் பெயர் என்ன? நான் என்ன கண்டேன்?...

எனது சேமநிதிக்குப் பொருள் இருக்காதா இனி மேல்?

அதோ, கனவுகள் திறக்கப்படுகின்றன.

மோஹினியின் கைகளிலே எத்தனை விதமான ரூபாய் நோட்டுக்கள்!

அவள் பெண்ணா?

அவள் கொடுத்த பானத்தை எவ்வளவு ஆர்வத் துடன் குடித்தான் அந்தச் சுந்தரன்?

பின், ஏன் இப்படி மயங்கிச் சுருண்டு நிலைதப்பித் தரையிலே சாய்ந்து விட்டான்?

மோஹினி வாஸ்தவமாகவே மோஹினிப் பேயோ?

மோஹினி இவ்வளவு கெட்டிக்காரியா?...

தேனில் விழுந்த ஈயாக உருவம் எடுத்து வந்து நின்று அவளைப் பார்த்தான் மணிகண்டன். "என்னையே நொடிப் பொழுதிற்குள்ளாக அழித்து ஒழித்து விடப்பார்த்தாயே, மோஹினி?" என்று தழுதழுக்கக் கேட்டான்.

அவன் பிறப்பித்த வினாவைச் சட்டை செய்யாமல், அவனையே உறுத்துப் பார்த்தாள் அவள். பிறகு, மெல்லுணர்வுச் சிரிப்பை உதறினாள்.

அவனுக்குத் தலைகால் புரியாத மகிழ்வு. அவனைப் பார்த்து அவள் சிரித்துவிட்டாளல்லவா? உடனே, அவள் நின்ற பக்கமாக கால்களை எடுத்து வைத்து நடந்து, பதவிசுடன் அவளுடைய காந்தள் மென்விரல்களைத் தொட்டு, ஏதோ சொல்ல வாயெடுக்க விழைந்த வேளை கெட்ட வேளையாக இருக்க வேண்டும். காரணம் இதுதான்: பாவம், அவன் தன் வலது கன்னத்தைத் தடவித் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தான். விரல் நகங்களில் ஈரம் சொட்டியது. "மோஹினி!" என்று அடித் தொண்டையில், சுவடு தெரியாமல், கூப்பிட்டான்.

அவள் பொருட்படுத்தாமல், தரையை நோக்கிக் குனிந்தாள். மேலாடை விலகி விழுந்த அழகை வெறி பாய்ச்சி ரசித்தான் மணிகண்டன், மோகம் தலைக்குச் சாடிவிட்டிருக்க வேண்டும். மறுபடி, அவள் முகம் விழிநோக்கில் பட்டதும். பட்டு வெட்டப்பட்டது போல, நறுக்கென்று தலையைத்

தாழ்த்திக் கொண்ட போது, அவள் கையில் கடிதமொன்று தவழக் கண்டான்.

"இந்த ஓவியனும் சுத்தப் பைத்தியமோ?" என்ற சொற்கள் துலாம்பரமாகக் கேட்டன.

நெருப்புச் சுட்டது போலிருந்தது அவனுக்கு. மயங்கி விழுந்த அந்தக் கலைஞனைப் பற்றிக் கருதி, அவனுக்காக அனுதாபப்படும் நிலையிலா மணிகண்டன் இருந்தான்?

"மணிகண்டன், உங்களுக்குப் பழைய புராணம் நினைவிருக்குமா? சீதை தன் கற்பை உலகுக்கு உணர்த்த தீக்குளித்தாளல்லவா? அது போல, உங்கள் புனிதத்தை என் முன் நிரூபிக்க, நான் அமைக்கும் சோதனைக்கு நீங்கள் உட்பட வேண்டும்: அதோ பாருங்கள், அழகர்கள் பட்டாளத்தை!..." என்று கருவம் இழையோட, வீரப் பெருமிதத்துடன் சொன்னாள் மோஹினி.

சித்தம் குலைந்தான் மணிகண்டன்.

ஐந்தாறு புதுக் கார்கள் வாசல் முகப்பின் நிழலில் வந்து நின்று ஓய்வு பெறலாயின!

"திருக்கோகர்ணத் தெய்வத்தின் கழலடிகளே சதம் என்று தஞ்சம் அடைந்து கிடந்தேன் நான். ஊர்-உலகம் எதுவுமே எனக்கு மட்டுப்பட மறுத்தது. என்னுடைய வாழ்வும் வளமும் மோஹினிதான் என்று கோட்டைகட்டியிருந்தேன். பைத்தியக்காரன் நான். என்னிடம் தஞ்சம் புகுந்திருக்கின்ற சேமநிதி முழுவதும் தான் என்னைப் பைத்தியக்காரனென ஊருக்கு அம்பலத்திவிட்டது வேண்டும், எனக்கு இன்னும் வேண்டும்!... மை விழி மாதிடம் நான் மையல் கொண்ட மாதிரியாகவே, அந்தத் தையலும்

என் பேரில் காதல் கொண்டிருக்க வேண்டுமென்று நான் எண்ணினேன்; இறுமாந்தேன்; எக்களித்தேன்; ஏமாந்தேன்.

கடைசியில், என்னுள் பிறந்த அகந்தை என்னையே 'துவம்சம்' செய்துவிடத் துடித்துக் கொண்டிருக்கிறதே! என் துடிப்பை- துடிப்பின் உயிர்ப்பை உயிர்ப்பின் பொருளை நான் அறிந்து அலறிப் புலம்புகிறேனே. உன் செவிகளில் இவை கரை சேரவில்லையா, தாயே?

அவள் தாசி. நிரூபித்து விட்டாள்.

கோவலன் - மாதவி கதையை நான் படித்திருக்க வில்லையென்றாலும், அவர்களது கதையை நாடக மேடையில் கண்டு களித்திருக்கிறேனே? ஆமாம்; அந்தக் களிப்புத்தான் போதையாக மாறி விட்டது. மாதவியைப் பொறுத்த அளவில் அவளது போதையில் போதம் அவிழ்ந்ததாம். சொல்லக் கேட்டது உண்டு. ஆனால், இந்த மோஹினி யார்?...

நான் அவளை ஆளவேண்டுமென்று கனாக் கண்டேன். இதோ, அவளே இப்பொழுது என்னை ஆண்டு கொண்டிருப்பது போதாதென்று, என்னை அழித்து. என் அழிவில அவள் தனக்குகந்த புதுச் சரித்திரத்தைச் சமைத்துவிடக் காத்திருக்கிறாளே?...

தாயே! நீ எங்கு இருக்கிறாய்?...

என்னவோ, எனக்கு இந்த மோஹினியின் இருப்பிடம்கூட புலப்படக் காணோமே?...

காதல், காதல் என்று வாய் ஓயாமல் சொல்லிக் கொண்டிருக்கின்றீர்களே, காதல் என்றால் என்ன அர்த்தமென்று உங்களில் யாருக்காவது தெரியுமோ?

எனக்குக் 'காதல்' என்கிற இந்த வார்த்தை தான் பழக்கமே தவிர, காதலின் உருவத்தையோ, இல்லை, காதலின் உள்ளத்தையோ அறிந்தவன் அல்லன்...!

காதல் எனில், சித்த பேத நிலை சேமித்துக் கொண்டிருக்கும் மூலதனம்!

கற்பனையின் அடிமனத்தில் விடிகின்ற தெய்வீக சக்திக்கும் பெயர் காதல்தானாம்!

மனக்கிறுக்கின் பிணவாடையின் நெடுமூச்சு உதிர்க்கும் முன்னைப் பழவினையின் விட்டகுறை-தொட்டகுறையின் விடுபடமுடியாத ஒரு வகையான சலனபுத்தியே காதல்!

காதல், காதல், காதல்!

காதல் இன்றேல் சாதல்!

காதலாம்...! சாதலாம்!...

சே!

உலகம் கேடுகெட்டது!

உலகத்தைச் சொல்ல நான் யார்?

ஒன்றை மட்டும் சொல்லுவேன்-இந்த மணி கண்டன் இருக்கிறான். பாருங்கள், அவன் சுத்தப் பைத்தியக்காரன்.

அவன் அவளைக் காதலித்திருக்கக்கூடாது.

பாத்திரமறிந்து பிச்சை ஏற்கத் தவறிவிட்டான் அவன்.

உண்மையாகவே, அவன் அவள்பால் காதல் வசப்பட்டிருந்தால், காதல் தோற்ற சடுதியிலேயே செத்து மடிந்...

வேண்டாம். அவன் சீமான் மகன். சீமாட்டி ஒருத்தி அவனுக்கு 'முன்றானை விரிக்க' எங்கேனும் ஒரு பகுதியில் பிறந்து, பார்வதி இயற்றிய 'உசிமுனைத் தவம்' மாதிரி அந்த மானுடப் பெண்ணும் இவனுக்காகத் தவம் பண்ணிக் கொண்டுதான் இருப்பாள்; இருக்க வேண்டும். இது வாழ்வின் உட்பொருள் தத்துவம்!

யார் அழைக்கிறார்கள்?...

கைந்நொடிப் பொழுது எனக்காகக் காத்திருப்பீர்களா நீங்கள்?

ஊம்!

சித்திரம் தீட்டும் இளைஞன் அவன். தன் மனச் சித்திரத்தை அலங்கோலமாக்கிக் கொண்டு வந்தான். என்னைப் பேட்டி கண்டான்.

வாழ்க்கைக்கும் வறட்டுச் சிரிப்புக்கும் ஏனோ என்னால் பாகுபாடு காண முடிவதில்லை.

பாவம், இந்த ஓவியனைப் பாருங்கள்:

மாரனுக்குத் தம்பியெனத் தோன்றுகிறான். ஆனால் அவன் விழிகளில், இதயம் தோற்ற வேதனை ஊறித் ததும்புகிறது. மனக்குமுதம் குவிந்திருந்த விந்தையை என்னால் ஊகித்துக் கொள்ள முடிந்தது.

தூரிகையைச் சுற்றிக் கொண்டது பேனா.

அந்த ஓவியன் தன் காதல் கதையை ஆதியோடந்தமாகச் சொன்னான்:

''ஐயா, தாங்கள் பெரிய எழுத்தாளர். ஆகவே, இந்தச் சித்திரக்காரனின் சிந்தையைப் பற்றியும் உங்களால் படித்தறிய முடியுமென்பதில் எனக்குத் தினையளவு சந்தேகங்கூட தோன்ற நியாயம்

இல்லை; என் உயிருக்கு நான் கைப்பிடித்திருக்கும் இந்தத் தூரிகைதான் உயிர். ஆனால் என் மனமோ, ஆடற்கலைக்குப் பெருமை தேடித்தரவல்ல இந்தப் பொற்பதுமை மோஹினியைத்தான் என்னுடைய, தூரிகையாகக் கொள்கிறது. இவள் இல்லையேல் என் வாழ்வு இல்லை. ஆனால், இவளோ, நான் இணைந்தால், தனக்கு வாழ்வு சித்திக்காதென்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டாள். பெண்ணுக்குரிய கற்புநிலை ஆணுக்கும் உரித்தானது என்பதை தான் அறிவேன். என் கலையே இப்போது என் புனிதத்துக்கு ஊறு செய்துவிட்டது. அவள் என்னை ஐயப்படுகிறாள்! விசாகத் திருநாளன்று ஒருமுறை மோஹினிப் பாவையின் மோகம் முகிழ்த்த நாட்டியத்தை ரசித்தேன். விளைந்தது வினை. அதுவே எனக்கு வாய்த்த கால வினையா, ஐயா?...நான் இனிமேல் அழிந்துபட்டவன் தான்...அட்டியில்லை; என் கன்னங்களில் பட்ட அவளது தெய்வ மணிக்கரங்களின் இன்பஸ்பரிசம் பதித்த தழும்புதான் எனக்குத் தேறுதல் சொல்ல வல்லது; நான் வருகிறேன். நான் உங்களிடமிருந்து விலகிச் சென்றவுடன், இந்தத் தபாலை உங்கள் பக்கம் நெருக்கிக் கொள்ளுங்கள்!''

கட்டறுத்துக் கொண்டு, காடு மேடு தெரியாமல் திட்டுடைத்து, கரை அரித்துப் பாயுமே ஆடி வெள்ளம், அதை ஞாபகப்படுத்தக்கூடிய வகையில் அவனது நேத்திரங்கள் புனல் கக்கின.

'அன்பின் ஒவ்வொரு செய்கையும் வாழ்வுக்கு மகிழ்வையே கொணரும்!' - வாழ்வியலைக் கற்றுத் தேர்ந்த தத்துவஞானி விவேகானந்தர். உங்களுக்கும் தெரிந்திருக்கவேண்டும். அவரது தங்கமான உதாரணம் இது,

என்னை ஒருசிலர் சரியாகப் புரிந்து கொள்ளத் தவறிவிடுகிறார்கள். அவர்களது அறியாமைக்காக நான் வருந்துவதை விடுத்து, அவர்களுடைய மதி தப்பிய செயல்களுக்காகப் பழி வாங்க ஒப்புவது கிடையாது. இந்தப் பேனாவைப் பிடிக்கும் வேளைகளில் நான் என் சொந்த விருப்பு வெறுப்புக்களை மூட்டைகட்டி வைத்துவிட விழைபவன். ஒரு சம்பவம் நினைவுக்கு வழி திறக்கிறது. நண்பர் ஒருவர்: எழுத்தாளர்தான், நிரம்ப உதவியிருக்கிறேன் நான். ஒரு முறை, பெரிய நாவல். ஒன்றைக் கொடுத்தார். புகழ்ப்புராணம் பாடவேண்டுமென்று 'தனது' பண்ணினார். இவர் மாதிரி ஆயிரம்பேர் வழிகளை இந்தப் பத்து ஆண்டுகளில் பார்த்திருக்கிறேனே? ஒப்புவேனா நான்? குறைகளை எழுதினேன். விமர்சனத்தில் சூடு பறந்தது, இதைக் கண்டதும், செய்ந்நன்றி மறந்து,' என்னை 'கன்னாபின்னா' வென்று திட்டிக் கடிதம் போட்டார். பிறரை மட்டந்தட்டி, அதன் ஏணிப்படிகளிலே உச்சியில் ஏறிக் குந்தக் கனவு காணுபவர், என்னைக் காட்டிலும் அனுபவப்பட்ட ஆசிரியர்களைப் பற்றி அவதூறு மொழிந்திருக்கிறாராம்! சுபரூபம் ஒரு நாளைக்கு வேஷம் கலைத்துவிடாமல் தப்பாது என்ற கார்லைல் வாசகம் ரொம்பப் பொருத்தம். அவர் திருந்த இடைவேளை நல்கினேன். கடைசியில் நானே அவரைத் திருத்தினேன். ஏணியை உதைத்துவிட எண்ணினால், முடியுமா? என் நல்ல மனத்தை-மனச்சாட்சியையே தெய்வமாகக் கருதிக் கைதொழும் பழக்கமுடைய என்னை அவர் புரிந்து கொள்ள மெய்யாகவே தவம் இருக்க வேண்டும்!... பாவம்...!

**இப்படியிருக்கையில், இந்த நல்லிதயக் கலைஞருக்கு ஆபத்துக்கு உதவாமல் இருப்பேனா?**

முதலில் மோஹினியைச் சந்தித்து, அவளது உள்ளக்கிடக்கையைப் படித்தறிந்து கொள்வதாக அவனுக்கு அமைதி மொழி சொல்லி, விடை கொடுத்தேன்.

பாரதிக்கு எல்லாம் தெரியும். அவர் பாடுகிறார்:

'ஆன்ம வொளிக்கடல் மூழ்கித் திளைப்பவர்க்கு
அச்சம் உண்டோடா?...

இந்த வரியில் உலக தத்துவமே முடங்கிக் கிடக்கிறது. இவ்வுண்மையை இந்தச் சைத்திரீகன் அறிந்திட அவனுக்கு வயது போதாதே?

மூப்புப் பழுத்த நேரம். அடிக்கடி படுத்து விடுகிறேன். உடம்பைப் பழிவாங்கி உள்ளத்தால் உழைத்துப் பிழைத்த என்னை, இப்போது அதே உடம்பு பழிக்குப் பழி வாங்கி, என் உள்ளத்ளத அயர்வுறச் செய்து விட்டது.

சுந்தரன் போய் விட்டான். அதாவது, என்னை விட்டு விலகிவிட்டான். அவன் கொடுத்த கடிதம் என்னுடனே தங்கிவிட்டது. நான் கொடுத்தவாக்கை அவனுடன் அனுப்பி விடுவேனா? கடிதத்தாளைப் புரட்டினேன். இது என்ன தொல்லை? கோமான் வீட்டுத் திருக்குமரன் மணிகண்டனின் கடிதம் அல்லவா இது? நெஞ்சை ஒடுக்கும் பயங்கரக் கடிதமாக அல்லவா இருக்கிறது? மணிகண்டனா இவ்வாறு செய்திருப்பான்?

முடிவை வைத்து ஆரம்பத்தை உண்டாக்குகிறவன் நான். இவன் ஆரம்பத்திலேயே முடிவை உண்டாக்கி விடுவானோ?

''போர்க்களத்தில் அதிகாரத்துக்காகச் சண்டை நடக்கின்றது. வாழ்க்கைகூட யுத்தகளம்தான்!...

இங்கே ஆசைக்காகப் போராட்டம் நிகழ்கிறது. ஆசைக்கோர் அளவில்லையென்கிறார்கள். உண்மை தான். நான் மோஹினியின் அழகில் ஆசை வைத்தேன். அதற்காகத்தான் இப்படிப்பட்ட போருக்கும் போராட்டத்துக்கும் ஊடே நான் அல்லாட வேண்டியிருக்கிறதா? இந்தச் சூட்சுமம் எதையும் நான் கிரகிக்க இயலாதவனாக இருக்கிறேன். எல்லோருக்குமே வாழ்க்கை புரிந்து விடுகிறதா, என்ன?

மோஹினியின் மேதாவிலாசம் ஒருபுறம் இருக்கட்டும். அவளது ஈடில்லா எழிலும், எழில் பொதிந்த இனிமையும் அல்லவா என்னை தேனில் விழுந்த ஈயாக ஆக்கித் தொலைத்திருக்கிறது? ஈக்காவது தேன் சுவையைத் துளியாவது சுவைக்க முடிந்திருக்கும். அந்தச் சுவை இன்பத்தின் பெறுமதியுடன் தன் வாழ்வையே குலைத்துக் கொள்ளக்கூடிய ஒரு துணிச்சல், அல்லது பக்குவம் அதற்கு இயற்கையிலேயே உண்டாக்கிவிடும் போலிருக்கின்றது.

ஆம்; நான்கூட அந்த ஈயாக மாறத்தான் போகிறேன். தேன் கூட்டின் காலடியில் என் உயிரைப் பிணை வைக்கப்போகிறேன்.

புதுக்கோட்டை டவுனில் நான் ஹோட்டலில் தங்கியிருந்தேன். காலையில் விழித்தெழுந்ததும், எனக்கு அறிமுகமற்றவர்கள் சிலர் அறிமுகமாயினர். பழக்கப்பட்ட முகங்களுக்கு மத்தியில் துன்பமும் குழப்பமும் கலக்கமும் தலைகாட்டத் தயங்காதா? அவர்களை நான் எங்கே, எப்போது, எப்படிப் பார்த்தேன் என்பதை ஓரளவுக்கு அனுமானம் செய்து கொண்டு, அவர்களிடம் பேச்சுக் கொடுத்தேன். மோஹினியின் சோதனைப் பொருள்களாக வந்தவர்கள் அவர்கள். அன்றைக்கு ஒவ்வொருவரும் எப்படி இருந்தார்கள்? முகத்தில் பவுடர் என்ன, காரைக்

கால் வாசனைத் திரவியம் என்ன, கையில் காப்பிக் கொட்டைச் சங்கிலி என்ன, கழுத்தில் எனாமல் டாலர் பதித்த மைனர் சங்கிலி என்ன! ..அப்பப்பா! காதலின் கதையை இன்சுவைக் காவியமாக்குவதற்கு இத்தனை ஆடம்பரங்களா?

பாவம், அவர்கள் முகத்திலும் கரியைப் பூசி அனுப்பிவிட்டாளாம் மோஹினி!

வாழ்க்கையே ஓர் ஆடம்பரம். அப்படிப்பட்ட ஓர் உணர்வுதான் நேற்றுவரை-அதாவது, மோஹினிப்பெண் என்னுள் தோல்வியை எழுதிக் காட்டிய நேரம் வரை-சதா என்னிடம் பிறந்து வளர்ந்து, என்னைப் பணச் செருக்குக்கு அடிமையாக்கி, பின்னர், பண மமதையின் கடைக்கண் வீச்சில் சிக்க வைத்து, காதலெனும் மகுடி நாதத்தின் கைப்பொம்மையாகவும் உருமாற்றி வந்திருக்கிறது.

மோஹினி தாசி, அப்படிச் சொன்னால், தெய்வத்திருவுளத்திற்கு அடுக்காது, அவள் ‘இருமனப் பெண்டிர்’ குலம், இருக்கட்டும். அவள் மனம் ஒரு பூ; மல்லிகைப்பூ; கற்புக்கு ஓர் எடுத்துக்காட்டு அப் பூ.

அஞ்சேல் என அபயமுத்திரை காட்டி நின்ற அம்பிகையின் திருச்சந்நிதானத்திலே, அஞ்சேல் முத்திரை பதித்து ஆடினாள் மோஹினி.

‘தாம்... திதாம்...
தீம்... தகை...!’

நட்டுவனாரின் கட்டைக் குரலும் நாரீமணியின் பாளை வெடிச் சிரிப்பும் என்னை விட்டு அகல வேண்டுமானால், முதலில் நான் பிடிசாம்பலாக வேண்டும். அப்படிப்பட்ட ஒரு பாக்கியம் எனக்குக் கிட்டினாலும் தகும்.

ஆனால்...ஆனால்...அவள் என்னை-என்னுடைய புனித நிலையைச் சந்தேகப்பட்டாளே?...அவளைப் பழி வாங்காமல் நான் அடங்குவதா?...பெட்டகத்தில் கடைசிக் காசு இருக்கும் பரியந்தம் செலவழித்துப் பார்த்து விடத்தான் போகிறேன்!

மோஹினியை ஆட்டிப்படைக்கும் நட்டுவனார் சேகரலிங்கம் இப்பொழுது என் கைக்குள் அடக்கம்!

இதோ, என் கைப்பிடிக்குள் ஒரு படம் அகப்பட்டிருக்கிறது. மரக்கிளைபற்றி ஒயில் மிளிர நிற்கும் மோஹினிக்கு அருகில் நிற்கும் அந்த ஆணழகன் யார்?... இந்தப் படம் ஒன்று போதாதா, அவளைப் பழிவாங்க?

நெஞ்சம் என்பது நீராழி மண்டபத்துத் திருவிளக்கு. ஆழம் பறித்துக் காவல் புரியும் நீர்வெளிதான் மனச்சாட்சி. நீரைக் கடந்தால், நீராழி மண்டபத்தைத் தரிசிக்க முடியும். மனச்சான்றின் அனுமதிச் சீட்டுப் பெற்றால்தான்-பெறக்கூடிய பக்குவமும் தெளிவும் பயிற்சியடைந்தால்தான், மனம் எனும் திருவிளக்கு தெளித்துக் காட்டும் தெய்வ ஒளியைத் தரிசிக்க வாய்க்கும்.

மனத்தின் காதை இது.

வாழ்வின் கதை இது.

மணிகண்டன் இருக்கிறான் பாருங்கள். அவனைப் பற்றி அவனது இது நாளைய நடவடிக்கைகளை வைத்து எடை போட்டுப் பார்த்தால், அவன் ஒரு விந்தை மனிதன் என்றுதான் எனக்குச் சொல்லத் தோன்றுகிறது. இன்னும் கொஞ்சம் பச்சையாக, மனிதாபிமானத்தோடு சொல்ல வேண்டுமானால், அவனை 'மனிதப்பிராணி' என்றும் அழைக்க

வேண்டும். தவறில்லை. மனிதனுக்கென்று ஆக்கப்பட்டிருக்கும் சட்டதிட்டங்களை அவன் கட்டுக்குலைத்து நொறுக்கி வீச முனையும்போது, அவனுக்கு உகந்த பேரும் புகழும் அவனை விட்டு விலக முனைவது தானே உசிதம்! மணிகண்டன் யாராயிருந்தால் என்ன? நான் யாருக்காகப் பயப்பட வேணும்? உடலுக்குப் பட்டுச் சொக்காய் அத்தியாவசியமாக இருக்கக்கூடும். உள்ளத்திற்கு அது தேவையில்லையல்லவா? மணிகண்டனிடமே நான் கேட்டுவிட்டேன் "நீர் மனிதன்தானா?... கருதிய பொருள் கைக்குக் கிட்டவில்லையென்றால், 'சீ, சி! இந்தப்பழம் புளிக்கும்!' என்று நாகரிகமாகவும் நாசூக்காகவும் தப்பிய நரியாக மாறும்; நான் மறுப்புச் சொல்லேன். ஆனால், நீர் நினைத்த வகையில், உம் காதல் வெற்றி பெறவில்லை யென்பதற்காக, மோஹினியைப் பழி வாங்கப் போவதாக முடிவு கட்டியிருக்கிறீரே? இது மனிதப் பண்புதானா? நீர் மனிதனா? இல்லை, மிருகமா? சே!" என்று.

சைத்ரீகன் சுந்தரன் என்னிடம் கடிதம் ஒன்றை நீட்டினான் என்றேன் அல்லவா?—அவனை மனத்தில் நினைத்துக் கொண்டு, கடிதத்தாளைப் பிரித்தால், அங்கே மணிகண்டனின் பயங்கரமான முகத்தைத்தான் என்னால் பார்க்க முடிந்தது. கடிதங்கள் மாறிவிட்டனவே தவிர, கதையை மாற்ற அவற்றால் முடியவில்லை.

மணிகண்டன் எழுதியிருந்தான்.

"மோஹினி!

நீயே சதமென்று, உன்னைச் சரணடைந்தேன் நான், பரிசுத்தமான என்னுடைய அன்பு மனசைப் புண்படுத்தி விட்டாய் நீ. மறக்க முடியாத எந்த

ஏமாற்றத்தையும் தாங்கிக் கொள்ள பெண் மட்டும் தான் ஒப்பமாட்டாள் என்பது கிடையாது. ஆணும் ஒப்பமாட்டான். இதோ, நான் இருக்கிறேன். எனக்குக் கை கொடுக்கும் சந்தர்ப்பத்திற்காக நான் காத்திருக்கிறேன். எனது நினைப்பு கைகூடி வந்தால், தீர்ந்துவிடும் உன் வாழ்வு! என் ஆண்மையின் புனித சக்தியைச் சோதனை செய்யப் புது நாடகம் நடத்தினவளாயிற்றே நீ? ஆனால், அதே நேரத்தில், உன் புனிதத்தையும் நான் பட்டவர்த்தனமாய்க் கண்டறிய விரும்புவது சகஜமேயன்றோ? ஒரு பக்கம் பழி புறப்பட்டால், எதிர்ப்பக்கம் அந்தப் பழியைச் சுமந்து கொண்டிருக்காது எனபதையாவது நீ மறந்து விடாதே!

இவ்விதம்,
மணிகண்டன்.''
(ஆடுதுறை பெரிய பண்ணை)

பெண்ணை ஒரு பண்ணை ஆட்டிப் படைக்கும் லட்சணத்தை என்னவென்று சொல்வேன்?

இந்தக் கதாசிரியர்களே இப்படித்தான்!

யதார்த்த வாழ்க்கை வேறு; லட்சிய வாழ்க்கை வேறு.

இவை இரண்டையும் தாங்கள் குட்டை குழப்பிக் கொள்வதுடன் நிற்காமல், நம்மையும் வேறு குழம்பச் செய்துவிடுவார்கள்!

இந்த உண்மையை—அதாவது, என் வாதப்படி உதிர்ந்துள்ள உண்மையை—அதாவது, அவரது தர்க்கத்தின் பிரகாரம் அமையவல்ல பொய்யை நான் என்னவென்று எடுத்துரைப்பேன்?

மோஹினியை நான் திட்டியதற்காகவேண்டி. இவர் என்னைத் திட்டுகிறாரே? அவருக்கு என்னுடைய தவிப்பு எப்படிப் புரியும்? ஒருவர் துன்பத்தையும் தொல்லையையும், திகைப்பையும் தவிப்பையும் இன்னொருவரால் அறிந்துகொள்ள முடியுமென்பது வெறும் அளப்பு. வயசு கடந்தவர்; போகட்டும்!...

சுந்தரம் என்பவருக்குப் படம் எழுதும் அலுவல், அல்லது பிழைப்பு. பைத்தியங்களில் பல ரகம் உண்டு, இல்லையா? இந்த அப்பாவி ஒரு வகை. அவருடைய கடிதம் ஒன்று என் கையில் இப்பொழுது இருக்கிறது. மோஹினிக்கு எழுதியிருப்பதால், இதைக் காதல் கடிதம் என்பதற்கில்லை. ஆனாலும், ஒரு விஷயத்தை என்னால் ஊகித்துக் கொள்ள முடிகிறது. காதல் இல்லாவிட்டாலும், காதல் வெறி சூடுபிடித்து, சூடுபட்ட பூனையின் வெறியாகக் கனிந்திருக்கிறது. மோஹினிக்கு எழுதப்பட்ட இம் முடங்கல் என் வழியில் ஏன் முடங்கிக் கிடக்கவேண்டும்? எது எப்படிப் போனால் எனக்கென்னவாம்? என்னுடைய கடிதம் அந்தப் பரத்தையிடம் இந்நேரம் போய்ச் சேர்ந்திருக்கும். கட்டாயம் அவளது கெண்டை விழிகள் கலங்கி, மண்டை ஓடு கனம் தட்டிப் போயிருக்கும்! என்னுடைய உணர்ச்சிகள் நேர்மையான கோணத்தில் இயங்குவதற்குரிய வழிவகைகளில் அவளுடைய நடைமுறைச் செயல்கள் இயக்கப்பட்டிருந்தால், நான் ஏன் இவ்வளவு தூரம் ஆங்காரம் பெறப் போகின்றேன்? இந்த மோஹினியை ஆதியில் நான் பார்த்த நேரத்தில், அசல் தேவதையைப் பார்ப்பது போலவே என் மனசு உணர்த்திய அந்தப் பாவனையை நான் இன்றல்ல, என் சிதை சாம்பலாகும் பரியந்தம் மறப்பேனோ? மறக்கத் தூண்டும் சந்திப்பா அது? 'நான் உங்கள்

நிழலிலேயே ஒண்டிவிடத்தான் துடிக்கிறேன்!' என்று எரிதழலில் தூவப்படும் சாம்பிராணித் துகள்களினின்றும் புறப்பட்டுப் பரவும் தூய நறுமணமெனச் செப்பினாளே? எல்லாம் பொய்யா?

ஆம்: அவளே பொய்!...பொய்யே அவள்...!

அந்தப் பொய்யின் திரையைக் கிழித்துத் தரையில் வீசியெறிய, இந்தப் போட்டோப்படம் எனக்குக் கடைசிக் கட்டம் வரையிலும் கை கொடுக்கும்; அதுவே எனக்கு உயிரும் கொடுக்கும்!...ஏன் முடியாது?

புதுக்கோட்டையில் சந்தைப்பேட்டை என்றால் ரொம்பவும் கியாதி, அதைச் சுற்றிப் பார்த்து விட்டு, 'பிரஹதாம்பா'ளில் சினிமாப் பார்த்தேன். பார்த்து முடிந்தவுடன், நான் தங்கியிருக்கும் ஹோட்டலை எல்லையாகக் கொண்டு வழி கழித்தேன். சந்தைக்கு வந்திருந்த என்னுடைய உறவுக்காரப்பிள்ளை ஒருவன் என்னிடம் கொட்டிய செய்திகள் என் சித்தத்தைக் கலக்கின. "சரி, நீ போ, தம்பி. நாளைக்காலம்பற நான் புறப்பட்டு வாரேன்னு அம்மாகிட்ட சொல்லு," என்றேன்.

குழம்பிய மனம் என்னை அழுத்த, அந்த அழுத்தத்தில் என் மனச்சாந்தி அழுந்த நடந்தேன். நட்டுவனார் சேகரலிங்கம், குறுக்கே ஓடியே பூனையானார். இந்தப் பூனையைக் கெட்ட சகுனமாகக் கொள்ளலாமோ! கூடாது, கூடாது!

அவர் என் காதைக் கடித்தார்.

நான் பல்லைக் கடித்தேன்!

பொதுவாகச் சொல்லும் பேச்சு இது.

இந்த எழுத்தாளர்களுக்கு, சமயாசமயங்களில், குரூரமான ஓர் ஆசையின் உணர்வு பொறி தட்டிக் காட்டுவது இயல்பு. அதன் விளைவாகத்தானோ என்னவோ, அவர்கள் எந்த ஒரு நட்பையும், எந்த ஒரு காட்சியையும், எந்த ஒரு பொருளையும் விசித்திரம் நிழலாடும் பார்வையுடன்—விந்தை கரை கட்டும் சுழிப்புடன்—வேடிக்கை பாய்ச்சல் காட்டும் குறும்புடன் நோக்குவார்கள்; தீர்ப்பும் எழுதிவிடுவார்கள்.

அந்த எழிலரசி மோகினியிடம் எனக்குப் பரிச்சயம் உண்டு என்பதாக ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன். நினைவிருக்கவேண்டும். பரிச்சயம் என்றால் பழக்கம் என்றுதான் அகராதியில் அர்த்தம். ஆகவே, என்னைப்பற்றி வாசகர்கள் எவ்விதமான பரிணாமத்தையும் உண்டுபண்ணிக் கொள்ளக் கூடாது. மோஹினி தாசி. இருக்கலாம். ஆனால், அவள் அழகை எப்படி உங்கட்கு எடுத்துக் காட்டுவேன்? மெய்தொட்டு, மெய்தீட்டிக் கூறவேண்டுமெனில், அழகுக்கு எப்படி உருவம் கொடுக்க இயலும்? காமவேதனை தட்டுப்படாத, நறுவிசாகக் காதளவோடிய அவளுடைய கயல் விழிகள் இரண்டையும் கண்டேன். நான் திட்டமிட்டு எனக்குப் பிடித்தமாதிரி எழுதிய பிரச்சினைக் கதையைத் திரும்ப ஒருமுறை படித்துப் பார்க்கும் பொழுது என்னுள் ஏற்படும் மயக்கம் கிளர்ந்தெழுந்தது. அவள் உதடுகளைக் கண்டேன். இளமை நிலவின் அடிமட்டத்தில் அடங்கிக் குறுநகை கோர்க்கும் இன்ப வெறி எழுந்தது. மூக்கின் அமைப்பைப் பார்த்தேன். நான் விரும்பும் லாவண்யம் பெற்றிருந்தது அது. தேகக்கட்டு தெரிந்தது, ஒவியர் மணியம்

வரையும் சிற்ப உருவங்களின் உயிர் ஊடாடும் கவர்ச்சியை இமை வெட்டாமல் பார்த்தேன்.

ஊம், என் அமிர்தம் இதைப் படித்தால்—இது பற்றிக் கேள்விப்பட்டால் என்மீது சினம் கொள்ளப் போகிறாள்!

ஆக, ஒன்று உறுதி:

மோஹினி எழில் மோஹினியே!

என்னைக் கண்டு பேச வந்திருந்தாள், நேற்று, அது அவள் கடமையாகவே இருக்கட்டும். மணிகண்டன், சுந்தரன் ஆகிய இரு காதல் கோமாளிகளுக்காக நான் செய்தாக வேண்டிய கடமையும் காத்திருக்கிறதல்லவா?

பையன் பானம் கொணர்ந்தான்.

"ரொம்பவும் இனிக்கிறதுங்க, ஐயா!" என்றாள் அவள்.

அவள் பேச்சைவிடவா? இல்லை, அவள் ரூபத்தைக் காட்டிலுமா? இல்லை, அவள் நாட்டியத்தைப் பார்க்கிலுமா?

அவளிடம் கேட்டேன். இவ்விருவரையும் பற்றித் தான்.

நகைகள் மின்ன, அவள் நகை புரிந்தவளாக, பேசாமல் கொள்ளாமல், நிழற்படமொன்றை எடுத்து நீட்டினாள், ஓர் இளைஞனின் படம் அது; தீர்க்கமான எழில் பூத்த உருவ அமைப்புடன் விளங்கினான். தொடர்ந்து அவள் இதழ் திறந்து பேசிய பேச்சின் முத்தாய்ப்பில் என் இதயம் அடித்துக் கொண்டது. சற்றுப் பொறுத்து வந்த ஓர்

உருவத்தைக் காட்டி எனக்குப் பழக்கப் படுத்தினாள். என்னையே என்னால் நம்ப முடியவில்லை!

ஒன்பதாவது, பத்தாவது அதிசயமா இது?

'வாழ்ந்து காட்டியவர்கள்' என்று நாம் சிலரைப் பகுத்துச் சொல்வது உண்டல்லவா? அவர்களுக்கு அப்படிப்பட்ட 'பட்டப் பெயரை' நாம் ஏன் சூட்ட நேரிடுகிறது? கேள்விகள் இல்லையென்றால், வாழ்வு இல்லை. அதுபோலவே வாழ்வு இல்லையென்றால் அப்பால், வினாக்களுக்கும் அலுவல் கிடையாது. இத்தகைய தக்க ரீதியான வாதத்தில் முனைந்து, 'வாழ்ந்து காட்டியவர்களை'ப் பற்றி ஒரு விளக்கம் சொல்லத்தான் ஆசைப்படுகிறேன். வாழ்வின் ஆரம்பக் கட்டத்தில் அடியெடுத்து வைத்து, வாழ்க்கையை அவர்கள் படிக்கப்போய், வாழ்க்கை அவர்களைப் படித்து முடித்து, கடைசியில் வாழ்வையும் இம்மனிதர்களையும் ஆடுகாய்களாக்கி இறைவன் விளையாடி—விளையாட்டுக் காட்டி முடிந்ததும், இவர்களுக்கு உண்மைகள் பல பளிச்சிடுகின்றன. உண்மைகள் பளிச்சிடக்கூடிய நேரத்தை அற்பசொற்பமானதாகக் கணிக்கலாமா? 'பொன்னான நேரம்' என்று எடுத்ததற்கெல்லாம் எடுத்து வீசிச் சொல்கிறார்களே, அப்படிப்பட்ட நேரம் அது. அப்போதுதான் வாழ்ந்து காட்டியவர்கள்' என்கிற பட்டத்தைச் சூட்டும் சூழல் அவர்களைச் சுற்றிலும் உருவாகிறது. இத்தகைய கஷ்ட நஷ்டங்களைத் தம்முடைய சொந்த அனுபவங்களாக ஏற்றுக் கொண்ட அந்தத் துணிச்சல் இருக்கிறது பாருங்கள். அதற்காகத்தான் அவர்களுக்கு அத்துணை மதிப்பு, கௌரவம் எல்லாம்!

இந்தப் பட்டியலில் எனக்கு மட்டிலும் இடம் கிடைக்காமல் இருக்க முடியுமா?

நான் சொல்லுகின்றேன்:

காலில் முள் தைத்து விடுகின்றது. வலி எக்கச் சக்கம். அடிப்பாதத்தின் விளம்பில் முள் பதிந்த இடம் மெல்லிய சதைப்பிடிப்புக் கொண்டது ஆகவே, முள் லகுவாகப் பதிந்து விடுகிறது. முள்ளை எடுக்க முள்ளையே பயன்படுத்துவார்கள். ஆனால், கால் அசைவினாலோ, அல்லது எப்படியோ, தைத்த முள் தன்னாலேயே விழுந்து விடுகிறதென்று கொள்ளுவோமே. அப்போது, உபாதைக்கு உள்ளானவனுக்குக் கூடுதலான மகிழ்வு உண்டாவது இயல்பே அல்லவா?

இன்னொன்று :

முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும் என்பது சாகஸ உலக வாழ்விற்கும் பொருந்தி வரவல்லதொரு புதுமொழியாகும். குத்திய முள்ளை எடுக்க வேண்டிய மற்றொரு முள்ளே கதாநாயகக் கோலத்திலிருந்து 'வில்லன்' வேஷத்திற்கு உருமாறும் நிலை உருவானால், சாகசத்தைப் பிறப்பித்தவனின் மனமும், சூதுமதியின் பிரதிபலனை எதிர்பார்த்த இதயமும் படும் பாடு சொல்லத் தரமா?

வாழ்க்கையே முள்.

சிலர் முள் வலியை உணருகிறார்கள்.

அவர்கள் வாழ்ந்து காட்டியவர்கள். வலி தாளாமல் உதடுகளை அசைத்து விடுகிறார்கள்.

சிலரை முள்ளின்வலி ஏதும் செய்ய முடிவதில்லை.

அவர்கள் ஞானிகள்!...

இப்படிப்பட்ட விசித்திரமான பூதலம் தன் போக்கில்-தன் அளவில்-தன் நியதியில் சுற்றிச் சுழன்று கொண்டிருக்கையில்தான், பாவம், அந்த

மணிகண்டன் அதோ, துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிறான்! மணிகண்டன் சாமானியப்பட்டவனா? நட்டுவனாரைத் தன் கைக்குள் போட்டுக் கொண்டான். ஆடலழகி மோஹினியுடன் காணப்பட்ட ஓர் இளைஞனின் புகைப்படத்தையே சூதாக்கி, சூது விளையாடத் திட்டமிட்டிருந்தான் அவன். அந்தத் திட்டம், அவன் கண்ட தோல்வியில் விளைந்த வெறியாகும்.

ஆனால், நடந்தது என்ன, தெரியுமா?

நான் கதைகள் புனைபவன். நானே எதிர்பாராத-எதிர்பார்க்க முடியாத - அப்படியொரு மூலைத் திருப்பம் அது.

நெஞ்சிடைச் சிலையமைத்துக் கொண்ட உருவத்தை வெளியே உலவவிட விரும்பும் கலைஞனின் நிலையிலா நான் இருந்தேன்? பின் ஏன் அப்படிப்பட்ட நிலையிலும் நினைவிலுமாக நான் அல்லாட வேண்டும்? மோஹினியைப் பற்றியே சதா சர்வகாலமும் நினைத்து. அந்நினைவிலேயே மனம் மயக்க நிலை பெற்றிருப்பவனைப் போல நான் ஏன் அப்படித் திகைப்படைந்து விளங்க வேண்டும்? அவளைப் பார்த்தேன். சரி. ஒரு தடவை, இரண்டு தடவை என்று தடவைகளுடன் எண்ணிக்கை வரிசை நீண்டது. நீண்ட பெருமூச்சும் நீண்டது. திரும்பத் திரும்ப ஓர் ஆசை, ஆவல், ஆதங்கம். அவளைக் கண்டேன். அவளை நினைத்துப் பார்த்தேன். விழிகளின் இடுக்கில் விளையாடியவள், அதே விழிகளின் இடைவெளியில் என் இடைவேளைப் பொழுதானாள்.

''ஸார்!...''

தமிழுக்குத்தான் இனிமை மிகுதி என்பதாகப் படித்திருக்கின்றேன் நான். இப்பொழுது அவள், அழைத்த அந்த ஆங்கிலச் சொல் கூட இனிமை சொட்டி ஒலிக்கிறதே?...

மோஹினியை ஏறிட்டுப் பார்த்தேன். அதே பார்வையின் மூலை மட்டத்தில் அந்தப் புதிய இளை ஞனின் சிரிப்பையும் பார்த்தேன். அவனைப்பற்றி அவள் அறிமுகப்படுத்தினாள். என்றேன். அறிமுகப் படுத்திய விதத்தை அல்லது பாவனையை உங்களி டம் விரிவுபடுத்தினால் மோசம் ஏதுமில்லை என்பது என் அபிப்பிராயம். புண் உடம்புடன் சாம்பலா வதில் அந்த ரகசியத்துக்கு அப்படி என்னதான் விடி மோட்சம் வந்து சேர்ந்துவிடப் போகிறது?

மோஹினி சொன்னாள். மோகம் முகிழ்த்த உதடுகளின் நெளிவு சுளிவுகளிலே கள்ளநகை இழை யோட, தாபம் நிறை விழிக் கணைகளிலே மோஹக் கவர்ச்சியின் புனிதம் தழைபின்ன அவள் பேசினாள். மார்பகத்தின் இருமுனைப் பகுதிகளில் வெய்துயிர்ப் பின் களர் நிலம் காணியாட்சி பிடித்துக் கொண்டி ருந்தது. தீ சிரிக்குமோ?

அவள் சொன்னதாவது:

“எழுத்தாளர் ஐயா. நீங்கள் வாழ்க்கை எனும் மர்மக்கதை சொல்லி வந்திருக்கின்ற எத்தனையோ தினுசான அதிசயத் திருப்பங்களைக் கற்பனை பண்ணியிருப்பீர்கள். ஆகவே, நான் சொல்லும் இவ் விஷயம் உங்களுக்கு ஒரு பொருட்டாகத் தோன்ற வாய்ப்பில்லை; இருக்கவேண்டுமென்று விரும்பவு மில்லை நான். விரும்புவதும் உசிதமாகாது. ஆனால், இந்த நடப்பு என் வரையிலேனும் ஒரு மாற்றம் என்றுதான் செப்பவேண்டும். இந்த மாற்றத்துக்குத்

'தியாகம்' என்ற பெயர் சூட்டுகிறார் இவர். இதை நான் ஒப்பாதவன். தியாகம் என்பதுகூட ஒரு கண்ணாமூச்சி ஆட்டம் மாதிரிதான். சுய விளம்பரத்தினால் தியாகம் விலைபோகுமென்றோ, அல்லது தியாகத்தின் கதை பரவலாக ஒலிபரப்பப்படுமெனவோ எண்ணினால், அது மடமை என்பது என் கருத்து. ஆடிப்பிழைக்கும் 'லவிதம்' போட்டவளுக்கு இப்படிக்கூட ஞானோதயம் தோன்றுமா என்று நீங்கள் தற்சமயம் கருதுவீர்களானால்கூட, அதிசயம் கொள்ள மாட்டேன் நான். குப்பையில் புதைந்து கிடைக்கக்கூடிய குன்றிமணிக்கு தன் வாழ்வே ஒரு சிருஷ்டித் தத்துவம் என்றோ, அதுவே படைப்பின் புதிர்ச் சக்தியென்றோ தெரியவும் கூடாதல்லவா? இப்படிப்பட்ட வாழ்வின் பிசிறுத் தத்துவ உள்நோக்கங்களையும் புறவாழ்வுப் பொலிவுகளையும் கண்டு தெளிந்தவர்கள் பலர் சொன்னதைப் படித்து வருகின்றவள் நான்!...

''பெண்ணின் உள்ளமானது ஆழியைக் காட்டிலும் ஆழம் அதிகமுடையதென்பதாக எழுத்து ஆளர்கள் எழுதி வருகின்றார்கள். நீங்கள் கோபிக்கலாகாது. நீங்கள்கூட ஒருமுறை இவ்வாறு உவமை காட்டியிருக்கிறீர்கள். பெண் உள்ளம் ஆழமுடையதாக இருப்பது தவறு என்று நீங்கள் வாதாட முடியுமா? ஆழமாகயிருப்பது ஒன்றுதான் பெண்மைக்கு ஏற்றம் தரவல்லது என்பது என்னுடைய பணிவான எண்ணமாகும். ஆழத்தில்தான் அமைதி இடம் காண்கிறது. இவ்வுண்மைக்குச் சரித்திர-சாத்திர தத்துவங்களை ஆதாரமாகக் கேட்க மாட்டீர்களே?

''என் கேள்விகளில் தேங்கிக் கண்சிமிட்டும் சூட்டைத் தாங்கள் உணராமல் இருக்கமாட்டீர்கள்.

என்ன செய்வேன்? அபலை நான்! என்னை ஆட்டிப் படைத்து விட்டார்கள் வெறும் மனிதர்கள்!

"இனி நான் பாக்கியவதி. இதோ, இவரேதான் என் காதலர்: கணவர். என்னை- என்னுள்ளே உறைகின்ற என்னை, இதயம் தழுவிய நேசத்தோடு நேசம் முத்தமிடும் நினைவுப் பொலிவுடன்-நினைவு காதலிக்கும் நேர்மையுடன் விரும்புகிறார் இவர். அடுத்த பதினைந்தாம் நாள் சாந்தனார் தெய்வத் தின் திருச்சபையின் முன்னே எங்கள் வதுவை விழா நடைபெறும். அழைப்புக்கள் அனுப்புவது எங்கள் குலவழக்கமல்ல. ஏனென்றால், இவ்வகையான திரு மணங்களே எங்கள் குலதருமப் பிரகாரம் செல்லுபடி யாகா!... ஊம், குலமாவது!... தர்மமாவது!..."

மோஹினியின் அழுகையில்கூட எவ்வளவு எழிற் கவர்ச்சி சொட்டுகிறது?

வானின் உயர் பீடு பெறும் பொற்பு நிறை அழகே! உன் பெயர் தான் விதியா?

மோஹினியைப் பொய் என்றேன். இப்பொழுது, அவள் என்னையே பொய்யாக ஆக்கி விட்டாளே?...

எந்தப் படம் என் சூழ்ச்சித் திருவிளையாட லுக்கு எனக்குக் கடைசி நிமிஷம் வரை கைகொடுக்கு மென்று மனப்பால் குடித்து வந்தேனோ, அதே படம் இன்று அவளுக்கு-அந்த மோகினிப் பெண்ணாளுக்குக் கை கொடுக்கும் பரம ஔஷதமாக ஆகிவிட்டிருக் கிறதே?

தெய்வமே, அழகுக்கு உவமைப் பொருளாக அவளை ஏன் படைத்தாய்? அந்த அழகை விலை போட்டு வாங்க முடியாத நிலையில் என்னை ஏன்

படைத்தாய்? அந்த மோஹினியைச் சந்தித்து, அவள் வசம் நான் வசமிழந்து இப்படிப் பேயாய்த் தவிக்கும் நிலைக்கு உடந்தையாக, என் கண்களில் அவளது எல்லையற்ற பேரெழிலை ஏன் காட்டித் தொலைத் தாய்?...

சந்திப்பு என்பதுகூட, விட்டகுறை-தொட்ட குறையின் அறுவடைப்பலன்தானோ?... நான் என்ன கண்டேன்? இந்தக் கதை இருக்கட்டும்.

நேற்று நடந்த சம்பவம் என்னுள் படம் காட்டுவ தைப் பார்க்கையில், அதே தொட்டகுறை-தொடாத குறையின் கதைதானே நினைவில் பளிச்சிடுகிறது? அம்மா கூப்பிட்டிருந்தாள். ஊருக்குப் போயிருந் தேன். அங்கே ஒரு சந்திப்பு. புதிது என்று சொல் வதற்கு உரித்தானதா? ஊஹும்! பற்றிய சுற்றம் காட்டி, ஒட்டிய உறவைக் குறித்துச் சொல்ல எனக் கெனப் பிறந்திருக்கின்றாளாம் எவளோ ஒருத்தி அவள் எனக்கு அத்தை மகளாம்! அம்மா சொல் கிறாள். கனியைப்பற்றிக் கனியக் கனியப் பேசு கிறாள் அம்மா. அப்பாவிற்குப் பிறகு அம்மா தான் எங்கள் பண்ணைக்கே அதிகாரி. ஆடுதுறைப் பண்ணை என்றால், பின்னே சும்மாவா?

வந்தவளைப் போய்ப் பார்த்தேன். அழகிதான். அட்டியில்லை. நிர்மலா என்று நாமகரணம். எல்லாம் சரி. என் இதயத்தில் இவளைப் பிடித்துப் போட ஒற்றைக் காலால் தவம் இருக்கிறாள் அன்னை. என் னால் நிலையை நன்கு ஊகித்துக் கொள்ள முடிகின் றது. ஆனால், இதயபீடத்தில் தனி ஆசனம் தந்து அமர்த்திக் கொண்டுள்ள மோஹினியை என்னால் எப்படி வெளியேற்ற இயலும்?

மோஹினி, மெய்யாகவே நீ பொய்யில்லையா? மோஹினி அவதாரம் கொண்ட புனைவடிவப் பதுமை இல்லையா நீ? பின் ஏன் என்னை இப்படி ஆட்டிப் படைக்கிறாய்? உன்னைப் பற்றி நட்டுவனார் சேகரலிங்கம் சொன்னதெல்லாம் கதை தானா? என் புனிதமிகு ஆண்மையைச் சோதித்திட அன்று நீ நாடகமாடினாய்! இன்று, என்னையே பரீட்சைசெய்யஇந்தநாட்டுவனார் உன்னால் அனுப்பப்பட்டிருக்கிறார்!

சோதனை என்பது எரிதழல் அல்ல; அதுவே, தீக்குளிப்பு மண்டபம் போலும்! நீ தீயா?

நான் தோன்றுவிட்டேனா?

முடிந்த முடிவிலே...

மோஹினி, உனக்கு ஒரு கடிதம் எழுதினேனே, நெஞ்சிருத்திக் கொண்டிருப்பாயா? உன்னுடைய பவித்திரமான முதற்பார்வையைக் கையேந்திப் பெறப் புண்ணியம் கொண்டதாக நான் களித்துப் பறந்து திரிந்த சடுதியில், உனக்கு நான் அனுப்பிய முடங்கல்களிலே இப்படி எழுதியிருந்ததாக ஒரு ஞாபகம். "...உன்னைப் பார்த்தவுடன், பிறவிப்பயன் எடுத்ததன் தாத்பரியம் எனக்குத் தெளிவாகப் புரிந்துவிட்டது!" என்று குறித்திருந்தேன்.

எல்லாம் இனிமேல் பழங்கதை!

என்னைப் பார்த்த நிகழ்வுகூட தெய்வானுகூலமாகவே இருக்கவேண்டுமென்றும், என்னை அன்று உன் வீட்டிலேயே தங்கும்படியும் நீ சொன்னதுகூட பொய்க் கனவாகி விட்டதே!

மோஹினி, நீ இப்போதாவது சொல்! பத்மாசூரனை துவம்சம் செய்ய திருமால் மோஹினி

அவதாரம் கொண்டாராமே? அதற்கும் உனக்கும் தொல்வினைத் தொடர்பு ஏதாகிலும் உண்டா?

ஐயோ! .. நான் தோற்றுப் போனேன்!

மோகினிக்குக் கல்யாணம்!

உண்மையாகவே எனக்கு அப்படித்தான் புலப் படுகிறது. இந்த மோஹினி அசல் மோஹினி யாகவே தான் இருக்கவேண்டும். அவளுடைய அவ தார மகிமையின் விளைவாக, துன்ப விளைவுதான் ஏற்பட்டாக வேண்டுமென்று இருக்கும் போலும்!

குப்பை இருக்கிறது. அதிலிருக்கின்ற குன்றி மணிக்கு 'சுக்கிர தசை' வாய்ப்பதையொப்ப, அனாம தேயன் ஒருவனுக்கு இந்த வாழ்வு கிட்டுவதென்றால். அதற்கு என்ன பெயரிட வேண்டும்?

ஒரு விஷயம் ஞாபகத்திற்கு வருகிறது.

அஞ்சன வண்ணன் ஸ்ரீ இராமபிரான் அயோத்தி மாநகரை விட்டு நீங்குவதற்கு 'விதியின் பிழை' தான் காரணமெனச் சுட்டுகிறார் கவிச்சக்கரவர்த்தி அதே போல், இந்த இளைஞன் இன்பசாகரன் எழில் ராணி மோஹினியை இன்பம் துய்க்கும் பேறு கொள்ளக் காத்திருப்பதுகூட 'விதியின் பிழை' யாகவே இருக்கலாமோ? பிழை திருத்தும் நான், சிருஷ்டிச் சுவடிகளின் தலையில் கைவைக்கத் துணிந்து விட்டதாக உங்களில் யாரும் அன்பு கூர்ந்து கருதலாகாது!

இன்பசாகரன் பிச்சைக்காரன். மோஹினியின் ஆட்டத்தைத் தரிசித்திருக்கிறான். அதுவே, அவ னுக்குத் 'தேவதரிசனம்' ஆகவும் தோன்றியிருக்க வேண்டும். உடனே அவன் என்ன செய்தான், தெரி யுமா? வழி மறித்த தடைகளை வழி விலக்கிவிட்டு

மோஹினியை நேருக்கு நேர் தரிசித்தான். "நான் உருவத்தில் பரம ஏழை. ஆனால், உள்ளத்தால் நான் மாபெரும் சீமான். உன் முதற்பார்வை பட்ட கணத்திலேயே என்னுள் இதுவரை நான் அனுபவித்தறியாத ஓர் இன்ப உணர்வு தலையெடுத்து என்னை அலைக்கழித்தது. அடைந்தால் உன்னையே அடைவது, இல்லையென்றால் சாவது என்று வந்திருக்கிறேன். என் புனிதமிகு ஆண்மைமீது உறுதி வைத்துப் பேசக்கூடிய பேச்சு இது!" என்று வீறு கொண்டு முழங்கியிருக்கின்றான் அவன்,

அவள் சிரித்தாளாம்!

சிரிப்பென்றால், எதிரியைத் தூசாக நிர்ணயித்து எடை போட்ட ஏளனச் சிரிப்பு.

இன்பசாகரன் அவளை ஒருமுறை விழிகளால் விழுங்கிவிட்டுப் பிரிந்து விட்டான்.

அடுத்த பத்தாவது நிமிஷம், மோஹினியின் முன்னே ஓர் அதிசயம் ஏடவிழ்ந்தது.

இன்பசாகரன் உயிரை மாய்த்துக் கொள்ளத் தீர்மானித்து மோஹினியின் வீட்டுக் கேணியில் விழுந்திருக்கிறான். அவனுக்கு ஆயுள் கெட்டி. யாரோ காப்பாற்றி விட்டார்கள்.

இன்பசாகரனைப் புரிந்து கொண்டாள் மோஹினி. அவள் தன்னுள் 'என் தவம் இப்போது தான் பொருள் பெறப் போகிறது' என்று கூறிக் கொண்டாளாம்!

இதோ, அழைப்பு. அவ்விருவரும் இனி உயிரும் உயிருமாகப் போகிறார்கள்! வாழ்க!

சைத்திரிகன் பிழைக்கத் தெரிந்தவனாம்!

ஆடுதுறைப் பண்ணை மணிகண்டன் பிழைக்கத் தெரியாதவன் சூது கவ்விய மதியுடன், பிடிப் பற்றுக் கிடக்கிறானாம்! எப்படியோ, அவனுடைய திருமண வைபவமும் ஒரு நாள் நடக்கத்தான் போகிறது.

மோஹினி-இன்பசாகரன் வதுவை விழா வெகு அற்புதமாக நிகழ்ந்தது.

சாப்பாடு என்றால், செட்டி நாட்டுச் சாப்பாடு!

இன்பசாகரனுக்குத்தான் எவ்வளவு குதூகலம்! ..

'முதல் இரவின்' பொழுது விடிந்தது.. எனக்கு ஒரு செய்தி விழுந்தது.

'இன்பசாகரனின் உயிர் விடுதலை அடைந்து விட்டது.

மோஹினியை என் மனக் கண்களில் கொணர்ந்து நிறுத்திப் பார்க்கிறேன். என் மெய் சிலிர்க்கிறது. பொய்யினின்றும் பிரிந்து, மெய்யே உயிராக நிற்கின்றாள் அவள். என்னுள் மற்றொரு நினைவு பளிச்சிடுகிறது. 'திருமுருகாற்றுப் படை'யில் ஒரு கட்டம். மனிதர்களின் கைத்திறனுக்கும் கற்பனைக்கும் எட்டாத அளவுக்கு முருகவேளின் அழகு இருக்கிறதாம்! 'கை புனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பு' என்று பேசப்படுகிறது. அப்படிப்பட்ட தெய்வீக அழகு இந்தத் தாசி மோஹினிக்கும் வாய்த்திருந்தது!

மீண்டும் ஒரு செய்தி. நான் எப்படிக் கூறுவேன்?

அந்த உடற்கூடு பிடிசாம்பலாகிவிட்ட மறுகணத்திலேயே, அந்தப் பிடிசாம்பலுடன், 'தீ'யின் எரிசாம்பலும் கரைந்து விட்டதே!

'தாம்... தீம்... தை... தை' என்ற சதங்கைப் பண் ஒலி உங்கள் செவிகளில் விழுகிறதல்லவா?

ஆம்; மோஹினி அசல் மோஹினியேதான்!

❋ ❋ ❋

# 4. ஆத்திரா

## ஆதிபிரமர்

கங்குல் தாய் கருநிறத் துகிலெடுத்து, அதைத் தொட்டிலாக்கி உலக மக்களைப் படுக்க வைத்துத் தாலாட்டுப் பாடிக் கொண்டிருந்த வேளை அது. பலருக்கு உறக்கம் பிடித்தது; சிலர் கொட்டாவிகளை எண்ணிக் கணக்கிட்டுப் பிரித்துக் கொண்டிருந்தனர்; எஞ்சியவர்களுக்குத் தூக்கம் வேம்பானது. இந்தக் கும்பலில்தான் அவளும் சேர்த்தி

அவள் என்றால் மட்டும் போதுமா?—போதாது. அவளுக்கும் பெயர் ஒன்று உண்டு. பெயர் சூட்டும் நிகழ்ச்சி ஒரு விழாவாக அமையாமற் போனாலும், அந்தப் பெயரை அவளுக்கு இட்டு அழைப்பதற்கு அவளுடைய பெற்றோர்கள் எவ்வளவோ காலம் காத்துத் தவங்கிடந்தார்கள். 'பொறக்கப் போறது ஆண் குஞ்சாக இருக்கோணும். ஆதிபிரமர் சாமியே!' என்ற அவர்களது 'வேண்டுதலை' பலிக்கவில்லை; ஆனால் பிறந்த பெண் குழந்தை 'மூக்கும் முழியுமாக' இந்த மண்ணில் முதற் குரல் கொடுக்கத் தவற வில்லை.

அவள் பெயர் என்ன தெரியுமா? பொன்னரசி; பெயரைச் சொல்லும் உதடுகளில் கற்கண்டுச் சுவை வழிவதைப் போலவே, அவளைப் பார்க்கும் கண்கள்

அன்புப் போதையும் இன்பப் போதமும் பெற்றுத் திகழும். பொன்னுக்கு அரசியாகவும், பெண்ணுக்கு அரசியாகவும் விளங்கின மகளுக்கு நடை வண்டி கொடுத்தவர்கள் அவளை ஈன்று வளர்த்து வந்தவர் களேதாம். என்றாலும், ஓர் அதிசயம் என்னவென் றால், பருவம் தாவணியையும், காலம் பருவத்தையும் பரிசளித்தன, அவள் 'சமைந்தாள்'. திறந்தவெளி அரங்கமாக இயங்கி வந்த ஊரும் உலகமும் அன்று தொட்டு அவள் வரை சுருங்கிக் கொள்ள பழகிக் கொண்டன. அவள் மனம் புழுங்கினாள். விரக்தி யின் நெட்டுயிர்ப்பும், வேதனையின் குமைச்சலும் அவளது பருவத் துடிப்பைக் கிண்டிவிட்டு வேடிக்கை பார்க்கும் தருணத்தில், ஆசை முகமொன்றை ஆர்வம் பொங்க மனத்திரையில் வரைந்து ஓவிய மாக்கி அனுபவித்து ஆறுதல் பெற்றாள் அவள் மச்சான் இந்தக் கணக்குக்கு பர்மாவிலே மாந்தளை யிலேருந்து திரும்பினதும், எங்கழுத்திலே மஞ்சக் கயிறு கட்டிடுவாங்களாமே!' என்று தனக்குத் தானே வினா வடிவில் விடை அமைத்துப் பூரித்துப் போயிற்று பெண் உள்ளம். கனவின் வடிவிலே காதல் வளர்ந்தது; காதலின் உருக்கொண்டு கனவு நீண் டது. காதலும் கனவும் ஒட்டாத இரு துருவங்கள் என்கின்றார்களே? ஐயை அறிவாளோ?

## ஆஞ்சநேயன்

முன்னைப் பழங்கதை ஆயிற்றே இத்தனையும்!

பொன்னரசி விம்மினாள். ஏன்? வாழ்க்கைப் பாதையில் இருபத்தெட்டு மைல் கற்களைக் கடந்து வந்தவளுக்குத் துயரம் ஒரு கேடா, என்ன?

பொன்னரசியின் செவிப்புலன், எங்கிருந்தோ மிதந்து வந்து மோதிய அழுகைக் குரலை நுகர்ந்தது.

அவளும் நெஞ்சு வெடிக்க விம்மலானாள். துயரம் மண்டிய ஓலத்தினின்றும் பிரிந்து தெரிந்த அந்தக் குழந்தையின் கதறல் அவளுடைய நெஞ்சின் அடித் தளத்தில் சம்மட்டியாக இயங்கியது. பொன்னரசி துடித்தாள்! துவண்டாள்; உயிர்ப்பு விடை பெற்று விடும்போல ஓர் உணர்வு கிளர்ந்தெழுந்தது. வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள். உடுத் திருந்த முன்றானைக்குள் அவளது மேனி ஒளிந்தது.

திருக்கோகரணத்தின் தலைவாயிலில் இருந்த பழைய அரமனை அப்போதைய மணி பனிரெண்டு என்று சொன்னது. பஸ் நிலையத்தில் இருந்தவள் கேட்டாள். அவலம் நிரம்பிய ஓலத்தில் சுருதி கம்மிப் பட்டிருந்தது. பொன்னரசி மெல்ல எழுந்து நடை பயின்றாள். ஆஞ்சநேயர் கோயிலைத் தாண்டிய இடத்தில் காணப்பட்டது இடிந்த சுவர்ப்பகுதி. அங்கிருந்துதான் அழுகை 'சிரித்து'க் கொண்டிருந்த தென்பதை உணர்ந்து கொண்டாள் அவள். பிரஹ தாம்பாள் தெய்வத்தை எண்ணித்தொழுது அண்டி னாள்; மண்டியிட்டுத் தரையில் உட்கார்ந்தாள். 'பச்சை மண்' அது. அடுத்துப் படுத்திருந்த பெண் தான் குழவியின் அன்னையாக இருக்க வேண்டும். மூடுதுணி எதுவுமில்லாமல் திறந்துகிடந்த 'தாய்மை' யின் இருப்பிடத்திலே மதலை செப்புவாய் பற்றிச் சப்பிச்சப்பிப் பார்த்தது. பாலமுதம் சுரந்தால் தானே...? ஆகவேதான், தொண்டைக் குழியில் நோவு எடுக்கும் பரியந்தம் அப்படிக் கத்தித் தீர்த் தது அது—அந்தப் பச்சைப் பாலகன். பெற்றவளுக் குக் குழந்தையை ஈன்ற கடமையுடன் செயல் முடிந்து விட்டது போலும்! அவள் தன் போக்கிலே ஆடாமல் அசையாமல் கண்வளர்ந்து கொண்டிருந்தாள்.

பொன்னரசி ஊர் பேர் அறியாத அந்த ஸ்திரீ மீது ஆத்திரப்பட்டாள். தொட்டு எழுப்பினாள்; தட்டிக் கூப்பிட்டாள். ஊஹூம் அவள் ஏன் அக்கறை கொள்ளப் போகிறாள்?

பொன்னரசி குனிந்து தன்னைத் தானே ஒருமுறை நோக்கிக் கொண்டாள். நெஞ்சகம் விம்மித் தணிந்தது. ஆனால் விழிப்புனல் மட்டுமே வடிந்தது! 'ம்......என்னாலே என்ன செய்ய முடியும்?'

கைந்நொடிப் பொழுது கழன்று வீழ்ந்தது.

ஆதுரம் துள்ள பொன்னரசி குழந்தையை அணுகினாள்; குனிந்து அதை வாரியெடுத்து அணைத்துக் கொள்ள முனைந்த நேரத்தில், இருதயத்தில் இடியொன்று வீழக்கண்டாள்: இடியோசை காதுகளைச் செவிடுபடச் செய்தது. அணைக்கத் துடித்த நெஞ்சு நஞ்சம் உண்டாற் போலப் பதைத்துப்பின் தங்கிற்று. "ஆ!... ஐயோ!" என்று கூக்குரல் பரப்பினாள் பொன்னரசி. உதிரம் கொட்டியது, கண் முனைகள் இரண்டிலுமிருந்து. அடிவயிற்றில் அவளது மெலிந்த விரல்கள் இழைந்தன. மறுகணம் அவை சூடுபட்டுச் சூம்பின. அமிர்தம் பிறக்கும் பகுதிகளில் தீ அழல் எரிந்தது. நெற்றிப் பொட்டுத் தெறித்தது. ஐயையோ!' என்று கூப்பாடு போட்டவாறு பொன்னரசி மண்ணில் சாய்ந்தாள், அடி துண்டு பட்ட முருங்கையைப் போன்று.

அப்போது, 'ஆத்தா! ஆத்தா!' என்ற அழைப்புக் கேட்கத் தொடங்கியது.

அவள் விழிகளை விலக்கினாள் ஒருகால் 'ஆத்தா' என்ற சொற்கள் அவளுடைய உந்திக் கமலத்தைத் தொட்டனவோ? அவள் திகைப்படைந்தாள்.

குஞ்சுக் குழந்தை பிஞ்சுக் கைகளையும், பஞ்சுப் பாதங்களையும் பயன்படுத்தி முன்னேறி அந்தப் பஞ்சையிடம் பால் சேகரம்செய்ய எத்தனித்துக் கொண்டிருந்தது. பேசாதபொற் சித்திரத்தை நெஞ்சுடன் நெஞ்சு இறுத்தி இறுக அணைத்த வண்ணம் சத்தைக் கூட்டி எழுந்தாள் பொன்னரசி. எடுத்த முயற்சியில் தோல்வி கண்ட சிசு வீறிட்டு அலறியது. தாய்க்காரி அப்போது மட்டும் எப்படியோ விழித்து விட்டாள்; சீ! தூத்தேறி!' என்று ஏசிய பின் குழந்தையை அவளிடமிருந்து பிடுங்கிக் கொண்டாள்; காறித்துப்பினாள்; எச்சிலைத் துப்பியவள் மீதும் அந்த எச்சில்துளியொன்று பட்டது. கோடை மழைக்கு கட்டியங் கூறியது கொடி மின்னல்.

## தூர்க்கை

புதுக்கோட்டை பஸ் நிலையம் உதய சூரியனின் கருணைப் பார்வைக்கு ஆளானது. வாகன ஊர்திகளும் பிரயாணிகளும் கலந்த ஓர் அவசர-அவசியச் சூழலிலே, காலமெனும் திரி இயற்கையென்னும் விளக்கிலே நின்று நிதானித்து எரிந்து கொண்டிருந்தது. முத்திநெறி அறிந்த தவமுனியின் இதயம் போல் நிர்மலமாகக் காட்சி கொடுத்து விண். துறவு மேற்கொள்ள நெஞ்சுரம் பூண்டவன், அதே மனநிலையில் செயற்பட இயலாமல் சலனமுற்றுத் தவிப்பதைப் போன்று இருந்தது மண்

விடிவெள்ளி விண்ணைத் தொட்டதும், தூற்றல் மண்ணைத் தொட்டது பொன்னரசி, சீர்குலைந்து பழுதுபட்ட நடுத்தெரு தூர்க்கையின் சிலை நிலையில் இருந்தாள். நனைந்த மாதிரியே இழிந்த துணி உலர்ந்து விட்டது. அவளுடைய தளர்ந்த மனத்தில்

அக்கணம் செந்நிறம் காட்டிய கேள்வி இது ஒன்று மட்டுந்தான்: நான் எத்தனையோ வாட்டி செத்து மடிஞ்சுப்பிடத் துணிஞ்சப் போவெல்லாம். என்னோட கனா பலிக்குமிங்கிற ஆசை மனசிலே ஓடினதாலே தானே நான் உசிர் மேலேயும் ஆசை வச்சுக்கிட ஆரம்பிச்சேன்! ஆனா, இனிமே என் நெனைப்பு எங்கே பலிக்கப் போவுது?...ஆமா, மெய்தான்! இனி நானும் மக்கி மடிஞ்சு மண்ணாகிப் போனாப் போலே தான்!...

ஆளுடைய அடிகளாரின் கவியின் ஒரு பகுதியை சாது ஒருவர் அடித் தொண்டையில் ஏற்றிப் பாடிக் கொண்டிருந்தார்.

'தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி!
வழுவு இலா ஆனந்த வாரி போற்றி!
அழிவதும் ஆவதும் கடந்தாய் போற்றி!
முழுவதும் துறந்த முதல்வா போற்றி!

நாணயம் புழங்கத் தொடங்கிற்று; காவி வண்ணம் கொண்டிருந்தவர் திசை திரும்பினார்.

குலதெய்வத்தின் நினைவு பொன்னரசிக்கு ஏற்பட்டது. முன்னடியான், சன்னாசி சங்கிலிக் கறுப்பன் துணையுடன் நின்ற ஆதிபிரமரின் பயம் செறிந்த பாவம் தோன்றியது.

கண்களிலிருந்து உதிரம் கொட்டியது.

புழுதி மண்ணில் ரத்தத் துளிகள் சிந்தித் தெறித்தன.

பொன்னரசி தலை குனிந்த போழ்தில், உருவான புழுதி மண்ணில் பச்சைக் கொடியின் சித்திரம் ஒன்று

உருக்காட்டி அமைந்திருப்பதைக் கண்ட போது, சப்த நாடிகளும் அடங்கிப் போனாற் போலிருந்தது.

'மகனே' என்னை மன்னிச்சிட மாட்டியா?'

நூறடி ஆழமும் நூற்றுக் கணக்கான சுழிகளும் இணைந்த அந்தப் புதுக்குளம் அவள் வரவுக்குக் காத்திருந்தது!

## ஐயை

இனி :

கதையின் கரு:

பொன்னரசி அப்பொழுது பதினெட்டு வயது கொண்ட வாலைக் குமரி, கன்னி கழிந்த கட்டம். கட்டழகு சொக்க நின்றாள். ஆப்பிள் பழத் தோல் அவளது உடலில் போர்த்தப் பெற்றிருந்தது. சுண்டினால் ரத்தம் தெறிக்கும். சிலட்டூர் 'இளசு'கள் அவளுக்காக 'மோப்பம்' பிடித்தன. ஆனால் அவளோ தன் அன்பு அத்தானுக்காகத் தவம் கிடந்தாள். மலைமகளின் தவம் பலித்து, பிறைசூடி கிடைத்த வரலாற்றை அவள் அறிந்திருந்தாள். ஆகவே அது போன்று தன் இதயக் கனவும் ஈடேறும் என்பதாக எண்ணினாள்; எண்ணி மகிழ்ந்தாள். அவளுக்குரிய 'முறை அத்தானை' ஏந்தி வரும் கப்பலுக்காக அல்லும் பகலும் விழி நோகக் காத்திருந்த நேரத்தில், எதிர்பாராத வெடியொன்றை வீசிச் சென்றான் செந்நிறப் பில்லைச் சேவகன். அழுதாள்; அழுதாள்; அழுது கொண்டேயிருந்தாள்; மாண்ட அத்தான் மீள மாட்டான் என்று தெரிந்தும் கூடப் புலம்பினாள். தந்தை அனுப்பிய இலங்கைச் சீமைப்பணம்

அவளுடைய நெஞ்சுப் புண்ணை ஆற்றவில்லை; வயதான அன்னையின் அன்பு அவளது ஆறாத் துயரத்தினைப் போக்கடிக்கும் அருமருந்தாக அமையக் காணோம். நீலக் கடலும் நீள் விழிகளும் ஒரே இனம்!

## காட்டேரி

அந்தி சந்திப் பொழுது. அப்படிப்பட்ட நடுவேளைப் பகுதியிலே ஒருநாள், தண்ணீர் கொணரக் குளத்திற்குச் சென்றாள் பொன்னரசி. வயல் வரப்பைப் பார்த்து திரும்பிக் கொண்டிருந்தான் கங்காணி மகன் கந்தசாமி. அந்தம் நிறைந்த எழில் வதனம்; அரும்பு மீசை; குறும்புப் பார்வை: இரும்பு உடல். அக்கரைச் சீமை சீராட்டி வளர்த்த செல்வச் சீமானின் புதல்வனல்லவா? சின்ன வயசில் 'கட்டுப் பாண்டி' ஆடிய காலத்தே அவன் அவளைக் கண்டது உண்டு. இனம் கண்டு கொண்டான்; ஆனால் அவள் பார்வை தட்டுப்பட்டதும், அவனுக்கு இனம் விளங்க மாட்டாத ஒரு கிளர்ச்சி; நிறைவு.

புன்னகையும் புது நிலவும் அவர்கள் இருவரையும் அந்தரங்கமாகச் சந்திக்க உதவின. எட்டாப்பழமாக இறக்காத தேனாக இருந்து வந்த பொன்னரசியின் உருவம் கந்தசாமியின் புகைப்படக் கருவிக்குத் தப்பவில்லை. ஊர்க்கோடியில் சந்தித்து வந்த அவன் ஒரு நாள் மதியத்தில் அவளுடைய வீடு தேடி வந்து சேர்ந்தான்.

"பொன்னரசியை நான் கட்டிக்கிடலாம்னு எண்ணியிருக்கேன். அப்பாவுக்கு கண்டிக்கு தபால் போட்டிருக்கேன். தாக்கல் வந்த கையோடு கல்யாணத்துக்கு தேதி குறிச்சிட வேண்டியதுதான்!"

செய்தியை வெளியிட்டான். பொன்னரசியைப் பெற்றவளிடம்.

தன் புருஷனுக்குக் கடிதம் எழுதி இதுபற்றி முடிவு சொல்வதாகத் தெரிவித்தாள் பொன்னரசியின் தாய்.

நாலிலே இரண்டிலே வந்துபோனான் கந்தசாமி, அந்த எழிலரசியைக் காண. ஒரு நாள் உச்சிப் பொழுது. பொன்னரசி மட்டுமே வீட்டில் குந்தியிருந்தாள். அவள் அன்னை சந்தைக்குச் சென்றிருக்கும் விவரமும் கிடைத்தது. குளித்து முழுகி வந்திருந்த பொன்னரசி ஈரப் புடவையைக் களைந்து மாற்றுடை உடுத்துக் கொண்டு கையில் ரவிக்கையுடன் உள் திண்ணையில் அமர்ந்த போது, கந்தசாமியின் புகைப்படத்தின் நினைவு எழவே, அதை எடுத்து வந்து அழகு பார்த்தவாறு இருந்தாள். நிழற்படத்துக்குரியவனே நேரில் வந்ததும், அவளுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. வந்தவன் அவளுடைய படத்தைக் காட்டினான். ஆர்வம் துள்ள பொன்னரசி தன் உருவத்தைப் பார்த்துக் கொண்டிருந்த போது, கந்தசாமி இளமை துள்ளும் பொன்னரசியின் அழகைப் பருகிக் கொண்டிருந்தான். பருவமலரின் நெடி மண்டைக்கு ஏறியது. அவளுடைய கண்களுடன் அவனது விழிகள் அந்தரங்கம் பேசின. அவள் பிணங்கினாள். "நாளைக்கு உன் கழுத்திலே தாலி கட்டப் போறவன் தானே?... சரின்னு சொல்லு, பொன்னரசி!" என்று கெஞ்சினான். ஒப்பவில்லை. கடைசியில், பலாத்காரத்தின் பிடியில் 'பெண்மை' கருத்தழிந்தது. காலத்தின் வளர்ச்சியோடு, அவளுள் கரு வளர்ந்தது. செய்தி அறிந்த அவள், செய்தியை உரியவனிடம் சேர்ப்பிக்க விரைந்த போது, ஏச்சும் பேச்சும் தான் கிடைத்தன. "நீ துப்புக் கெட்ட கள்ளி! உன்னை

நானா கண்ணாலம் பண்ணிக்குவேன்?...முடியாது!'' என்று தீர்ப்பு வழங்கினான் கந்தசாமி. அடுத்த நாள் இரவிலே அவனை மயக்கிப் பொய் நாடகம் ஆடி, பழி தீர்த்துக் கொள்ள காட்டேரியாக மாறி வெறி கொண்டு சென்ற போது, அவன் கடல் கடந்த தகவல் கிடைத்தது.

'நடத்தை கெட்டவள்னு அவப்பேர் எடுத்த பின்னாலே இனிமே நான் இந்த ஊர் நாட்டிலே தங்கவே மாட்டேன்!' என்று முடிவெடுத்து, பிறந்த வீடு துறந்து, இரவோடு இரவாக கால் போன திசைக்குச் சென்றாள் பொன்னரசி. மறுதினம் பிற்பகல் பொழுதிற்கு அவள் புதுக்கோட்டையைத் தரிசித்தாள்: அணிந்திருந்த நகைகள் தரிசனம் தந்தன: சுமந்திருந்த கரு அவளைச் சித்திரவதை செய்தது. சீ! சனியன்!' என்று ஆத்திரப்பட்டாள், உருத்தெரியாக் கருமீது. அண்டிய இடம் அடைக்கலம் தந்தது. ஏழைக் கிழவி ஒருத்தி நிழல் தந்தாள். பொன்னும் மணியும் படி அளந்தன. ஓரிரவு கருவைக் கரைக்க விஷப் பச்சிலையைப் பொன்னரசி தயாரித்த போது, அவ் விஷயம் அம்பலமானது. கிழவி தடுத்து விட்டாள். ''நீ யோசிக்காம நடந்ததுக்கு அது என்னா செய்யும், பாவம்!'' என்றாள்.

பொன்னரசிக்குப் பேறு காலம் நெருங்கியபோது ஆதரவு கொடுத்து வந்த கிழவியும் நமனுலகு ஏகினாள்.

## காளி

பொன்னரசியின் வாழ்க்கைப் பாதையில், மீட்டும் ஒரு திருப்பம் ஏற்பட்டது. கிழவியிடம் 'நடந்த கதை'யை இதயம் திறந்து சொன்னது போல

வேறொரு பங்களாவில் கூறிய சமயம், அவள் அடித்துத் துரத்தப் பட்டாள். காலங்கடந்த இரவு வேளையிலே நகர்ப்பகுதியைக் கடந்த இடத்தில் இருந்த சத்திரத்தில் ஒண்டினாள். வலி எடுத்தது. புதுக் கோட்டை அம்மன் காசுகூட அவளிடம் ஒட்டியிருக்கவில்லை. மெல்ல எழுந்தாள். ஆந்தையின் குரலை அடையாளமாக்கி கைமுடிச்சுடன் நடந்தாள்; நடக்க முடியாமல் நடந்தாள். காடு தென்பட்டது. சுருண்டு விழுந்தாள். கும்மிருட்டு. அவள் திரும்பக் கண் மலர்ந்தாள். 'குவா' என்னும் மொழி கேட்டது. எஞ்சியிருந்த தெம்பைக் கூட்டினாள், 'பச்சை மண்'ணைக் கையிலெடுத்தாள். ஆண் சிசு! 'சனியன்!' என்று வாய் விட்டுக் கூறிய வண்ணம் அதன் கழுத்தை நெறிக்கப் பிரயத்தனம் செய்த போது, யாரோ நடந்து வரும் அரவம் கேட்டது. குழந்தையைத் தரையில் போட்டாள். ஒளிகாட்டத் தொடங்கிய பின் நிலவில் அவள் நோக்கு மண்ணுக்கு ஓடியது; 'பச்சை ரத்தத்'தின் நெற்றியிலிருந்து குருதி வழிந்து, பூமியைச் செந்நிறப் படுத்தியிருந்த பயங்கரக் காட்சி தான் அவள் பார்வைக்கு இலக்கானது. ரத்த பூமி மீது கிடந்த பச்சை பாலகனை ஏறெடுத்துப் பார்க்க முற்பட்டாள்: வழிப்போக்கர்களின் காலடிச் சத்தம் அருகில் கேட்டது. பொன்னரசி சற்றுத் தொலைவில் இருந்த புதர்ப் பக்கமாக மறைந்து, தன் அவல நிலையைச் செம்மைப் படுத்திக்கொண்டு, வந்தவர்கள் போனதும், மறுபடியும் பழைய செம்மண் பூமிக்குத் தள்ளாடித் தள்ளாடி நடந்து சென்றாள். குழந்தை காட்சி தரவில்லை. அதுவரை சுமையாகத் தோன்றிய அந்த 'இன்பச் சுமை'யின் மகிமை இப்போதுதான் அவளுக்குப் புரிந்தது. "கங்காணி மகன் காட்டின ஆசையிலே மோசம் போன நான் கடைசியிலே என்னோட செல்வத்தைப் பறிகொடுத்துப்பிட்டேனே?"

என்று புலம்பினாள். குழந்தை மறித்திருக்க நியாய மில்லை என்றவரைக்கும் அவளுக்கு நம்பிக்கை பிறந் தது. வழிப்போக்கர்கள் குழந்தையின் அழுகுரல் கேட்டு எடுத்துச் சென்றிருப்பார்கள் எனவும் திட்ட மிட்டாள். உடனேயே வெறி பிடித்ததுபோல அந்தப் பாதையில் தொடர்ந்து நடக்கலானாள், காளிபோல. தவறி விழுந்த புகைப்படங்கள் அவளுடைய பார்வை யில் பட்டால்தானே? பொழுது விடிந்தது தான் கண்ட பலன். குழந்தை கிட்டவில்லை!

அண்டைக் கிராமத்தில் மூர்ச்சை போட்டுச் சாய்ந்துவிட்ட பொன்னரசியை நிலை உணர்ந்த நல்லவர்கள் காத்துப் பேணினார்கள். ''ஏண்டா ராஜா என் வயித்திலே வந்து ஒண்டினே?...ஐயோ! நான் பேய்!'' என்று தனக்குத் தானே பேசித் தலை மயிரைப் பிய்த்துக் கொண்டு நாட்கள் சிலவற்றை ஓட்டினாள் அவள். புகல் கிடைத்த இடத்தில் 'கழுகு' ஒன்று வட்டமிடுவதை யூகித்த அவள் தன் வசமிருந்த பசி கொண்ட கத்தியின் துணையுடன் அங்கிருந்து மீண்டும் புதுக்கோட்டைக்கு வந்தாள். ஆஞ்சநேயர் சந்நிதியில் மண்டியிட்டு அழுது தன் தவற்றைப் பொறுத்தருளுமாறு கதறினாள். 'என் குழந்தை உசிரோட இருக்குமா? என் கைக்கு திரும்பவும் கிடைக்குமா?' என்று ஆஞ்சநேயரிடம் மானசீக மாகக் கேள்வி விடுத்தாள். நல்ல பதிலே கிடைத்தது. அப்பொழுது அவளுக்குத் தன் உயிர் மீது ஒரு கவலை யும் ஓர் அக்கறையும் ஏற்படலாயின. 'ம்' என்னோட மகன் எனக்குக் கிடைச்சதும், என்னை ஏமாத்தின அந்தப் பழிகாரனை பழிவாங்கிப் பிடுறேன்!...' என்று சூளுரைத்துக் கொண்டாள்!

# அங்காளம்மை

பத்து ஆண்டுகள் கழிந்து போயின. நிகழ் காலத்துக்கும் இறந்த காலத்துக்கும் பாலம் அமைத்த அந்தப் பெரும் பொழுது எப்படித்தான் ஓடி நழுவியதோ? தன் எழில்—மாற்றுக் குறைந்த கொஞ்சும் அழகு மறுமுறையும் கறைபடலாகாதே என்ற நினைவில் பசியும் பட்டினியுமாகக் கிடந்து அவ்வழகைச் சிதைத்துக் கொண்ட அந்த விந்தைச் சம்பவம் அவளை மறக்க முடியாது. 'பத்து மாசம் சுமந்த பாலகன் உங்கிட்டே இருந்தா, இந்நேரம் உன்னோட சபதமும் பலிச்சிருக்கும்: உனக்கும் ஆறுதல் சொல்லியிருப்பான்! தாயாக இருக்க வேண்டிய நீ பேயாகிப் போனியே?...' என்று அவளுடைய மனச்சான்று ஏசித்திட்டி, ஆறாத புண்கள் ஆயிரமாயிரத்தை நெஞ்சத்திலும் பெற்ற மணி வயிற்றிலும் நிரப்பி விட்ட துயர அனுபவங்களை அவளால் மறத்தல் சாத்தியமன்று.

காட்டுப் புதிரிடுக்கிலே புழுதி மண் மீது ரத்தக் கறையும் தானுமாகக் கிடந்த அக்குழவியை இமைப் போதுதான் அவள் கண்டிருக்க முடியும். உருப் புரியாத தோற்றமும், உருப் புரிந்த ரத்த வெள்ளமும் அவளை ஒவ்வொரு கணமும் சாகடித்துக் கொண்டிருந்தன. அத்தகைய சித்திரவதையிலும் அவளுக்கு ஓர் ஆனந்தம் ஏற்படத்தான் செய்தது. 'ஆமா, நான் இப்பிடிச் சாகாமல் செத்துக் கிட்டிருப்பதுதான் நல்லது. நான் செஞ்ச மன்னிக்க ஏலாத குத்தத்துக்கு இதுதான் தகுந்த தண்டனை!...'

பொழுது ஏறிக்கொண்டிருந்தது.

மூச்சுப் பிடித்தது; எப்படியோ எழுந்தாள் பொன்னரசி. கந்தலும் கிழிசலும் கொண்ட துணி மூட்டை அவள் கக்கத்தில் இருந்தது. கத்திமுனை தோலில் உரசியது. அவளது வைரியான கந்தசாமியின் பட்டமும் அவளுடைய படமும் ஞாபகத்தில் ஓடின; அவை என்றோ எப்படியோ அவளிடமிருந்து பிரிந்து விட்டனவே...? நடந்தாள்.

கிழராஜ வீதியிலிருந்து மடங்கி, சென்ற வழி வழியே மறுகி நடந்தாள் அவள். புதுக்குளம் வந்தது. படி ஏறிச் செல்ல அடிவைத்த போது, தொங்கல் வீட்டில் கல்யாணம் நடந்ததை அறிந்து அங்கு சென்றாள்; வெள்ளை பூசிய சுவர்களும் வாழைத்தார் கட்டின காவணமும் அவளைக் கவர்ந்தன. மாப்பிள்ளையைப் பார்த்தாள். இளம் வயசுக்காரன், அவளுக்கு வேறு நினைவு பளிச்சிட்டது. 'என் கண்ணுக்கும் இன்னம் ஆறேழு வருஷம் போனா இது போல கண்ணாலம் ஆகவேணுமே!''

அன்னதானம் வழங்கப்பட்டது. ஏழைகளோடு வரிசையாக அவளும் நின்றாள். பிறகு என்ன தோன்றியதோ, அங்கிருந்து நகர்ந்து விட்டாள். 'நான் சாப்பிட்டு, உசிரோடிருந்து யாருக்கு என்ன ஆவப்போவுது?... என் புள்ளையை இத்தினி வருசத்துக்கு அப்பாலேயா இனிக் கண்ணாலே காணப் போறேன்?... ஊரிலே ராசாங்கமாக் குடியும் குடித்தனமுமா இருக்க வேண்டிய நான் இப்பிடி நாயா அலையணும்னு எந்தலையிலே எழுதியிருக்கு. அங்காளம்மா! என்னை உங்கிட்டே அழைச்சுக்கிடு. எம்மவன் எங்கிருந்தாலும் அவனை நிறைஞ்ச ஆயுசுக்குக் காப்பாத்து.''

மஞ்சி விரட்டு நடந்து முடிந்த இடம் தென்பட்டது. நடந்தாள்.

புதுக்குளத்துத் தென்கரை ஓரத்தில் வந்து நின்று வேர்வையை வழித்தெடுத்தாள் பொன்னரசி; சிறு குடல் பெருங்குடலைக் கவ்வியது; தலை சுற்றியது. பயம் உள்ளடங்கிய அந்தக் குளத்தையே வைத்த கண் வாங்காமல் பார்த்தாள். 'ம்!...இன்னிக்கு நடுச் சாமத்தோட எல்லாம் முடிஞ்சிடும்!'

பிறந்த மண்ணுக்கு ஓடினாள் அவள்-மனோரதப் பயணம். பெற்றவர்கள் மறைந்து போனார்களாம்.... கந்தசாமி குடியும் குடித்தனமுமாக ஊரில் இருக்கிறானாம்! பட்டணத்தில் நாட்டு வைத்தியர் நல்ல தம்பியை எதிர்பாராமல் சந்தித்தபோது கிடைத்த விவரங்கள் இவை.

தேம்பிய நெஞ்சம் அவளுடைய 'விதி'யை நோக்கிக் கேட்டது: 'இத்தனை காலமாக எத்தனையோ ஊரெல்லாம் சுத்தி அலுத்தேனே! எம் மகனை ஒருவாட்டியாச்சும் காட்டப்பிடாதா? ஒரு வாட்டி எங்கண்ணைக் கண்டுக்கிட்டா, நான் அப்பவே நெறைஞ்ச மனசோட செத்திடுவேனே?...இந்த ஆசையாச்சும் பலிக்குமான்னுத் தான் அங்கங்கே வேலை வெட்டி செஞ்சு, கிடைச்ச சோத்துப் பறுக்கையைச் சாப்பிட்டு உசிரைக் காப்பாத்தினேன். ஆனா, என் ஆசை அவிஞ்சிருச்சு; இனி எங்கே என் கண்மணியை காணப்போறேன்? ஐயோ, நான் மாபாவி...!

குளத்துக்குக் கீழ் இறக்கத்தில் ஓடிய சாலையில் நிழலடர்ந்த மரங்கள் தென்பட்டன. சறுக்குப்படி வழியாக அவள் இறங்கினாள். கால் சறுக்கியது. முதல் படியில் விழுந்த அவள் மறு படிக்குப் புரண்டாள். பிறகு அப்படியே உருண்டு விழுந்து விட்டாள், பாவம்!

# முத்துமாரி

"அம்மா!... அம்மா...!"

பொன்னரசி விழிகளை விரித்தாள். ஆலமரத் தடியில் யாரோ சிறுவனின் மடியில் தலைசாய்ந்து கிடப்பதை உணர்ந்தாள். அவசரப்பட்டு எழ முயன்றாள். நெற்றி மேட்டிலிருந்து வேதனை குரல் தந்தது. எழுந்தமர்ந்தாலும் முதலில் தென்பட்டவை: பக்கத்தில் சிதறிக் கிடந்த ரத்தத் துளிகள்: துடிக்கும் இதயத்தோடு அந்தப் பையனை ஏறிட்டு நோக்கினாள். வழிந்த கண்ணீருடன் அவன். "அம்மா' நீங்க பிழைச்சிட்டீங்க .. இனிப் பயமில்லை. இந்தாங்க... ஒரு மடக்கு காப்பித்தண்ணி குடியுங்க," என்று சொல்லிக் காப்பிக் குவளையை அவள் கரம் தொட்டு நீட்டினான்.

பொன்னரசிக்கு மின் அதிர்ச்சி ஏற்பட்டது. அவளுடைய பெற்ற வயிறு என்றுமே அடைந்திராத அமைதியைப் பெற்றது. மார்பகத்தில் பால் வெள்ளம் பாயத் துடிப்பது போலவும் உணரலானாள். இமை மூடாமல் அவனையே பார்த்தாள், பத்து அல்லது பதினொரு வயசான அச்சிறுவன் 'ராஜா' மாதிரி இருந்தான். செம்மறியாட்டுக் கும்பல் காவிக் கோலம் திகழ அவன் பின்னே அணி வகுத்திருந்தது. அவனது நெற்றிப் பக்கம் கூர்ந்து நோக்கினாள். அந்த இடத்தில் பெரிய தழும்பு காணப்பட்டது 'ஆதிபிரமரே, இவனேதான் எம்மகனா—?"

தான் மயங்கிச் சுருண்டு புரண்ட நிகழ்ச்சி அப்போதுதான் பொன்னரசிக்கு விளங்கியது. அவள் அவன் கதையைக் கேட்டாள்.

"அம்மா, நான் அனாதை. என்னைப் பெத்த ஆத்தா பிறந்த மேனியா என்னை காட்டிலே அனாதையா வீசிப் போட்டுப் பிட்டுப் போயிட்டாங்களாம்; வழியிலே கண்டவங்க என்னை வளர்த்து ஆளாக்கினாங்க. யாரோ ஒருத்தன் ஆசைக்காட்டி எங்க அம்மாவை ஏமாத்திப்புட்டானாம்; அதினாலே தான் என் தாயார் என்னை அனாதையாக்கிப் புட்டாங்க போலே!... என்னைப் பெத்தவளை - என் தாயை ஒரு தடையாச்சும் கண்டாத்தான் என் ஆவி வேகும்... ஆனா, ஈவிரக்கம் இல்லாம என்னை வீசிப்புட்டுப் போன ஆத்தாவுக்கு நல்ல தண்டனை கொடுக்கவும் கொடுப்பேன்!... என்னைப் பெத்தெடுத்த அம்மாவை ஏமாத்தின அந்த மனுசனை... ம் அப்பனை எப்போ கண்டாலும் அப்பவே கண்டதுண்டமாச் சீவிப் போடுவேன், அவன் படம் எங்கிட்டேதான் இருக்கு; எங்க அம்மா படங்கூட வச்சிருக்கேன்; என்னை வளர்த்தவங்க கொடுத்திருக்காங்க!..."

பையனின் கண் இமைகள் நனைந்து ஈரமாயின.

அவனுக்குத் தெரியாமல் பொன்னரசி நேத்திரங்களைத் துடைத்துக் கொண்டாள். சிறுவனுக்குப் பக்கமாகக் கிடந்த முடிச்சிலிருந்து தலை நீட்டிய புகைப்படங்களை எடுத்தாள். ஆம்; ஒன்று அவள் படம்; இன்னொன்று கந்தசாமியின் நிழலுரு. மறுபடியும் அவற்றை முடிச்சுக்குள் திணித்தாள்.

'கடவுளே, நீ ரொம்ப நல்லசாமி. என் ஆசை நிறைவேறிடுச்சு... இம்பிட்டு நாளா நான் பட்ட பாடு வீண் போகலை. என் வைரியை பழி வாங்கிறதுக்கு என் மகன் கிடைச்சுப்புட்டான்!...,

"தம்பி, உன்னோட ஆத்தாவை நேரிலே கண்டா அவ பேரிலே ஒனக்கு ஆத்திரந்தான் வருமா?"

"ஆமா; என் பேரிலே ரவை கூட ஈவிரக்க மில்லாம என்னை விட்டுப் போட்டுப் போன குற்றத் துக்கு அவங்க மேலே ஆத்திரம்தான் வரும்!"

விக்கலுக்கும் விம்மலுக்கும் இடையில் பொன்ன ரசி தத்தளித்துக் கொண்டிருந்தாள்; மறுவினாடி. பித்துப் பிடித்த மாதிரி கீழே கிடந்த பாறாங்கல்லில் மோதிக்கொண்டாள், ரத்தம் பீறிட்டுக் கொண்டி ருந்தது.

சிறுவன் அவளுடைய தோளைப் பற்றித் தடுத் தான்.

அதே சமயம் வேறொரு புதுக்குரல் கேட்டது "ஏம்மா, ஏம்மா!" என்று ஓடி வந்தான் மீசைக் காரன் ஒருவன். அருகில் ரேக்ளா வண்டி நின்றது.

பொன்னரசி தலை நிமிர்ந்தாள்; அந்த மனி தனைப் பார்த்தாள். விழுங்கி விடுபவள் போல முறைத்துப் பார்த்தாள். புகை நெளிந்தது. முடிச்சில் ஒளிந்திருந்த கத்தி அவள் கைக்கு வந்தது.

செம்மறியாடுகளை மேய்க்கும் பையன் ஒன்றும் புரியாமல் பரக்கப் பரக்க விழித்தான்.

"தம்பி, இந்த ஆளுதான் உன் அப்பன்!" என் றாள் அவள், வெறியுடன்.

"ஆ! அப்பிடியா...?"

மீசைக்கார மனிதனை நோக்கிக் கைக்கம்பை வீசினான் சிறுவன். அவன் சுருண்டு விழுந்தான், நெற்றியிலிருந்து ஊற்றெடுத்த ரத்தவெள்ளம் பூமித்

தாய்க்கு வைத்த குருதிக் குங்குமம் அச்சமுறத் துலங்கிக் கொண்டிருந்தது.

''பொன்னரசி. என்னை மன்னிச்சிப்பிடு. இப்போதே என்னோட வந்திடு. நான் உன்னைக் காப்பாத்துறேன்... நம்ம மகனையும் கண்டு பிடிப்போம்...!'' என்றான் அவன் - கந்தசாமி.

பொன்னரசி கையிலிருந்த கத்தி மின்னியது. ரத்தக் காட்சியைக் கண்டதும் அவள் மனத்தில் புயல் நீங்கிய அமைதி கனிந்ததோ? கத்தி நழுவியது. பையனுடைய கையைப் பிடித்து அழைத்து வந்தாள் ''பாவம்; மன்னிச்சிடு; அந்த ஆள் எக்கேடு கெடட்டும்!'' என்று வேண்டினாள் அவள்.

புழுதி வழியே ரத்தத் துளிகள் சுவடு காட்டிக் கொண்டேயிருந்தன.

''அப்பனைக் காட்டினீக; என் ஆத்தாவையும் காட்டமாட்டீங்களா, அம்மா?'' என்று விம்மிய பையன் அவளைப் பரிதாபம் இழையோடே நோக்கலுற்றான்.

''தம்பி, பழிக்குப் பழி வாங்கத் தானே உன் அம்மாவை நீ இப்ப தேடுறே?...''

''ஊ ஹூம் அவங்களை மன்னிச்சிடுவேன்; அவங்க என் தாய்!''

அடுத்த கணம் என்ன எண்ணினானோ. தன் முடிச்சிலிருந்த புகைப்படத்தை எடுத்துப் பார்வையிட்டான் அவன்.

''ஆத்தா...!''

நெஞ்சில் பாய்ச்சிக் கொள்ள ஓங்கிய கத்தியைத் பிடுங்க முனைவதற்குள், செந்நிறம் பீறிடத் தலைப்பட்டது.

"ஆத்தா!... உங்களை நான் சாகவிடவே மாட்டேன். நீங்க என்னை அனாதையா விட்டது பெரிய தப்புதான். இருந்தாலும், பத்து மாசம் சுமந்து பெத்தெடுத்த தாயாச்சே நீங்க!... உங்களைத்தான் நிதமும் கையெடுத்துக் கும்பிட்டுக்கிட்டு வாரேன். முத்துமாரி அம்மா, நீதான் இனி எங்களுக்குத் துணை. இம்பிட்டு நாளைக்கப்பாலே ஆத்தாளும் மகனுமான எங்க ரெண்டு பேரையும் மட்டும்பிரிச்சுப் பிடாதே!...

# 5. இனி...!

ஊர்ப் பஞ்சாயத்துக் கேணியடி திமிலோகப்பட்டது—!

பூங்காவனத்தின் ஆசைமச்சான், ஆணழகன் சிங்காரவேலன் லாரியில் தாறுமாறாக அடிபட்டுச் சாகப் பிழைக்கக் கிடக்கிறானாம்!

ஊர்வாய் பேசியது; பேசுகிறது.

பாவம்டி! நம்ம பூங்காவனம்—! நீ சொல்லுறது நூத்திலே ஒரு சேதிதாண்டி, அஞ்சலை! தன்னோட உசிருக்குசிரான மச்சான் பேரிலே உசிருக்கு உசிராகப் பாசமும் நேசமும் வச்சிருக்கிற பூங்காவனம், விதியோட எழுத்திலே பாவப்பட்ட சென்மம் ஆயிடாமல், ஆத்தா அங்காளம்மையோட புண்ணியத்தினாலே மஞ்சளும், மஞ்சள் தாலியும் ஆசீர்வாதம் செய்கிற நல்ல புண்ணியவதியாக ஆகிப் பூடணும்!''

''ஆமாடி—ஆமா!''

நல்ல மனங்கள் உருகின.

இளைய வெயில் உச்சிப் பனைக்குத் தாவியது.

உண்மைக்கு அசலான, அச்சான இன்னொரு பெயர்தான் வாழ்க்கை!

ஆகவேதான், வாழ்க்கைக்கு உண்மை— உண்மை நிலை ஜீவநாடியாகவும், ஜீவகீதமாகவும்

அமைந்திட வேண்டுமென்பது விதியாகவும் விதியின் விதியாகவும் அமைகிறது; அமையவும் வேண்டும்!

உண்மை கொடிகட்டிப் பறந்திடவும் சத்தியமும், தருமமும் ஆனந்தக் கும்மி கொட்டிடவும் வாழ்ந்து காட்டத் துணிந்தவன்தான் பூங்காவனம்! ஏழ்மைக்குப் பிரதிநிதிதான். இருந்தால் என்னவாம்? அவள் மனம் விலைமதிக்க முடியாத சொக்கப் பச்சையாக அமைந்துவிட்டதே? போதாதா? 'போதும்' என்கிற மனம் அமைந்ததே அவளுக்குக் கிட்டிய பூர்வ ஜன்மப் புண்ணியம் தான்! ஆனாலும், அந்தப் புண்ணியத்தை மண்ணைக் கவ்வச் செய்யத் துணிந்த பாவப்பட்ட சோதனைகள் ஒன்றா, இரண்டா?

குளமங்கலம் மண்ணுக்குக் 'குடிக்காணியாட்சிப் பாத்தியம், கொண்டாடிக் கொண்டிருந்த ஆண் பிள்ளைச் சிங்கம் வீரமுத்து, கண்டிக்கங்காணி கனகமுத்துச்சேர்வைக்காரரின் பேரப்பிள்ளையாண்டான் என்னும் உறவையும் உரிமையையும் சவால் விட்டு, மெய்ப்படுத்திக் காட்டுபவன் மாதிரி, தன் முறைப் பெண்ணான அத்தை மகள் பூங்காவனத்தை அடைந்திட ஒற்றைக் காலிலேயே தவம் செய்யலானான்!

ஆனாலும், சூரப்புலி வீரமுத்துவை விடுதலைப் புலியாக— அதாகப்பட்டது, சூரத்தனத்திலிருந்து விடுதலை செய்யப்பட்ட வெறும் புலியாக ஆக்கி வேடிக்கை பார்க்கவும் வேடிக்கை காட்டவும் புரட்சித் தமிழச்சியாகவே பூங்காவனம் அமைந்து விட்டாள்.

'முடவன் எவனுமே கொம்புத் தேனுக்கு ஆசைப் படக்கூடாது என்கிற அனுபவச் சட்டத்தைக்கூட புரிஞ்சுக்கிடத் துப்புக் கெட்டுப் போயிட்ட துப்புக் கெட்ட என்னோட அம்மான் மகன் வீரமுத்து

எனக்கு முறை மாப்பிள்ளையாக இருக்கலாம். அதுக்காக, அந்த வீரமுத்துவுக்கு நான் வாக்கப்பட்டு அவனுக்கு முந்தானை விரிக்க வேணும்னு எங்காச் சம் விதி இருக்கா என்ன? நாட்டுக்கும் வீட்டுக்கும் பச்சையாய்த் துரோகம் செஞ்சுக்கிட்டு இருக்கிற அந்தச் சிகப்புப் பணக்காரக் குடிகாரன் வீரமுத்து வினாலே என்னா செஞ்சுப்புட ஏலுமாம்? தூவே–!

காறித்துப்பிக் கொண்டே தலையைத் தட்டி முடி போட்டவளாகத் தலை நிமிர்ந்தாள் பூங்கா வனம்.

ராத்திரி வந்தது.

வந்த ராத்திரி சிவராத்திரியாகவே வாய்த்தது. கன்னி நிலவாகவே. மெய் உருகி மெய்ம் மறக்கின் றாள் பூங்காவனம் 'அன்பான அருமைச் சிங்கார வேலனே!- எம்புட்டு ஆசை மச்சானே! இந்தச் சமைஞ்ச குட்டி பூங்காவனம் வாழ்ந்தால், இனி உங் களோடதானாக்கும் வாழ்வாள், ஆத்தா அங்கா ளம்மை பேரிலே ஆணை வச்சுச் சொல்லிப்புட்ட சங் கதியாக்கும் இது!'' தேவ குமாரனாகத் தோன்றா மல் தோன்றுகிறான் சிங்காரவேலன்!

பாதிச் சாமம்.

கதவு தட்டப்படுகிறது.

பத்ரகாளியாகிறாள் பூங்காவனம். ''என்னாங் கிறேன், அம்மான் மவன்காரவுகளே! ஒங்களுக்கு என்னா வேணும்? அதுவா, இல்லை இதுவா? ஊம்- சல்தியிலே செப்பிடுங்கங்கிறேன்!'' நயமாக, விநய மாக வினவினாள்.

அவள் சுட்டிய இடங்களிலே, வீச்சரிவாளும், பட்டாக் கத்தியும் விதியென நமட்டுச் சிரிப்புச் சிரித்தன!

"எனக்கு நீதான் வேணுமாக்கும்!"

"ஓ... அப்டீங்களா, அம்மான் மவன்காரவுகளே?- பலே—! ஒங்களுக்கு நான்தான் வேணும்னா, மூச்சுக் காட்டாமல் என்னை எடுத்துக்கிட வேண்டியது தானே? அப்பாலே, என்ன ரோசம் கெட்ட ரோசனை வேண்டிக் கிடக்குது? ஊம்-வாங்கங் கிறேன்... ஊம்...!"

சிம்னி விளக்கு பெரிதாகவே எரிந்தது.

மிருகவெறி கெட்டிமேளம் கொட்டப் பாய்ந் தான் சூரப்புலி வீரமுத்து.

பூங்காவனம் கண்கள் சிவக்க ரத்தக்காட்டேரி ஆகிறாள்! காந்தி மகாத்மா மானசீகக் குருவாகி உபதேசம் செய்திருக்க வேண்டும்! மறு இமைப்பில், பூங்காவனத்தின் நகங்களும், பற்களும், மனிதத் தன்மையைப் பறிகொடுத்து நின்ற வீரமுத்துவிடம் விளையாடுகின்றன; விளையாட்டுக் காட்டுகின்றன

ரத்தம் பீறிடுகிறது!

வீரமுத்து வீரிட்டான்; "ஐயோ! வலி தாளல் லியே! எனக்கு மாப்புக்கொடுத்து என்னை விட்டுப் புடு புள்ளே! நன்னியோட நான் கண்காணாமல் ஓடிப்புடுவேன்!"

சிங்காரவேலனின் புண்ணியத்திலே, வீரமுத்து வின் தலை தப்பியது.

அன்றொரு நாள் அந்திக் கட்டில் ஊருணியில் குனித்து முழுகி மஞ்சள் ரவிக்கையையும் சிவப்பு நிறத்

திலான உள்பாவாடையையும் காயப் போட்டு விட்டுச் சுங்கடிப் புடவையின் ஒரு தொங்கலைக் கருவேல மரத்தின் ஈசான்யமுடுக்கிலே முடிபோட்டு, மறு முனையை உடம்பைச் சுற்றிக் கொண்டு உலர வைத்துக் கொண்டிருந்தாள் பூங்காவனம். எதிர் பாராத மாய விதியாகப் பேய் மழையும், சூறைக் காற்றும் கொட்டி முழக்கத் திக்குமுக்காடிப் போனாள் கன்னி; இடுப்புச் சேலையைக் காற்று கொள்ளை கொள்ளவே, நிர்மித்தவளாகத் துடித்த வேளைகெட்ட அவ்வேளையிலே, அங்கே செடி மறைவில் தேவகுமாரனாய்த் தோன்றின சிங்காரவேலன் கோவணத்துடன் நின்று, இடுப்பு வேட்டியைப் பூங்காவனத்தின் அழகு மேனியைக் குறிவைத்து வீசினான்!

மானம் காத்த அந்த நல்ல புண்ணியவானையே இப்போது மனம் காக்கவும் நிர்ணயம் செய்து கொண்டாள் பூங்காவனம்.

ஏழைமையும், ஏழைமையும் ஜோடி சேர்ந்தன.

காலம் ஒரு புள்ளி மானுங்கூட!

ஒரு நாள் அந்தி சந்திப்பொழுது; கம்மாய்க் கரை.

எதிரில் பூங்காவனத்தின் எதிரியான வீரமுத்து, சைக்கிளும் கையுமாக நின்றான்; உருமினான்:

“ஏ புள்ளே...! பொட்டுப் பொழுதுக்குக் கால் பாவி நின்னு, பொட்டிலே அறைகிறதாட்டம் நான் சொல்லப்போற இந்த நல்ல சமாச்சாரத்தைக் காதிலே வாங்கிக்கிட்டுப் பறிஞ்சுப்புடு! நாட்டையும் வீட்டையும் ஓசத்தியாய் நினைச்சு, பணப்பசை

மிஞ்சின இந்த வீரமுத்துவை, உம்புட்டு முறை மச்சானான என்னைக் கள்ளச் சாராயம் குடிக்கிற வன் என்னும்படியான ஒரு அற்ப சொற்பமான காரணத்தை வச்சுத் தட்டிக் கழிச்சுப்பூட்டு, எவனோ புறம்போக்குப் பயமவன் ஒருத்தன் கட்டின மஞ்சள் தாலியிலே கும்மாளம் போட்டுக்கிட்டு இருக்கிற உனக்குத் தாலிப்பொசிப்பு இன்னும் கொஞ்ச நாளைக்குத் தானாக்கும்!... இதை ஒன் சுங்கடி முந்தானையிலே முடிபோட்டு வச்சுக்கிடு!... ஆமா, செப்பிப்பூட்டேன்! உன்னோட ஆசையான, நேசமான-மச்சான் உசிரைப் பலி வாங்காமல், நான் நல்ல தூக்கம் தூங்கவே மாட்டேன்! இது சத்திய மான சத்தியமாக்கும்! நீ இல்லாமல், நான் இந்த மண்ணிலே முழுப் பைத்தியமாகிட்ட அநியாயத் துக்குப் பழிக்குப் பழி வாங்காமல் தப்புவேனா நான்? நான் எப்பவுமே சூரப்புலியே தான்!''

புண்ணியத்தாலி ஊசலாடியது.

உதயசூரியனைக் கண்காணாமல் செய்த பெரு மையில், வெய்யில் சூடேறிக் கொண்டிருக்கிறது.

''ஐயையோ... எந்தெய்வமே...!''

அலறிக் கதறிக் கொண்டே, தலைவிரிகோலமாக ஓடோடி வந்தாள் பூங்காவனம்! நெற்றிக்கு மகிமை சேர்த்த மீனாட்சி குங்குமம் சன்னம் சன்னமாகக் கரைகிறது; கரைந்து கொண்டிருக்கிறது, கொண் டைப் பூக்கள் கெண்டை மீன்களாகத் துவண்டு வீழ்கின்றன; ரத்தமும் ரணமுமாகிக் குற்றுயிரும் குலை உயிருமாகப் பேச்சு மூச்சில்லாமல் வெறும் பிணம் கணக்கிலே கண்மூடிக் கிடந்த சிங்காரவேல னின் பாதங்களிலே நெடுஞ்சாண்கிடையாகச சரண

டைந்தாள் ரத்தக் கண்ணீர் மடை உடைகிறது. மடையை உடைக்கிறது.

அழகான முகம் முழுவதிலுமே அடிபட்ட ரணங்கள் பளிச்சிட்டன.

நெற்றிப் பொட்டுக்குமேலே மண்டை பிளந்து விட்டாற்போன்று எலும்புகள் திமிறித் தெறித்தன!

மூச்சிறைக்க ஓடிவந்த நாட்டு வைத்தியர் நிதானம் காத்து, அழகுச் சிங்கம் சிங்காரவேலனின் நாடியைச் சோதித்தார். "ஆத்தாடி! உம்புட்டு அருமை பெருமையான மச்சானோட அன்பான உயிர், சிவலோகம் பறிஞ்சு பொழுது உண்டனவே ஆகிடுச்சு, ஆத்தாளே!" வைத்தியர் செருமினார்.

"ஐயையோ! எம்புட்டு ஆசை மச்சானே!" நிலை குத்தின பார்வையில் சிலையான பூங்காவனம், மீண்டும் ரத்தக் காட்டேரி ஆகிறாள்: "என்னோட நேச மச்சானை இப்படி அநியாயமாகச் சாகடிச்ச அநியாயக்காரப் பாவி யாருன்னு தெரிஞ்சா, அவனைத் தேடிப் பிடிச்சுக் கடிச்சு குதறி அந்தப் படுபாவியோட உயிரைக் குடிச்சுப் புடுவேனாக்கும்!" விண் முட்டி மண்முட்டக் கூக்குரலிட்டாள்!

மறு இமைப்பில், சிங்காரவேலனைப் பலிவாங்கிய அந்தப் பாவியைக் கைகளைக் கட்டிய வண்ணம் பரபரவென்று இழுத்து வந்து நிறுத்தினார்கள் ஊர் இளவட்டங்கள்!

பூங்காவனம் ஏறிட்டு விழித்தாள், மின் அதிர்ச்சியில் நிலைகுலைந்தாள்; "அட, பாவி வீரமுத்து...! நீயா?"

வீரக் கண்ணகியாக நீதிமுழக்கம் செய்து, வீரத் தமிழச்சியாகப் பாய்ந்த பூங்காவனம், வெறி தீர வீர

முத்துவின் முகத்திலே எச்சிலை உமிழ்ந்து, அவன் தலை முடிகளைப் பற்றிக் குலுக்கி அவன் முகத்தை நிமிர்த்தினாள்!

சூரியன் சுட்டெரித்தான்.

"தெய்வம் திருவுள்ளத்துக்கும் அஞ்சாமல், ஒன்னோட சவால்படி என்னோட மஞ்சள் தாலியைப் பறிச்சுக்கிட்ட ஒன்னை அம்மாஞ்சுளுவிலே உசிரோட விட்டுப்பூடுவேனா, என்ன-? என் தாலியைப் பறிச்சுக்கிடுறதாய் எங்கிட்டே நீ செஞ்ச சபதத்தை மெய்ப்படுத்திக் காட்டவேணும் என்கிற பாவப் பட்ட மிருக வெறியிலே எனக்கு எமனாகி, என் மச்சா மேலே நயவஞ்சனையிலே லாரியை ஏத்தி எந் தெய்வத்தைச் சாகடிச்ச உன்னைக் கடிச்சுக் குதறி உன்னை உசிரோடவே சாகடிச்சுப் பழிக்குப் பழி வாங்கிட்டு, நானும் எம்மச்சான் பின்னாடி சிவலோகம் பறிஞ்சிடுறேன்!"

வீரமுத்துவின் சிவப்பேறிய விழிகளிலே கடுநீர் தளும்புகிறது: "அயித்தை மகளே! ஒரு பொழுதிலே, நான் உன் தாலியைப் பறிச்சுக்கிடுறதாகச் சவால் விட்டது என்னமோ நிஜம்தான்! ஆனா, அதுக்கும் இப்ப ஏற்பட்ட விபத்துக்கும் சாமி சத்தியமாய் எந்தச் சம்பந்தமுமே கிடையாது; தவிரவும், லாரியிலே அடிபட்ட ஆள் உம்புருசன் என்கிற தாக்கலே நீ சொல்லித்தான் எனக்கு விளங்கிச்சு - என்னைப் பழிக்குப் பழி வாங்க வேண்டி, நீ என்னோட உயிரைத் தாராளமாய் குடிச்சுப்புடு! நான் சம்மதிக் கிறேன். ஆனா, அதுக்கு ஊடாலே, நடந்த நடப்பைச் சொன்னால் தான் எம்மனசு ஆறும்—"

வீரமுத்து பேச்சை முடிக்கவில்லை.

கிறுக்குப் பிடித்தவளாகத் தலை முடிகளைத் தாறுமாறாகவே பிய்த்துக் கொண்டவள், அடுத்த கணம் தன் கழுத்துத் தாலியையும் பிய்த்து எறிகிறாள்!

''தங்கச்சியோ...''

வீரமுத்துவின் ஆசைக் கண்ணாட்டி பவளக் கொடி நா தழதழக்க விம்முகிறாள்.

வெறிச்சோடிக் கிடந்த சூன்யத்தை வெறித்தவாறு. நடந்த கதையை நைந்த குரலில் பேசி நின்றாள் பூங்காவனம்.

''எம் புருசன் குடிபோதையிலே லாரியை உன் மச்சான் மேலே ஏத்திக் கொன்னுப்புட்டாகளா? தங்கச்சிப் பொண்ணே...! எம் மச்சான் எங்க கண்ணாலத்துக்கு முந்தி குடிகாரராக இருந்தது வாஸ்தவம்தான்; ஆனா, என்னைக் கட்டிக்கிட்டப் புறம், குடியை மறந்து, மெய்யாலுமே நல்ல குடிமகனாக மாறிப் பூட்டாங்களாக்கும்!'' தங்கத் தாலி மின்னிப்பளிச்சிடக் கருவத்தோடு பேசினாள் பவளக் கொடி.

மெய் நடுங்கப் பொறிகலங்கி மலைத்து நின்றாள் அபலை பூங்காவனம்.

'பவளக்கொடி செப்பினது மெய்யாலுமே சத்தியந்தானோ? அப்படின்னா, என் அருமை மச்சானோட பெருமையான உசிரைப் பறிச்சுக்கிட்டது யாழும் விதியேதானா? வீரமுத்து ஒடுங்கி நின்ற திசைநோக்கி மறுகி நடந்தாள். நெருக்கமாக வீரமுத்துவை நெருங்கினாள்! கொஞ்சம் முந்தி தான் துப்பிய எச்சில் இன்னமும் காயாமல் இருக்கவே, சுங்கடி முந்தானையைக் கொய்து எச்சிலின் ஈரத்தைத் துடைத்தாள், பூங்காவனம்.

தலை நிமிர்ந்து கண்ணீர் வழிந்தோட நின்ற வீரமுத்து, வாயைக் குவித்து ஊதினான். கள்ளச் சாராயத்தின் கெட்ட வாடை, நெடி எதுவுமே தடயம் காட்டவில்லை!

'அயித்தை மகளே பூங்காவனம்.! பவளக் கொடிக்கு நான் திருப்பூட்டினதிலேருந்து என்னைக் குடியை மறக்கச் செஞ்சு, என்னை அசலாகவே நல்லவனவாகவும் மாற்றிப்புட்டா என் தெய்வம் பவளம்....! சாமி சத்தியமாச் சொல்லுறேன்; நான் உன் தாலியைப் பறிச்சுக்கிடப் போறதாக ஆத்திரத்தினாலே சவால் விட்டது மெய்யான சங்கதிதான்! ஆனா, அந்தச் சபதத்துக்கும் இப்பைக்கு நடந்த விபத்துக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது. ஆவணத்தாங்கோட்டை — பனங்குளம் நெடுஞ்சாலையிலே நான் என்னோட சொந்த லாரியை வெரசாய் ஓட்டிப் போய்க்கிட்டு இருந்தேன். ஒரு மடக்கத்திலே நான் என் லாரியைத் திருப்பின சமயத்திலே, அந்த ஆள் அதுதான் உன் மச்சான், அத்து மீறிக் குடிச்சவர் கணக்கிலே தள்ளாடித் தடுமாறி வந்துக்கிட்டிருந்தார். ஒதுங்காமல் கொள்ளாமல் தன் போக்குக்கு தலைசுத்தினாப்பிலே நடந்து வந்தவர், லாரி மேலே மோதிக்கிட்டு மண்ணிலே சாய்ஞ்சிட்டார்; நான் பாடுபட்டு பிரேக்' போட்டும், என்னாலே லாரியைக் கட்டுப்படுத்த முடியலே! தடம் மாறாமலே விழுந்துகிடந்த உம்மச்சான் மேலே லாரி ஏறிடுச்சு! உம் மச்சானோட அருமையான உயிர் பறிபோனதோடே விதியோட விளையாட்டும் முடிஞ்சிருச்சு! இதுதான் ஆத்தா சத்தியமாய் நடந்த நடப்பு! என்னை நம்பு—பூங்காவனம்!'' வீரமுத்து புலம்பி அழுதான்.

எந்தப் புற்றிலே எந்தப் பாம்பு இருக்குமோ?

பூங்காவனம் இப்போது அழவில்லை! 'அப்பட டன்னா, சட்டத்தோட நீதிக் கூண்டிலே குற்றவாளியாய் நிறுத்தப்பட வேண்டியது மெய்யாலுமே விதியேதானா?' நடந்தாள். அருமை பெருமை வாய்ந்த மச்சான் சிங்காரவேலனை மறுபடி அண்டினாள்; முகத்தோடு முகம் பொருத்தி ஓர் அரைக் கணம் அமர்ந்திருந்தாள்! மறுகணம், அவள் முகம் சுழித்தாள்; முகம் சுளித்தாள்! 'உன் மச்சான் அத்து மீறிக் குடிச்சிட்டது கணக்கிலே தள்ளாடித் தடுமாறி வந்துக்கிட்டிருந்தார்!' வீரமுத்துவின் வாய்மொழி களிலே விதி சிரித்ததோ, இல்லை வினைதான் சிரித் திருக்குமோ?

அப்போது—

அங்கே—

அருமை பெருமை மிகுந்த, ஆசையும் நேசமுமான அன்பு மச்சான் சிங்காரவேலனிடம் வெறும் பிணவாடையை மட்டுந்தானா பூங்காவனம் நுகர்ந்து உணர்ந்தாள்...? சே...!

''ஆத்தாளே...! அதுவரையிலும் ஒரு பாவமும் அறியாமலே இருந்திட்ட எம் மச்சானைச் சமுதாயக் குற்றவாளியாக ஆக்கி, என்னையும் பாவப்பட்டதொரு சென்மமாக ஆக்கி, அபூர்வமாச் சோடி சேர்ந்த எங்களைச் சோடி சேர்ந்தே அலங்கோலமாச் சோதிச்சுப்புட்டியேடி—ஆத்தாளே?''

வேரறுந்த சரக்கொன்றையென மண்ணிலே சரண் அடைகிறாள் பூங்காவனம்! வாய் திறக்க, அவளுக்கு இனிமேல் என்ன மிச்சம், மீதி இருக்கிறதாம்?—அந்த விதிக்கும்தான் இனி, என்ன விட்ட குறை, தொட்டகுறை இருக்கப் போகிறதாம்...?

பாவம்...!

பாவம், விதி...!

# 6. எல்லைச் சக்தி

"விந்தையான விமரிசனம் ஆமாம்; உன் சிந்தை தடுமாறாமல் பார்த்துக்கொள். உண்மையிலேயே நீ என்னைவிட ஆடலில் சிறந்தவளென்றால், நீ சற்று முன் பெண்ணுள் ஆணாகிச் சூளுரைத்தாயே, அந்தச் சூளுக்கு-சவாலுக்கு-சபதத்துக்கு வெற்றி சொல்ல வேண்டுமென்றால், நீ அந்தப் பார்வதியாகிவிடக் கூடாது. நினைவில் இருக்கி வைத்துக் கொள். உன் பேதை மனம் இறுக்காகி விடப் போகிறது. உஷார்! சிவபிரானால் சிந்தையொடுக்கப் பட்ட சக்தியாகி, தில்லையில் போய் எல்லைக்கல் பதித்துவிடக் கூடாது!...

நடன உலகம் அப்பால் உன் பெயருக்குப் பாரதம் பாடிவிடும்...அது மட்டுமா? பரணியும் புனைந்து விடுவார்கள். நிஜமாகவே உன் விமரிசனத்திலே விந்தை என்ற சொல்லை அடைமொழியாக்கி விடாதே! போட்டியிடப் போகிறவனே தன் எதிர்க் கட்சிக்காரிக்குப் பாடம் படித்துக் கொடுக்கிறானே யென்று எண்ணி அப்படி உன் மீன் விழிகள் துடிக்கின்றனவோ?-சொல், உன் கண்களிடம்; நான் நாளை உன்னைச் சந்திக்கிறேன்-நடன அரங்கிலே! அல்ல, அல்ல!... எல்லையிலாப் பெருவெளிக்கு எல்லை கிழித்துக் கிடக்கும் மயானத்திலே, சக்தியின் அகந்தை ஒடுக்கக் கால் மாறிக் குனிந்துக் குழை

நக்கிய பிஞ்ஞகனாக நாளை உன்னைச் சந்திக்கின்றேன்... ஹ ஹ் ஹா! .. ஹ ஹ் ஹா...!''

''மறந்து விடாதீர்கள், உங்கள் சபதத்தை-சூளுரையை-வாதத்தை! .. நடன ரஸிகர்கள் தீர்ப்புச் சொல்லட்டும்; நாளை விடியட்டும். துரைராஜன் நடனத்தில் சிறந்தவரா? இல்லை, பார்வதி சிறந்தவளா?-அதோ, கைலைங்கிரியிலே, வெள்ளைப் பனி மலை மீதிலே-ஏன், அந்த அலகிலா விளையாட்டுடையானின் முகத்தில் கூட இந்தக் கேள்விகளுக்குப் பதில் பிரதிபலிக்கிறதே?... என் மாதா பராசக்திகூடச் சொல்லாமல் சொல்லி என்னை ஆசிக்கிறாளே, வெற்றி என் பக்கம்தானென்று! சந்திப்போம். நாளை!... ஹஹ்ஹா! ஹஹ்ஹா!... இந்தப் பார்வதிக்குத் தான் வெற்றி, வெற்றி, வெற்றி!''

''இந்தத் துரைராஜனைச் சுட்டெரித்து, அவன் சாம்பலைப் பூசிக்கொண்டுதான் நிற்கப் போகிறேன். அப்பொழுதுதான் என் நாட்டியம் நிறையும். ஆமாம்; வெற்றி எனக்கே தான்! நான் பார்வதியல்லவா? என் அகந்தையை அந்தச் சிவனேகூட மாற்றவோ, மாற்றுக் குறைக்கவோ, முடியாது. நான் பார்வதி! ''

' நிஜமாகவா?''

''ஆம்' என்னுடைய அன்னை சக்தியின் மேல் ஆணை .. இது மெய்யான சேதி, சகுந்தலா.''

''அப்படியென்றால்; நீ சோமநாதனைத்தான் கலியாணம் செய்து கொள்ளப் போகிறாயா? உனக்கு நடனம் பயில்வித்த-உன்னைக் காதலித்த

துரைராஜனைக் கைவிட்டு விடத் தீர்மானித்துவிட்டாயா, பார்வதி?...''

''ஆமாம்; நூற்றுக்கு நூறு உண்மை. போட்டியாம்-போட்டி! நாட்டிய உலகம் என்னை வானளாவப்புகழ்கிறது; இந்தத் துரைராஜன் என்னை வாய் கொண்ட மட்டும் தூற்றுகிறான். பார்க்கிறேன்!... இன்றைய நடனப் போட்டியிலே எனக்கேதான் வெற்றி!''

''அப்படி யென்றால், உன் மலர் மாலை ..?''

''சோமநாதனின் அழகுக் கழுத்துக்கேதான்!''

''சபாஷ், நீலகண்டா! உன் புத்திசாலித் தனத்துக்கு யாம் பெரிதும் மெச்சினோம். இந்தா, பிடி உத்தரீயத்தை!''

''நான் தப்பித்தேன், துரை. அந்தி நெருங்குகிறதல்லவா? தில்லையிலே கல்லுருவாகச் சமைந்து நிற்கச் சபித்த அந்த ஒரிஜினல் பிரானாகவே நீ வடிவெடுத்து, ஒரு சாபம் இட்டது போதாதென்று, எங்கே என்னையும் வேறு சபித்துவிடப் போகிறாயோ என்று உயிர் நடுங்கிப் போனேன். நல்ல வேளை, நான் தப்பித்தேன், பிழைத்தேன்!''

''அஞ்சேல்...''

''அபயம்!''

''பேஷ், பேஷ்!''

''சோமநாதன் வாயில் மண்போட வேண்டும்!''

''அதை நான் ஏன் சொல்ல வேண்டும்? என் வாயில் நீ சர்க்கரையைப் போட்டு விடுவாயல்லவா...?''

"ஓ...!"

"நண்பா, வெற்றி எனக்கே தான். தீட்டிய இடத்திலேயே பதம் பார்க்கக் கனவு காண்கிறாள் பேதை பார்வதி. எனக்கு வெறி ஏறுகிறது. அது புகழ் வெறி; கலை வெறி! நான் பயில்வித்தேன். அவள் புகழ் பெறட்டும்; ஆட்சேபணம் ஏதும் எனக்குக் கிடையாது. ஆனாலும், பெண் பிறவிக்கு அகந்தை கூடாதல்லவா? பார்க்கலாம், யாருக்கு வெற்றி என்று! தமிழ்க்கலைக் கூடம் இன்று இரவு வழங்கப் போகும் தீர்ப்பைக் கண்டு உலகம் மூக்கில் விரலை வைக்கப் போகிறது. அவளுடைய விசிறிகள் தேவைப்படத்தான் போகின்றன... நீலகண்டா, நல்லகாலம், அந்த சிவசக்தி நடனத்தை எனக்கு நீ நினைவுபடுத்தினாய்!"

"ஆமாம்..."

"வெற்றி இந்தப் பார்வதி கொழுநனுக்கே தான்!"

"என்ன, பார்வதி கொழுநனா?"

"ஆம்; சிவன் என்று அர்த்தம்!"

"ஓஹோ!"

"ஆஹோ!"

o o o

"ஆஹா!' அற்புதம்!... தாம் தித்தாம், தை தத்தை!- வெகு நேர்த்தி!..."

"சிவபிரானும் பார்வதியுமே நேரில் பூலோகத்துக்கு விஜயம் செய்து விட்டார்களா, என்ன? ஆஹா!

தேவர்கள், நாரதர், கின்னரர்! மயானத் தாண்டவம்...!''

''அதோ, சிவனுக்கு வெறி மூண்டு விட்டதே...?''

''பார்வதியின் பாதங்களிலே எத்தகைய இந்திர ஜாலம் என்ன குழைவு! ஸ்வரஜதியில்தான் எத்துணை ஜீவன், கற்பனை!''

''தன்னை மறந்த லயம் என்கிறார்களே, இதுதனா? சிவனுக்கும் போட்டி வெறியா? சக்தியைத் தோற்கடிக்கச் செய்யும் சாகஸமா ? ஆ. குழை நழுவி விட்டதே?''

''சங்கரியின் கண்களிலே ஏன் இந்தக் கலக்கம்?... சக்திதான் பெரிதா?''

''ஆஹா, அதோ, ஆதிகால் தூக்கி ஆடி அந்தக் குழையைப் பாதத்தால் எடுத்துக் காதில் அணிந்து கொள்கிறாரே?''

''சக்தி தோற்றுவிட்டாள்! அவள் பெண்தானே? அவளால் அப்படி முடியுமா, பாவம்?''

''ஐயா, ரசிகரே? அதோ பாரும், சிவனுக்குப் போட்டியாக சக்தி காலைத் தூக்கி ஆடிவிட்டாள்...! சக்தி தான் ஜெயித்தாள். அவள் எங்கள் இனமல்லவா?...''

''ஆ!''

''ஐயோ, அக்ரமம்! புராணம் ஏடு திருப்பப்பட்டு விட்டதா?''

''நடனத்திலா?''

''இல்லை, நடப்பு உலகத்துக்கு.''

''விசித்திரமான புராணக் கற்பனை!''

''அதிசயமான போட்டி!''

''அர்த்தமில்லாத காதல்!''

''அற்புதம்!''

''மோசம்...படுமோசம்!''

''நீ பெண் அல்ல!...பேய்! காளி! இவ்வளவு பெரிய ஜனக்கூட்டத்திலே நீ அந்தப் பயலுக்குப் போட்டியாகக் காலைத் தூக்கிச் சமமாக நடனம் ஆடிவிட்டாயே? நிருத்ய ஆசிரியரின் மகனான நானா-இந்தச் சோமநாதனா இனி உன்னை ஏறெடுத்துப் பார்ப்பேன்? அது வெறுங்கனவு. சிவபிரானுடன் போட்டியிட்டுத் தோற்ற அந்தக் கல்லழகி—எல்லைச் சக்தி கூட உன்னுடைய இந்தத் துணிச்சலைக் கண்டு தலை கவிழ்ந்திருப்பாளே? நீ பெண்ணா? நீ காளி!... மகா துர்க்கை!... ஓடு. திருவாலங்காட்டை விட்டுத் தில்லைக்கு ஓடு!...''

''ஆண்மையுள்ள ஆணழகரே, நிறுத்துங்கள் உங்கள் சொற்பொழிவை. நான் பெண்; அசல் தமிழ்ப் பெண். உலகம் தெரிந்தவள்தான் நான். அந்தத் தில்லைச் சக்தியா நான், அப்படிக் கால் தூக்கி நடனம் ஆடாமல் இருக்க? நான் பார்வதி அல்லவா? பார்வதி ஒரு நாளும் அந்த துரைராஜனுக்குத் தோற்றவள் அல்ல! ஞாபகம் இருக்கட்டும், மிஸ்டர் சோமநாதன் தாங்கள் இனி என்னை ஏறெடுத்துப் பார்க்கவே வேண்டாம்; கண்களை மூடிக்கொண்டு ஜபம் செய்யுங்கள். நீங்கள் கண்ணை மூடுவதற்கு எவளாவது ஓர் அபலை வந்து உங்கள் கண்களைத் திறப்பாள்...''

"வார்த்தைகள் அளவுக்கு மிஞ்சிக் கனம் பெறுகின்றன. அப்படியென்றால், நடன நாடகம் என்ன ஆவதாம்? அதன் உயிர்க் கருத்து என்ன ஆவதாம்?"

"அது தூசுக்குச் சமானம். சிவனுக்கு அந்தச் சக்தி தோற்றிருக்கலாம். இந்தப் பார்வதி நடனத்தில் எவனுக்கும் சளைக்கமாட்டாள்; தோற்கமாட்டாள்; என் சபதம், சூளுரை, வெற்றி பெற்றுவிட்டது. நான் நடன ராணி பார்வதி!..."

"இந்தப் பதிதையின் நிழல் பட்டாலே நமக்குப் பாவம்... வாருங்கள் அப்பா!..."

'ஒடுங்கள்!... இல்லையென்றால், உங்களைச் சபித்துவிடுவேன். உள்ளத்தைப் புரிந்துகொள்ளத் திராணியில்லாத—நடனத்தின் ரகசியத்தை அறிந்து கொள்ள மூளை இல்லாத நீங்கள் எங்கள் தமிழ் நாட்டுக்குத் தேவையேயில்லை. ஆனால் ஒன்றை மட்டும் மறந்து விடாதீர்கள்; இந்தப் பார்வதி பண்பை உயிராகக் காக்கும் தமிழ்ப் பெண்."

"பார்வதி, நடனத்திலே நான் தோற்றேன் என்றே வைத்துக்கொள்; நான் வருந்தமாட்டேன்... ஆனால், நான் போட்டியிலே வெற்றி பெற்றுவிட்டேன். தோற்றவன் வெற்றிபெற்ற கதைதான் இங்கேயும் நடக்கிறது. எப்படியோ, என் நாடகம் பலித்துவிட்டது. ஆமாம்; காதல் போட்டியிலுங்கூட நான்தான் உனக்குச் சமம்?.. இந்தத் துரைராஜன் அந்தச் சோமநாதன் அல்லவே?..."

"அன்பரே, என்னை எல்லைச் சக்தியாக ஆக்கத் தீர்மானித்துவிட்டீர்கள் போலும்!.. நான் தமிழ்ப் பெண் பார்வதி!.. நீங்கள் எனக்கு நிழல்தர விரும்பினால், அது என் பூஜாபலன்தான்!"

# 7. இட்டார்க்கு இட்ட பலன்

## ஒன்று

கஞ்சிப் பொழுது; மண்பட்ட பாதங்களைப் புண்ணாக்கும் வெயில்; இடையீடு விட்டு வீசியது அனற் காற்று.

கிழவி செல்லாயிக்கு ஏப்பம் பறிந்தது. அது பசி ஏப்பம்; அதில் ஓரளவு தண்ணீர் ஏப்பமும் கலந்திருந்தது. பவளக்கொடியைப் பார்த்து மறுபடி அவள் கை ஏந்தினாள்.

"பாட்டி, இன்னம் தாகம் அடங்கலையா?" என்று கேட்டாள் பவளக்கொடி.

"குடிக்கறதுக்கு இல்லேம்மா; மூஞ்சியிலே தெளிச்சுக்கிட்டா ஒண்ணுக்குப் பாதியா சொகமாயிருக்குமில்லே அதுக்காவத்தான்!"

"கட்டைத் தூக்கி விடட்டுமா, பாட்டி?"

"ஆமாம்மா!"

"ஏம்மா, சீமோடு வீட்டுச் சின்னையா அம்பலக்காரர் பொண்ணுதானே நீ?"

"இல்லை, நாட்டோடு வீட்டு நல்லதம்பித் தேவர் மகள்!"

"தடங்கெட்டுப் போச்சு, தாயி. நீ பதினாறும் பெத்துச் சொகமா வாழணும்மா!"

''எனக்கு இன்னம் கல்யாணமே ஆகலையே, கிழவியம்மா?''

''ஆனப்புறம் ஏஞ் சொல்லுப் பலிக்கும். ஆமா, ஒம் பேரு என்னா, தாயீ?''

''பவளக்கொடி!''

''அப்படின்னா, அர்ச்சுன மவராசா கெடைச்சதும் எனக்குக் கண்ணாலச் சாப்பாடு போடோணும்!''

''நிச்சயம் போடுவேன், பாட்டி!''

''நானும் நிச்சயமாப் பொளைச்சுக் கெடப்பேன்!''

பிரிந்த ஒற்றையடிப் பாதைகள் அவர்களைப் பிரித்துவிட்டு வேடிக்கை பார்த்தன.

## இரண்டு

அரிசிக் குறுணையை மடியிலிருந்து அவிழ்த்து முறத்தில் கொட்டினாள் செல்லாயி; வியர்வையைத் துடைத்தபின், சேலைத் தலைப்பை எடுத்து இடுப்பில் சுற்றிக் கொண்டாள்: மூச்சைக் கட்டிப் பிடித்து இழுத்த வண்ணம் முழங்காலிட்டு அமர்ந்தாள்; முறத்தைக் கையிலெடுத்துத் தட்டிப் புடைத்தாள்; கல்லும் நெல்லும் இந்தியப் பூகோளப் படத்தின் பாகிஸ்தானம் ஆயின.

எரிந்தது தீ; கொதித்தது நீர்; வெந்தது அரிசி: தப்பித் தவறிக் கிடந்தது தேங்காய்ச் சில் ஒன்று; சுற்றிச் சூழ்ந்திருந்த 'பூரணம்' மாயமானது; உப்பு, புளி, மிளகாய் ஒப்பந்தப் பத்திரத்தில் கைநாட்டுச்

செய்தன. துகையல் தயாரானது. வடி தண்ணீர் கல் சட்டியில்; மிஞ்சிய கஞ்சி பானையில்; எஞ்சியது மண்ணுக்கு.

மேலவளவுத் தொங்கலிலிருந்து தவழ்ந்து வந்த சினிமாப் பாட்டுக்களின் ஒலி, செல்லாயியின் நெஞ்சைத் தொட்டது. பசி வயிற்றைக் கிள்ளியெடுத்தது. வாரிச் சுருட்டிக் கொண்டு மெல்ல எழுந்தாள்; மெல்ல நடந்தாள்; மனம் அல்லாடியது; உடல் தள்ளாடியது. குருவி மணலைப் பிரிமணையாக்கி வைக்கப்பட்டிருந்த தண்ணீர்த் தவலை, அவளுக்குத் தான் பணிந்தது. திரும்பி நடந்தாள்; குடிசைவந்தது; குனிந்துதான் நுழைந்தாள்; இருந்தும் தலையை இடித்துத் தொலைத்தது. எண்சாண் உடம்பிற்கு எட்டடிக் குச்சுக்குமேல் தேவை ஏது? அங்காளம்மன் திருநாளில் 'பெரியட்டான்புர'த்து மண்டகப்படியன்றைக்கு குருக்கள் ஐயர் தந்த விபூதிப் பிரசாதம் காட்சியளித்தது. முதலில் எடுத்து அதை வாய்க்கும், அடுத்து அள்ளியதை நெற்றி மேட்டுக்கும் பகிர்ந்து கொண்டாள் அவள். கிழக்குப் பாரிசத்தில் பதித்திருந்த கண்ணாடித் துண்டொன்று, அவளை அழைத்தது. வதனம் பதித்தாள் கிழவி. சுருக்கம் விழுந்து தொங்கிய முகமும், குழி பறித்துக் கிடந்த கண்களும், நரை திரண்ட கேசமும், ஒட்டிய வயிறும், உலர்ந்த உடலும் அப்போது அவளது பார்வையில் தட்டுப்படவில்லை. கடந்து வந்த நெருஞ்சி முள் காடு தெரிந்தது; தாண்டி வந்த அறுபத்தேழு மைல் கற்கள் காணக் கிடந்தன; தாம்பூலம் மாற்றி, பரிசம் போட்டு, தாலி பூட்டிய அவள் துணைவன் உடல், பொருள், ஆவி மூன்றையும் கொடுப்பதாகக் 'கையடித்து'க் கொடுத்துவிட்டுக் கடைசியில் ஓர் இரவிலே அவளிடம் சொல்லிக் கொள்ளாமல் உடல், பொருள்,

ஆவியில் ஒன்றையும் அவளுக்கென்று மிச்சம் வைக்காமல், மண்ணில் பதிந்து விண்ணுக்குச் சென்றுவிட்டான்! கொண்டவனும் கொண்டவளும் குப்பை கொட்டிய லட்சணத்துக்கு அடையாளமாகக் கிடைத்த பரிசான பதினாறு வயசு இளவட்டம் அக்கரைச் சீமைக்குச் சென்று இக்கரைக்கு வராமலேயே நாதியற்றுச் செத்து மடிந்து விட்டது.

'நானு ஏதுக்காவ உசிரோடு இருக்கோணும்?'— அலுத்துச் சலித்துப் போன தருணம் பார்த்து, இக்கேள்வி சம்மட்டியாக உருவாகி, அவளது தளர்ந்த நெஞ்சத்தினை மேலும் தளர்ச்சியடையச் செய்யத் தவறுவது கிடையாது. ஒரு நாள், இரண்டு நாள் அனுபவம் மட்டும் அல்லவே இது?

வடித்த கஞ்சியின் சூடு ஆறிவிட்டது; வடிந்த கண்ணீரின் வெம்மை தணிந்தது. கிழவிக்குச் சிறு குடலைப் பெருங்குடல் கவ்வியது. காய்ச்சின கஞ்சி, வெங்காயம், உப்புக் கற்கள், துவையல் எல்லாம் அவளை வருந்தி வருந்தி அழைத்தன. குவளையில் கஞ்சியை ஊற்றினாள்; 'மடக் மடக்' என்ற சத்தம் மூன்று வினாடிகளுக்கு ஒரு முறை கேட்டது. அரைக்கால் நாழி கூடத் தாண்டியிராது. 'கிண், கிண்' என்று அவளுக்குத் தலை கனத்து வந்தது. பிறகு சுற்றவும் ஆரம்பித்தது. மறு வினாடி அவள் வாந்தி பண்ணி விட்டாள்.

அந்தி சந்திப் பொழுதிலே படுக்கக் கூடாதென்பார்கள் நாலுந் தெரிந்தவர்கள். இதற்குச் செல்லாயி விதி விலக்கு!

'எல்லார்க்கும் உண்டு இலையும் பழுப்பும்!'— பழமொழி இது. செல்லாயி பழுத்த இலை. பசுமை

நரம்போடிய பழைய நாட்களை அவள் எண்ணிப் பெருமூச்செறியும் நிலையில் அவள் இல்லை. சுய நினைவு கிடையாது; கணப்புக் குழியின் தலைமாட்டில் படுத்துக் கிடப்பது போன்ற பிரமை ஒரு சமயம்; மறுகணம் சாரலில் அகப்பட்டுக் கொண்ட மாதிரி ஒரு நடுக்கம். நெற்றியும் நெஞ்சும் கூத்து மேடை ஆயின. அவள் கைப்பிடித்த மணவாளனும் ஈன்றெடுத்த தனயனும் தோன்றாமல் இருந்தனர். உள்ளத்திடைச் சூழ்ந்த இருள் குடிலையும் கப்பியது. பொக்கை வாய் ஓரங்களில் கண்ணீர் அணைந்தது. அவளையும் மறந்த நிலையில் அவளுள்ளே ஏதேதோ கனவுகளும் காட்சிகளும் சோபணம் கொட்டின.

உடலைத் தீண்டிய உணர்வு ஏற்பட்டதும், அவள் விழி மலர்ந்தாள்; அகல்விளக்கு எரிந்து கொண்டிருப்பதைக் கண்டாள்.

“நான்தான் முருகன், செல்லாயி அக்கா!” என்ற குரல் கேட்டது. வயது சென்றவன் ஒருவன் உட்கார்ந்திருந்தான். அவள் நிலை உணர்ந்து ‘சுக்குத் தண்ணி’ வைத்துக் கொணர்ந்திருந்தான் அவன்; பக்கத்துத் தோட்டம்தான் அவனுக்கு அரண்மனை ‘நல்ல மனம்’ தான் அவனுடைய சொத்து. போதாதா?

“ஒரு மெடறு குடிச்சுப்புடு, அக்கா!”

“யாதொண்ணும் எனக்கு வேணாம்!... நானு இனி யாருக்காக உசிரோடே வாழணும்?... இம்பிட்டுக் காலமா நானும் ஏதுக்கு பூமிக்குப் பாரமா இருந்தேன்னு எனக்கு மட்டும் படலை!...”

முருகனின் கைப் பிடியிலிருந்த லோட்டா நடுங்கிக் கொண்டிருந்தது.

"அப்படியெல்லாம் சொல்லாதே. தர்மராசா நம்பளுக்கு ஒறவா என்ன, நம்ப மனசுப்படி நடக்கறதுக்கு? ம்! . இதைக் குடிச்சிடு; அப்பாலே சுடு கஞ்சி கொண்டாரேன்."

அன்பு எதையும் கேட்பதில்லை என்பார்கள் ஆனால் அவளோ தண்ணீரைக் கொடுத்துக் கொண்டிருந்தாள். சற்று முன்னம் உணர்வு தப்பிய கோலத்தில் நடந்த போராட்டத்தையும் குழப்பத்தையும் எண்ணிப் பார்க்க முயற்சி செய்தது அவள் வரை விரயமே!

பிடிவாதத்துக்கு மருந்து கொடுக்கப்பட்டது,

"முன்னே போலே இப்ப என்னாலே ஓடித் திரிஞ்சு வேலை செய்ய ஏலல்லேயே, தம்பி! .. அன்னன்னையப் பொளுதைக் கடத்தோணுமே, என்னா செய்யிறது?"

சுள்ளி கொண்டு வருவாள்; புல்கட்டு சுமப்பாள்; இலைதழை சேகரம் செய்வாள்; அரிசி புடைப்பாள்; பாத்திரம் பண்டம் கழுவுவாள்; எடுபிடி அலுவல் அவளுக்கு அத்துபடி. செல்லாயியின் வாழ்க்கை அனுபவங்கள் இவை. சாண்வாயிற்றுக்குப் 'பதில்' சொன்ன உழைப்பின் சுருக்கம் இது.

"அக்கா' உன்னோட சொந்தக்காரரு கந்தசாமி கிட்டே நீ குடுத்து வச்சிருக்கிற பணத்தை வாங்கு; முதலிலே வைத்தியர் கிட்டே கைகாட்டி மருந்து சாப்பிடு; அப்பறம் வயத்துக்கும் வஞ்சனை செய்யாமச் சாப்பிடு!"

"ஆபத்து சம்பத்துக்கு ஒத்தாசையா இருக்கணுமின்னு இருபத்தேளு ரூவாய் என்னோட பணம்

அங்கே இருக்கு; அம்புட்டுத்தான்! எல்லாத்தையும் ஒரு முட்டாச் செலவு செஞ்சிட்டா அப்பாலே என்னா செய்யுறது, முருகா?''

''மரம் வச்ச மகராசன் தண்ணி ஊத்தமாட்டானா? ...உடம்பை அலட்டிக்காம இதை முதலிலே குடி, அக்கா.

''ம்!''— உந்திக் கமலத்திலிருந்து புறப்பட்டது!

## நான்கு

தாமரைக் குளம் குறுஞ்சிரிப்பை உதிர்க்கத் தொடங்கியது.

'குடுகுடு கிழவி' 'குறுகுறு'வென நடை பயின்றாள்; காளி ஆத்தாள் வழி மறித்தாள்; தேடி வந்த தெய்வத்தை நாடிச் சென்று கை தொழுதாள்; செல்லாயியின் பார்வையைக் கண்ணீர் மறைத்தது. 'ஆமா, அந்தத் தம்பி சொன்னது நூத்திலே ஒரு சேதிதான்; . அபயஞ் சமயத்துக்கிண்ணுதானே வாயைக் கட்டி வவுத்தைக் கட்டி காசு சேத்துக் குடுத்து வச்சிருக்கேன்; இதை விட வேறே கெட்ட வேளை வேணும்?...

இருபத்தேழு ரூபாய் அவள் முன் எடுத்து வைத்தாள் உருவில் காற்றில் அழகு காட்டிப் பறந்தது; மறைந்தது. சார் ஐயர் கடைப் பட்சணங்கள் தோன்றின. ஆடு இறைச்சி, நண்டு, வௌவால், மீன் முதலியனவும் நாக்கில் நீர் ஊறச் செய்தன; மாற்றுப் புடவை சொக்குப் பொடி தூவத் தவறவில்லை. துளைத்தெடுத்த இருமலைக் கூட ஒரு பொருட்டெனக் கருதாதவளாய் வழி மிதித்து விழி பதித்து

நடந்தாள் அவள். சோளக் கதிர்கள் உடலில் உரசின, வயல் வரப்புகள் 'பித்த வெடிப்பு'ப் பாதங்களை நோகச் செய்தன.

"வா, பெரியம்மாயி!"

"யாரது?"

"நாந்தான் கந்தசாமி!"

"ஒன்னைத்தா தேடி வந்தேன் தம்பி!"

"பையப் பாத்து இங்கிட்டாலே கோலி வா...!"
"ம் .. மேலுக்கு முடியல்லேப்பா...!"

"ஐய சேதி சொல்லப்புடாதா, பெரியம்மாயீ?"

"நாதி ஏது தம்பி?"

"ம்!"

"தம்பீ, உங்கிட்டே ஏம் பணம் எம்பிட்டு இருக்கு. நெனப்பு வருதா?"

"இருபத்தேழு ரூபா!"

"அம்பிட்டும் எனக்கு. இப்பமே வேணும்!"

"ஆ!"

"என்ன தம்பி, அப்படி மலைச்சிட்டே?"

"ஒண்ணுமில்லே!"

"பொறவு?"

"ஆத்தா வூட்டுக்குப் போன எம்பொம்பளை அடுத்த கிளமைதான் வருவா:

மதியத்துக்கு வீட்டுப் பக்கமா வா; உங்கச் செலவுக்கு ஒரு ரூபா தாரேன்!"

"என்னா தம்பி, புதுக் கதையாப் படிக்கிறே?"

"ஏன், பூராவும் தேவைங்கிறியாக்கும், பெரியம்மாயி?"

"ஆமா, ஆமா!"

"அதான் ஏலாது!"

"ஏனிங்கிறேன்?"

"நீ திடுதிப்னு வாயைப் பொளந்துப் புட்டா, அப்பாலே யாராம் ஒன்னைச் சுடுகாட்டுக்குத் தூக்கிக் கிட்டுப் போயி அடக்கம் செய்யிறதாம்?... ஒன் சொந்தக்காரன் நான்தானே செஞ்சாகணும்?... அதுக்கெல்லாம் செலவுக்கு வேணாமா?... இல்லே, தெரியாமத்தான் கேக்கறேன்!"

"ஐயைய்யோ!... ஆத்தாடி!"

நல்லவேளை, பூமி வெடித்து அவளை விழுங்கி விடவில்லை!

மிளகாய்ப் பாத்திப் பணியில் கவனம் பதித்திருந்த கந்தசாமி, குனிந்த தலை நிமிராமல் இருந்தான்.

"உசிரும் ஒடம்புமாத் திரியிறப்பத்தானே என் பணம் எனக்கு ஒதவோணும்?... நானு செத்துப் பூட்டா, அந்தக் கட்டையை அதோ அந்த எரியிற காளவாய்க்கு ஒணக்கையா வயசு காலத்துலே ஏதாச்சும் சாப்பிட்டுட்டுச் சாகறேன், தம்பி! ஒனக்குக் கோடிப் புண்ணியம் கெடைக்கும். என்னோட காசு பணத்தை ஒந்தலையைச் சுத்தி, ஏம் பக்கமா வீசிப் போடு!"—அழுதாள்!

கூன் விழுந்த முதுகு மேலும் குறுகி வளைந்தது பட்டிக்காட்டு மண்ணும், பாடுபட்டு உழைத்த உழைப்பும் அவளைக் கண்டு எள்ளி நகையாடினவோ? பின், ஏன் கந்தசாமி அப்படிச் சிரிக்கிறான்?... எரியும் காளவாய் ஏன் அவ்வாறு நகைக்க வேண்டும்?

''சரிப்பா தம்பி, சரி!... நீ எம்பணத்தை அப்படியே பத்தரமாய் பூட்டி வச்சுக்க; சல்லிக் காசு கூட எனக்கு வேணாம். நான் வாரேன்!... ம்ம்!... காளி ஆத்தா!...''

## ஐந்து

'மெய்யாலும் நானு இனிமே உசிரோட யிருக்கவே படாது!...'

கடந்த ஐந்து நாழிகைப் பொழுதாக செல்லாயிக் கிழவிக்கு இந்த ஓர் எண்ணம்தான் மேலோங்கி நின்றது. எட்டாத் தொலைவும், பயம் மண்டின காடும், விடுதலை தரவல்ல குன்றுகளின் கூட்டமுமே அவளுடைய சிந்தையில் சுழன்றன. வழி நாள் அவளுக்குப் பயம் காட்டிற்று; இது பரியந்தம் ஒண்ட இடம் தந்த அந்த மண் மாதாவுக்குக் கடைசி வணக்கம் சொல்லி விட்டுப் புறப்பட்டாள் அவள். 'நாளைக்கு நீ கட்டையைப் போட்டுப்பிட்டா, அனாதைச் சாவுன்னு சொல்லி ஒன்னோட சொந்தக்காரனான என்னைப் பாத்து ஊரு ஏசுமே?...', என்ற கந்தசாமியின் சொற்கள், அவள் காதுகளில் எதிரொலித்தன. 'என்னைப் படச்ச ஆத்தாவுக்குக் கூட இனிமே என்னாலே ஒரு தொல்லையும் இருக்காது!'

செல்லாயி நடந்தாள்; முருகன் எதிர்ப்பட்டான்; நடந்த கதைக்கு வியாக்யானம் கேட்டான்; சொன்னாள்.

"அக்கா, இதிலே ஏதோ சூது இருக்கு; அவனுக்கு இப்ப கை ரொம்ப எறக்கமாம்; ஊருக்காட்டிலே பேசறாங்க; காய்கறி லாவாரத்திலேயும் ஏகப்பட்ட நஷ்டமாம்; உன் பணத்தைச் செல வழிச்சிருப்பான்! அதுக்குத்தான் இம்பிட்டுத் தில்லு மல்லு! .. கந்தசாமி இப்பத்தான் ஒத்தக்கடை ரோட்டிலே ரேக்ளா வண்டியிலே போறானாம்...! பொட்டிக்கடை ராவுத்தர் சொன்னாரு! ...வருத்தப் படாதே, அக்கா. மணியக்கார ஐயா கிட்டே அந்திக்குக் கண்டு பேசி, இதுக்கு ஒரு வழி செய்யறேன் அதுவரை நம்ப வீட்டிலேயே வந்து படுத்துக்க!" என்று உரைத்தான் முருகன்.

"ராவுல கந்தசாமிப் பயல் வயல் காட்டுக்கு காவலுக்குப் போனதும், அவன் வூட்டை ஒடைச்சு எம் பணத்தை எடுத்துக்கிட்டு ஓடியாந்திட்டா என்னா?" என்று ஓடிய அந்த ஆலோசனை எங்கே? பொட்டுப் பொழுதுக்கு முந்திப் பிறந்த அந்த வைர நெஞ்சம் எங்கே?

"ம்!"

செல்லாயி சிரித்துக் கொண்டாள்.

"என்னா அக்கா, சிரிக்கிறே?"

"என்னை நெனச்சுச் சிரிக்கிறேன், முருகா!"

"என்னமோ, எனக்கு ஏதும் புரி மாட்டேங்குது!"

அவனுடன் அவள் நடந்து சென்று கொண்டிருந்தாள்.

## ஆறு

"இந்தா பாட்டி, உன் பணம்!" பவளக்கொடி நின்றாள்.

"ஏது கண்ணு?"

சிலையானாள் கிழவி.

"நீங்க கந்தசாமி அண்ணாச்சியிடம் கொடுத்து வச்ச பணந்தான் இது. இந்தா, எண்ணிக்க; சரியா இருபத்தேழு ரூபா இருக்கு. காலம்பற குடிக்காட்டிலே நீங்க ரெண்டு பேரும் தர்க்கம் பண்ணிக்கிட்டதை நான் சோளக்கொல்லை மறைவிலேருந்து ஒட்டுக்கேட்டேன். நீ வீட்டுக்குப் போனதும், அந்த அண்ணாச்சியோட வம்பு பண்ணி, பணத்தைக் கறந்துகிட்டு வந்திட்டேன்!"

"நீ மகராசியாக எளுதிக் கெடக்கணும், தாயே!"

நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் அவளுக்குக் கனவு போன்றே தென்பட்டது. ரூபாய்த் தாள்கள் சில, கிழவியின் மெலிந்த வலது கைக்குள் அடங்கின.

"இனி ஒரு பத்து இருபது நாளைக்கு வேணுங்கிறதை நல்லாச் சாப்பிடு, பாட்டி!" என்றாள் பவளக்கொடி.

"ஆமா ஆமா. நான் அக்காளைக் கவனிச்சுக்கிறேன், தங்கச்சி!" என ஆறுதல் தெரிவித்தான் முருகன்.

"இரு பவளக்கொடி, கடைலேருந்து சுடுத்தண்ணி வாங்கியாராச் சொல்றேன்! நீ தாம்மா இப்ப

எனக்குக் கைக்கு மெய்யான சாமி!''—வழிந்தது ஏழை மனம்.

அப்போது, ''பாட்டி, உங்க கந்தசாமி ரேக்ளா வண்டியிலேயிருந்து உருண்டு விழுந்து கெடந்ததைக் கண்டு மணியக்கார ஐயா வண்டியிலே தூக்கிப் போட்டாந்திருக்காக; வழியிலேயே உயிர் போயிட்டு தாம். அவரு பெண்சாதிக்கு சொல்லி அனுப்ப வேணுமாம்; பிணத்தை அடக்கம் செய்யணும்; தம் பிடி காசு அங்கே இல்லையாம்!...'' என்று துயரச் செய்தியை வெளியிட்டான் ஒருவன்.

''நெசம்மாவா?... ஐயோ... கந்தசாமி!...''

ஒப்பாரி வைத்தாள் கிழவி. அடுத்த இமைப் பொழுதில் செல்லாயி ஓட்டமும் நடையுமாகச் சென்று கொண்டிருந்தாள்.

'நானு ஒருத்தி உசிரோட இருக்கிறப்போ, எங்க கந்தசாமித் தம்பி எப்பிடி நாதியத்தவனாவான்...?''

இருபத்தேழு ரூபாய் கூட்டுச் சேர்ந்து சிரிக்கலாயின!

## ஏழு

பிறைக் கீற்றுக்கு அடியில் அமர்ந்திருந்தாள் பவளக்கொடி,

'காளி ஆத்தாள் விளையாட்டு வேடிக்கையாத் தான் அமைஞ்சிடுது!...ம்... என் தந்திரம் கடைசியிலே மண்ணாயிடுச்சு! ஆனா, பாவம், மண்

ணாகிப் போன கந்தசாமி அண்ணாச்சிக்கு பாட்டி கிட்டேயிருந்து நல்ல பேர் வாங்கிக் கொடுத் திட்டேன்!... கிழவிக்குத் தான் எவ்வளவு தங்கமான மனசு;...ம் ...இட்டவங்களுக்கு இட்ட பலன்!...என் சொந்தப் பணம் இருபத்தேழு ரூபாய் நஷ்டமானால் என்ன?... என் பேச்சைத் தட்டாமல் எங்க வீட்டி லேயே பாட்டி தங்கியிருக்கிறது எனக்கு என்னமோ மனசுக்கு ரொம்ப நிம்மதியாகத்தான் இருக்குது! ம்... என் கல்யாணச் சாப்பாடு சாப்பிட்டாத்தான் அதுக்கு நிம்மதி வருமாம்! எல்லாம் காளி அம்மன் கருணை தான்!...'

# 8. தவம்

பட்டுக்கோட்டை — அறந்தாங்கி நெடுஞ் சாலை!...

'ஃபிலிப்ஸ்' அசுரகதியில் ஓடிக்கொண்டுதான் இருந்தது. இன்னமும். வேகம் என்றால், அப்படி யொரு வேகம். ஆனால். ஒரு விசேஷம்: வேகத்திலும் ஒரு நிதானம் எச்சரிக்கைப் பண்போடு பிடிகொடுக் காமல் இல்லைதான்.

கிரமங்கலம்!—பராக்!

சோமையா இப்போது நுட்பமான எச்சரிக்கை பெற்றான். பிறந்துவளர்ந்த ஊருக்கு வழிவிட்ட- வழிகாட்டிய கப்பிப் பாதையில் 'ஹாண்டில் பாரை மடக்கினான். 'பெடல்' இயக்கமும் சீரடைந்தது. புதிய தியேட்டரை ஏறிட்டுப் பார்த்தபோது, அவ னுக்குச் 'சுரீர்' என்ற ஓர் உணர்வு சுட்டது. அன் றைக்கு மயிரிழை தப்பியிருந்தால், அந்தக் குடிகார லாரி டிரைவர் சட்டினி ஆக்கியிருப்பானே அவனை? யார் செய்த புண்ணியமோ, சோமையாவும் பாவத் தைச் சுமக்க நேர்ந்து விடவில்லை. அவன் தப்பி னான்; தில்லை நாயகியின் மாங்கல்யமும் தப்பியது. 'பாவம், தில்லை!' இமைகளின் கீழ் வரம்புகளிலே மெல்ல மெல்ல ஈரம் படர்வதை அவன் உணராமல் இல்லை தான்,

எதிரும் புதிருமாகக் கடைத்தெரு,

அந்தி மயக்கத்தில் கும்பல் கும்பலாகக் கூடியிருந்தவர்களுக்கு மத்தியில் புதிய அரசியல் கால்மாடு, தலை மாடு தெரியாமல் அகப்பட்டு விழித்தது.

ஆனால் சோமையா விழிக்கவில்லை. பதமாக இறங்கினான். கதர்ச்சட்டையில் படிந்துவிட்டிருந்த புழுதியைத் தட்டிவிட்டான். கழுத்து வேர்வையை வழித்தான். வண்டியைத் தள்ளியபடி நடந்தான்.

''வாங்கங்கறேன், தம்பி!''

சின்னப் பிள்ளையாகி, அடிக்கரும்பைக் கடித்துச் சுவைத்துக் கொண்டிருந்த சேர்வை இப்போது கூலி கொடுக்கப் போகிறாரா அல்லது கூலி கேட்கப் போகிறாரா?

'காளி காபி' சரக்குப் பெட்டியைத் திறந்தான் லைன்மேன் சோமையா. பெட்டி தள்ளாட்டம் போட்டதும் தான், சைக்கிளுக்கு ஸ்டாண்ட்' போடாதது விளங்கிற்று. குறுக்கு மறித்து நடந்து சென்ற அழகி ஒருத்தியும் வாண்டுப் பயலும் அவன் சிந்தையைக் கலக்கி விட்டிருக்கலாம்— 'பார்வதி!— பாபு!— கண்கள் இரண்டையும் மூடி, மெய்ம்மறந்த நிலையில் அவன் தன்னுள் தனக்குத்தானே— தன்னில்தானே முணமுணத்துக் கொண்டான். மூடியிருந்த கண்கள் மூடி கழன்று திறந்த நேரத்தில் அவன் நெஞ்சம், தில்லைநாயகி!... பாபு! என்று உருகியது; ஏக்கமும் தவிப்பும் அவனை ஆட்கொண்டிருக்க வேண்டும்!

''தம்பி!...'

சோமையா சுயப்பிரஞ்ஞை கொண்டான். கடமையில், காரியத்தில் என்றுமே அவன் விழிப்

போடு செயல்படுபவன்தான். என்றாலும், அவ னும் சராசரியான ஒரு மானுடப் பிண்டம் தானே? இளமையின் மிடுக்கு கம்பீரமாகத் துவங்க, வியா பாரப்பண்பின் பான்மை நிறக்க 'ஐயாவுக்கு வாடிக் கைப்படியே இந்த வாட்டியும் சரக்கு போட்டுப்பிடு றேன்." என்று 'தாக்கீது' கொடுத்தவண்ணம், ஒரு கிலோ 'ஏ' காப்பி, இரண்டு கிலோ ரோபஸ்டா, அரை கிலோ ப்யூர், கால் கிலோ சிக்கிரி, ஒரு பண்டல் தேயிலைத் தூள் என்று சரக்குப் பொட்டணங்களை கல்லாப்பெட்டியின் மேல் தட்டில் அடுக்கலானான். நிலுவைச் சிட்டையில் 'பார்ட்டி'யின் கையெழுத்தை யும் வாங்கிக்கொண்டான். விளக்கெண்ணெய் ஊற்றிக்கொடுத்தகையோடு கையைத் துடைத்து விட்டு, ஒரு தடவைக்கு இரண்டு தடவையாக எண்ணிச் சரிபார்த்து நீட்டிய போனவாரத்து நிலுவைப் பாக்கி ரூபாய் முப்பத்தெட்டு, பைசா நாற்பதையும் வாங்கி தன் பங்கிற்கும் கவனமாக எண்ணிச் சரிபார்த்த பின் தன்னுடைய 'பர்சு'க்குள் திணித்துக் கொண்டான் சோமையா. விடைபெற் றான். புதிய வாடிக்கை இந்தச் சனிக்கிழமையும் குதிரவில்லை. அடுத்த வாரமும் முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் முதலாளிச் செட்டி யாருக்கு அவன் பேரில் விழுந்திருக்கின்ற நல்ல அபிப் பிராயம் மேலும் வல்லமைபெற வாய்க்கும்!— உண்மைதான்!

ஆவணத்தாங் கோட்டைச் சாலை வந்தது.

வாரத்துக்கு வாரம் புதிது புதிதாகக் கடை கண்ணிகள் மாயாஜாலம் போல முளைத்துவிடுகின் றவே! அண்டையில் டூரிங் சினிமா வேறு ஆரம்பமாகி விட்டதல்லவா?

சோமையா பட்டுக்கோட்டையில் சாயா அருந்தியவன் இருபத்லைதந்து தொலைகல் மிதித்து வந்திருக்கிறான். அடுத்த டையை போஸ் அடித்துக் கொடுத்துத்தான் சாப்பிடுகிறான். விதிமுறையின் ஒழுங்கில் அவனுக்கு ஒரு நம்பிக்கை; ஓர் ஈடுபாடு.

அவன் இனி 'ஸேல்ஸ்மேன்' சோமையா.

சில்லறை வியாபாரம் சில்லறைக் காசுகளைக் கூட்டியது.

மின் விளக்குகள் எரியத் தலைப்பட்டன.

மின்னல் பாய்ந்த மாதிரி அரை வினாடி மெய் சிலிர்த்து நின்றான் அவன். மண் வாசனையில், கூப்பிடு தொலைவிலிருந்த அவனது பிறந்த மண்ணின் நெடியை அவனால் அப்பொழுதுதான் உணர முடிந்தது போலும்!

வேலு பூ கொடுத்தான். இரண்டு முழம் செவந்தி; கொஞ்சம் கனகாம்பரம்; துளி கதம்பம். இருபத்தைந்து காசுக்குக் கிராக்கி 'என்று சொல்லலாமா?

பூப்பொட்டலத்தை வாங்கினான் சோமையா. பூக்கள் மணத்தன. நறுமணத்தின் பின் புலத்திலே தில்லைநாயகியின் அன்பு முகம் ஆசை முகமாகி நெடூ பரப்பியது. 'தில்லை!'— அவன் தன்னை மறந்த லயத்தில் சொக்கிப்போனான். தில்லை நாயகி அழகு காட்டினாள்— நெஞ்சுக் குழியில் அன்பு கூட்டினாள்— மன வீணையில். 'என்னோட தலையெழுத்தின் ஐந்தொகை கணக்கிலே எனக்கின்னு ஏதோ

கொஞ்சம் புண்ணியமும் வரவு ஆகியிருக்கவேணும், அதனாலேதான், எனக்கு அன்பு காட்ட இன்னொரு மகராஜி கிடைத்தாள். என்னோட பாபுவுக்கு இன்னொரு அம்மா கிடைச்சிருக்கா!... நன்றியறிவு கண்களில் பொடித்துக் கசிந்தது.

இப்போது, அவன் அந்தப் பூப்பொட்டணத்தை மூக்கின் முனையில் வைத்து நுகரலானான். அவனுக்கு மேனி நடுங்கத் தலைப்பட்டது; புல்லரிப்பும் கிளர்ந்தெழுந்தது. ஆமாம்; பார்வதி பூப்பொட்டலத்தைக் கையேந்திப் பெற்றுக் கொண்டவுடன் இவ்வாறுதான் மலர்களின் வாசனையை அனுபவிப்பாள். பார்வதி என்றால் பார்வதிதான்!... ''பார்வதி! என் கனவுக்கிளியே! என்னோட பிரியமான அன்பரசியே!''— உயிர் விம்மியது; பொருமியது; செருமியது. என் பார்வதி இப்படித் திடுதிப்பென்று தெய்வமாக ஆவதற்கென்றுதான் அப்படிப் பெண் தெய்வமாகி எங்களது தாம்பத்யத்தை வழி நடத்திக் காட்டினாளோ?'...

வாழ்க்கை ஒரு விடிகாலைக் கனவுதானோ?

பார்வதி அவன்வரை ஒரு கனவுக் கிளியாகத் தான் அழகுகாட்டி விளையாடினாள். முறைமைப் பெண் ஆயிற்றே? கனவுக்கிளி ஆசைக்கிளியாக்கிக் கொள்ள அனுசரணை புரிந்த அதே விதி, அந்த ஆசைக்கிளியை மறுபடி அவனுடைய கனவுக்கிளியாக உருமாற்றித் தொலைக்க வேண்டுமா?

உள்ளம் வீரிடுகிறது.

விதிக்கு அழத் தெரியாதோ?

மரணப்படுக்கை,

அவல ஓலங்கள்.

சூன்யத்தில் ஊசலாடும் 'பாசக்கயிறு'!

"பார்வதி...ஐயோ, பார்வதி!" என்று தலையில் அடித்துக் கொண்டான் சோமையா.

"அம்மா!... அம்மா!" என்று பாபு மழலை அழுகையால் வெடித்தான்.

"அத்தான் விதரணை புரிஞ்ச நீங்களே இப்படி அழுதால், அப்பாலே நம்ப பாபு—என் பாபு—உங்க பாபு பாவம், என்ன செய்வான்? அத்தான் நம்ப பாபுவுக்காகவாச்சும்— அவனை வளர்த்து ஆளாக்கணும் என்கிற பாசக் கடமையை உத்தேசிச்சாவது நீங்க என்னை மாதிரி நல்லவள் ஒருத்தியை ரெண்டாந்தாரம் பண்ணிக்கிட்டுத்தான் ஆகணும் கட்டாயம்!"

பாபு கொடுத்து வைத்தவன். அவனுக்கு அம்மாவின் இறுதி முத்தமாவது கிடைத்தது.

'பார்வதி!...'

பார்வதியின் ஸ்தானத்தில் தில்லை நாயகி அமர்ந்தாள்.

பார்வதி கடைசியாகக் குறித்த மாதிரி, சோமையா தன் அருமை மகன் பாபுவுக்காக வேண்டித்தான் தில்லைநாயகியைப் பெண் பார்க்கத் துணிந்தான். பூவை மாநகரிலிருந்து பேராவூரணிக்குப் புறப்பட்டான். அவளைப் பெண் பார்த்தான். அந்தப் பார்வையில் அனுதாபமும் அன்பும் ஒன்றையொன்று போட்டியிடக் கண்டான். அழுகைக்கு ஊடே சற்றே மலர்ச்சி எட்டிப் பார்க்க முயன்றது.

"தில்லைநாயகி. நான் உன்னை இரண்டாந்தாரமாகக் கல்யாணம் பண்ணிக் கொள்ள முன் வந்தது எனக்காக அல்ல என் மகன் பாபுவுக்காக—என் பார்வதியின் பாபுவுக்காகவே தான்! உன்னோட முதல் பொறுப்பு என்ன தெரியுமோ முதலிலே என் பாபுவுக்கு நீ அம்மா! அடுத்தபடிதான் நீ எனக்குப் பெண்சாதி! சம்மதமா? சொல்" என்று சத்திய தருமத்தைப் பேசவிட்டான் அவன்.

'நான் முகமறியாத என் உடன் பிறவாத அக்காள் பேரிலே ஆணை வச்சுச் சொல்றேன்; அப்படியே நடப்பேன்!"

உத்தாரம் மொழிந்தவள் அல்லவா தில்லை நாயகி? ஏழை வீட்டுத் திருமகள்.

பாபு என்றால் அவளுக்குக்கொள்ளை கொள்ளையான பாசம் ஆயிற்றே!

அதற்குள் ஒரு வருஷம்—பன்னிரண்டு மாதங்களா பூஞ்சிட்டாகப் பறந்தோடி விட்டிருக்கின்றன.

'பார்வதி;... பாபு!... தில்லைநாயகி!...

சுடுநீர் மணிகள் சுட்டன; ஒலித்தன.

"அண்ணாச்சி!"

போஸ் ஐந்தரைப் பெட்டி முறுக்கு பாக்கெட் ஒன்றினை அவனிடம் சமர்ப்பித்தாள். மெய் சிலிர்த்தது. பனிவாடை கூடுதல் தான். மாதச்சம்பளம் போக, வெளியூர் வியாபாரத்துக்குச் செல்லும்போது கிடைக்கின்ற 'படி, ரூபாய் மூன்றில் படிக்குப் பாதி காலி—ஆகட்டுமே!

வரும் விதி இராத்தங்காது என்பார்கள்.

ஆனால் வந்த முன் நிலவும் இராத் தங்காதது தானே?

'டைனமோ' தயார்.

'ஃபிலிப்ஸ்' காரினும் கடிது சென்றது.'' (கார்—மேகம் மட்டிலும் அல்லவே)

சோமையா சுருள் அலை படிந்த முடி இழைகளை ஒரு கையால் நீவி ஒதுக்கி விடுவதும், மறு கையால் சட்டைப் பையில் துருத்திக் கொண்டிருந்த 'மணி பர்ஸை'த் தடவிப் பார்ப்பதுமான ஒரு சித்து விளையாட்டில் ஒன்றிப் போயிருந்தான். வேர்வைக்கென்ன கேடு. பாபுவைப் பார்க்க வேண்டாமா? தில்லைநாயகி பாவம், வழிமேல் விழி வைத்து என் பார்களே, அப்படிக் காத்திருப்பாளே,... தவம் இருப்பாளே?...தவம் எனில், அவ்விதம் ஒரு தவம்—ஆன்ம நேயத்தவம்; ஆத்ம சமர்ப்பணத்தவம்.

அன்பு ஒரு தவம் இல்லையா?

பாசம்...?

அதுவும் தான்!

அப்பால், நேசம்...?

நேசமும் ஒரு தவம்தான்!

அன்பு, பாசம், நேசம் என்னும்படியான இம் மூன்று புள்ளிகளும் அமைகிற அல்லது. அமைத்துக் கொடுக்கிற முக்கோணம் வெறும் முக்கோணமல்ல—சிவப்பு முக்கோணம் தான்வாழ்க்கையின் அல்லது வாழ்க்கைக்கான தோற்றமா? தத்துவமா? நிய தியா?

காலம் இறந்த காலத்துக்கும் நடப்புக் காலத்துக்குமாகக் கண்ணாமூச்சி ஆட, இருளும் ஒளியும் காலத்துக்கும் தூரத்துக்குமாக கண் பொத்தி விளையாட, இவ்விரு விளையாட்டுகளுக்கும் ஊடாக ஒரு விளையாட்டுப் பிள்ளையாகி சைக்கிளை அழுத்தி மிதித்துக் கொண்டேயிருந்தான் அவன்—சோமையா.

அறந்தாங்கி எல்லை ஆரம்பம்.

அந்தக் கட்டடம்; அறிஞர் அண்ணா அரசாங்க மருத்துவமனை.

'பார்வதி!'

நிதானம் தடம் புரண்டு, தடம் கண்டது.

அரிமளத்தில் பிறந்த புண்ணியவதி பார்வதி அவளுக்கு இங்கே சாவு எழுதிப் போட்டிருக்கிறது. ஒரு நாளா, இரண்டு நாளா? வள்ளிசாக மூன்று முழு மாசங்கள் விதியோடும் வினையோடும் போராடித் தோற்றவள் அவள். 'பாவி நான்!'

ஒரு தினம்:

தில்லைநாயகியை மணம் முடித்துக்கொண்ட புதிதில் அவளை இங்கே வைத்தியத்துக்காக அழைத்து வந்திருந்தான் அவன்.

கண்ணீர் கதை சொன்னது.

கண்ணீர் கதை கேட்டது. 'அக்கா...அக்கா!'

ப்பூ!...மூன் நிலவின் ஜம்பம் இவ்வளவுதானா?

அது; 'எக்ஸெல் தியேட்டர்!'

நாளை ஞாயிற்றுக்கிழமை. லீவு நாள். தில்லை நாயகியை அவசியம் அழைத்துவந்து படம் காட்ட வேண்டும்!— பாபு இல்லாமலா? ஹாய் பாபு!...படு சுட்டியடா, பாபுப்பயலே!...

அவர்கள் படம் பார்த்து ஐந்தாறு மாதங்கள் இருக்க வேண்டும். என்ன செய்யட்டும்?...வாழ்க்கை ஒரு சோதிப்பேதானோ?

அந்தச் சந்துக்குப் பெயர்தான், கள்ளர் சந்து. இந்தக் கள்ளர்கள் மறவர் இனம்.

சோமையா நிதானம் ஆனான்.

இங்கேதான் அவன் வீடு; வாடகை வீடு.

பெண்டாட்டியையும் பிள்ளையையும் பார்த்து விட்டு அகம்படியர் தெருவில் பாய்ந்து சந்தைப் பேட்டைக் கடைக்குப் பறந்து விட்டால் என்ன?

ஊஹும்!

கூடாது!

பணம் இருக்கிறது.

சந்து முனையில் 'சிவனே' என்று கால் கடுக்க நின்று ஒற்றைக்கால் தவம் இயற்றும் அந்த வீதி விளக்கின் விதி அப்போது இருளடைந்திருந்தது.

என்றாலும், ஒரு நிதானத்துடன் பெடலை அழுத்தி மிதித்தான்—நேர் வசத்தில்.

'அடி, என்னடி ராக்கம்மா!' என்று பாட்டைக் கொலை செய்த பாவத்தைச் சுமந்து கொண்டு— ஆனால் உடலைச் சுமக்க வகை புரியாதவன்போன்று

யாரோ ஒருவன் தள்ளாடித் தள்ளாடி எதிரே அப்படியும் இப்படியுமாக 'உப்புக் கோடு' மறித்தான்!

சோமையாவால் சமாளிக்க முடியாமல் போய்விட்டது. ஆகவே ஒரு பாவத்தைத் தவிர்த்துக் கொண்ட மனிதாபிமானத்தோடு அவன் புழுதியில்—இருட்டில் நிலைபுரண்டு விழுந்தான்; இடுப்பில் வசமான அடி. வலியைச் சட்டை செய்கிற விவேகமான வேளையா அது? சட்டையை உதறிவிட்டு எழுந்தான்; சைக்கிளைப் பரிவுடன் தூக்கினான்.

அப்போது:

''சோமையா!'' என்ற விளிப்பு இடறியது. விளித்தவர் அவனுடைய ஊர்ப் பேர்வழி. லேவாதேவிக்காரர். பிராமிஸரி நோட்டின் பேரில் தூங்கும் கடனான ரூபாய் இருநூற்றி ஐம்பதைப் பற்றிச் சற்றே கடுமையான முறையில் நினைவூட்டினார்.

சோமையா ரோசக்காரன். ஒலித்த தொனியின் கடுமையை அவன் எதிர்பார்த்திருக்கவில்லை. ''அண்ணாச்சி, அளந்து பேசுங்க. பார்வதியோட வைத்தியச் செலவுக்காக ஆபத்துக்கு உதவின உங்களை இனியும் நான் சோதிக்க மாட்டேன். தலையை அடகு வச்சானும் ஒரு வார கெடுவிலே உங்க கடனை பைசா சுத்தமாய்த் தீர்த்துப்புடுறேன்;...'' என்று ரோசம் பொங்கச் சொல்லி விட்டுப் பறந்தான் அவன்.

'கானி காபி' மணத்தது. அதற்குச் சிரிக்கவும் தெரிந்திருந்தது. விளம்பரப் பெட்டிப் பூவை எவ்வளவு அழகாக பிஸினஸ் சிரிப்புச் சிரிக்கிறாள்!

செட்டியார் வெற்றிலைப் பெட்டியை லாகவமான சாதுர்யத்தோடு திறந்தவர் 'டபக்' கென்று மூடிவிட்டு, "சோமையா, வாப்பா!' என்று முகமன் மொழிந்தார்.

'வளமையைக் காட்டிலும் இன்னிக்கு ஒரு அரை அவர் லேட்! எந்நேரம் ஆனாலும் சரி, கடைக்கு வந்து கணக்கு வழக்கைச் சொல்லி, பணம் காசை ஒப்படைக்காமல் நீ வீட்டுக்குப் போற பழக்கம்தான் உனக்கு எப்பவும் இருக்காதே? அதிலே நீ ஒருத்தன் தான் ரொம்பக் கண்டிப்பு!" என்றார்.

"நேரே கடைக்குத்தானுங்க வர்றேன். ஐயா!"

"ரைட்!... வந்து... லேவாதேவி சூனா—பானா உன்னைத் தேடி வந்தாக!"

"அப்படீங்களா? வழியிலேயே கண்டுகிட்டேன்; தாக்கலும் சொல்லிப்பிட்டேனுங்க!"

செட்டியார் நீளமாக மூச்சு விடலானார். அது நெடுமூச்சு. "சரி, சரி. நம்ப பொழைப்பைப் பார்ப்போம்!" கையொப்பம் பெற்று கொடுக்கப்பட்ட சரக்குகளின் விவரம் அடங்கிய நோட்டை எடுத்துப் புரட்டினார் அவர்.

விற்பனை—வாபஸ் விவரங்களை தொண்டையை உச்சப்படுத்திச்சொன்னான் சோமையா. 'இன்னிக்கு நடந்திருக்கிற வியாபாரத் தொகை நூற்றி எண்பதும் சொச்சத்தைக் கண்டு முதலாளி ஏகமாய்ச் சந்தோஷப் படுவாங்க. இந்தப் புது வருஷத்திலேயாச்சும் சம்பளம் உயர்த்துறாங்களான்னு பார்ப்போம்!

"டோட்டல் ரூவா நூத்தி எண்பது, பைசா பதி னைஞ்சு வருது சோமையா!"

பள்ளிக் கணக்கு புள்ளிக்கு உதவவில்லையா இங்கே?

நல்ல காலம்; க்ரைண்டரின் குரல் வளையைப் பிடித்து விட்டான் எடுபிடி.

"கரெக்டுங்க, முதலாளி!" என்று பெருமிதம் பொங்கிய வெற்றிச் சிரிப்பைச் சிந்தியவாறு, கண் களைத் தாழ்த்தி சட்டைப் பைக்குள் கையை நுழைத் தான் சோமையா.

மறுகணம்;

"ஆ!" என்று வீரிட்டான் சோமையா.

ஐயோ, தேள் கொட்டி விட்டதா, என்ன?

செட்டியார் விழித்தார்.

சோமையாவும்தான் விழிக்கிறான். வேர்வை ஆழப்புனலென ஓடுகிறது. கண்களைக் கட்டிக் காட் டில் விட்டமாதிரி இருக்கிறது தவிக்கிறான். விதி இருந்திருந்து தன்னோடுதான் கண்ணாமூச்சி ஆட வேண்டுமா? இனிமேலும்? — ஐயோ, ஆறுமுகப் பெரு மானே!...

"சோமையா!"

கண்கள் பொடித்திட ஏறிட்டுப் பார்த்தான் சோமையா. "ஐயா, இதோ நிமிஷத்திலே வர்றே னுங்க," என்று சொல்லி 'டார்ச் லைட்'டை எடுத் துக்கொண்டு பறந்தான். பறந்தவன் திரும்பிப்

பறந்தே வந்தான். வந்தவனின் கைகால்கள் 'வெட வெட'வென்று நடுங்கின.

செட்டியாரின் கறுத்த முகம் மேலும் கறுத்தால் எப்படி இருக்கும்?—பரிதாபம்! "என்னப்பா நடந்திச்சு?"; என்று காட்டமாக விசாரித்தார்.

'குடிமகன்' கூத்தைச் செப்பினான் சோமையா. நேர்கொண்ட பார்வையைச் செலுத்தி, "முதலாளி ஐயா, தப்பு என்னோடதுதானுங்க. நிலை தடுமாறி விழுந்திட்ட நான் பதட்டத்திலே அக்கம்பக்கத்திலே பார்க்கத் தவறிவிட்டேன். அந்த நேரம் பார்த்து, சூனா பானா வேறு வந்து 'கடுசாப்' பேசினார். எனக்குப் பொறி கலங்கிடுச்சி. டைனமோ பழுது பட்டுப் போனதுகூடத் தெரியாது ஓடியாந்திருக்கேன் நான்!... உங்ககிட்டே வேலைக்கு வந்த இந்த ஆறு வருஷத்திலே நான் செஞ்ச முதல் தப்பு இதுதானுங்க! தயவு பண்ணி, என்னை நம்பி, இந்தத் தொகையை என் பேரிலே..." என்று பம்மினான்!

முதலாளி சீறினார்

"ஐயா, அந்தத் தொகையை பற்று எழுதிக் கிடுங்க. என் அதிர்ஷ்டம்தான் ஊர் அறிஞ்சதாச்சுங்களே, ஐயா! ஒண்ணும் யோசிக்காதீங்க. முதல் சம்சாரத்துக்காகவும் இப்போ ரெண்டாம் கல்யாணத்துக்காகவும் ஏறியிருக்கக் கூடிய பற்றுவழி ரூபாய் ஆயிரத்து முன்னூறுக்கு மாசாமாசம் இருபத்தஞ்சு மேனி பிடிச்சுக்கிடுறீங்க. இதுக்கும் சேர்த்து வேணும்னா முப்பதாய் வேணும்னாலும் பிடிச்சுக் கிடுங்க, முதலாளி!" என்று உயிர் துவள வேண்டினான் சோமையா.

செட்டியாருக்குத் தன்னுடைய 'ட்ரேட் மார்க்' நெடுமூச்சைக் கொட்டி அளப்பதைத் தவிர, வேறு மார்க்கம் ஏதும் பிடிபடவில்லை போலிருக்கிறது!

"வாங்க, அத்தான்!"

உயிரை உயிரால் வரவேற்பது போலவே வர வேற்றாள் தில்லைநாயகி. ஒளியில் மிதந்தாள், மஹா லக்ஷ்மியாக!...

'ஊம்' என்று ஒப்பனைக்குத் தலையை உலுக்கி விட்டு சாரையாகப் படிதாண்டி இரண்டாம் கட்டில் வந்து நின்றான் சோமையா. கால்கள் தரையில் பாவ ஒப்பவில்லை. துடித்தான்; துடியாய்த் துடித் தான். தரைமீன் துடிக்கும் பாருங்கள், அந்தப் பாங்கில்!

மனத்திற்கு மனம்தான் சாட்சி என்பார்கள்.

அந்த மனம் சாட்சி வைத்து—சாட்சி சொல்லிச் சுட்டதோ அவனை? துவள்கிறானே சோமையா!—பாவம்!

பாவமாவது, புண்ணியமாவது!...

அவன் பிழையோ அன்றி; விதியின் பிழையோ' பிழை ஒன்று என்னவோ நடந்தது நடந்துவிட்டது' முதலாளிச் செட்டியாருக்குச் சேர வேண்டிய அவரு டைய பணம் ரூபாய் நூற்று எண்பது, பைசா பதி னைந்தையும் சோமையா ஏமாந்துவிட்டான். அவன் ஏமாந்த தவற்றுக்காக செட்டியார் ஏமாறமுடியுமா? ஏமாறுவாரா? மேற்படி தொகை சோமையாவின் கடன் சுமையோடு சுமையாக ஏறிவிட்டது.

ஒரு தவறு நடந்தது போதாதா?

சோமையா தவித்தான். பட்டகூடு இருதயத்தைத் தகித்தது. மனச்சான்றின் ரணம் ரத்தக் கண்ணீராக மாலை தொடுத்தது. 'தில்லை!... தில்லை!' நெஞ்சின் பாரம் அற்பசொற்பமல்லவே? ஆகவே, மண்டை வலித்ததில் வியப்பு இல்லைதான். திருஷ்டியைத் திசை திருப்பினான்.

அங்கே—!

பார்வதி புன்னகையும் புது நிலவுமாக அதோ. 'தரிசனம்' தந்துகொண்டிருக்கிறாள்!

படத்தைச் சுற்றிலும் புதிய பூமாலை!

அவன் அறிந்த கதைதான் இது!

தில்லைநாயகி புதிய பதவி ஏற்று இந்த வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்த நாள் முதலாக, 'பார்வதி'க்கு நித்தநித்தம் மலர்மாலை இட்டு, தானும் கும்பிட்டு தன் பாபுவையும் கும்பிடச் செய்துவருகிறாள் தில்லைநாயகி!

சோமையாவின் ஆன்மா ஊசலாடியது. 'தில்லை! தில்லை!...' அவன் தன்னுணர்வு கொண்டான்; முகத்தை டவலால் துடைத்தான்; புன்சிரிப்பை வரவழைத்துக் கொள்ளவும் தவறிவிடவில்லை. "தில்லை!" என்று கூப்பிட்டான்,

தூணோடு தூணாக சிந்தனை வயப்பட்டு நின்ற தில்லைநாயகி ஓடி வந்தாள். குறுஞ்சிரிப்பும் துணை வந்தது. "அத்தான், உங்களைப் பார்க்கிறதுக்கே எனக்குப் பயமாய் இருந்திச்சு; அதனாலேதான் ஒதுங்கிட்டேன்!" என்றாள், குறும்புச் சிரிப்புடன். "உடம்புக்கு ஒண்ணுமில்லீங்களே?"

தாலிக்கயிற்றில் ஆடிய தாலிப்பொட்டை ஆட்டி விட்டான் சோமையா. "சும்மா தலைவலி அவ்வளவு தான்!" என்று கூறினான். போலித்தனமான ஒரு சிறிப்பு கைகொடுத்தது. வேறென்ன செய்வான்? நான் ஒருத்தன் அனுபவிக்கிற வேதனை போதாதா? அவள் வேறேயா கஷ்டப்படணும்?

அந்தத் தாலி எவ்வளவு ஒயிலோடு சிரிக்கிறது.

ஏன் அப்படி?

சோமையா தத்தளித்தான். தாலியைக் கோர்த்துப்போட ஒரு தாலிச்சங்கிலி செய்துவிட வேண்டுமென்று எவ்வளவு ஆசைப்பட்டான்! பார்வதி அணிந்திருந்த அந்த ஒன்றரைப் பவுன் தாலியை அழித்து சன்னமான ஓர் ஒற்றைவடச் சங்கிலி செய்து அதில் தாலியை இணைத்து, தில்லைக்குப் போட்டு அழகு பார்க்கலாமென்பது அவன் எண்ணம். ஆனால், தில்லைநாயகி ஒப்பமறுத்தாள். கடன் பிரச்னைகளைப் பகுதி பகுதியாகக் கட்டமுயலலாம்! —மார்ச் மாதத்திய சீட்டுக் குலுக்கலில் 'கொசிறு' தள்ளி ஏலம் எடுத்தால், எப்படியும் குறைந்தபட்சம் முந்நூறுக்குத் தேறி வரும். தாலிச் சங்கிலி செய்து விடலாம். ஆனால், சோதனையாக இப்போது அனாமத்தாகவும் அனாவசியமாகவும் அநியாயமாகவும் ரூபாய் நூற்றி எண்பதும் சொச்சம் விரயமாகி விட்டதே! இந்த லட்சணத்தில் ஊனா—பானா கெடுபிடிக்கு எப்படி 'மால்' பண்ணுவதாம்? நூற்றி இருபது ரூபாய்ச் சம்பளத்தில் எப்படிக் குடும்பம் நடத்திக் குப்பை கொட்டுவதாம்? ஆறுமுகப் பெருமானே....!

"அத்தான்!"

சோமையா பதறிப்போய், தில்லையை நெருங்கி அவளுடைய கண்ணீரை மன நெகிழ்ச்சியுடன் துடைத்துவிட்டான். ஒரு சமயம், தான் நோயும் பாயுமாக வீழ்ந்ததைக் கண்டு, தில்லை உயிர்க்குலை நடுநடுங்கத் துடித்த துடிப்பின் நேசத்தை அவன் அந்தரங்கம்தான் உய்த்துணர முடியும்!

பூவை அடைந்தது பூ.

பசிக்குமே? சாப்பிடவாங்க!''

''நீபோய் பிளேட்டைக் கழுவி வை. நான் பழசை உடுத்திக்கிட்டு வாரேன். ஆமா, பாபு தூங்கிட்டானா, தில்லை.

''கொஞ்சம் முந்தி அவன் பாட்டுக்கு கள்ளர் சந்து முனையிலே ஒண்டியா நின்னு இருட்டிலே என்னத்தையோ பொறுக்கி விளையாடிக்கிட்டு இருந்தான். தேடிப்போய் அவன் முதுகிலே ஓங்கி நாலு அடி வச்சுத் தூங்கச் செஞ்சேனுங்க, அத்தான்!''

நிதானம் காத்து உரைத்தாள் தில்லைநாயகி.

சோமையாவால் நிதானத்தைக் காக்க இயல வில்லை. மறுகணம் அந்தக் காட்சி மனக்கண்ணில் விளையாடியது; விளையாட்டுக் காட்டியது.

பாபுவுக்கு 'விடேன்—தொடேன்' என்று மூன்று நாள் விஷஜுரம் பிடித்தது.

அவ்வளவுதான்.

தில்லை உருகினாள்; உருக்குலைந்தாள். முருகன் படத்தின்முன் மண்டியிட்டு, ''முருகா, எங்களுக்கு இருக்கிற ஒரேயொரு ஆறுதல் எங்கள் பாபுதான். இனியும் நீ எங்களைச் சோதிக்கிறது நியாயமாகுமா,

தர்மமாகுமா? எங்க ரெண்டுபேர் ஜீவனும் எங்க பாபு கையிலேதான் இருக்குது என்கிற துப்பு உனக்குப் புரியாததா, என்ன?'' என்று நெக்குருகிக் கதறினாள்.

சோமையா சுயநினைவை மீட்டுக் கொண்டான். அமைதியான கவலை துலங்கிட, ''பாபுவோட சேட்டை வரவர ஜாஸ்தி ஆகிட்டுத்தான் வருது! அடிச்சால்தான் படிவான். சரி, சரி நீ போய்ச் சாப்பாடு ரெடி பண்ணு, தில்லை!'' என்றான்.

பாபுவின் புத்தகம் இடறியது!

தில்லைக்கென்று அப்படியொரு சிரிப்பா?...

அதோ, பார்வதி!...

பார்வதியை—பார்வதியின் அமரப் புன்னகையை தொடுத்தவிழி எடுக்காமல் பார்த்தான் சோமையா. பார்வதி விதியாகச் சிரிக்கின்றாளா? அவளுடைய கழுத்துத்தாலி அவன் உள்ளத்தில் ஊசலாடியது. நெஞ்சு வலியெடுத்தது. பற்றிக்கொண்டான் கெட்டியாக. அந்தத் தாலியைக் காணத் துடித்தது அவன் மனம். உயிர் பிரிந்த பார்வதியை மீண்டும் உயிரும் உயிர்ப்புமாகத் தரிசிக்கப் போகும் பாக்கியம் பெற்றவனைப்போல ஓடினான். ஓடின விழி வெள்ளத்தை ஓட்டிவிடக்கூட சிந்தை இழந்தான் அவன்.

அலமாரி வாய் பிளந்து கிடந்தது,

அடங்காத—அடிக்க முடியாத ஆர்வத் துடிப்போடு அலமாரியின் அடித்தட்டைத் துழாவினான் சோமையா. ''அத்தான் பார்வதி அக்காளுடைய இனிய ஞாபகத்துக்கும் அமர நினைவுக்கும் ஒரு

சாசுவதமான அடையாளமா அக்காவோட இந்தத் தாலி எப்பவுமே நம்மகிட்ட இருக்கவேணுமுங்க, அத்தான்!'' என்று கண்ணீரும் கம்பலையுமாக வேண்டிக்கொண்ட தில்லைநாயகியின் சொற்கள் எதிரொலித்தது.

எவர்ஸில்வர் சம்புடம் விழுந்தது. அதில்தான் பார்வதியின் அந்தத் தாலி இருக்கிறது!

ஆசையோடு சம்புடத்தை எடுத்து, ஆர்வத்தோடு திறந்தான் அவன்.

எங்கே அந்தத் தாலி?-

"ஐயோ, பார்வதி!''

ஓலம் பரப்பினான் சோமையா. சூன்யத்தைச் சூறையாடுபவன்போன்று வெறித்து நோக்கினான் புத்தி பேதலித்து விட்டதா? சமையற்கட்டுக்கு ஓடினான்.

''தில்லை? என்னோட அன்புப் பார்வதிக்கு நான் கட்டின அந்த மாங்கல்யத்தைக் காணோமே? எங்கே போயிடுச்சு அது?'' என்று கூவினான்.

தில்லை நாயகி ஏன் மௌனம் சாதிக்கிறாள்?

''ஊம், சொல்லு!''

''அத்தான், கோபப்படாமல் கேளுங்க. 'கல்யாணம் கட்டி ஒரு வருஷம் ஆகியும் இன்னமும் தாலிக் கயிற்றை மாற்றி, ஒரு தங்கச் சங்கிலி பண்ணி அதிலே தாலியைக் கோத்து ஜம்னு போட்டுக்கிட வழக்கம் தெரியலையே உனக்கு?'' அப்படின்னு அக்கம்

பக்கத்திலே உள்ள பொம்பளைங்க சதா என்னை நையாண்டி பண்ணிக்கிட்டே இருந்தாங்க. எனக்கு ரோசம் தாங்கலீங்க. ஆனதாலே சங்கதியை நீங்க திரும்பினதும் சொல்லிக்கிடலாம்னு, பார்வதி அக்காளோட அந்தத் தாலியை அழிச்சு, எனக்குச் சங்கிலியை பண்ணும்படி பக்கத்துத் தெரு கணபதிப் பத்தர் கிட்டே மத்தியானம் ஒப்படைச்சிட்டேனுங்க, அத்தான்!''

தில்லையா இவ்வாறு பேசுகிறாள்? அவளா இப்படி நடந்திருக்கிறாள்?

சோமையா தன்னை மறந்தான், "அடி பாவி! இப்படிப்பட்ட ஈவிரக்கமில்லாத ஒரு செயலைச் செய்யுறத்துக்கு உனக்கு எப்படித்தான் மனசு வந்திச்சோ? . நீ பெண்ணா? இல்லை... இல்லவே இல்லை! நீ பாழும் பேய்! அதனாலே தான், என் தெய்வத்தோட ஞாபகச் சின்னத்தை அழிச்சுப்பிட துணிஞ்சிட்டே நல்லவளாட்டம் நடிச்சிருக்கே! இல்லாட்டி, தாயில்லாப் பிள்ளையான என் மகன் பாபுவை நீ கைநீட்டி அடிச்சிருப்பியா?... பாவி நீ!...'' என்று கூச்சல் போட்டான். மறுகணம், தில்லை நாயகியின் நீண்ட கூந்தலைப் பற்றி இழுத்து, மூர்த்தண்யமான ஓர் அசுர வெறியோடு அவளை கன்னா பின்னா வென்றும் தாறுமாறாகவும் அடித்து நொறுக்கிவிட்டான் அவன்!...

கடம்பா!...

பொங்கிக் கொதித்தும், கொதித்துப் பொங்கியும் வீறு பூண்டு முழங்கும் பால், தீண்டிய நாகம் அடங்கி ஒய்கிற மாதிரி தன்னைப் போல ஒடுங்கி விடும் என்பார்களே?...

தில்லை நாயகி வைரமாக, அடித்து வைத்த சிலையாய் அப்படியே நின்று கொண்டிருந்தாள்!

திடீரென்று விம்மல் ஒலி, அங்கே விரவிப் பரவிக் கிடந்த பயங்கரமான நல்ல பூமியின் அந்த அமைதியைப் பிளந்து வீசியது.

யார் அழுவதாம்?

தில்லையா?

ஊஹூம்!— தில்லை ஏன் அழப்போகிறாள்?

"அ ..ப் ..பா!"

வாண்டுப்பயல் பாபு அலறினான்.

சோமையா முன் மயிர்க் கொத்து கண்ணை மறைக்க ஏறிட்டு விழிகளைப் பிதுக்கினான். பாபு!" என்று விம்மிப்புடைத்து அவனை வாரியெடுக்கத் தாவினான்.

பாபு திமிறிவிட்டான்.

ஐந்தறைப்பெட்டி முறுக்குகள் பறந்தன.

"அம்மா என்னை அடிச்சுதா? எப்போ? யார் சொன்னது?"

பாபு வீரிட்டான்.

"ஆ...!"

சோமையா தவித்தான். வழிந்தோடியது வேர்வையா? இல்லை சுடுநீரா?... அவன் பார்வை தாழ, தலையை நிமிர்த்தப் பலமின்றித் தடுமாறினான். நெஞ்சை வளைத்துச் சாடிக்கொண்டிருந்த சாட்டை

யடி வலிக்காதா, பின்னே? மார்பைப் பற்றிக் கொண்டான். இப்போதுதான் அவனால் தில்லை நாயகியை அந்தத் தில்லை நாயகியை ஊடுருவ முடிந்திருக்க வேண்டும்!— 'தி...ல்...லை...நாயகி!''

அந்தத் தில்லைநாயகி ஜாதி ரோஜாவாகச் சிரித்தாள். பூவும் பொட்டும் சிரித்தன. எடுப்பான மார்பகத்திலே எடுப்பாக ஊசலாடிக்கிடந்த அந்தத் தங்கத் தாலி—வெறும் கயிற்றில் பந்தம் கட்டிப் பொலிந்த அந்தச் சுமங்கிலியின் அந்தத் தாலியும்தான் சிரித்தது!

மறுகணம்:

''அத்தான்!...''

தில்லைநாயகி ஏன் அப்படி விம்மித் துடிக்கிறாள்?

சோணையா மீண்டும், ''ஆ! என்று கூவலானான்.

தில்லைநாயகியின் மாணிக்கக் கரங்களிலே இப்போது பார்வதியின் அழகான தாலி தரிசனம் கொடுத்தது!...

தூண்டிற் புழு என்று உவமை காட்டிப் பேசுவார்களே, அது இவ்வாறுதான் அல்லற்பட்டு, அவதிப்பட்டு, அலைக்கழிக்கப்பட்டுத் துடிக்குமோ?-ஐயோ!...

''தில்லை!...''

அவளுக்கென்று இப்படியொரு அலாதிச்சிரிப்பா, என்ன?— ''அத்தான், நீங்க என்னைக் கைப்பிடிச்சுக் கொஞ்ச காலம்தான் ஆகியிருக்குது; ஆனால், இந்தக் குறுகின காலக்கெடுவுக்குள்ளே நீங்க மௌனமாச

வும் ரகசியமாகவும் என்னைப் பரீட்சை பண்ணிப் பார்த்துக்கிடாமல் இருந்திருக்க முடியாது! அந்த அந்தரங்கத்தோட சத்திய தருமம் உங்களுடைய மனசுக்கும் மனச் சாட்சிக்கும் மட்டிலும் தான் புரிஞ்சிருக்கும்; விளங்கியும் இருக்கும்!... ஊம்... டீச்சருக்கு மாணவியே துணிஞ்சு பரீட்சை வைக்கிற ஒரு அதிசயக் கூத்து ஏன் இந்தக் கலிகாலத்திலே நடக்கக் கூடாதாம்? நடக்க முடியாதாம்?... நான் அப்படியொரு பரீட்சையை உங்களுக்கு வச்சு பார்த்தேன்!... நீங்க...?''— அவள் வாரி வழங்கிய சிரிப்புக்கு முன்னே விதியின் சிரிப்பு என்ன செய்துவிட முடியும்?

''நான் தோற்றுப் போயிட்டேன்! ...ஐயோ முருகா!''

தில்லை தன் நாதனை அழகாகவும் அன்பாகவும் ஊடுருவினாள்; பிறகு இதழ்களை ஒரு துடிப்புடன் விலக்கி விட்டாள்: ''அன்பு வெற்றி பெற்றுத் தான் தீரவேணும் என்கிறது ஒண்ணும் சட்டம் இல்லீங்களே?... அப்படி விதியும் இல்லீங்களே?... அன்பு தோற்றுவிடுவதும் இயல்பு தானுங்களே, அத்தான்?''

அந்த அன்பின் சாதுர்யம் அவனை மேலும் தூண்டில் போட்டு இழுத்து விட்டிருக்குமோ? ''தில்லை!'' என்று விம்மினான்; வெடித்தான்.

''தில்லை, உன்னை அந்தரங்க சுத்தியோடு புரிஞ்சுக்கிடுறதுக்குத் தவறிப் போயிட்ட நான் மெய்யாலுமே தோற்றுத்தான் போய்ட்டேன்! ஆனா நீ சொல்ற மாதிரி அன்பு தோற்றாலும்—அல்லது தோற்றுப் போயிட வேண்டிய விதியைக் கொண்டிருந்தாலும், அந்தத் தோல்வியேதான் என்னோட மனசுக்கு வெற்றியாக அமைய முடியும்; அப்பத்தான்

நான் உன்னை இன்னமும் கூடுதலான நேசத்தோடு அன்பு பாராட்ட முடியும்; அன்பு பாவிக்க இயலும்!... அப்பத்தான் அந்த அன்புக்கு—பாசத்துக்கு நேசத்துக்கு புடமிட பொன்னோட மகிமையும் இட்ட வாக்கும்! ஆமா, தில்லை!...

அன்பெனும் பிடினின்றும் விலகவோ, விடுதலை பெறவோ ஒப்ப மாட்டாள் தில்லை. ஒரு பதியின் உஷ்ணப் பெருமூச்சை மறுபாதியில் நின்று உணர்ந்தவாறே, மாரகச் சேலையைச் செம்மைப்படுத்திக் கொள்ளத் தவறி விடவில்லை தில்லை. ஏறிட்டு விழித்தாள். பச்சைக் குழந்தையின் பால் மனம் பாலாக உருகியோட அவள் நிமிர்ந்து பார்த்தாள். "அத்தான், நீங்க என்னென்னமோ பேசுறீங்களே?... நான் சின்னப் பொண்ணு தானுங்களே, அத்தான்?" என்றாள். உடலும் உடலும் பிணைந்த ஸ்பரிசம் கூட ஒரு யோகம்தான் போலும்!

சோமையாவுக்கு அழமட்டும்தான் தெரிந்தது. இப்போது.

"அப்பா!..."

அச்சமயம், பாபு கன்றெனத் துள்ளி வந்தான். அப்பாவைக் குண்டுக் கட்டாகக் கட்டிக்கொண்டான்.

"அப்பா, கோவிச்சுக் கிடாமல் இதைப் பாருங்க! இதிலே உங்க பேர் எழுதின ஒரு சின்னூண்டு கடுதாசி இருந்திச்சுதுங்க!..." என்று சொல்லிக்கொண்டே பரபரப்புடன் நிஜார்ப்பாக்கெட்டைத் துழாவி எடுத்தான் வாண்டுப் பயல்.

சோமையா திடுக்கிட்டான்!

அது ஒரு 'மணிபர்ஸ்!'—

"தில்லை! காணாமல் போன என் பணம் ஊஹூம், என் முதலாளியோட பணம் கிடைச்சிட்டுது, தில்லை!

ஆமாம்!—இப்போதும் கூட, சிரித்துக் கொண்டு தான் இருக்கிறாள் தில்லை நாயகி!...சிரிப்பென்றால் தவக்கனல் சுடர் தெறிக்கும்—சுடர் தறிக்கும் சிரிப்பு!...

# 9. காதல் பொல்லாதது!

டெலிபோன் அழைத்தது.

''ஹெல்லோ! யார் பேசறது?

ஓ, வாணியா?...... ஆமாம், நான் தான்... உன் அத்தான்தான் பேசறேன்...! இதோ, வீட்டுக்குத் தான் புறப்பட்டுக் கிட்டிருக்கேன்!... நீ இப்போதே டிரஸ் பண்ணிக்க ஆரம்பிச்சிடு. அப்பத்தான் நான் வந்து சேர்றதுக்கும் நீ புறப்பட்றதுக்கும் சரியாக யிருக்கும்! அடடே, கோபம் வந்துவிட்டதா? சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன், வாணி! என்ன ஷீபான் ஸில்க் தானே? பேஷ்! ஆர்கண்டி சோளியா? ரொம்பப் பொருத்தம்; ரொம்பப் பொருத்தம்! மினர்வாவுக்கு...! படத்தின் பெயரை மறந்திடாதே! ஒரு பெண் இரட்டை வேஷத்தில் இரு வேறு குணச் சித்திரப் பாத்திரமாக நடிக்கிறாளாம்-நண்பர்கள் சொன்னார்கள். இதோ, இன்னும் அரை மணியில் நான் வாணி விலாசத்தில் இருப்பேன். ஆமாம், வாணி! நீ தானே நான்! நான்தானே நீ? ஓ. கே!''

ரிஸீவர் தன் இடத்தில் மோனத்தவம் இருந்தது. எழுந்த மணி ஓசையின் மெல்லிய அலையில் வாணி சற்றுமுன் சிரித்த சிரிப்பு மிதந்தது; எதிரொலித்தது சிரிப்பில் வாணி உருவெடுத்தாள். பெண்கள் பாக்கியசாலிகள். சிரிக்கத் தெரிகிறது; சிரிக்க முடிகிறது. அவர்கள் இல்லையென்றால், உலகத்திலே சிரிப்பே தோன்றியிராதோ..? இல்லை, உலகமே தான் தோன்றியிருக்காதோ?

முகுந்தனுக்குச் சிந்திக்கத் தெரியாது; அதற்கு அவசியமும் கிடையாது. அவன் அப்படி; அவனுடைய வேலை அப்படி. மாதா மாதம் தலைவலி மருந்துச் செலவு மிச்சம்தான். அப்படித் தான் அவன் எண்ணியிருந்தான். பின் எப்படி இந்த எண்ண அலைகள் பிறக்கின்றன? ஏன் பிறக்கின்றன? அவனுக்கு மண்டை ஓடு சூடேறி விட்டது.

மேஜை மீதிருந்த கண்ணாடித் துண்டில் அவன் முகம் துலாம்பரமாகத் தெரிந்தது. 'டை'யைச் சரி செய்து கொண்டான். 'பைல்' ஒன்று அவன் கையில் இருந்தது. புறப்பட்டான்.

''தாரா''

''......''

''தாரா''

மெல்லிய அழுகைச் சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது-பெண்! யார் அது?-ஹேமாவா? பூமாவா? அல்லது தாராவேதானா?

மங்கையருக்கு இந்தக் கண்ணீர்தானாமே பொறுமையைப் போதிக்கிறதாம்—உங்களுக்குத் தெரியுமா?

''தாரா!''

அழைப்பு தூது சென்றது; அழைத்தவன் தூது சென்றான்.

தாராவின் கருவண்டுக் கண்களிலே கண்ணீர்த் துளிகள் சிரித்தன. சிரித்தனவா? சிந்தித்தன — சிந்திக்க வைத்தன—அவளையல்ல— அவனை. அவனுக்குச் சிந்திக்க வேண்டிய தலையெழுத்து இல்லை என்

றேனே? ஒரு வேளை அந்தத் தலையெழுத்தையே சிந்திக்க வைக்கப் போகிறானோ?

ஆம்!

வாணியிடம் சற்றுமுன் பேசினானே, அந்த வார்த்தைகள் கூக்குரலிட்டன: 'ஆமாம், வாணி! நீ தானே நான்! நான்தானே நீ!'

முகுந்தனின் பெருமூச்சுக்கு உறவு முறை இனி எதற்கு?

தாராவின் பெருமூச்சு அவன் நெஞ்சடியில் முட்டி மோதியது.

அவள் கையில் டவல் இருந்தது. சோப்பு டப்பா வேறு.

"போய்விட்டு வா"

அவனால் அடுத்த அடி பெயர்த்து வைக்கமுடிய வில்லை.

தாரா மீண்டாள். சோப்பு நுரையில்தான் அழகு ஒளிந்து கொண்டிருக்க வேண்டும். அவள் அவனை வெறிக்கப் பார்த்தாள். ஊமையாக, அழகியின் முன் பெரிய வக்கீல்கூட ஊமையாகப் போய்விட வேண்டு மாம். இப்பொழுது அழகியே ஊமையாகிவிட் டாளே! அவளுக்குக் கண்கள் பொங்கி வந்தன.

"உனக்கு இன்னம் வேலை இருக்கா? மணிதான் ஐந்தாகப் போகுதே? உடல்நிலை சரியில்லையானால் வீட்டுக்குப் போய் ஓய்வு எடுத்துக் கொள்ளேன். நாளைக்கு வந்ததும் அந்த பாலன்ஸ் ஷீட்டை டைப் பண்ணி விட்டால் தீர்ந்தது!"

"ரொம்ப நன்றி, ஸார்!"

"போய் வர்றேன், தாரா."

"நல்லதுங்க."

அந்தியில் அவள் நிழல் சிறுகச் சிறுகத் தேய்ந்து கொண்டிருந்தது.

சூழ்ந்திருந்த மயான அமைதி முகுந்தனை விரட்டியது. மூன்றாம் மாடியிலிருந்து பாய்ந்தோடினான்

'கெடிலாக்' புறப்படவிருந்த சமயத்தில், மழை புறப்பட்டு விட்டது. எட்டிப் பார்த்தான். கண்ணாடிக்கதவுக்கு நந்தியாக நடிக்க மனமில்லை. டம்பப்பையும் கையுமாக தாரா நின்றிருந்தாள்.

இரக்கம் ஒரு விலங்கு—அல்ல, அது ஒரு சிலந்தி வலை. எங்கோ படித்ததை ஏன் அவன் எண்ணிப் பார்த்தான்? அதே சடுதியில் ஏன் அதை மறக்கவும் யத்தனம் செய்தான்?

"தாரா, மழை வேறு வந்துவிட்டதே?... என்னுடன் காரில் வருகிறாயா?... உன்னை மயிலாப்பூரில் கொண்டுவிட்டு அப்புறம் அடையாறு போய்க்கொள்கிறேன். அதுதானே எனக்கு வழியும்கூட?..."

அவள் சிரிப்புக்கு இணக்கம் என்று அர்த்தம்.

மழைச் சரங்களினூடே கார் பறந்தது, புஷ்பக விமானமாக. தெரு விளக்குகளின் அடியிலேயே வெளிச்சத்தைப் பிரித்துக் காட்டியவாறு இடைநின்ற தெருக்கள் விடைபெற்றுக் கொண்டன. நடைபாதைவாசிகள் தம்பதி சமேதராகப் பின்னிப் பிணைந்து

கிடந்தனர். அவனுக்கோ, அவளுக்கோ அவர்களைப் பற்றி அக்கறை கிடையாது. ஆனால், அவர்கள் அவனைப் பற்றி, அவளைப் பற்றி அக்கறைப்பட்டார்கள். பேச்சு வளர்ந்தது: 'ஏ பொண்ணு, என்னா அப்பிடிப் பாத்துக்கிணே நிக்கிறே? பாவம். ஒங் கொள்ளிக்கண்ணு அவங்க மேலே வுளுந்திடப் போவுது... புதுக்கண்ணாலம் போலே!...'

கார் திரும்பியது. அவனுடைய இடது கைக் கடிகாரத்தில் அவளுடைய வலதுகை மோதிரம் உரசிவிட்டது. கார் நின்றது. சைனா பஜார் நின்றது! புஹாரி முகமன் சொன்னது.

''சாயா இரண்டு!''

எதிரும் புதிருமாக பாதரஸ விளக்கில் மிதந்தார்கள். 'டை' எம்பி விழுந்தது. நைலான் புடவையை விட்டு வெளியேறத் துடித்த வண்ணாத்திப் பூச்சிகள் எம்பி எம்பிச் சிறகடித்துப் பறந்தன. விசைக்கதவுக்குக் குறும்பு ஜாஸ்தி. 'குடும்ப அறை' என்ற எழுத்துக்களைக் காட்டியது.

சிகரெட்டின் ஒரு முனையில் நெருப்பும், இன்னொரு முனையில் முட்டாளும் இருப்பதாகச் சொன்னானே, யாரோ ஒருவன்?

கபாலீஸ்வரர் ஆலயத்தில் புனிதம் இருந்தது. முகுந்தன் கும்பிடக் கைகளைத் தூக்கினான். நடுங்கின. நல்ல வேளை, பிழைத்தான். கார் ஓடிக் கொண்டிருந்தது.

''நீங்களும் வாணியும் தானே இன்றைக்குப் படத்திற்குப் போகப் போகிறீர்கள், அத்தான்?''

"ஆமாம்"

"உங்கள் இரண்டு பேருக்கென்றுதான் பிடித்த மழையும் நின்றுவிட்டது."

"ம்..."

"அத்தான், நான் கூட படத்துக்கு வரட்டுமா?"

"ஓ! வாயேன்? ஏன், நீயும் நானும் இப்படியே திரும்பி விடுவோமா?"

"ஓ!..."

"ஓ. கே!"

இரு ஜோடிக் கண்களுக்கு அப்படி என்னதான் மாளாத பேச்சோ!... முகுந்தன் காயகல்பம் சாப்பிட வில்லை. சிறுவன் ஆனான். மணல்வீடு தோன்றியது. அப்போது அவன் உள்ளத்தில்— உடலில் வித்திடப்பட்ட ஓர் இன்ப வெறி—

"தாரா!"

"அத்தான், அத்தான்! காரை நிறுத்துங்கள். நான் இங்கேயே இறங்கிக் கொள்ள வேண்டும். தலைவலி தாள முடியல்லே. குட்நைட், அத்தான்!"

வாணி விலாசத்திற்கு வந்துதான், முகத்தில் புது வெள்ளமாகப் பெருகிய வியர்வையை துடைத்துக் கொண்டான் முகுந்தன்.

"வாணி! வாணி!"

"இதோ வந்திட்டேன், அத்தான்!"

'கெடிலாக்' கின் பின் ஆசனத்திலிருந்து எழுந்து, கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள் வாணி!

உலகம் பொல்லாதது.

காதல் பொல்லாதது!

'காதல்' என்றால் என்ன அர்த்தமாம்?

'காதலைத்' தொடங்கும் போது ஒருவன் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்கிறான்—முடிக்கும்போது மற்றவர்களை ஏமாற்றுகிறான். இதைத் தான் உலகம் காதல் என்று பெயரிட்டு அழைக்கிறது!'

புரட்டு!

'...காதல் என்பது ஒரு ரப்பர் பலூன். காற்றை நிரப்ப நிரப்ப அது அழகாகத் தோன்றும். நன்றாக உப்பும், ஆனால் அது எப்போது உடையும் என்பது மட்டும் நிச்சயமில்லை!...'

நிஜம்தானா?

'காதல் சோம்பேறிகளின் தொழில்; சுறுசுறுப்பு மிக்கவர்களையும் சோம்பேறிகளாக்கி விடும்.

வாஸ்தவந்தானா!

'காதலர் இருவர் பரிபூர்ணமாக அறிந்தபின், இருவர் ஆத்மாவும் அறிவும் உடலும் ஒன்று கலந்து மலர்வதுதான் இலட்சியக் காதல். அத்தகைய காதல்

துன்பத்திலும் இன்பத்திலும் நோயிலும் தேகாரோக்கியத்திலும், உலகின் எந்தத் தாக்குதல்களிலும் இணை பிரியாதது!'

அப்படியா?

வாழ்க்கையிலே காதலில் வெற்றி கண்டவர்களுக்கு அது ஒரு பூலோக சுவர்க்கம்; தோல்வி அடைந்தவர்களுக்கு அது ஒரு நரகக்குழி!

பொய்! பொய்! பொய்!

முகுந்தனுக்கு உலகம், வாழ்க்கையெல்லாம் அப்பொழுது நரகக்குழியாகத்தான தோன்றியது.

அழகுக்குப் பதவுரை சொல்லும் ஆருயிர் மனைவி இருந்தாள். எம். ஏ. பட்டத்திற்குப் பலன் சொன்ன அந்த இங்கிலீஷ் கம்பெனியின் மானேஜர் பதவி இருந்தது. 'கெடிலாக்' இருந்தது. வாணி இருந்தாள், அன்பு மனைவியாக. எல்லாம் இருந்தது— ஆனால், காதல் இல்லை.! தாரா இல்லை!

சூன்யம் நையாண்டிச் சிரிப்புச் சிரித்தது: பெண்கள் மணவறையில் அமரத் துடிப்பார்கள். ஆண்களோ, திருமண வினையினின்றும் எவ்வளவு தூரம் எவ்வளவு காலம் விலகிவிட முடியுமோ, அவ்வளவு வரை விலகியேயிருப்பார்கள்!

தாரா!—

அவள் அவனுடைய உரிமைப் பெண். பிஞ்சுக் கரங்கள் கட்டிய அன்பு மணல் வீட்டை காதல் அத்தாணி மண்டபமாக நிர்மாணித்து விடவேண்டுமென்று பொழுதெல்லாம் கனவு கண்டார்கள். ஒரே

கல்லூரியில் கூட்டுப்படிப்பு— எம். ஏ! காதல் என்ற ஒன்றே அவர்களது தாரக மந்திரமாக அமைந்தது. வாழ்க்கையையே காதலாக்கிவிடப் பார்த்தார்கள். காதலையே வாழ்க்கையாக்கிவிடத் துடித்தார்கள். காதலில் தோற்றவன் உளறிக் கொட்டிய கவிதைகளை எண்ண அலைகளைத் தேடிப்பிடித்துக் கிழித்தெறிந்தார்கள். காதலில் வெற்றி கண்டவனின் அனுபவ மொழிகள் அவர்கள் வரைப் பொன் மொழிகளாயின. திருமண நாள் வந்தது — ஆனால், திருமண வேளை வரவில்லை. முகுந்தன்-தாரா இருவரும் தம்பதியானால், அவர்களில் ஒருவர் இன்னொருவரை வெகு சீக்கிரமே இழந்துவிட நேரிடுமாம்!- காதல் தோற்றது. தோற்கடிக்கப்பட்டது.

வாணி!— கானலாகி விட்ட அவனுடைய வாழ்வின் அன்பூற்றாகத் தோன்றினாள். இனிய பாதி-உயிர்த்துணை-மனை விளக்கு போன்ற முத்திரைகள் அவள் தாலிச் சரட்டில் மின்னின.

முதல் இரவு வந்தது. ''வாணி, நீ என் மனைவி. என்னுடன் இரத்தத்தோடு இரத்தமாக, உயிரோடு உயிராக, உணர்வோடு உணர்வாகப் பின்னிப் பிணைந்திருக்க வேண்டியவள்— நீ என் மனைவி, உயிர், உலகம்! இது என் இரண்டாம் காதல். கலியாணத்திற்குப் பிறகுதான் சிலருக்குக் காதல் கனியுமாம்-நாம் இந்த ரகம். உன்னிடம் நான் எதையும் மறைக்கவிரும்பவில்லை. என் முதற் காதல் தோற்று விட்டது. மறந்துவிட மாட்டாயே?— நீ தான் நான்; நான் தான் நீ...!''

வாணி புதுமைப்| பெண்.

அவள் படித்திருந்தாள். 'ஒரு பெண் தன் புருஷனை வசீகரிப்பதில் தாசியாகத் தன்னை ஆக்கிக் கொள்ள வேண்டும்' என்பதை.

அவன், அவளுள் இரண்டறக் கலந்தான்.

என்றோ ஒரு நாள், தாரா வந்தாள். உருவம் தெரிந்தது; திகைத்தான். முதற் காதல் கண்ணீர் விட்டது. அவள் வேலை வேண்டுமென்றாள். 'ஸ்டெனோ டைப்பிஸ்ட்' ஆனாள். ஆபீஸ் விவகாரங்கள் எல்லையிலேயே 'சுபம்' கூறின.

அன்றைக்கு அழகி தாராவின் மோதிரமும் முகுந்தனின் கைக்கடிகாரமும் கைகுலுக்கிக் கொண்ட போது—? ஒரு சில கணப்பெருமூதிலே, ஒரு பெண் நீண்ட காலத்திய உணர்ச்சிமயமான வாழ்க்கையை வாழ்ந்துவிட முடியும். தாராவுக்கென்று—முகுந்தனுக்கென்று எழுதப்பட்ட எழுத்தா?- தாரா ஏன் விம்மினாள்? — உணர்ச்சிவசப்பட்டவர்களுக்கு வாழ்வு ஒரு சோக நாடகமா?

அன்று, திட்டமிட்டிருந்த திரைப் படத்திற்குத் தன் உயிரின் மறுபாதியை அவன் சமாதானப்படுத்தி அழைத்துச் செல்வதற்குள், அவன் பட்டபாடு சொல்லத் தரமல்லவே?— "வாணி, மனம் சலனமடைந்ததென்னவோ வாஸ்தவந்தான். ஆனால், நான் உன்னுடைய உரிமை என்பதை ஒரு போதும் மறக்க மாட்டேன். நான் உன்னைவிட்டு ஒரு நாளும் பறி போக மாட்டேன். என்னை நம்பு, கண்ணே! இது ஆணை!"

அன்பு பயம் செறிந்தது.

வாழ்க்கை பயம் செறிந்தது.

வாணிக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டது. நோய்க்குப் பெயர் வைக்க டாக்டருக்கு ஆள் போயிருந்தான். கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட மாதிரி இருந்தது முகுந்தனுக்கு. அழவேண்டும் போலிருந்தது. வாணியின் தங்க மேனியில் நெருப்பு மூட்டம் போடப்பட்டிருந்தது. பத்தரை மாற்றுத் தங்கம் உருகி வழிந்தோடிக் கொண்டிருந்தது.

காட்டிலிருந்து திரும்பிய ராமர், சீதையைத் தீக் குழியில் இறங்கச் சொல்லி, அவளுடைய புனி தத்தைப் பரீட்சை செய்தாராமே?- வழிநெடுக் கதைத்துக் கொண்டு சென்றவனின் வாய்மொழி அவன் காதுகளை ஏன் மூற்றுகையிட வேண்டும்.

'என் வாணி சொக்கத் தங்கம். நான் அவளுக்கு ஏற்ற கணவன்தானா என்பதைப் பரீட்சிக்க அவ ளல்லவா எனக்குச் சோதனை நடத்தவேணும்?...'— தன்னுள் தனதாக, தானே தானாக—எண்ணமே அவனாக—அவனே எண்ணமாக, மனச்சாட்சியாக, மனிதத் தன்மையாகச் சுழன்றான்; கனன்றான்; கதறினான்.

இடது கையில் கடிகாரம் இழைந்திருந்த இடம் சுட்டது. தீக்குச்சியைக் கிழித்து அந்த இடத்தைப் பொசுக்கிவிடத்தான் துடித்தான். ஆனால், வாணி அவன் மீதல்லவா தன் அன்புப் பார்வையை வலை வீசியவாறிருக்கிறாள்? நோயின் வேதனையை மறக்க முடிந்தது போலும்!

பொங்கி வந்தது கண்ணீர். அவள் பார்த்து விட லாகாதேயென்று முகுந்தன் எதிர்ச் சுவர்ப்பக்கம் திரும்பிக் கொண்டான். அவர்களது திருமணப்

புகைப்படம் இருந்தது. தேதி-30 ஜனவரி, 1953. பெண் மனத்துக்கும் ஆண் மனத்துக்கும் மூன்று முடிச்சுகள் போட்டுக் கொண்ட புனித வேளை நினைவில் ஓடியது. யாரோ ஒருத்தியாக மனை புகுந்து, தன் உரிமையாக மனம் புகுந்த மனை விளக்கை அவன் போற்றாத வேளையுண்டா? புகழாத போதுண்டா?- சக்தியுள் சிவமாகி, சிவத்துள் சக்தியாகி விட்டவர்கள்!

வாழ்க்கை புதிராகத்தான் இருந்தது. ஆனால், அவன் வரை வாணி புதிராக அமையவில்லை. பெண் புதிராம், புதிர்! பெண்ணைப் புரிந்துகொள்ள முடியாதவன் உளறிக் கொட்டிய பொய்—பச்சைப் பொய் இது! அப்படியென்றால், அன்றைக்கு, அவன் தாராவைக் காரில் கொண்டுபோய் விட்டுத் திரும்புகையில், காரினின்றும் அவன் துணைவி வாணி இறங்கி வந்தாளே...?

அந்த ஒரு நாள் —

''வாணி...''

''......''

''கோபமா, வாணி!''

''ஊஹும்!''

''பார்த்தியா, ஏன் கோபப்படணும்னு ஒரு வார்த்தை கேட்கக் காணமே?''

''ஏனாம்?''

''தாராவைக் காரில் கொண்டு விட்டு தாமதமாக வந்ததுக்கு...?''

''அதிலே தவறில்லையே?''

''சரி, நீ ஆபீசுக்கேயா வந்திட்டே?''

''ஆமா. என்னத்துக்கு இரட்டிப்பு வேலைன்னு நான் டாக்ஸி பிடிச்சு வந்து இறங்கிட்டேன். தம்புச் செட்டித் தெருவுக்கும் மினர்வாவுக்கும் ரொம்பத் தூரமா என்ன?... வந்தவள், நம்ப காரிலேயே பின் ஸீட்டிலே உட்கார்ந்தேன். கூர்கா உங்ககிட்டே சேதி சொல்ல ஓடிவரத் துடிச்சான். உங்களுக்கு ஆபீஸ் நேரத்திலே தொந்தரவு தரக்கூடாதேன்னு தான் இப்படி நடந்துகிட்டேன். நீங்க வந்தீங்க: என்னைக் கவனிக்கல்லே. சின்ன தமாஷ் ஒண்ணு பண்ணலாம்னு கடுதாசியிலே ஏரோப்ளேன் பண்ணி உங்க தலைமேலே பறக்கவிட ரெடியாயிருக்கிறப்போ, அந்தப் பொண்ணு வந்துட்டாங்க. கம்னு அப்படியே நான் உட்கார்ந்திட்டேன். மழை பேஞ்சது. உங்க மனித மனம் ஒத்தாசை செஞ்சது. ஆக, நீங்க ரெண்டு பேரும் மாத்திரம் சாயா சாப்பிட்டீங்க...! ம்! அவங்க மைலாப்பூரிலே இறங்கிட்டாங்க. நம்ப வீட்டிலே நீங்க இறங்கினதும், என்னைப் பேர் சொல்லிக் கூப்பிட்டீங்க. நான் மூச்சுக் காட்டாம கதவைத் திறந்து வெளியே வந்ததுந்தான் குரல் கொடுக்கணும்னு பத்துத்தரம் நினைச்சிருந்தேன். என் குரல் வரலையானா, பதட்டப்பட்டுப் போவீங்களேன்னு, நான் குரல் தந்துட்டேன். உங்களுக்கு முகம் வெளிறிப் போச்சு. சந்தர்ப்பங்கள் உதயமாகல்லையானா, அப்பால் வாழ்க்கைக்கே பொருள் தெரியாது; புரியாது. அத்தான், நீங்க வீணா உடம்பை அலட்டிக்காதீங்க. உடம்புக்கு வந்தா, எனக்குப் பொறுக்காது. எனக்கு இது ஒரு கனவு மாதிரி. நான் எப்பவோ மறந்திட்டேனே?''

டாக்டர் வந்தார். ''மிஸ்டர் முகுந்தன்! உங்கள் மனைவிக்கு மன உளைச்சலினால்தான் இந்த ஜுரம்

வந்திருக்கிறது. அதிர்ச்சி தரும் விஷயம் எதுவுமே ஏற்படாமல் இருந்தால் நல்லது. நீங்கள் கவலைப் பட்டு விடாதீர்கள். இரண்டு மூன்று நாட்களில் குண மாகிவிடும்'' என்று உத்தாரம் சொன்னார். உடற் பரிசோதனைக் குழலும் பாசக்கயிறும் ஒன்றுக் கொன்று எதிரான இருதுருவங்கள் ஆகாதவரை உலகம் பிழைத்துவிடும்.

டாக்டர் காப்பியைச் சுவைத்துப் பருகினார். முருந்தனுக்குக் கசந்தது.

''டாக்டர், வாணிக்குக் காப்பி கொடுக்கலா மல்லவா?''

''கூடாது, கூடாது! பித்தம்!''

பித்தம் தெளிய மருந்தாகி வந்தவளுக்குப் பித்தம்!—உரிமை பூண்டவனின் கண்கள் உரிமைக் காரியின் கண்களை ஊடுருவின. கண்களின் கரையில் அமைதிக் கொடி பறந்தது. அவனுக்கு நல்ல மூச்சு வந்தது.

ஒன்பதாம் முறையாக ஒலித்த டெலிபோன் மணி, சூழலின் அமைதியைக் கலைத்தது. மனத்திற்காவது, அமைதியாவது...?

''ஆமாம், சரிதான்! ம்...இன்றைக்கே தபாலில் அனுப்பிவிட வேண்டும். சங்கரனின் கையெழுத்துப் போதும். லண்டனுக்குப் போய் பதில் வரணும்! ம்..., வாணிக்கு இப்போது பரவாயில்லை. நன்றி!''

பற்களைக் கடித்தான். தாரா பஸ்பமானாள்!

''அத்தான்''

''ம்!''

''யார் பேசினது?''

"ஆபீஸிலேருந்து"

"உங்க சொந்தக்காரப் பெண் தாராவா?"

"ஊஹூம் இல்லே. என்னோட அஸிஸ்டெண்ட்."

"அத்தான், நீங்க போய்ச் சாப்பிடுங்க. மணி மூணுக்கு மேலாயிடுச்சு."

"ஆகட்டும், வாணி! கொஞ்ச நேரம் கண்ணை மூடு, கண்ணே?"

"அத்தான், என்ன சொல்றீங்க?"

"ஆ!...தூங்கச் சொன்னேன், வாணி!"

"எனக்கு உயிரே போயிடும் போலிருந்திச்சு......"

"வாணி! நிம்மதியாகத் தூங்கினால்தான் உடம்புக்கு நல்லது!..."

"உங்களுக்கும் நல்லது..."

"ஆமாம்..."

"அப்படியானா; நான் பாயும் படுக்கையுமானது உங்களுக்கு வீண் தொல்லைதானே?..."

"வாணி, ஜுர வெறியிலே ஏதேதோ பிதற்றுறாயே? எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும், நீ இப்படி இண்டிக் கிண்டி மறுமுறையும் கேட்டால்!..."

"அத்தான், நீங்கள் என் பக்கத்திலேயே இருக்கிறதாலேதான் எனக்குப் பைத்தியம் பிடிக்காமல் இருக்குது...! உங்களை என் நெஞ்சிலே வச்சுப் பூஜிக்க போன ஜன்மத்திலே நான் ரொம்பப் புண்ணியம் செஞ்சிருக்க வேணும்."

"கண்ணே, உன் மாதிரி ஒருத்தி என் மனைவியாக வர்றதும் என் பூஜாபலன்தான்!"

"அத்தான்!"

"வாணி!"

இரவு வந்தது. நிலவு வரவில்லை.

கண்ணோடு கண் பொருத்தவில்லை இருவரும்!

"அத்தான், பக்கத்துத் தெரு பங்கஜத்தை அவள் புருஷன் விலக்கி வைத்து விட்டாராமே...?"

"ஊர்க்கதையெல்லாம் நமக்கு எதற்கு, வாணி? நீ தூங்கமாட்டாயா? .."

"நீங்கள் தூங்குங்கள் ...!"

"ஆகட்டும்; முதலில் நீ தூங்கு."

"சரி ..! அத்தான், நான் பூவும் மஞ்சளுமாக என்றைக்கும் இருப்பேனல்லவா?..."

"நிச்சயமாக!"

"உங்கள் நிழலில் ஒண்டும் பாக்யம் எனக்கு எப்போதும் கிடைக்குமல்லவா?"

"நிச்சயமாக!"

"என்னை நீங்கள் மறந்திடமாட்டீங்களே? ..."

"நீலவானம் நிறைமதியை மறக்கமுடியுமா?"

"நீங்கள் ரொம்ப அழகாகப் பேசறீங்க!"

"நீ ரொம்ப அழகாக இருக்கே!"

"அத்தான், இதுக்கு மட்டும் பதில் சொல்லிப் பிடுங்க, நான் தூங்கிப்பிட்டேறன். உங்கள் மேலே எனக்குள்ள உரிமை என்னிக்கும் திருடு போகாமல் இருக்குமில்லையா?"

"ஆண்டவன் சாட்சியாக, என்பேரிலே உனக்கிருக்கும் உரிமை ஒருநாளும் பறிபோகாது!... உன் காய்ச்சலுக்குக் காரணம் புரிந்துவிட்டது. தாராவை நாளைக்கே வேலையை விட்டு விலக்கிவிடுகிறேன். இனி திருப்திதானே?..."

இன்பக் கனவுகளின் அடிவாரத்திலே, வாணி ஆனந்தமாக நித்திரை வசப்பட்டுக் கிடந்தாள்.

முகுந்தன், காலடியில் கிடந்த அந்த மோதிரத்தைத் தூர விட்டு வீசினான். 'தாரா' என்ற எழுத்துக்கள் சிரித்தன—விஷச் சிரிப்பு; போதைச் சிரிப்பு!

காதலுக்கு இதயம் இல்லை.

காதலுக்குக் கண் இல்லை.

சுட்டிப்பயல் ஓடுவதைப்போல் இந்தோ சிலோன் எக்ஸ்பிரஸ் தன்னை மறந்து, தான் தாங்கிச் செல்லும் ஆயிரமாயிரம் இதயங்களைப் பொறுப்புணர்ச்சியுடன் நினைந்துகொண்டு ஓடிக் கொண்டிருந்தது.

ஆந்தைக் கண்களில் அழகா சொட்டும்? ஆனால், இருளின் கண்களில் அழகு சொட்டியது; வழிந்தது—தழலிலே தண்மை சிரிக்கும் பாங்கிலே.

இரண்டாம் வகுப்புப் பெட்டியை அவனால் ரசிக்க முடியவில்லை. அருகில் அவள் இருந்திருக்க வேண்டாமா?—பதட்டப்பட்டு விடாதீர்கள், சுவாமிகளே! அவள் என்றால், அவனுக்கு 'முன்றானை போடும் பாக்கியம் பெற்றவள்'—உரிமை பூண்டவள் ஆம்; அவள்—அவளேதான்!—வாணி! நாளைத் திரும்பும்போது, இந்தப் பாழும் இருளில்கூட அவன் பூரண நிலவைத் தரிசிப்பான் அல்லவா?

பிரித்து வைத்திருந்த மலரின் ஏடுகள் அவன் கண் முன் ஓடின. அவன் கண்கள் மலரின் ஏடுகளிலே ஓட வேண்டாமா?

ஒரு காக்காய் குருவிகூட அவனுக்குச் சகபிரயாணியாக—சகபிராணியாக இல்லை. பண வீக்கம் என்று எழுதட்டுமா? பண முடக்கம் என்றே புரியும்படி எழுதிவிடலாமா? இல்லை, மேலை நாகரிகம் 'மௌஸ்' இழந்து வருகிறதென்று அர்த்தமா?-ஏதோ ஒன்று. தொலையட்டும், சனியன்!

ஹோல்டாலில் பதிந்திருந்த கை கடுத்தது. தலையை உயர்த்திக் கொண்டான். காற்று தேவைப் படவில்லை. அணைத்தான்.

"அன்புள்ள அத்தான் அவர்களின் பாதாரவிந்தங்களுக்கு அனந்தகோடி நமஸ்காரம். என் உடம்பு முழுவதும் தேறிவிட்டது. இந்த முப்பது நாட்களும் முப்பது யுகங்களாகி விட்டன. உங்கள் அன்பு நிழலில் தான் நான் உள்ளம் தேறுவேன். என்றைக்குத் தஞ்சை வருவீர்கள்? சீக்கிரம், அத்தான், சீக்கிரம்!

இப்படிக்கு,
உங்கள் அடியாள்
வாணி

பி.கு.;—நினைவிருக்கட்டும்—அகநானூறு.

சிரிப்பினுள் சிந்தை ஒடுங்கினான். சித்தனல்ல—முகுந்தன்! தூக்கம் சொக்கியது. காற்று சுழன்றடித்தது; விம்மி வெடித்தது. தூங்கிப் போனவன் கண் மலர்ந்தான்.

அழகு கொலு வீற்றிருந்தது. வெறுமைக்குப் பிரியா விடை. திரும்பினான். அழகு ரோஜா ஒன்று

கண் உறங்கிக் கொண்டிருந்தது. 'இனம்' காண முடியவில்லை. முகம் மடித்து வைக்கப்பட்ட கரங்களில் புதைந்து கிடந்தது. 'ஆராரோ' பாட ஆசைப்பட்டானோ, என்னவோ? சதிவிரதன் என்றால்—

எழுத்துகள் பூதாகாரமாகத் தெரிந்தன. 'உனக்கு மேலே பெரும் அழகா இருக்கேன்னான். நான் ஒண்ணும் அழகில்லேன்னேன். நீயா, நீயா, நீயான்னு கிட்ட வந்து ..'

மலரை மூடினான். திரும்பிப் பார்த்தான். உடம்பில் சூடு; நெஞ்சில் சூடு; நினைவில் சூடு.

வாணி அன்றைக்கு சாவின் தலைவாசலில் நின்ற போது கூறினாளே, அதை இப்போது திரும்பவும் நினைவு படுத்தினான்: "அத்தான், எனக்கு உள்ள உரிமை என் உயிருள்ள வரை பறிபோவதை—பிறரால் பறிக்கப் படுவதை நான் சகிக்கமாட்டேன். இன்னொன்று. நளாயினி கதை எனக்கு இஷ்டப்படுவதில்லை. தன் கணவனின் மிருக இச்சையைப் பூர்த்தி செய்ய வேண்டி, தன் புருஷனை—தீராத நோயாளிக் கணவனை—அவன் விரும்பிய தாசி வீட்டுக்குத் தூக்கிச் சென்றாளாமே? நிலைநிறுத்தப்பட்ட கற்பின் கதைக்குக் கை தொழுகிறேன். ஆனால் அவள் தன் உரிமையை இழந்ததை...சே! சே! ..அத்தான், நீங்கள் என் சொத்து—உரிமை!"

பூகம்பமாக நடுங்கியது உடம்பு.

அழகி புரண்டாள்; அழகு வெள்ளம் கால்வாய் கட்டி நுங்கும் நுரையுமாகக் கொப்புளித்துக் கொண்டிருந்தது. யார், தாராவா?

அழகுச் சொக்கட்டானின் தீ நாக்குகள் பராசக்தியாக எரிந்து கொண்டிருந்தன. யார், வாணியா?

கண்களைத் திட்டிக் கொண்டு பார்த்தான். 'தாரா' என்ற இரண்டெழுத்துகள் பிறை நெற்றியில் ஒட்டப்பட்டிருந்தன. இருபது பேய் கொண்டவன் நிலை அவனுக்கு.

தாராவை வேலையினின்று நீக்கிவிட வேண்டிய நிலையில் வைத்துவிட்டது வாணியின் உரிமைப் போர். அப்பொழுது அவள் நிலவுப் புன்னகையும், காட்டாற்றுக் கண்ணீருமாக விடை பெற்றுச் சென்றதை அவன் ஏன் எண்ண வேண்டும்?

அவன் உடம்பு சாம்பலாக ஆகும் வரை, நினைவை விட்டுப் பிரிவினை பெறாத ஒரு சம்பவம் அது: தாராவுக்கும் முகுந்தனுக்கும் பிஞ்சுப்பிராயம். மணல்வீடு கட்டி புருஷன்—பெண் ஜாதி விளையாட்டு விளையாடினார்கள். அப்போது, அப்போது ..?

அந்த ஸ்பரிசத்தை, புரியாத சம்பந்தத்தை, நிறைவேற்ற முடியாத பருவத்திலிருந்த வெறியை எண்ணும் போதெல்லாம், வாணியில் தாராவைத் தரிசித்தான் அவன்—பாழாய்ப்போன ஆண் மனம்! ஆனால், இப்போது—?

"தாரா!"

நாக்கின் மேலண்ணத்தில் 'தாரா' ஒட்டிக் கொண்டாள்.

பேய்க் காற்று; பேய் மழை. ஊழிக்கூத்து! ரயில் தடம் புரண்டது, "ஐயோ!"—கோடிக் குரல்கள்!

அடித்துப் போட்டாற் போலக் கிடந்தான் முகுந்தன். அவன் வலது கன்னத்தில் பதிந்திருந்த ஐந்து விரல்களில் ரத்தம் பீறிட்டது.

"தாரா" என்று அழைத்தான். புனிதம் மாறாமல் கிடந்தது ரோஜா. அவன் கண்கள் அவளைத் துழாவின. "ஆ" என்று கூச்சல் போட்டான். நெற்றியிலிருந்து கீழ்நோக்கிப் பாய்ந்தோடி வந்த குருதித் துளிகள் ஒவ்வொன்றாக அந்த மஞ்சள் கயிற்றின் மேல் விழுந்து, பிறகு வெட்டிவிடப்பட்ட கால்வாய் வழி மண்ணை முத்தமிட்டுக் கொண்டிருந்தன.

தஞ்சைச் சந்திப்பு நிலையத்திலே அவ்ன் ரத்த தானம் செய்து கொண்டே கிறுக்குப் பிடித்தவன் போல ஓடினான். வாணி ஓட ஓடத் துரத்தினாளோ ?

"வாணி! வாணி!"

கால் இடறிவிட்டது.

"அத்தான்!"

"ஆ! என் வாணி! என் வாணி! நீகூட இந்தப் பாழும் புயலிலும் மழையிலும் அகப்பட்டுக்கொண்டு விட்டாயா?... நேற்று இரவு உலகம் பேயாகியிருந்ததே? ஐயோ!..."

"அத்தான், உங்களை உடனடியாகப் பார்க்க வேண்டும் போல் இருந்தது. ரயிலேறிவிட்டேன். உலகத்தில் எங்கோ தவறு, அநீதி நடந்திருக்க வேண்டும். இல்லையென்றால், இயற்கைத்தாய் இப்படிச் சீறியிருக்கவே மாட்டாள். நாம் இருவரும் நல்லபடி சந்தித்தோமே, என் தாலி பாக்கியம் தான்!" என்று சொல்லித் தன் தாலியைப் பக்தியுடன் கண்களில் ஒற்றிக்கொண்டாள் வாணி.

பிரகதீஸ்வரர் கோயிலில் உதயகாலப் பூஜை நடந்தது.

புதுப் பிறவியுடன் ஜோடியாகக் கைசேர்த்து நடந்தார்கள்; தேவ தரிசனம் கிடைத்தது. திரும்பும் போது இன்னொரு ஜோடி தென்பட்டது.

"ஓ, தாராவா?... வாருங்கள், அத்தான்! என்று வரவேற்றாள் வாணி.

"அத்தான், சௌக்கியமா?... வாணியின் முயற்சி இல்லையென்றால், எனக்கு இவ்வளவு சீக்கிரம் கலியாணம் நடந்திருக்க முடியாது ..!" என்று குசலம் விசாரித்துக் கதை சொன்னாள் தாரா.

"அத்தான், தாராவின் கணவர் இவர், இவர் எனக்கு அத்தான் முறை வேணும். புதுமணத் தம்பதிகள் ரயிலுக்கு வந்திருக்கிறார்கள். ரயில் புறப்பட்டு விட்ட அவசரத்தில் ஆளுக்கொரு பெட்டியில் ஏறி விட்டார்களாம். உங்களிடம் சொல்ல மறந்திட்டேன். நேற்று இரவு அடித்த புயலிலும் மழையிலும், என் அத்தான் இல்லையென்றால், நான் இந்நேரம் உங்களைக் காணும் பாக்கியம்கூடச் செய்திருப்பேனோ, என்னவோ? உங்களைப் போலவும் மூர்த்தி அத்தான் மாதிரியும் உலகத்திலே நல்லவங்க நாலு பேர் இன்னம் நடமாடறதினாலேதான், ராத்திரி அடிச்ச பேய்க்காற்றும் மழையுங்கூட சீக்கிரம் ஓய்ஞ்சிடுச்சு?"

முகிந்தனின் உள்மனம் அணு அணுவாகச்செத்துக் கொண்டிருந்தது. "...தாரா! என்னை மன்னிக்க மாட்டாயா? அறியாப் பருவத்திலிருந்து இன்றுவரை ஏன் என்றுமே என் மனத்தைவிட்டு அகலாமல், நினைத்தபோது நினைத்தபடி நறுமணம் பரப்பும் புனிதமான மனோரஞ்சிதப்பூ நீ!... வாணி, என்மீது உனக்கு இருக்கும் உரிமைக்கு இனி துளிகூடப் பங்கம் வராது. உன்னை இன்றுதான் பரிபூரணமாகப் புரிந்து கொண்டேன்!..."

# 10. சாலையிலே ரெண்டுமரம்!...

"கண்ணு முழி ரெண்டையும் தொறந்துப் புட்டியா?..." என்று ஆர்வத்தின் தடுமாற்றத்துடன் கேட்டுக்கொண்டு வந்து நின்ற அந்தப் புது இளவட்டத்தை கைந் நொடிப் பொழுது இமை பரவாமல் பார்த்த செம்பவளம், மறுகணம் பேயடி பட்டவள் மாதிரி பொறி அதிர்ந்து எழுந்து, சுற்றும் முற்றும் பரிதாபமாக விழித்துப் பார்த்துவிட்டு, அதே சடுதியில், "ஆத்தாடியோ!... நானு மோசம் போயிப்புட்டேனே! . ஐயையோ!... ஆத்தாளே!" என்று ஓலம் பரப்பலானாள்! பட்ட காலிலே படுவது போன்று படர்ந்து கிடந்த உவர்க் கோடுகளிலேயே கண்ணீரின் புதிய கோடுகளும் அழுத்திப் பதிந்தன. காதுப்புறங்களை ஒட்டிச் சரிந்து விழுந்த சுருள் அலைக் கேசங்களைத் தலையை உலுக்கி ஒதுக்கிவிட்டாள் அவள். முன் போலவே, நாற்புறமும் கண்களை ஓட்டினாள். ஓட்டிவிட முடியாத நீள் மூச்சும் ஒட்டிக்கொள்ள முடியாத விதியும் அவளது பேதை நெஞ்சத்துக்குப் புயலாயினவோ?

கணங்கள் சில ஊர்கின்றன!

பேய்க்கணங்களா அவை?

செம்பவளம் ஏறிட்டு விழித்துப் பார்த்தாள். மேனி அசதி திருகி முறுக்கியது.

அந்த ஆள், பார்வையைத்தாழ்த்தி விட்டவனாக நின்று கொண்டிருந்தான். கன்னங்களின் இரு மருங்குகளிலும் நீர் முத்துக்கள் தவழ்ந்தன. தவழ்ந்து கொண்டிருந்த அந்தக் 'கறுக்கரிவாள் மீசை'யின் அடியோரங்களில் ஈரத்தின் கசிவு இருந்தது.

வாடிய கோல விழிகளை மூடித்திறந்தாள் அவள். கொட்டாவி பறந்தது.

நெஞ்சத்தின் மையத்தில் பதிந்து விட்டிருந்த அந்தப் பயங்கரக் காட்சி'யினை இப்போதும் அவள் தரிசிக்கத் தவறவில்லை. ஆத்தா இனிமெ நானு என்ன செய்ய ஏலும்?... இந்தப் பாளத்த மண்ணிலே மறுகாவும் கண்ணு முழிக்கிறத்துக்கு எம் மண்டையிலே விதிச்சுப்புடுச்சாங்காட்டி? மூத்தவளே, ஏதுக்கு இந்தப் பொட்டைக் குட்டியை இம்மாந் தொலைவுக்கு தலைமாடு கால்மாடாய் வீசியெறிஞ்சு அலைக் கழிக்கிறே?... உன்னோட குஞ்சில்லையா நானு?... ஏதுக்கு இந்த வசத்திலே சோதனை காட்டினே? ஐயோ! நானு பாவி ஆகிப்பூட்டேனே?...ஐயையோ!.. சமைஞ்ச பொண்ணு நானு, ஒஞ் சொத்திலே குத்து மண்ணையா வாரி வீசிப்போட்டேன்!... சொல்லு, ஆத்தா!...ஊம்! நீ பேசமாட்டே!... அதுக்காகவத் தான் விதி பேசிப்புடுச்சுப் போலே! ஆத்தாடியோ!...

நெஞ்சு பிளந்துவிட துடித்துக் கொண்டிருந்ததோ?

நெஞ்சின் இதயப் பகுதியைப் பிடித்து அழுத்திக் கொண்டாள் அவள்.

எரிமலையின் வாயைப் பொத்திவிட முடியுமோ?

செம்பவளம் தலையைக் குவிந்து நேத்திரங்களை இறக்கினாள். கண்டம் தீயாக எரிந்தது.

இறங்கியும் ஏறியும் விளையாடி—விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்த மார்பகத்தை நோக்கினாள்.

ஊடுருவிப் பரவிய எரிச்சலை மூடிக்கொண்டிருந்த ரவிக்கையின் இருபுறங்களின் கொட்டடிப் புள்ளிகள் எரிச்சலின் நோவு புரியும்படி சுட்டின. கசங்கிக் கிடந்த மேலத் தொங்கலில் கிழிசல் பொன் வண்டாக பளிச்சிட்டது.

பதறிப் போனாள் அவள். பதட்டத்தின் துடிப்புடன் மாரகச் சேலையை இழுத்து விட்டாள். தாழ்ந்த விழிகளை ஏற்றினாள்.

அந்த 'இளசு' முகத்தை நிமிர்த்தவில்லை!

செம்பவளம் கட்டிலை விட்டு இறங்கி 'தடதட வென்று ஓடத் தலைப்பட்டாள். தண்டைகள் குலுங்கின; 'மிஞ்சி'கள் கெஞ்சின.

அவன் திடுக்கிட்டு நிமிர்ந்தபோது, அவள் வெளிப்புறத்துத் திட்டி வாசலை எட்டி விட்டதைக் கண்டான். இடுப்பில் செருகி வைத்திருந்த திருக்கை வால் தார்க்குச்சியை சோற்றுக் கையில் 'லாவி'ப் பற்றியவனாக, அவன் தப்படி போட்டுத் தாவினான்.

மந்தாரம் கலைந்த அந்தி பாங்கு சேர்த்து, பரிவு கூட்டி, பண்பு பிணைந்து, அன்பு தூவி விளையாடி—விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்த பொன் நிறைப் புனித வேளை அது!

"எலே பொண்ணு! இந்தாலே ஒன்னைத்தான்!

கூவிக் கொண்டே ஓடினான்.

நிழல்கள் வளர்ந்து ஓடின.

"கூப்பிடக் கூப்பிட பறிஞ்சிட்டியே சிட்டுக் குருவி யாட்டம்?" என்று கேட்டுக் கொண்டே வேலிப்

படப்பின் தலைப்பில் வழிமறித்து நின்றான் அவன் இரைப்பு மிஞ்சியது. வேர்வை எஞ்சியது.

"என்னை வழி மறிக்கிறதுக்கு நீ... நீங்க யாராம்? எம்பிட்டு விதியைத் தேடிக்கிட்டு நானு போய்க்கிட்டு இருக்கிறேன்! என்னை வழி மறிச்சு நிக்கிறதுக்கு ஒங்களுக்கு என்னா அதிகாரம் இருக்குது? நீங்க யாருங்குறேன்?..."

பத்திரகாளியா அவள்?

அவள் கண்கள் கொவ்வைப் பழங்களாயின. எரி தழலின் செம்மையை அவை ஏற்றிருக்க வேண்டும்.

வெந்தணல் அவள் நெஞ்சில் இடம் கண்டு நாழிகை ஐந்தாறு இருக்குமே!

அவன் அன்பு திறை செலுத்திய விழிகளால் அவளைப் பார்த்தான். கண்ணீர் திரையிட்ட கண்கள் அவளையே சுற்றின. "நானு யாருன்னுதானே கேக்கிறே? நானு ஒரு மனுசன்! அம்புட்டுத்தான்!" அவன் நா தழுதழுத்தது.

"நீங்க மனுசன் என்கிறது மெய்தானுங்க, ஐயா... ஆனா, நானு அனாதைச் சென்மமா ஆயிப்பிட்டேனுங்க; அபலைப் பொண்ணா ஆகிப்புட்டேனுங்க! நானு இனிமே இந்த மண்ணுக்குச் சுமை கல்லாட்டம் தானுங்க. ஆனபடியாலே, என்னை இனிமேயும் தடுத்து நிறுத்தாதிங்க; அதுக்கு ஒங்களுக்கு அதிகாரமும் கெடையாதுங்க. ஆமாங்க, நறுவிசான தாக்கலுங்க, ஐயா!"

அவள் பேசிக் கொண்டே, அவன் 'குறுமறுக்காக' நீட்டிய தார்க்குச்சியையும் மோதித்தள்ளி விலக்கியவ

ளாக, கதவுப்படலை எற்றித் தள்ளிவிட்டு வெளியே பாய்ந்தாள்.

புயலா அவள்?

"இந்தாப் பாரு!..."

அவன் அலட்டினான்.

சாலை நெடுகிலும் செம்மறிக்கிடா கும்பல் சேர்த்து வந்துகொண்டிருந்தது.

அவன் மீண்டும் அலட்டினான்.

அவள் ஓடிக் கொண்டேயிருந்தாள்.

அந்தியும் ஓடிவிட்டது!

சோளக் கொல்லைக்குக் கீழ்வசத்தில் இருந்த ஏற்றக் கிணற்றை நெருங்கினாள் செம்பவளம்.

"ஐயையோ! ஏலே பொண்ணு! அது எரக்கமத்த பாழுங்கிணறு! நில்லு!" என்று கூவிக் கொண்டே அவன் தலைதெறிக்க ஓடினான்.

சுக்கான் கல் இடறி விழுந்து, எழுந்து மீளவும் ஓடினான்.

அதோ, கிணறு!

எட்டுந்தொலைவில் செம்பவளம் ஓடினாள்.

"இந்தாலே, இதைமட்டும் ஓங்காதுக்கு வாங்கிக்கிடு! அது எங்கிணறு. அதிலே விளுந்து சாகிறத்துக்கு ஒனக்கு அதிகாரம் இல்லே! என்னாக்கா, அது எனக்குச் சொந்தமான தேணி! அப்பிடியே, நீ மீறி அதிலே விழுந்தியின்னா, அதே நொடியிலே நானும் ஒங் கூடவே விளுந்து உசிரை மாய்ச்சிக்கிடுவேன்! நானு

கும்பிடுற தாராடி சாமி சத்தியமான ஆணை இது! ம்!...'' என்று வீறுகொண்டு முழங்கினான் அவன்.

சத்தியத்துக்குக் கட்டுப்பட்ட நல்ல பாம்பு கணக்கிலே செம்பவளம் அப்படியே—அங்கேயே நின்றுவிட்டாள்! ரத்தப் பசைமிகுந்த தளிர்மேனியில் கத்தி பட்டதும் ரத்தம் பீறிடுமே, அப்படி அவள் நயனங்களிலிருந்து ரத்தம் கொப்பளித்துப் 'பீறிட்டது! ரத்தம்—ஆம்; ரத்தக் கண்ணீர் பொங்கி வழிந்தது.

அவள் முன்னே அவன் வந்து நின்றான்.

''நீ...நீங்க எதுக்கு என்னை இப்பிடிக்குச் சோதிக்கிறீங்க?'' என்று தேம்பினாள் செம்பவளம்.

அவன் நடுங்கினான். சோளக் கொண்டையின் முனையை எட்டிப் பற்றி நெருடிக் கொண்டிருந்தன அவனுடைய முறுக்கேறிய விரல்கள். ''நானு ஒன்னைச் சோதிக்கலையே! நீதானாக்கும் என்னைச் சோதிக்கிறே?'' என்று பதிலுக்குச் செப்பினான்.

''நானு சோதிக்கிறேனா? பொய்! என்னையில்ல தெய்வம் சோதிச்சுப்பிடுச்சு சத்தமுந்தி! தெய்வம் இல்லே! யாரோ துப்புகெட்ட ஆம்பளை—யாரோ ஒரு ஈவிரக்கமத்த பாவி என்னைச் சோதிச்சுப்பிட்டான்! ஆட்டுக் குட்டியைக் குண்டுக்கட்டாக் கட்டி மடக்கி அதோட கழுத்தைச் சீவுறதுக்கு ஒப்ப, என்னைக் கட்டி மடக்கி அழுத்திப் பதம் பார்த்துப்புட்டானுங்க ஒரு கொடுமைக்காரன்!... அய்யையோ! எஞ்சாமியோ!

அவள் காட்டேறியாக பற்களைக் கடித்துத் துப்பினாள். விழிகள் ஏறிச் சிவந்தன. நெற்றித் திட்டில் பச்சை நரம்புகள் புடைத்தன. செக்கச் சிவந்த

நாசியின் முனையில் ரத்தம் கட்டிவிட்டது. சுடுநீர் சரம் தொடுத்தது தலையில் அடித்துக் கொண்டாள்; முடி இழைகளைப் பிய்த்துக் கொண்டாள். மறுதரமும் அழலானாள். தொண்டைக் குழி எரிந்தது.

அவன் கண்களைத் துடைத்துக் கொள்ளக்கூட நினைவிழந்து அவளையே ஆழ்ந்து நோக்கினான். "மெய்யாலுமா? அதாலேதான் நீ சாலை மரத்துக் கிளையிலே உருவு சுருக்குப் போட்டு அதிலே ஒங் கழுத்தை மாட்டிக்கிட்டு நாண்டுக்கிட இருந்தியா? நல்லவேளை, தாராடிச் சாமி எங்கண்ணுப் புறத்துக்கு ஒம்பிட்டு மூஞ்சியைக் காட்டிச்சு. கண்ணு மூடி, கண்ணைத் தொறக்கிறதுக்குள்ளாற ஒன்னைக் காப்பாத்திப் போட்டேன்!" என்று சொல்லி, அவளை ஆதர்வாக நெருங்கினான். "ஒன்னை இப்படி ஏச்ச பாவியை இன்னிக்கு இல்லாங்காட்டியும் எப்பவானும் ஒரு கடுத்தம் எங்க குலதெய்வம் எங்கிட்டே கொண்டாந்து சிண்டுப் பிடியாய் நிறுத்தாமத் தப்பாது; அப்படியே கட்டாயம் செய்யும் தெய்வம். அப்படிச் செய்யலைன்னா அது தெய்வம் இல்லே! என்னை நம்பு: ஒன்னைக் கெடுத்த அந்தப் பாவியை— அந்த ஈன மிருகத்தை—அந்தப் பாழத்த வெறியனை நானு இந்தத் தார்க்குச்சியாலவே கும்மாங் குத்தாக் குத்தி குத்துயிரும் குலை உயிருமா நதக்கி அடிச்சுப் போட்டுப்புட்டு, அவனை உங்காலிலே விளுந்து மாப்பு கேட்டுக்கிட வச்சுப்புடுறேன்!... அப்பாலே அவன் எங்கிட்டாலும் ஒரு மரத்து உச்சியிலேதான் மாண்டுக்கிட்டுக் கிடப்பான், மெய்யாலுமே ரோசம் உள்ள பொறப்பாய் அவன் இருந்தாக்க! ஒரே ரத்தத்துக்குப் பொறந்தவனுக்கு மானமும் ரோசமும் தான் உசிரு!... வரட்டும்!... சரி... நீ வா!.. குடிசைக்குப் பறிஞ்சு உண்டனப் பேசலாம்!" என்று அவன் கெஞ்சி

னான். கட்கத்திலிருந்து கைக்குத் தாவிய தாரை மீண்டும் இருப்புக்கு இடம் மாற்றினான் அவன்.

அடித்துப் போட்டாற் போன்று அசதி வலுத்தது; அவனையே வெறிக்க வெறிக்கப் பார்த்தாள் செம்பவளம்.

அவன் முகத்தில் ஒரிடம் தரிசு வைக்காமல் கண்ணீரின் தடயங்கள் தடம் காட்டின. "நானு கண்ணு முழிச்சடியுமே நீங்க ஒரே ஓட்டமா வந்து என் முன்னாலிக்கே நின்னீங்க. அதுதொட்டு நீங்க கண்ணு கலங்கிக்கிட்டே இருக்கீங்க! இந்தப் பேதைக் கன்னிக்காவத் தானுங்களே! ஆமா, இம்மாந்தூரம் எம்பேரிலே பச்சாதாபப்படுகிற நீங்க யாரு? என்னைப்பத்தி இம்புட்டு அக்கரைப்படுற நீங்கதான் என் தெய்வமா?... சொல்லுங்க!..." என்று ஓங்கிய குரலில் கேட்டாள் அவள்.

"நானு...நானு மனுசன்! சாதாரணமான ஒரு ஆள்! நாலுபேரைப் போலவே குறையும் நெறையும் கொண்ட ஒரு ஆம்பளை நானு! என்னைக் காளியப்பன் அப்படியின்னு அழைப்பாங்க! ஒம் பேரு?..." என்று எதிர் வினா தொடுக்கினான் அவன். கண்களைத் துவாலை முண்டாசை உதறித் துடைத்துக் கொண்டான். பாகவதர் கிராப்பைக் கோதிவிட்டுக் கொண்டான். "சொல்லுகிறேன்! ஒம்பேரு என்ன? என்னை நம்பு! ஒன்னை நம்புறவன் நானு! ஆனதாலே என்னை நம்புங்கிறேன்! ஒம்பேரு என்னை அடுத்து, மைத்த காக்கைக் குருவிக்குக்கூட தெரியாம கமுக்கமாய் பார்த்துக்கிடுவேன். நெஞ்சை ஒளிச்சு வஞ்சகமா? சும்மா சொல்லு!" என்று உணர்ச்சிச் சுழிப்புடன் பேசிய அவன், அவளுடைய கைகளைப் பற்றிக் கெஞ்ச முனைந்து, அவளை நெருங்கிவிட்

டான். அரைக் கணத்தில் அவன் நிலை மாறியது பின்வாங்கிக் கொண்டான்.

காளியப்பனின் வைரக்கட்டு கூடிய மேனியை மறுமுறையும் பார்த்தாள் செம்பவளம். கம்பீரமும் ஆண்மையும் அன்பின் பண்புடன் பொலிந்தன; மனிதாபிமானம் குழைந்த அம்முகத்தை அவள் நம்பினாள். 'அ...ண்...ணா...ச்...சி!' என்று ஒவ்வொரு எழுத்தையும் கூட்டிப் போட்டு, ஒரே குரலில் கூவிவிட எண்ணியவளின் நெஞ்சில், "சொல்லப்போனா, குத்தமில்லை! என்னை நம்புலே நீ!" என்ற குற்றச் சாட்டும், அக்குற்றத்தின் அநியாயம்போல ஒலித்த தேம்பலும் மட்டையடியாக விழுந்தன. எண்ணியதை மறந்தாள்.

"எம்பேரு செம்பவளம்!" என்று செப்பினாள். செம்பவள உதடுகள் துடிப்புச் செய்தன. தெய்வச் சிலையை பார்ப்பதை நினைந்து, அவளைப் பார்த்தான். அவனுடைய கண்ணீர அவளுக்கு நம்பிக்கை ஆயிற்று!

அவன் ஜீவனுடன் சிரித்தான்!

அந்தி மயங்கிவிட்டது.

"இப்ப நானு என்ன செய்யணும்?

"ஏங்கூட எம்புட்டுக் குடிசைக்கு நீ வர வேண்டும்!"

"வந்து"

"எஞ்சோத்துப் பருக்கையைச் சாப்பிட வேணும்!"

"சாப்பிட்டுப்புட்டு..."

"அப்பாலே ஒம் மனசுப்படி செஞ்சுக் கிடலாம்!"

"மெய்யாலுங்காட்டியா?"

"ஆமாலே! நம்பு புள்ளே!"

"புள்ளேயா?"

"நய்பு செம்பவளம்!"

"எங்க நாட்டுப்புறத்திலே புள்ளேன்னாக்க பொஞ்சாதியைத்தான் சுட்டும். கொண்டவளைக் கொண்டவன் அப்பிடித்தான் அழைப்பானுங்க!

"அப்பிடியா?"

அவள் ஏன் சிரித்தாள்?

அவனும் சிரித்தான்!—ஏனோ?

சிரிப்பு விதிக்கு மாத்திரம்தான் சொந்தமா என்ன?

"பைய நட!"

சோளக்கொல்லை, மிளகாய்ப்பாத்தி, கேணி, பலாமரக்குழு, நிலக்கடலைதாக்கு— இப்படி அறிமுகப்படுத்தியவனாக அவன் முன்னே நடக்க, அவள் அவன் தடத்தை ஒற்றினாள். வைக்கோல்போர் மறுகியது.

வானத்தாய் கறுப்புப் படுதாவை விரித்து உதறினாள். அந்தப் படுதாவில், தன்னுடைய தர்மமிகு பண்புகளை உடுக்களாக்கி விளையாடி—விளையாட்டுக் காட்டத் தொடங்கினாள்!

அதோ; காளியப்பனுக்கு உடைமை கொண்ட குடிசை வந்துவிட்டது! பொங்கலுக்கு பூசிய காவி வர்ணம் எடுப்பாக விளங்கியது!

''மௌ்ளமா தலையைக் குனிஞ்சிக்கணு உள்ளுக்குள்ள வா, செம்பவளம்'' என்று எச்சரிகை விடுத்தான் காளிப்பன். முழங்காலுக்கு மேலாக கோவணக்கட்டு கட்டியிருந்த சாய வேட்டியை அவிழ்த்து விட்டான். இடதுகைப் புஜத்தில் கட்டப் பட்டிருந்த 'தாயத்து' பளிச்சிட்டது. பொன்னுக்குத் 'தக்கனை' காந்தி.

குனிந்ததலை நிமிராமல் உள்ளே நுழைந்தாள் செம்பவளம். சரிந்து விழுந்த சேலை மேலாக்கைக் கொய்து போட்டுக்கொண்டாள். நிலைப்படியைத் தாண்டி, பதுங்கிக்கொண்டே உள்ளே நுழைந்து சிதறிய சீதளக் கதிர்களின் மயங்கிய ஒளியின் துணை கொண்டு அவள் சுற்றிச் சூழ பார்வையைச் சுற்றிச் னாள்.

எட்டடிக்குச்சு அது. மண்ணாலான கட்டைச் சுவர். முகட்டில் பனை ஓலைக்கட்டு. சாணம் போட்டு மெழுகி, உரை கல்லால் தேய்த்துப் பழகியிருந்த மண் தரை. முகம் பார்த்தால் முகம் தெரியும். ஆனால், அவன் அதற்கென்று தனியே முகம் பார்க்கும் கண்ணாடி ஒன்று வைத்திருந்தான். அதோ, ஈசான்ய விட்டத்தில் பனஞ்சப்பையின் தாங்கலில் தொங்கிக் கொண்டிருக்கிறது ஆடி. நூவரலியாவில் கிரயம் செய்தது அது. 'சல்லி' கூடுதல்!

''செம்பவளம்!...'' என்று குரல் ஈர்த்தான் அவன். தெற்குப் பார்த்த குச்சில் அவனும் தெற்குப் பக்கம் பார்த்தவனாகக் கூப்பிட்டான்.

''சும்மா உள்ளுக்கு வாங்க. தலைபத்திரம்! என்றாள் அவள். குரலில் எவ்வளவு பாசம் பெருக்கெடுத்தது!''

அவன் தயங்கியபடி தென்பக்கம் திரும்பி உள்ளே 'வாசு' பார்த்து நுழைந்தான். கட்டுவிட்டிருந்த ஓலைகளின் இடுக்குகளை ஏய்த்துவிட்டு, உள்ளே சிந்திய வெள்ளைப்புள்ளிகளின் ஜாடையில் அவனுக்குக் கைவிளக்கு தென்படத் தவறவில்லை. கைப் பதனமாகப் பற்றினான். சீமை எண்ணெய்ப் போத்தலும் தீக்குச்சியும் விளக்குப் பொருதின.

"குந்து...!"

"குந்துங்க!"

"ம்!"

ஒரே தொனியில், ஒரே பாவத்துடன், ஒரே பாவனை கொண்டு புறப்பட்டு ஒலித்தன இரட்டைக் குரல்கள்.

ஓலைப்பாயில் சரணடைந்தாள் செம்பவளம், எதிர்த்தரப்பில் காணப்பட்ட காவணம் அவள் பார்வையை ஈர்த்தது. 'கொஞ்சமுந்தி நானு படுத்து எந்திருச்ச எடம் அதான் போல!' கூதல் காற்று தறி கெட்டு வீசிற்று. பொட்டல் வெளியில் காற்றுக்கா பஞ்சம்?

"ஆமா, நானு எப்படி இங்கிட்டு வந்தேன்?"

"நீ செத்துப்புட எத்தனம் செஞ்சப்ப, நானு வந்து ஒன்னைக் காப்பாத்தி என்னோட பொட்டி வண்டியிலே ஒன்னைக் கிடத்தி ஒரே விரட்டிலே இங்கிட்டுக் கொண்டாந்து சேர்த்துப்புட்டேன். ஒனக்குச் சுய பிரக்ஞை வரலே. அந்தாலே தெரியுதே கொட்டகை, அதிலே கட்டிலுமேலே ஒண்ணைக் கிடத்தினேன். குவளையிலே தண்ணி மொண்டாந்து உம்மூஞ்சிலே தெளிச்சேன், மூச்சுக் காட்டலே

நீ ஆனா, ஒனக்கு மூச்சு மட்டும் உள் வட்டமா அடங்கிப் பேசிச்சு. அதொட்டித்தான் எனக்குத் தெம்பு ஊறிச்சு, சோளத்தட்டைக்குத் தண்ணி கொளுவி பனுக்கிப்புட்டு திரும்பியாந்து பார்த்தேன். நீ கண்ணைத் தொறக்கலே! ஆத்தா மூத்தவளுக்கு மேலைக்கு பள்ளயம் படைக்கிறதா நேர்ந்துகிட்டேன். நொடி கழிச்சு, செவலைச்குப் புண்ணாக்கு உடைச்சுப் போட்டு தண்ணி காட்டிப் புட்டு ஓடியாந்தேன். அப்பத்தான் நீ கண்ணு ரெண் டையும் தொறந்து பரிதாபமா முழிச்சுப் பார்த்தே! தெகை தப்பி இருந்திச்சு ஒங்கண்ணுக! ஆத்தாடி! இப்பத்தான் கொஞ்சத்துக்கு கொஞ்சம் உம் மூஞ்சி யிலே களை உண்டாகியிருக்குது!'' என்று அவள் முகத்தைப் பார்க்காமல், சூன்யத்தில் கண்பதித்து, அவள் முகத்தைப்பற்றி வியாக்கியானம் செய்தான் காளியப்பன். பாயின் வடமுனையில் பட்டும் படா மலும் அவன் கால்பாவி உட்கார்ந்து கொண்டான்.

''ஆமாம்; எனக்கிண்ணேதான் ஒங்களை இந்தப் புறத்தாலே எஞ்சாதிச்சாமி தட்டி விட்டிருக்க வேணும்!''

''இருக்கும், இருக்கும்! சனிச்சந்தைக்குப் போயிட்டுத் திரும்புகாலிலே தானே நானு ஒன்னைக் கண்டுக்கிட வாய்ச்சிது!''

''அதே எஞ்சாமி ஒங்களை ஒரு பொட்டுப் பொருளுக்கு முன்னாடியே அங்கணே கூட்டியாந்து விட்டிருந்தாக்க, நானும் தப்பிச்சிருப்பேன்; ஓசந்த மானமும் பொழைச்சிருக்கும். ஐயையோ!... சாமியே இந்தப் பாவத்தை நானு சொமக்கிறத்துக்கு நானு என்ன பாவம் செஞ்சேனோ?... ஆத்தாளே!''

தனக்குத்தானே புலம்பி அப்புலம்பலின் அழுத்தத்தில் தன்னைத் தானே அழுத்திக்கொண்டு திக்குமுக்காடினாள். திமிலோகப்பட்ட இதயம் தரைமீனாகத் தத்தளித்தது.

"அழுவப்புடாது செம்பவளம். நானு அந்தத் தருணத்துக்கு வந்திருந்தாக்க, அந்தப் போக்கிரிப்பய மவனைக் குதறி எடுத்து அவன் குருதியைக் குடிச்சிருக்க மாட்டேனா, சாமியாடிச் சாம்பானுக்கு மிஞ்சி? எம் பொசிப்பு அம்மட்டுத்தான்! ஊரு பேரு மூஞ்சி முகரை தெரியாத அந்தப்பாவி மவன் தப்பிச்சுக்கிட்டான்!... ஆமா, அந்த ஆளை தடயம் கண்டுக்கிடக்கூட ஏலலையா?... எங்கானும் கண்டாக்கூட இனம் காண ஏலாதா?—" என்று பதட்டம் மூள விசாரித்தான் காளியப்பன்.

"நானு நடப்பைப் புட்டுவச்சுச் சொன்னாத்தான் ஒங்களுக்கு அல்லாம் மட்டுப்படும். எனக்குப் பொறந்த மண்ணு நாகுடி. அரசர் குளத்திலே எங்க அம்மான் வூடு இருக்குது; அங்கிட்டாலே விருந்தாடி பறிஞ்சேன். அம்மான் மவன்காரங்கதான் இந்தத் தை கடோசியிலே எனக்கு வாய்ச்சிட்ட மச்சானாக ஆக இருந்திச்சு. அதுக்கு எந்தலையிலே லவிதம் எழுதிப் போடலை. நானு விருந்துக்கு உட்கார்ந்துப்பிட்டு, மதியத்துக்கு— அதான் இன்னியப் பொளுது மதியத்துக்குத்தாண்டி அடி சாயத்தலைப்பட்ட பொளுதுக்கு, நானு காட்டுப் பக்கம் நாடி வந்தேனுங்க. அம்மான் வூட்டு காடுகண்ணுங்களுக்குப் புதுப்புல்லு கொஞ்சம் செதுக்கிப் போடுவோமேயின்னு உளவாரமும் தட்டுக் கூடையுமாய்ப் பறிஞ்சு நடந்து, புல் கண்ட இடத்துக்கு வந்தேன். வெயிலோட சுள்ளாப்பு தணிஞ்சு வந்திச்சு. பாதச்சூடு பதவிசானது. ஆனதாலே, சாவகாசமாக்குந்திக்

கினு புல்லு செதுக்க ஆரம்பிச்சேன். மூசுன்னு மப்பு வேறே மானத்திலே விளுந்திச்சு. அந்தச் சமயங் கண்டு, பேய் பிசாசு தன்மையிலே யாரோ ஒரு ஆளு பின்வசமா நலியாம வந்து லபக்கினு ஒரு தடித் துப் பட்டியை எம்மூஞ்சியிலே போட்டு மூடி அப்பிடியே குண்டுக்கட்டாத் தூக்கி லாந்திக்கினு போயி என் னமோ ஒரு பத்தை ஒண்டலுக்கிட்டே என்னைப் போட்டு ..... ஐயையோ! ஈனச் செம்மம் ஆகிப் போனேனே! ஆத்தாடியோ! ஐயையோ!...''

வெடித்தது விம்மல். கைகள் இரண்டையும் தரையில் ஓங்கி ஓங்கி அடித்தாள். நலிந்துபோயிற்று அவள் முகம். நீர்ச்சுழிப்பு வேறு. ''எம்மூஞ்சி துப்புரவா மூடப்பட்டு போச்சு. அதனாலே வந்த ஆம்பளை யோட மூஞ்சி முகரையை நானு கண்டுக்கிடவே வாய்க்கலே! எம்பலம் எனக்கு உதவலே. எம்பிட்டு ஆங்காரத்துக்கு மாத்திரம் அப்பைக்கு ஒரு பாதை கிடைச்சிருந்திச்சுதின்னா, அப்பவே அந்த ஈன மிரு கத்தை இந்தப் பல்லாலேயும் இந்தச் சூரி நகத்தாலே யும் கடிச்சுக்குதறித் துப்பிப் போட்டிருப்பேனே! அதுக்குக் கூட ஒரு வழி கெடைக்காமப் போயிட்டுதே! இனிமே, அந்தப் பாளத்த பாவியை நானு எப்பிடிங்க இனம் காண ஏலுமுங்க? ஊருக்கு ஓசந்தவளே! அப்பவே என்னைக் கொண்டுகிட்டுப் போயிறப்புடாதா? ஐயோ!'' மீண்டும் அழுகை மீண்டது.

ஒருகல் தொலைவில் இருந்த புண்ணிய பூமியின் அமைதி இங்கே வந்து அணைத்தது. எங்கோ கதறிய 'சாக்குருவி' களின் அபய ஓலம் இங்கே வந்து ஒடுங் கியது. வங்கு நாயின் ஊளைச்சத்தம் வேறு மடங் கியது.

"சரி, சரி! நானு 'ஒரு புத்திகெட்டவன். பழ சையே நோண்டிக்கிட்டு இருக்கிறேன்!...சரி! அந்தச் சனியனைப்பத்தி இனிமெ நெஞ்சுக்குக் கொண்டா ரவே புடாது. அதான் லாயக்கு! இப்ப நீ எங்கவூட் டுக்கு விருந்தாடிப் பொண்ணு! நேரத்தோடவே இங் காலே வந்திருந்தா, ஒரு கோழியைத் தட்டிக் குழம்பு ஆக்கிப் போட்டிருப்பேன். அல்லாம் விடி யட்டும். விருந்து ஓடியா போகுது? இப்ப நீ ஏதாச்சும் சாப்பிடவேணும். பாக்குக் கடிச்சுத் துப்புற நாழிகை நீ இந்த வெத்திலைக் குட் டானிலே இருக்கிற பாக்கைக் கடிச்சுக்கிட்டு, வெத்திலையையும் மென்னுக்கிட்டு இரு. மறந்திடாம, மூணாவதையும் சேர்த்துக்கிடு நானு சோறு களைஞ்சு போட்டு வடிச்சுப்பிடுறேன். காலம் பற ஆக்கின குழம்பு இருக்கு. சுண்டல் சாதம் வேறே ஊர்ப்பட்டது மிஞ்சியிருக்குது! போதுமில்ல... இல் லேன்னா, அந்தாலே நிக்குது கோழி, அதைப் பிடிச் சாந்து தலையைத் தட்டட்டுமா?" என்று ஒரே மூச் சில் பல விவரங்களை அவள் முன் வைத்தான் காளி யப்பன். அகன்று விரிந்திருந்த மார்பகத்தில் துளிர்த் திருந்த வேர்வையை 'லேஞ்சு' கொண்டு துடைத் தான். பிறகு, அவளை உன்னிப்பாக நோட்டம் பதித் தான்.

அவளோ அவனை அதிசயமாகப் பார்த்தாள், மீன் விழிகளிலே மீன்களைக் காணோம்; வினைக் குறியீடுகள் தாம் காணக் கிடந்தன; காணக் கிடைத் தன! "ஆமா, ஒங்க பொஞ்சாதி?" என்று மெல்ல இழுபறியாக ஒதுக்கினாள்.

"நல்லாக் கேட்டே! பொஞ்சாதி தானே? எருச்சி வேளான்கிட்ட அச்சாரம் கட்டி செய்யச் சொல்லி ஏகப்பட்ட கிழமை நழுவிப்பிடுச்சு. பொஞ்சாதியைச் செஞ்சு கொண்டாரலே!"

அவனுக்குப் பதிலாக அவள் சிரித்தாள்.

''என்னாங்க இது? தடம் தப்பி வந்த பொண்ணாச்சேயின்னா, காது குத்தப் பார்க்குறீங்க. வெட்டு ஒண்ணு துண்டம் ரெண்டாச் சொல்லுங்க. ஒங்களுக்குக் கண்ணாலம் கட்டியாச்சா? இல்லியா?'' சிரிப்பின் லயம் மாறி, வெஞ்சினத்தின் சாயல் லேசாக அகம் காட்ட முனைந்திருந்தது.

அவள் முகத்தை 'நேருத்திரமாக' நோக்கவில்லை அவன். ''நானு இப்பைக்கு ஒண்டிக் கட்டை, இன்னும் எனக்குக் கண்ணாலம் ஆகலே!''

செம்பவளம் 'சடக்'கென்று எழுந்தாள்: ''ஒத்தை ஆம்பளையோடே இந்தக் குட்டி இந்தக் குடிசையிலே தங்குவா இங்கிறது ஒங்க நெஞ்சோட சபலம்? அப்படித்தானுங்களே, ஐயாவே?'' என்று சத்தி சிவ சங்கரியின் பாங்கினிலே விளித்தாள் அந்தக் காட்டுப் பூ. ''ஏமாந்த பொண்ணு... சதாவும் ஏமாந்துப்புடுமின்னு பொய்க் கணக்குப் போட்டுப்புட்டீங்களாக்கும்?'' என்று அவள் கண்டத்தைக் கடினமாக்கிக் கேட்டாள். ''சொல்லுங்க... எம்மூஞ்சியைப் பார்த்துச் செப்புங்க. என்னை நல்லாப் பாருங்க. குத்தமில்லே!... ஒங்களுக்கு நெஞ்சிலே ஒங்களையும் மீறிக்கினு வேறே ஏதாச்சும் யோசனை, சபலம், குயுக்தி இருக்குதா?... உடைச்சுப் பேசுங்க. அப்பாலே, என்னை பொல்லாதவளா ஆக்கிப்புடாதீங்க! ஆமா! இப்பவே சொல்லிப் பூட்டேனுங்க! உடுக்குக்காரன் பேச்சாட்டம்தான் எம்புட்டுது இருக்கும்!'' என்றாள்; சீறும் பாம்புக்கு மூக்கின் முனையில் சினம் ஏறும் அவளது மூக்குத்தி செம்மை பாய்ந்து ஒளிர்ந்தது.

"செம்பவளம், என்னை என்னான்னு நெனைச்சுப் பேசறே?... பொண்ணாச்சே, அந்நியம் அசலாச்சே, பாவம் எக்குத் தப்பா மனசொடிஞ்சு வந்திருக்குதே யின்னு வாயடைச்சுக் கிடக்கிறேன்! நிதானமாப் பேசு! நானு ஆம்பளை...மனுசன்! நானு புறம்போக்கு இல்லே! போகுடி நாட்டானும் இல்லே! எனக்கு காடு, கரை, நிலம் நீச்சு, சொத்து சுகம் அல்லாம் இருக்குது! எனக்கு மனசுக்குப் பிடிச்ச பொண்ணு தட்டுப்படலே! ஆனதாலே, கண்ணாலம் கட்டிக் கலே! மத்தப்படி, நானு நெனச்சா, எம்பிட்டோ சமைஞ்ச குட்டிங்க வந்து எங்காலடியிலே தவம் கெடப்பாங்க!... ஆனா, நானு யோக்கியமானவன். எனக்கு மானம் ஒசத்தி! ஆனா, நீ தப்புப் புள்ளி கணிச்ச மாதிரி, நானு ஒன்னை வஞ்சனை செஞ்சுப் புட மனசிலே இத்திகூட நெனைக்கலே, அந்த மாதிரி சம்சயம் உண்டாகவே இல்லே!... அப்படியே எம் மேலே ஒனக்கு நம்பிக்கையும் நல்லெண்ணமும் உண்டாகாங்காட்டி, இப்பவே என்னைக் கொன்னுப்புடு ...இந்தா கொடுவாள்!" என்று மொழிந்து, கூரைக் கட்டில் இருந்த கூர்மைக் கத்தியை எடுத்து அவளிடம் கொடுத்தான்!

செம்பவளம் நாராக நலிந்தாள். மூக்கை உறிஞ்சிக் கொண்டாள். விசும்பல் கிளர்ந்தது. கண்களின் பளபளப்பை மின் ஒளி கூட்டிக் காட்டியது. "என்னைச் சமிச்சுப்பிடுங்க!... அம்... அம்... ஆமா! மெய்யாலுமே நீங்க எங்க வாழ்முனியாட்டமேதான், சாமியேன்னுங்க. ரூபத்திலே ஏன் வராப்புடா காம்?... உங்க [illegible] மனவளுக்குள்ளே இருக்கிறப்போ, எனக்கு ஏதுங்க பயம் விருத்தம்? சரிங்க! நீங்க ஒங்க பாட்டுக்குத் தூங்கிக்கிடுங்க. நானும் இக்கூண்டு நேரத்திலே போகறு

கொதிக்க வச்சுப்புடுறேன். சாமான் சட்டுகளை அள்ளுங்க!'' என்று துருசு படுத்தினாள்.

நல்ல மூச்சு வெளிவந்தது காளியப்பனிடமிருந்து, கொடுவாளை இருந்த இடத்திலே சேர்ப்பித்தான்.

''வெரசு படுத்துங்க. பாவம், ஒங்களுக்குப் பசிக்கும்!'' என்றாள் செங்கமலம்.

அவனுடன் சுவரொட்டி விளக்கும் ஓடியாடியது, பிறகு அவளுடன் அணைந்தது, அணையாத விளக்கு.

அவள் அடுப்படிக்குள் அடியெடுத்து வைத்தாள், அரிசியுடன்.

அவள் அடுப்படியை விட்டு அடிமீட்டெடுத்தாள், சோற்றுடன்.

''இந்தாப் பாருங்க, ஒங்களைத்தானுங்களே!' என்று அலட்டினாள் செம்பவளம். கழுத்தின் அடி வட்டத்தில் அப்பியிருந்த வேர்வையைச் சேலை முகத்தலைப்பினால் துடைத்தாள். எரிச்சல் விளைந்தது. குனிந்துப் பார்த்தபோது, நகக் கீறல்கள் இரண்டு 'குறுக்குச் சாலோடி' இருந்தன. 'அடபாவி.. பாதகா' கச்சையின் கீழ் முடிச்சுக்களை 'லாகவம்' பார்த்தபடி நேரே நடை பயின்றாள், வண்ணக் கலாபமாக ஆனாளோ என்னவோ?

பிறை வடித்த பால் வண்ண நிலவில் காளியப்பன் எதிர்ப்புறம் பார்வையைச் சாடியபோது, செம்பவளம் அவன் கண்களிடை மிதந்தாள். மாடுகளுக்குத் தீவனம் வைத்த பின்னர், திரும்பினான். அவன் கையில் பூவரசுத் தடுக்கு இலை ஒன்று தையல் கண்டு இருந்தது. தையலுக்கல்லவா? அவன் கொட்டாவியை வெளியேற்றிக்கொண்டு வந்தான்,

"தூக்கம் கண்ணைச் சுத்துதுங்களா?"

"பசிதான் கண்ணைச் சுத்துது, வெள்ளன கஞ்சி குடிச்சது!..."

"சுருக்கன் மூஞ்சியைக் கழுவிக்கிணு ஓடியாங்க!"

அவனுடைய 'குறிஞ்சிப்பாடி வட்டி'யில் சோறு ஆவி பறந்தது. 'வெஞ்சனத் தட்டி'ல் தட்டின்றி பதார்த்தங்கள் காட்சியளித்தன. பழைமை மாறாக் கோலம்!

முகத்தைத் துடைத்துக் கொண்டு வந்தான் காளியப்பன்.

"துண்ணூருவேணுமா?" என்று கேட்டுக் கொண்டு விபூதி மடலை அவனிடம் நீட்டினாள். மருதாணி நகங்கள் மின்னின.

அவன் பூசிக்கொண்டான். குந்தினான். வட்டிலை நகர்த்திக் கொண்டான். "அந்த இலையிலே நீ உண்ணுக்க?" என்று ஆலோசனை பகன்றான்.

'ஊம்' கொட்டினாள் அவள்.

"உண்ணுங்க!"

"நீ?..."

"முதலிலே நீங்க உண்ணுங்க. அதான் வளமை"

'நீ எம்புட்டு விருந்தாடிப் பொண்ணாச்சுதே?'

'ஆமா, விருந்துக்கு வந்து வாய்ச்சவள்தான். அட்டி சொல்லலே! .. நானு பொட்டைக் கழுதை! பொறகாலே சாப்பிட்டுக்குறேன்!'

சும்மா நீயும் சாப்பிடு!'

'ஊக்கூம்!'

'மேலுகுளிக்கோணுமா? சொல்லு, நானு அங் கிட்டாலே ஓடிப்புடுறேன்!'

'அது ஒண்ணுதான் கொறைச்சல் எனக்கு! நீங்க சாப்பிடுங்க! நானு சொன்னாச் சொன்னதுதான்... நீங்க முந்திச் சாப்பிட்டாத்தான் நான் பிந்திச் சாப் பிட ஒப்புக்குவேன்!'

அவன் பேச்சு மூச்சுக் காட்டினால் தானே?

வட்டில் நிறைந்து. காலி ஆனது.

'ஆமா, இந்த ஊருக்குப் பேரு என்னவாம்?'

'அதுவா!... சேந்தமங்கலம்னு பேரு!'

'இதுக்கும் எங்க நாகுடிக்கும் எம்மாந்தூரம் இருக்கும்?''

'பன்னெண்டு கல்லுக்கு மிஞ்சித்தான் இருக்கும்!'

'எங்க மச்சான்காரக ஊருக்கும்... அதாங்க... அரசர்குளத்துக்கும் இதுக்கும்?''

'ஒண்ணு ரெண்டு பதிய இருக்கும். அம்புட்டுத் தான்!'

அவன் பதில் சொல்லிக் கொண்டே சாப்பிட் டான். 'ஏதுக்காம் கேக்குறே?'

அவள் அகப்பைச் சாதத்தைக் கொட்டி விட்டு, 'என்னைக் காணாம இந்நேரம் அம்மான் வூடு அமளி துமளிப்படும். இடுசாமச் சங்கதி எங்க ஆத்தாக் காரிக்கும் விழுந்திருக்கும். இடுக்கிப் பூச்சியா துடித் திருப்பா என்னைப் பெத்த புண்ணியவதி!' என்று தழு தழுக்கச் சொன்னாள்.

''நெசந்தான் செம்பவளம்!' என்று எழுந்தான்.

''தண்ணிச் சோறு?, என்று இடை மறித்தாள்.

'சாப்பிடுற பழக்கம் இல்லே!' என்று கைகளைக் கழுவினான்.

அவள் தன்னிடம் முன்பு ஒப்படைக்கப்பட்ட வெற்றிலைக் குட்டானை இப்போது அவனிடம் ஒப்படைத்தாள்.

'நீ போட்டுக்கலையா?'

'இந்த மூஞ்சிக்கு இதுதான் பத்தலையா?'

அவன் மௌனத்தை விழுங்கினான்.

'சரிலே... நீ சாப்பிடு!'

அவள் நீர் முட்டியைக் கவிழ்த்துக் கையைக் கழுவினாள். இலையின் முன்னே குந்தினாள். பாங்குற அட்டணைக்கால் இட்டுக் கொண்டாள். கால் தண்டைகளை மறைத்தாள். எம்பித் தணிந்தது மார்பகம். மாரகச் சேலையைச் சீர்ப்படுத்திக் கொண்டவள், திடுதிப்பென்று கதறியழுதவளாக எழுந்தாள். சருவச் சட்டியில் கால் இடறியது. 'எனக்குச் சோறு வேணாம்! என்னை எம்போக்குக்கு விட்டுப்புட மாட்டீங்களா, ஐயா?' என்று கையெடுத்துக் கும்பிட்டுக் கெஞ்சினாள் செம்பவளம்.

'சாப்பிடு... அப்பாலே போவலாமே!'

'வாய்க்காதுங்க!'

'நானு சாப்பிட்டது தப்பு!'

'அப்படிச் சொல்லப்படாதுங்க. அடுக்காது!

'பின் என்னவாம்? நீ நல்லதனமாச் சாப்பிடுவே. அழும்பு பேசமாட்டேன்னு நம்பித்தானே நானு முந்திச் சாப்பிட்டேன்!'

'மெய்தான்!'

'பின்னே சாப்பிடு!'

'ஊக்கூம்! நானு பறியப் போறேன்!'

'எங்கணே? ஒங்க ஊட்டை நாடியா? இல்லே, உம் மச்சான் ஊட்டுக்கா?'

'எங்கணவும் போகல்லே!'

''பொறகு?'

''என்னோட விதியைத் தேடிக்கிட்டுப் போறேன்!'

காளியப்பன் தவித்தான்; துடித்தான். 'மறுதப் படியும் சாகப் போறீயா?'

அவள் மௌனம் சாதித்தாள்.

நீ செத்தா நானும் அந்தடியும் செத்துப்புடுவேன்!'

அவள் பதறித் தவித்துத் துடிப்பைக் கக்கினாள். 'எனக்கும் ஒங்களுக்கும் என்னா புணை?' என்று நைந்த குரலெடுத்து நயனத்திடை நீத்தொடுத்து, நெடுமூச்சை வெளியெடுத்துக் கேட்டாள்.

'நானு நெஞ்சுள்ள மனுசன்! நீ நெஞ்சு கொண்ட அபலைப் பொண்ணு! அதான் பிணை காரணம்... சகலமும்! புரிஞ்சுதா?'

கூண்டைத் துண்டித்து வெளியேற எத்தனம் செய்தது கோலப் பசுங்கிளி.

அவளது பூங்கரம் பற்றித் தடுத்தான் காளியப்பன். 'இந்தாப் பாரு...நீ உன்னோட நேச மச்சான் ஊட்டுக்கு வா. கையோட கொண்டாந்து அங்கணே விட்டுப்புட்டு வரேன்!... உன் ஆத்தா கிட்ட வா...

ரேக்ளாவிலே கொண்டு போய்ச் சேர்ப்பிக்கிறேன்...! ஆனா, ஒன்னை ஒண்டியா மட்டும் விட்டுப்புட ஏலாது!'

அவள் கண்ணீர் பெருக்கினாள். 'எம் பேரிலே உசிரையே வைச்சிருக்கிற எம்புட்டு ஆசை மச்சானை நானு இனிமே எந்த மூஞ்சியோட போய்க் கண்டு தண்டு வேனுங்க?... அவங்க அன்பை, நேசத்தை, பாசத்தை வஞ்சிக்க நானு துணிஞ்சேன்னா, அப்பாலே எனக்கு ஏழேழு பொறப்புக்கும் கடைத் தேறவே வழி கெடைக்காதுங்க! ஆனா, எனக்கு நேர்ந்திட்ட இடுசாமத் தீவினையை அவுக கேட்டாக்க, அப்பவே என்னை தழையைச் சீவுறதொப்ப சீவி காவு வீசிப்புடுவாருங்க! என்னைப் பெத்த ஆத்தா இந்தச் சேதியைக் கேட்டா, அப்பவே நெஞ்சடைச்சு சிவலோகம் போயிடுவாங்க! இப்ப சொல்லுங்க எனக்கு ஒரு வழி... ம்... சொல்லிடுங்க! ஒத்தை தடமானாலும், ஒசந்த தடம் இனி எனக்கு இருக்குதுங்களா, செத்து மடியிறத்தைத் தவிர்த்து? வாயைத் தொறந்து கேக்குறேனுங்களே, வாயைத் தொறக்க மாட்டேங்களா?...'

அவள் வீறுடன் வினவியவளாக, அலைபாய்ந்து நின்ற காளியப்பனை உலுக்கி விட்டாள்.

'சொல்லட்டுமா?'

'ஓ!'

'சொன்னா, கோபிச்சுக்க மாட்டேயே?''

'ஊஹூம்!'

'எஞ்சொல்லுக்கு மதிப்பு தருவியா?'

'ம்!' கதுப்புக் கன்னங்கள் குழிந்தன.

'சாமி ஆணையா?'

'சாமி ஆணையாத்தான்!'

'கையடிச்சுக் கொடுக்க ஏலுமா?'

'ஓ!' என்றாள் நெஞ்சம் நெகிழ. கண்ணாடி வளைகள் குலுங்க கையடித்துக் கொடுத்தாள். 'நீங்க சொல்லுங்க. ஒங்க சொல்லுதான் இனிமே எனக்கு வேதவாக்கு!'

நொடி நேரம் காளியப்பன் சிறு பிள்ளை போல தேம்பிக் கொண்டே நின்றான். உணர்ச்சியின் ருசி பேதங்கள் அவனுடைய நாக்கின் நரம்புகளிலே அடி நாதமிட்டன; ரத்த நாளங்களைப் பேசச் செய்தன வீராப்பின் நெஞ்சுரத்துடன் அவன் வாய்திறந்தான். 'நீ என்னை கண்ணாலம் கட்டிக்கிட ஒப்புவியா? என்று கேட்டான்.

செம்பவளம் அழகின் கலையுணர்ச்சி மிளிர விம்மினாள். சிந்தூரக் கன்னங்களிலே ஒய்யாரம் பதித்தது நீர் முத்தங்கள். 'நெசமாலுமா? ம்... சரிங்க! ரோசிச்சேன்... நீங்க செப்பிட்டீங்க!... எனக்கு விடி மோட்சம் காட்டியிருக்கிக நீங்க! ஒங்களோட அன்புக்குக் கட்டுப்பட்டுத்தான் என்னோட வாழ்க்கையை ஒங்களுக்குத் தர்மம் செய்யச் சம்மதிக்கிறேன்!... ஆமாமுங்க, எங்க சாமிக்கு மெய்யான விசயமுங்க இது!'

காளியப்பன் தன்னுடைய எழிலார்ந்த கறுமை படர்ந்த 'கறுக்கரிவாள்' மீசையை ஒயிலுடன் நீவி விட்டுக் கொண்டான், 'சபாசு! நானு ரொம்ப ரொம்ப கொடுத்து வச்சவனாக்கும்! அதான் ஒன்னையே எடுத்துக் கிட்டேனாக்கும்!... எனக்குப் பொசிப்பு அனையமாயிருக்கு! அதான், இந்தப்

சீதேவிப் பொண்ணு நீ எனக்குப் புதையலாட்டம் கெடைச்சிருக்கிறே!' என்று மெய் மறந்து பேசினான் அவன். கண்ணீர் துலங்கியது;

அவளுடைய கண்ணீரை அவன் துடைத்து விட்டான். கை விரல்கள் நடுங்கி, அடங்கின. 'சரி, இப்ப வாச்சும் சாப்பிடு, செம்பவளம்!'

அவள் மோனம் நிறைந்த நாணம் தூவினாள் 'எஞ் சோறை இனி நானு சாப்பிடாம இருப்பேனா?'

அவன் சிரித்தான்.

அவள் குந்தினாள்.

அவன் இலையை நகர்த்தினான்.

அவளோ எச்சில் வட்டியை தன் திசைக்கு வசமாக்கினாள்.

மோதிரக் கை பரிமாற, வளைக் கரங்கள் கவளங்களை உருட்டின.

'ஒரு சங்கதிங்க... நானு இங்காலே இருக்கிறதுப்பு ஒரு ஈ .. காக்காவுக்குத் தெரியப் புடாது.'

'அது எனக்குப் புரியாதா, புள்ளே? விடியறதுக்குள்ளே நாம மேலச் சீமைக்குப் பறிஞ்சிடுவோம்!'

அவள் நளினக்கவர்ச்சியுடன் நகை சிந்தினாள்.

'நானு இந்த வட்டைக்கு ராசா. பல்லு மேலே பல்லுப் போட்டு ஒரு பய என்னை ஏதும் கேட்கவே மாட்டான்!'

அவள் மறுபடி சிரித்தாள்.

அவளுக்குக் கை கழுவ நீர் கொடுத்தான், அவன்!

அவனுக்கு இதழ் சிவக்க தாம்பூலம் கொடுத்தாள், அவள்!

பிறைக் கன்னிக்கு வெட்கம் வந்து தொலைந்தது!

சுந்தரக் கனவுகள் நெஞ்சிலும் நினைவிலும் பின்னி விளையாட, காளியப்பன் அந்தம் சேர்ந்துத் தன்னுடன் சிரித்துக்கொண்டான். மேனியின் சிலிர்ப்புத் தட்டுப்பட்டது. விண்ணுக்கும் மண்ணுக்குமாகக் கூடுவிட்டுக் கூடு பாய்ந்தான். தன்னுள் செம்ப வளத்தை நிறைத்துக் கூடு விட்டுக் கூடு பாய்ந்தான். இன்பம் பாய்ந்தது. இனிப்புக் கண்ணீர் பாய்ந்தது. இனிய நற்கனவுகளின் இனிய நல் நினைவுகள் பாய்ந்தன.

'சொக்க வெள்ளிப் பார்க்குடம்' செம்மை நலம் கொழித்து பிறைவடிவில் மிதந்து கொண்டிருந்தது.

அழகனுக்கு அழகை ரசிக்கத் தெரியும்.

அழகுக்கு அழகில் மயங்கத் தெரியும்.

போதைக்குப் போதம் புதிது.

போதத்துக்குப் போதை அந்நியம்.

அவன் அவளுள் அடங்கி மீண்ட நினைவில், போதையும் போதமும் லய சுத்தமாகப் பின்னி விலகின. அவள் ஞாபகத்தில் அவன் கலந்த சித்தத் தெளிவோடு, எட்டி நடந்தான். 'பாவட்டா' பீடிகளைச் சுவைத்து இழுத்தவனாக அவன் நடந்த வேளையில், சாலை நெட்டுக்குமாக வெறுமைச் சாட்சியாய் நின்ற பாழ் வெளிக்கு ஒரு திருஷ்டி பரிகாரம் போல அமைந்திருந்த அந்த இரண்டு ஆல மரங்களையே இமை வலிக்கப் பார்த்துக் கொண்டேயிருந்தான். அப்போது அவன் கைவிரலில் கொடுக்கியிருந்த துண்டு பீடி கை நழுவ, அவள் இதழ்க் கரையை விட்டு பாட்டு ஒன்று கிளம்பியது. அவன் பாடினான். பாட்டிடைக் கலந்தான்.

''சாலையிலே ரெண்டு மரம்!
சர்க்காரு வச்ச மரம்!
ஓங்கி வளர்ந்த மரம்!
ஒனக்கேத்த தங்க மரம்!''

அவன் இதழ்களை நிறுத்தி ஓய்ந்த நேரத்திலே, அருகாகச் சென்ற ரேக்ளா ஒன்று 'விசுக்'கென்று நின்றது. ஓரிளைஞன் குதித்தான். வாட்டசாட்டமான புள்ளி.

'அண்ணாச்சிக்கில்ல... ஏறுங்க!— நா குடிப் பொண்ணு ஒண்ணு இந்தப் பக்கம் வந்திச்சுங்களா? கஞ்சிப் பொளுது தாண்டி பறிஞ்சு வந்ததை இம்மாம் பொழுது மண்டியும் வீட்டுப் புறத்தாலே காண முடியலீங்க!... செம்பவளம்னு பேருங்க! கண்டதுண்டா அண்ணாச்சி!'' என்று குரல் கலங்கக் கேட்டான் அந்த அழகன்.

அவனையே வெறிக்கப் பார்த்து நின்ற காளியப்பன், சுயப்பிரக்ஞை பெற்றதும், 'அப்படி ஒரு பெண்ணும் இந்தச் சாலைப் பக்கமே வரலையே! நானு இங்கிட்டுத் தானே மம்மலிலேந்து இது நேரத் தொட்டியும் சுத்திக்கிணு இருக்கேன்!... ஒங்களைப் பார்க்கிறதுக்குப் பரிதாபமா இருக்குது! உங்க நாட்டுப் பகுதியிலே தேடிப் பாருங்க!' என்று முத்தாய்ப்பு வைத்தான். அவனது அடிமரம் நெகிழ்ந்தது.

காளியப்பன் புதிய உள்ளத்துடன் கேணியில் இரண்டு 'சால்' நீர் இறைத்துத் தலையில் ஊற்றிக் கொண்டு புதிய உடம்புடன் தன் இருப்பிடத்தை அடைந்து, 'புள்ளே செம்பவளம்!'' என்று கூவி, குளிச்சாச்சா? புதுசு உடுத்தியாச்சா? ஒம் மச்சான்

காரன் நானு தலையை உள்ளாற காட்டலாமா?' வரம் கேட்டு நிக்கிறேன்!' என்று அடுக்கினான்.

அதற்குள் அவள் முன்னே, வாசல் வெளி நிலவில், புதிய நிலவாக வந்து நின்றாள் செம்பவளம். செம்பவளத்தின் 'தேஜஸ்' அவள் உருவில் உருக்காட்டியது. அக்கரைச் சீமைப் புடவையையும் ரவிக்கையும் அவளுக்கு அழகுக்கு அழகாக அமையலாயின. பூவும் பொட்டும் மணத்தன!

காளியப்பன் உட்புறம் வந்து குந்தினான். அவனது பாதத்தடியில் இருந்த சுள்ளிக் கட்டை விலக்கினான். அடைப்புக் கதவு ஒன்று இருந்தது. அதன் பூட்டைத் திறந்தான். குனிந்து கையை நுழைத்தான் ஒரு சிறிய பெட்டி மீண்டது. அதிலிருந்து நகை நட்டுக்கள் சிலவும் மீண்டன!

'இந்தாலே, அல்லாத்தையும் போட்டுக்க!'

அவள் எல்லாவற்றையும் பார்த்தாள். 'ஆமா, ஏதுங்க இந்தத் தாலி?' என்று தடுமாற்றத்துடன் வநயமாகக் கேட்டாள்.

'எம் பொஞ்சாதியாய் வரத் தக்கவளுக்குன்னு அக்கரைச் சீமையிலேயே அந்தமாச் செஞ்சு கொண்டாந்தது இது!'

அவள் அணிகலன்களை அணிந்து கொண்ட பின், தங்கத் தாலியை அவனிடம் சமர்ப்பித்தாள்; 'இந்தாங்க!' என்றாள்.

அவன் அந்தத் திருமாங்கல்யத்தை வாங்கிக் கொண்டான்.

'இப்ப தொட்டு நீங்கதானுங்க எனக்குச் சதம். ஒங்களைத்தானுங்க அல்லாத்துக்கும் நானு நம்பியிருக்கேன்! நீங்க எஞ்சாமி கணக்குத்தான்.. எங்க சாமியேதான்!' மஞ்சள் பூசிய வதனம் ஒளிர்த்தது.

அவளால் மேற்கொண்டு பேசமுடியவில்லை.

'நானு ஒன்னை நம்புறேன். அதொப்ப நீயும் என்னை நம்பு, செம்பவளம்! இப்படியொரு பாக்கியம் எனக்கு எழுதிப் போட்டிருக்குமினு நானு சொப்பனத்திலேகூட ரோசிச்சது கெடையாது! நானு கொடுத்து வச்சவன்! அதானாக்கும் ஒன்னை எடுத்துக்கிட்டேன்!' என்று சுகத் தெம்புடன் பேசி, அதே லயிப்பின் உணர்வுக் கிறக்கத்தின் ஊடாக, அவளுக்குத் திருப்பூட்டினான் காளியப்பன்.

கண்ணீரும் கண்ணீரும் கலந்தன.

பிறகு, சிரிப்பும் சிரிப்பும் ஒன்றின.

ஒன்றாய் ஊர்ந்த வான்பிறை, சத்தியத்துக்கு ஓர் ஆதரிசமாக—தர்மத்திற்கு ஒரு சாட்சியமாக விண்ணிடைப் பொலிந்து மண்ணிடைத் தவழ்ந்து கொண்டிருந்தது.

'பசும்பாலை நல்ல பதத்தோடே காய்ச்சியாச்சா?'

'ஓ!'

'வெத்திலை பாக்கு இருக்கில்ல?'

'ம்!...'

வாசனைத் தைலத்தின் நெடியில் அவன் மூச்சு திணறியது.

மயில்கண் ஜரிகை வேட்டி சலசலக்க, அவன் நாதாங்கி இட்டுத் திரும்பினான்.

செம்பவளத்தை அப்படியே விழுங்கிவிடப் போகிறானோ?

'இந்தாலே புள்ளே!'

'என்னாங்கிறேன்!'

'இந்தாலே! பாச்சாமம் வரப் போவுதே!'

'ம்!...'

'ஸ்...!'

'சும்மா இருங்க!'

'என்னா சொன்னியாம்?'

'ஐயையோ! ஒண்ணும் சொல்லலீங்க, மச்சானே! மாப்பு...மாப்பு!'

சிரிப்பு பூந்தாதாக மணத்தது.

நளினத்தில் நாணம் பூத்தது.

'ஏலே!'

'ம்!'

'வெளக்கை மூத்துப் புடவா?'

கெட்ட கனா கண்டவன் நிலையில் காளியப்பன் தட்டுத் தடுமாறி எழுந்தான். இறக்கமும் அசதியும் அவன் உடலை முறித்துப் போட்டன. சோம்பல் முறித்து, நெட்டி பறித்து முடிந்ததும், இருட்டில் கண்களைத் துழாவிய வண்ணம் அவசரமாகக் கைகளைப் பக்கத்தில் நீட்டித் தடவினான். மறுகணம், நட்டுவக் காளி, கொட்டினாற் போன்று அவன் உயிர்க் கழுவில் துடித்தான். கபாலம் சூடேறியது. வேர்வைக்கொட்டியது. 'எம்புட்டுச் செம்பவளம் எங்கிட்டுப் போச்சு?' மண்டை வெடிக்கு முன்னே நெஞ்சு வெடித்துவிடும் போலிருந்தது. பதட்டம் சேர்த்து, விளக்கில் ஒளியைச் சேர்த்தான்.

செம்பவளத்தைக் காணவில்லை!

உள் மனம் அவளை அழைக்க, உள் ஓலம் அவனை விளிக்க, நிலவுக்கும் நினைவுக்குமாகப் பாய்ச்சல் மடை கட்டியவாறு காளியப்பன் பறந்து ஓடினான்; ஓடிப் பறந்தான்.

சாமக்குருவி வீறிட்டது!

சாலை வந்தது.

சாலை மரத்தின் உச்சாணிக் கொம்பிலிருந்து சாமக்குருவியின் பயம் செறிந்த கதறல் நழுவிக் கொண்டிருந்தது.

தலையை நிமிர்த்தினான் அவன்.

சாலை மரத்தில் அவனுக்கென ஒரு காட்சி காத்துத் தவம் இருந்தது.

'ஐயையோ...எந் தெய்வமே!...'

நெடுஞ்சாண்கிடையாக அந்த மண்ணில் அடித்து விழுந்து கூக்குரல் பரப்பினான்; பாங்குறத் தொங்கிய அந்தக் கஞ்சமலர்ப் பாதங்களைப் பற்றித் தன்னுடைய கண்களிலே ஒற்றிக்கொண்டு கதறிக் கதறிப் புலம்பினான் அவன்—காளியப்பன். 'எங் கண்ணே, செம்பவளம்! இனி எப் பொறப்புக்குமே நீ இந்தப் பாவியைச் சமிக்கவே மாட்டியோ?... ஐயையோ!... எந் தெய்வமே!

உடைந்து கிடந்த கண்ணாடி வளைகள் சிரித்தன!

புலர்கிறது:

சாலையின் இரண்டாவது மரத்தின் கிளை உச்சத்திலே ஊருக்கென மற்றொரு காட்சி தவம் இருந்தது.

'பாவிப் பயலே!... பாளத்த காளியப்பா!...'

கதைகளில் வரும் பெயர்களும்
சம்பவங்களும் கற்பனையே!



## நூலாசிரியர் பற்றி.....

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | பூவை. எஸ். ஆறுமுகம் |
| புனைப் பெயர்கள் | : | கார்த்திகை பாலன், மறைநாயகன், இளையபிரான், பிறைசூடி. |
| பிறந்த நாள் | : | 31—01—1926 |
| பிறந்த ஊர் | : | பூவை மாநகர், புதுக்கோட்டை மாவட்டம். |
| முதல் கதை | : | 15-8-1947. சுதேசமித்திரனில் "கரகம்". வெளியிட்டவர் சாண்டில்யன். |
| இலக்கிய பணி | : | 'பொன்னி', 'காதல்', 'மனிதன்', 'உமா' ஆகிய இதழ்களில் சேவை. பல்வேறு துறைகளில் 175 நூல்களுக்கு மேல் படைத்தது. |
| அரசுப் பணி | : | ஏலக்காய் வாரியத்தில் பத்தாண்டு காலம். |
| நாடகப் பணி | : | 'ஜாதி ரோஜா' சமுதாயப் புரட்சி நாடகக் கதை வசனம். |
| திரை உலகப் பணி | : | 'கூண்டுக் கிளி' கதை வசன உதவியாளர், "சொந்தங்கள் வாழ்க" மூலக்கதை. |
| நட்புப் பணி | : | எழுத்துப்பணி தொடர்கிறது! இனிமேலும் தொடரும்: |

T. M. S. Printers, Madras-17. Phone : 440155